# உயிர்ப்பு

7

தை 2001

# ஈழத் தமிழர்களின் தேசிய இயக்கம்

## சமூக சக்திகள் பற்றிய விவாதத்திற்கான

## முன்னோடிக் குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் தேசிய இயக்கம் சமூக சக்திகள் பற்றிய விவாதத்திற்கான முன்னோடிக் குறிப்புக்கள்

## அறிமுகம்

நமது தேசம் பன்முக மாற்றத்தின் விளிம்பில் நிற்கின்றது. தம்மீது தொடுக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு யுத்தத்தின் கொடிய விளைவுகள் அனைத்தையும் துணிவுடன் எதிர்கொண்டு, நமது மக்கள் இந்த மாற்றத்தை திடமாக நிகழ்த்தி வருகின்றார்கள். தினந்தோறும் தம்மீது கவிழ்கின்ற யுத்த சகதிக்குள்ளும், மகத்தான சாதனைகளை நிகழ்த்தியாவாறு நமது மக்கள் உறுதியுடன் முன்னேறி வருகின்றார்கள். தமக்கென சொந்த அரசியல், பொருளாதார, கலாச்சார மரபுகளை படைப்பதற்கும், தனியான தேச அரசை நிறுவுவதற்கும் நமது மக்கள் தீரத்துடன் போராடி வருகின்றார்கள்.

நமது மக்களினால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்ற, இந்த மாபெரும் தேசிய இயக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு, நமது மக்களின் நூற்றாண்டு கால அரசியல் இயக்கம், எத்தகைய படிமுறை ரீதியான வளர்ச்சியைப் பெற்று வந்திருக்கின்றது என்ற பரிசீலனை பெரிதும் உதவும். இவ்வகையில் இத்தகைய வளர்ச்சியில் பலம்சேர்த்து வந்திருக்கின்ற சமூக சக்திகள் பற்றி, ஒரு ஆரம்ப மதிப்பீட்டை முன்வைப்பது இக்கட்டுரையின் அக்கறையாக இருக்கின்றது.

**ஒவ்வொரு சமூகமும் தன்னுள்ளிலிருந்து புதிய பிரிவினரை, ஓயாது உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு, உருவாகின்ற புதிய பிரிவினர்களில், நிலவுகின்ற சமூக ஒழுங்குகளுடன் முரண்படுபவர்கள், அவற்றை மாற்றவும் புதிய ஒழுங்குகளாக நிலைநாட்டவும் போராடுகின்றார்கள். புரட்சிகர சக்திகளாக, சமூக சக்திகளாக அமைகின்றார்கள். தாம் வாழும் சமூகத்தின் மீது அகத்திலிருந்தும் புறத்திலிருந்தும் நிகழ்த்தப்படுகின்ற அடக்குமுறைகளை அகற்றி, அந்த சமூகத்தை புதிய இயங்குதளத்திற்கு மாற்றுகின்ற, வரலாற்றுப் பணியில் இந்த சமூக சக்திகள் பங்கேற்கின்றார்கள். இவ்வகையில், ஒரு சமூகம் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருப்பதற்கும் புதிய திசையில் இயங்குவதற்கும் இந்த சமூகசக்திகள் உந்துவிசைகளாக அமைகின்றன.**

நமது சமூகத்திலும் இத்தகைய மாற்றங்கள் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றன. ஒவ்வொரு காலத்திலும் உருவாகிய புதிய சமூகப் பிரிவினர்களும் சமூக சக்திகளும் இம்மாற்றங்களில் பங்கேற்று வந்திருக்கின்றன. நவீன வரலாற்றில் ஐரோப்பிய ஆக்கிரமிப்பானது நமது மக்கள் மத்தியில் அரசியல், பொருளாதார, கலாச்சார அம்சங்களில் தீவிர மாற்றங்களை ஏற்படுத்துவதோடு, நமது மக்களிடையே புதிய சமூகப் பிரிவினர்களையும் தோற்றுவித்தது. ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் முறைமையினூடாக, நமது மக்களின் மத்தியில் நவீன அரசியல் இயக்கம் உருவானது. 1830களில் தொடங்கிய நமது அரசியல் இயக்கம், இன்று ஒரு மகத்தான தேசிய இயக்கமாக பரிணமித்துள்ளது. இந்த இயக்கப் போக்கில் பங்கேற்று வந்திருக்கின்ற பன்முக சமூக சக்திகள் பற்றிய பரிசீலனை விவரணத்தை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சமூகத்தின் கூறுகளாக உள்ள சாதிரீதியாக, வர்க்க ரீதியாக, பாலினரீதியாக மற்றும் பிரதேச ரீதியாக வேறுபட்டுள்ள பிரிவினர்கள்; அவர்களின் வேறுபட்ட வாழ்நிலைகள் இதனுடாக உருவாகின்ற வேறுபட்ட நலன்கள் மற்றும் விழுமியங்கள் இப்பிரிவினர்களுக்கிடையே தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற ஊடாட்டங்கள் ஒரு சமூகம் என்ற வகையில் இவர்களுக்கிடையே நிலவுகின்ற பொதுவான மரபுகள் கலாச்சார கருத்தியல் பண்பாட்டுக்கூறுகள் புறத்தேயிருந்து ஏற்படுத்தப்படும் பாதிப்புக்கள் இவற்றின் திரட்சியாக வெளிப்படுகின்ற, சமூகசக்திகள் போன்ற பன்முக அம்சங்களை பரிசீலிப்பதின் ஊடாக நமது சமூகம் எவ்வாறு ஒரு வலிமையான தேசமாக ஒருப்பெற்று வந்திருக்கின்றது என்பதையும் அதன் அரசியல் இயக்கப் போக்கையும் இன்றைய தேசிய இயக்கத்தையும் புரிந்து கொள்வது சாத்தியமாகும்.

நமது சமூகத்துடன் தொடர்புபட்டுள்ள இத்தகைய பன்முகக் காரணிகள் பற்றிய பரிசீலனையானது ஏற்கனவே வெவ்வேறு காலகட்டங்களில் தனித்தனியாகவும் இக்காரணிகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ள ரீதியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நமது சமூகத்தைச் சேர்ந்தவர்களினால் மட்டுமன்றி ஏனைய சமூகங்களைச் சேர்ந்தவர்களாலும் இத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் ஊடாக வெவ்வேறு காலகட்டங்களில் நமது சமூக இயக்கம் எவ்வாறு அமைந்திருந்தது என்பது பற்றிய முக்கிய தகவல்களைப் பெற முடிகின்றது. எனினும் இத்தகைய பரிசீலனை ஒவ்வொன்றும் தமக்கேயுரிய எல்லைகளைக் கொண்டிருக்கின்றன. இவை அக்கறை கொண்ட அம்சங்கள், இவற்றின் நோக்ககங்கள், இவை நிலைக்களங்களாகக் கொண்ட சமூகப் பிரிவுகள் அல்லது பிரதேசம் இத்தகைய பரிசீலனைக்கான தகவல் மற்றும் ஆதாரங்கள் பெறப்பட்ட மூலங்கள் போன்ற காரணிகள் இப்பரிசீலனையின் எல்லைகளைத் தீர்மானிக்கின்றன.

இக்கட்டுரையானது நமது சமூகத்தை; அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், பிரதேசம், கருத்தியல், சாதியம், ஆணாதிக்கம் என பன்முகக் கூறுகளின் அடிப்படையில் பரிசீலிக்கின்றது. இத்தகைய பரிசீலனையின் ஊடாக பன்முக மாற்றத்தின் எல்லையில் நிற்கின்ற நமது சமூகத்தின் அரசியல் இயக்கம் குறித்த கரிசனையை நமது மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும், உருவாகப் போகின்ற புதிய சமூக அமைப்பில் நமது மக்களின் நலன்கள் உயர்ந்தபட்சம் உறுதிப்படுத்தப்படுவதற்கான வழிமுறைகளை அடையாளம் காண முயற்சிப்பதும் இதன் நோக்கங்களாக இருக்கின்றன.

இது ஒரு தொடக்கம் மட்டுமே! நமது தேசத்தின் எதிர்கால கட்டமைப்பின் அக்கறை கொண்டுள்ள அனைவரினதும் பங்குபற்றல் கருத்துக்களும் விவாதங்களும் இந்த முயற்சியை மேலும் வளப்படுத்தும். அத்தகையோரின் அக்கறையையும் ஆர்வத்தையும் மையப்படுத்துவதற்கான முயற்சியாகவே இக்கட்டுரை அமைகின்றது. இந்த வகையில் இக்கட்டுரை ஒரு கூட்டுப் பெறுதியாக அமைகின்றது. ஒரு சமூகம் தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற ஆய்வுகளை இது சாரப்படுத்துகின்றது. மறுபுறம் புதிய கருத்துக்கள் மற்றும் புதிய ஆய்வுகளை இது உள்வாங்கவிருக்கின்றது. இந்தத் தொடக்க முயற்சியின் வெற்றி என்பது அது எவ்வளவு துாரம் நமது சமூகத்தின் கூட்டுப் பங்குபற்றலையும் அக்றையையும் ஈர்த்துக் கொள்ளும் என்பதிலேயே தங்கி இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் இக்கட்டுரையானது நமது சமூகத்தை பின்வரும் காலவரிசையில் பரிசீலிக்கின்றது.

1 ஐரோப்பியரின் ஆக்கிரமிப்புக்கு முன்னரான காலம்.

2. ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கும் இலங்கையின் "சுதந்திரத்திற்கும்" இடைப்பட்ட காலம்.

3. இலங்கையின் "சுதந்திரத்தின்" பின்னரான காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் போது ஈழத்தமிழரின் சமூக நிலை

தற்போது வடக்குக் கிழக்கு என்று அழைக்கப்படுகின்ற நமது தாயகப் பகுதிகளில் நமது மக்கள் தமக்கேயுரிய தனித்துவங்களோடு நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்து வந்திருக்கின்றார்கள். மொழி, மதம், பொதுவான கலாச்சார அம்சங்கள் மற்றும் கருத்தியல்/ சித்தாந்த ரீதியாக நமது மக்கள் அனைவரும் ஒரே இனம் என்ற பொது அடையாளத்தையும் பொது உணர்வையும் பெற்றிருந்தார்கள். எனினும், நமது மக்களது சமூக உருவாக்கமானது அவர்கள் வாழ்ந்த பகுதிகள் எங்கும் ஒரே சீராகவோ ஒருமுகத் தன்மையுடனோ நிகழவில்லை. மாறாக, பிரதேச ரீதியில் வேறுபடுத்தக் கூடிய வகையில் மூன்று பெரும்பிரிவுகளாக அவர்களின் சமூக உருவாக்கங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றை மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் என்று வகைப்படுத்தலாம். இப்பிரதேசங்களின் அமைவிடம் அவற்றின் பொருளாதார, உற்பத்தி முறைகள், அவற்றில் இடம்பெற்ற ஆட்சிமுறைகள், இவற்றின் ஊடாக உருப்பெற்ற தனித்துவமான வாழ்க்கை நிலைமைகள் போன்ற பல காரணிகள் இங்கு வாழ்ந்த நமது மக்களின் சமூக உருவாக்கங்களை வடிவமைத்தும் தீர்மானித்தும் வந்திருக்கின்றன. நமது மக்கள் மத்தியில் நிலவிய இத்தகைய மூன்று வேறுபட்ட சமூக வடிவங்களையும் சுருக்கமாகப் புரிந்து கொள்வது இக் கட்டுரையில் தொனிப்பொருளுடன் இணைந்து கொள்வதற்கு உதவும்.

## மட்டக்களப்பு தமிழர்கள் (தென் தமிழீழம்)

தெற்கே குமணையிலிருந்து வடக்கே மணலாறு வரையும் கிழக்கே மூதூரிலிருந்து மேற்கே . வரையும் நீண்டு பரந்த பிரதேசங்களை மட்டக்களப்பு உள்ளடக்குகின்றது. பரந்த நிலப்பரப்பும் இடையிடையே அடர்காடுகளும் கடல் ஆறுகள் மற்றும் கங்கைகளின் குறுக்கீடுகளும் இருந்ததால் இம்மக்களிடையே நெருக்கமான பிணைப்புக்களும் உறவுகளும் உருவாக முடியவில்லை. இதன் விளைவாக தாம் வாழ்ந்த பிரதேசம் சார்ந்த தனித்துவம் கலந்தவர்களாக இம்மக்கள் விளங்கினார்கள். எனினும், பொதுவான மொழி மதம் கலாச்சாரம் மற்றும் பொருளாதாரம் என்பவற்றோடு பெரிதும் ஒரேவகையான ஆட்சி முறையின் கீழ் இருந்தவர்கள் என்ற அடிப்படையில் இவர்களின் சமூக இயக்கமானது ஒரு பொதுத் தன்மையைக் கொண்டதாக அமைந்தது.

மட்டக்களப்பின் முதன்மையான உற்பத்தியாக விவசாயம் இருந்தது. சிறு விவசாயிகளினாலும் பெருமளவு நிலங்களை சொந்தமாகக் கொண்டிருந்த நிலவுடமையாளர்களினாலும் விவசாய உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. போடிமார், வன்னியர், முதலியார் என அழைக்கப்பட்ட பெரும் நிலச் சொந்தக்காரர்களைச் சூழ்ந்து குத்தகை விவசாயிகளும் விவசாய வேலையாட்களும் இருந்தார்கள். பல இடங்களில் விவசாய வேலையாட்களும் அவர்கள் குடும்பத்தினர்களும் நிலச் சொந்தக்காரர்களுடன் தளர்வான அடிமை உறவில் வைக்கப்பட்டு இருந்தார்கள். பிரதான விவாசய உற்பத்திப் பொருளாக அரிசி விளங்கியது. தொடர் கங்கைகளும் ஆறுகளும் கணிசமாக இருந்ததால் நெல் உற்பத்தி செழிப்பாக அமைந்தது. இதனோடு ஏனைய உணவுப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டது. உள்ளூர் தேவைகளுக்குப் போக மிகுதியாக இருந்த அரிசி பிற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல், மற்றும் ஆறுகளை அண்டி வாழ்ந்தவர்கள் மீன்பிடி மற்றும் கடல்சார் தொழில்களில் ஈடுபட்டு வந்தார்கள். கடற்றொழிலில் சம்மாட்டியர் எனப்படும் செல்வந்தர்களின் ஆதிக்கம் நிலவியது. பல வேலையாட்கள் இவர்களுக்கு கட்டுப்பட்டவர்களாக இவர்களின் கீழ் தொழில்புரிந்தார்கள். பிடிக்கப்பட்ட மீன்கள் உள்ளூர் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு, எஞ்சியவை கருவாடுகளாக்கப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டன. இவற்றோடு குறிப்பாக, சங்குகள் சேகரிக்கப்பட்டு பிற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கடற்சிற்பிகள் மற்றும் சுண்ணக்கற்கள் என்பவை சுண்ணாம்புகளாக ஆக்கப்பட்டு உள்ளூர்த் தேவைக்கும் ஏற்றுமதிக்கும் பயன்படுத்தப்பட்டன.

இவற்றைவிட மட்டக்களப்பில் கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக விளங்கியது. பரந்த மேய்ச்சல் நிலங்களும் போதிய நீர் நிலைகளும் காணப்பட்டதானது கால்நடை வளர்ப்புக்கு உகந்ததாக அமைந்திருந்தன. மாடுகள், எருமைகள் மற்றும் ஆடுகள் என்பவை பெரும்பண்ணைகளில் வளர்க்கப்பட்டன. குறிப்பாக, அன்றைய போக்குவரத்து என்பது பெரிதும் மாட்டு வண்டிகள் சார்ந்ததாக இருந்ததால், உயர்தர மாடு வளர்ப்பு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தாவளம் என்ற மாட்டினம் கற்பிட்டி புத்தளப் பாதையினுடாக மட்டக்களப்புக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு வளர்க்கப்பட்டன.

இவற்றோடு உள்ளூர்த் தேவைக்கும் ஏற்றுமதிக்காகவும் மட்பாண்ட உற்பத்தியும் ஓரளவுக்கு இடம்பெற்றது.

கிழக்குத் தமிழர்கள் இறுக்கமான ஆட்சி முறையின் கீழ் வாழ்ந்தது இல்லை. அவ்வப்போது தமிழ் மன்னர்களின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் வாழ்ந்த போதும் மொழி மற்றும் கலாச்சார ரீதியாக வேறுபட்டிருந்த சிங்கள மன்னர்களின் ஆட்சியின் கீழ்தான் இவர்கள் நீண்ட காலம் வாழ்ந்திருக்கின்றார்கள். இருந்தும் கூட இவர்கள் சிங்கள மன்னர்களினதும் தமிழ் மன்னர்களினதும் நேரடியான, இறுக்கமான கட்டுப்பாட்டிற்கு உட்படவில்லை. எப்போதும் தளர்வான பெரிதும் சுயாதீனமான உறவுகளை தமது ஆட்சியாளர்களுடன் இவர்கள் கொண்டிருந்தார்கள். மன்னர்களின் பிரதிநிதிகளாக செயற்பட்ட உள்ளூர் ஆதிக்கப் பிரிவினர், இவர்களை கட்டுப்படுத்துபவர்களாக இருந்தார்கள். இந்த உள்ளூர் பிரதிநிதிகள் அதிகாரமும் செல்வாக்கும் பெற்றிருந்த போதிலும், வன்முறை நிறுவனங்களின் துணையுடன் மக்களை கட்டுப்படுத்துகின்ற மரபு இங்கு நிலவவில்லை. இத்தகைய குறிப்பான நிலைமையானது கிழக்குத் தமிழரிடையே அதிகார உறவுகளும் அதிகார நிறுவனங்களும் இறுக்கமான முறையில் உருவாவதை சாத்தியமற்றதாக்கின. சாதி, மதம், ஆணாதிக்கம் சார்ந்த அதிகார முறைமைகளில் தளர்வான ஓரளவு சுயாதீனமான உறவுகள் நிலவுவதற்கும் இம்மக்களின் கலாச்சார வடிவங்கள் நிறுவனப்படாமல் பெரிதும் வெகுஜன கலாச்சாரமாக விளங்குவதற்கும் இக்குறிப்பான நிலைமைகள் காரணமாகின.

**மட்டக்களப்பு தமிழர்கள் மத்தியில் சாதீய முறைமை காணப்பட்டது. தொழிலுக்கு ஏற்ற சாதிப் பிரிவுகளும் அவற்றிக்கிடையே அதிகாரப் படிநிலை அமைப்பும் நிலவின. இருந்தும், இது தீவிரமான வடிவத்தில் பின்பற்றப்படவில்லை. மீறமுடியாத சமூக வழமை மற்றும் அக மணமுறை என்பவற்றிற்கூடாக சாதீய முறைமை பேணப்பட்டு வந்த போதிலும் இது ஒரு அதிகார முறைமையாக இங்கு நிறுவப்படவில்லை. இதனால் சமூக அளவில் வேறுபட்ட சாதிகளைச் சேர்ந்த மக்களிடையே ஓரளவுக்கு சமத்துவமான உறவு நிலவியது.**

பெண்கள் ஒப்பீட்டளவில் சுதந்திரமானவர்களாக இருந்தார்கள். பால்ய விவாகம், சதி முறை, விதவைகளின் தலைமுடி மழிப்பு, தேவதாசி முறை போன்ற முறைகள் இங்கு நிலவவில்லை. சாதி ரீதியாக, தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருந்த பிரிவைச் சேர்ந்த பெண்களும் அடிமைப்பிரிவைச் சேர்ந்த பெண்களும் தத்தமது சமூக எல்லைகளுக்குள் ஓரளவு சுயாதீனமாக இருந்தார்கள். ஆதிக்கப் பிரிவைச் சேர்ந்த பெண்கள் குறிப்பிட்டளவு சொத்துரிமை பெற்றவர்களாக இருந்தார்கள். பெண்கள் தமது வாழ்க்கைக் காலம் முழுவதும் தமது பெற்றோரிகளில் தாய்வழிக் குடும்பத்துடன் வாழக்கூடியவர்களாக இருந்தார்கள். இதனால் திருமணத்தின் பின் பெண்ணின் வீட்டில் ஆண் போய் வாழ வேண்டிய வழமை நிலவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெண்களுக்கு சொத்துரிமை இருந்தாலும் தமது பெற்றோர்களில் தமது தாய்வழிக் குடும்பத்துடன் வாழக்கூடிய நிலையிலிருந்ததாலும் பெண்களின் நிலை ஓரளவு உயர்ந்திருந்தது. இதனால் இம்மக்களிடையே ஆணாதிக்க முறைமை ஒப்பீட்டளவில் அடக்குமுறைத் தன்மைகள் குறைந்ததாக நிலவியது.

மட்டக்களப்புத் தமிழரிடையே நிலவிய ஓரளவு தன்னிறைவான பொருளாதாரமும் அதிகாரத்துவ தன்மை குறைந்த தளர்வான சமூக உறவுகளும் அவர்களிடையே விருந்தோம்பும் பண்பை உயர்த்தியிருந்தன. பரஸ்பர மரியாதையும் உதவி செய்யும் மனப்பான்மையும் கிழக்கின் கிராமியப் பண்புடன் இணைந்ததாக இருந்தன.

இவர்களிடையே வளமான வெகுஜனக் கலாச்சார மரபுகள் நிலவின. நாட்டார் பாடல்களும் நாட்டுக்கூத்து வடிவங்களும் இங்கு நன்கு வேரூன்றியிருந்தன. மட்டக்களப்பில் தமிழர்கள் செறிவாக வாழ்ந்துவந்த பகுதிகளில் இப்பாரம்பரிய கலாச்சார வடிவங்கள் தமக்குரிய தனித்துவ அடையாளங்களுடன் செழுமைபெற்று விளங்கின. மட்டக்களப்பின் அனைத்துப் பகுதிகளிலும் சிறந்த புலவர்கள் இருந்தார்கள். ஆட்சியாளர்களுக்காகவோ அல்லது செல்வந்தவர்களுக்காகவோ பாடல்களை இயற்றவேண்டிய அவசியம் குறைவாக இருந்ததால் இவர்கள் தமது பாடல்களை முற்றிலும் இலக்கண வரம்பிற்குள் உட்படுத்திவிடாமல் பேச்சு மரபுடன் நெருங்கிவரக்கூடிய விதத்தில் பாடினார்கள்.

இவ்வாறு மட்டக்களப்புத் தமிழரிடையே சமூக மற்றும் கலாச்சார அம்சங்களில் காணப்பட்ட தனித்துவங்கள் அம்மக்களின் வாழ்நிலையுடனும் அவர்கள் மத்தியில் நிலவிய ஆட்சி முறையுடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவையாக இருந்தன.

மட்டக்களப்பில் தமிழருக்கு அருகே கணிசமான எண்ணிக்கையில் முஸ்லீம்களும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தார்கள். இவர்களுடைய அடிப்படைப் பொருளாதாரமும் தமிழர்களைப் போன்றே விவாசாயம் கடல்சார் தொழில்கள் மற்றும் கால்நடை வளர்ப்பாக இருந்தது. கிழக்குத் தமிழர்களினதும் விவசாய நிலங்களும் மேய்ச்சல் நிலங்களும் அவர்களின் குடியிருப்புக்களிலிருந்து அதிக தொலைவிலும் அடர்காடுகளுக்கு அருகேயும் இருந்தன. இதனால் விவசாயச் செயன்முறைகள் (உழுதல், நீர்பாய்ச்சுதல், அறுவடை என) பாதுகாப்பு (காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களையும் கால்நடைகளையும் பாதுகாத்தல்) என்பவை சார்ந்து இவர்கள் பரஸ்பரம் தமக்கிடையே தங்கியவர்களாக இருந்தார்கள். இதன் விளைவாக இங்கு தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே நெருக்கமான உறவுகள் நிலவிவந்தன. இவ்வாறு மட்டக்களப்புத் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே நிலவிய உற்பத்தி சார்ந்த நல்லுறவுகளும் பொதுமொழியும் அருகருகான குடியிருப்புக்களும் இவ்விரு மக்களிடையே சமூகக் கலாச்சார ரீதியிலும் நெருங்கிய உறவுகள் நிலவுவதற்கு காரணமாயின.

இவர்களோடு பூர்வீகக் குடிகளான வேடுவர்களும் கிழக்கில் வாழ்ந்து வந்தார்கள். காடுகளை அண்டிய பகுதிகளில் சிறுசிறு குடிசைகளில் தமது பாரம்பரிய வாழ்க்கை முறைகளுடன் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒரு சில வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் இவர்களின் மொழியானது பெரிதும் தமிழ் மொழியை ஒத்திருந்தது. இவர்கள் தமிழர்கள் மற்றும் முஸ்லீம்களுடன் நெருக்கமான உறவுகளைப் பேணாத பொழுதிலும் அவ்வப் போது காட்டு விளைச்சலை (தேன், பழங்கள்) பரிமாறுவதன் ஊடாக பொருளாதாரத் தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள்.

## வன்னித் தமிழர்கள் (மத்திய தமிழீழம்)

தெற்கே மணலாறிலிருந்து வடக்கே ஆனையிறவு வரையும் கிழக்கே முல்லைத்தீவிலிருந்து மேற்கே புத்தளம் வரையும் ஒரு அகன்ற நிலப்பரப்பை வன்னிப்பகுதி உள்ளடக்குகின்றது. கடலை அண்டிய ஓரப் பகுதிகளும் விவசாயத்திற்குரிய மையப் பிரதேசங்களும் வன்னிப் பெருநிலப் பரப்பில் அடங்குகின்றன. பெரிதும் இடையீடுகள் அற்ற தொடர் நிலப்பரப்பாக இருந்தால் இவர்களிடையே சமூகத்தொடர்புகள் ஓரளவுக்கு எளிதாக சாத்தியமாயின. இருந்தும், அகன்ற நிலப்பரப்பாகவும், ஆங்காங்கே அடர்ந்த காடுகளதும் காணப்பட்டதன் காரணமாக இத்தகைய தொடர்புகள் இறுக்கமான சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளாக மாற்றம் பெறவில்லை. இவர்கள் மாறிக் கொண்டிருந்த ஆட்சி முறையின் கீழ் வாழ்ந்தார்கள். தமக்குரிய அரசர்களின் கீழும் யாழ்ப்பாண அல்லது தென்னிந்திய அரசர்களின் கீழும் சில சந்தர்ப்பங்களின் சிங்கள அரசர்களின் கீழும் இவர்கள் கொண்டு வரப்பட்டார்கள். இத்தகைய நிலைமைகளின் காரணமாக இவர்களது சமூக இயக்கம் தனித்துவமான பண்புகளைக் கொண்டதாக அமைந்தது.

வன்னியில் நெல் உற்பத்தி முக்கிய இடத்தை வகித்தது. உப உணவுப் பயிர்களும் செய்கை பண்ணப்பட்டன. வன்னிப் பெரும்நிலப் பரப்பு பயிர்ச்செய்கைக்குரிய வளமான மண்ணைக் கொண்டிருந்த போதிலும் அங்கு நீர் வளம் குறைந்ததாக இருந்தது. தொடர் கங்கைகளோ பெரும் ஆறுகளோ இல்லாததாலும் மழை நீர் தேங்கும் குளங்களே விவசாயத்திற்கான நீரை வழங்கக் கூடியதாக இருந்ததாலும் விவசாயமானது பருவகால நிலைமைகள் சார்ந்ததாக அமைந்திருந்தது. எனவே உற்பத்தியானது, செழிப்புமிக்கதாகவோ பெருமளவில் வருமானத்தைப் பெற்றுத் தருவதாகவோ ஏற்றுமதி சார்ந்ததாகவோ அமையவில்லை. இவ்வாறு விவசாய உற்பத்தி எல்லைப்பட்டதாகவும் விளைச்சல் நிச்சயமற்றதாகவும் அமைந்திருந்ததால் இம்மக்களிடையே நிலவுடமை உறவுகளும் அடிமை முறைமையும் இறுக்கமாக நிலவவில்லை. பெரும்பாலோனோர் துண்டுநிலங்களை சொந்தமாகக் கொண்டிருந்தார்கள் அல்லது குத்தகை விவசாயிகளாக இருந்தார்கள்.

இங்கு கடல்சார் தொழில் செழிப்பாக இருந்தது. குறிப்பாக, மன்னார், முல்லைத்தீவு மற்றும் புத்தளம் போன்ற பகுதிகளில் மீன்பிடித் தொழில் சிறப்பாக இருந்தது. மீன்கள் கருவாடுகளாக்கப்பட்டு பிற இடங்களுக்கு அனுப்பப்பட்டன. இங்கு சங்குகள் சேகரித்து ஏற்றுமதி செய்யப்பட்டன. கடற்றொழிலில் சம்மாட்டி முறை நிலவியது. புத்தளம், மன்னார் மற்றும் தலைமன்னார்ப் பகுதிகள் கப்பல் போக்குவரத்துக்குரிய மையங்களாக விளங்கியதால் இப்பகுதிகளைச் சூழ்ந்து நகரவாக்கம் இடம்பெற்றதோடு வர்த்தகமும் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது.

**வன்னித் தமிழர்களிடையே சாதீய முறைமை நிலவிய போதும் அது தளர்வான வடிவிலேயே அமைந்திருந்தது. குறிப்பாக, விவசாய உற்பத்தி முறை அவ்வளவு செழிப்பாக இல்லாததால் சாதீயப் படிநிலை ஒழுங்கு இறுக்கமாகப் பின்பற்றப்படுவதை சாத்தியமாக்கக் கூடிய பொருளியல் தளம் அங்கு நிலவவில்லை. எனவே, சாதி ரீதியிலான படிநிலை வேறுபாடுகளும் அகமண முறையும் நிலவிய போதும் சாதிய முறைமையானது சமூக ரீதியில் தீவிரமான அடக்குமுறைத் தன்மையுடன் பின்பற்றப்படவில்லை.**

இங்கும் ஆணாதிக்க முறைமை நிலவுடமைக்குரிய இறுகிய தன்மையடன் நிலவவில்லை. சமூகத்தில் உள்ள மிகப் பெரும்பாலான பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள் உற்பத்தி சார்ந்த உழைப்பில் ஈடுபட வேண்டியிருந்ததாலும் பெண்ணுக்கு சொத்துரிமை இருந்ததாலும் பெண்கள் தமது வாழ்நாள் முழுவதும் பெற்றோர்களின் தாய்வழிக் குடும்பத்துடன் வாழக்கூடியவர்களாக இருந்ததாலும் பெண்களின் நிலை ஒப்பீட்டளவில் சுயாதீனமாக இருந்தது.

வன்னித் தமிழர்கள் நிலையானதும், இறுக்கமானதுமான ஆட்சி முறையின் கீழ் வாழ்ந்திராததால், இவர்கள் மத்தியில் நிறுவன வடிவம் பெற்ற கலை வடிவங்கள் உருவாகவில்லை. பதிலாக, கிராமிய வாழ்க்கை முறையோடு இசைந்ததான நாட்டுக் கூத்து வடிவங்கள் இங்கு வளர்ச்சியடைந்தன. கூடவே, மக்களோடு இணைந்த புலவர் மரபும் இங்கு நிலவியது. வன்னித் தமிழர்களிடையே சமூக மற்றும் கலாச்சார அம்சங்களில் நிலவிய இத்தகைய தனித்துவமான பண்புகள் அவர்களின் வாழ் நிலையோடும் அங்கு நிலவிய மாறிக்கொண்டிருந்த ஆட்சி முறைகளோடும் தொடர்புடையவனவாக உள்ளன. ஒருபுறம் உபரித் திரட்சி குறைவாக இருந்தமையால் நிறுவன தன்மை பெற்ற கலை வடிவங்கள் இங்கு தோன்ற முடியவில்லை. ஒரு விவசாய சமூகத்தில் கலைகள் நிறுவனத் தன்மை பெறுவது என்பது அதில் பங்கு கொள்கின்றவர்களை போஷிக்கக் கூடியளவுக்கு உபரி திரண்டிருக்கும் போது மட்டுமே சாத்தியப்படும். அவ்வாறில்லாது போது அங்கு கலை வடிவங்கள் என்பது பெரிதும் மக்களோடு இணைந்ததாக வாய்மொழி மற்றும் கூத்து மரபுகளாக அமைகின்றன. மறுபுறம் வன்னியின் ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையானது அடிக்கடி மாறிக் கொண்டிருந்ததாலும் வேறுபட்ட ஆட்சி முறைகள் நிலவியதாலும் இத்தகைய ஆட்சி முறைகளின் மையமானது சில குறிப்பிட்ட பிரதேசங்களுடன் எல்லைப்பட்டு விட்டதாலும் வன்னியில் அதிகார நிறுவனத்தின் ஆதரவுடன் கலைகள் உருவாகவோ நிறுவன வடிவம் பெறவோ முடியவில்லை.

வன்னியில் குறிப்பாக புத்தளம் மற்றும் மன்னாரில் ஓரளவு செறிவாகவும் வவுனியா முல்லைத்தீவுப் பகுதிகளில் சிறிய எண்ணிக்கையிலும் முஸ்லீம்கள் வாழ்ந்து வந்தார்கள். விவசாயம் மற்றும் கடல்சார் தொழில்களோடு புத்தளம் மற்றும் மன்னார்ப் பகுதிகளில் இவர்களில் ஒரு பிரிவினர் வர்த்தகத் தொழிலையும் மேற்கொண்டு வந்தார்கள். வன்னித் தமிழர்களிடையே அதிகார உறவுகள் தளர்வாக இருந்ததாலும், சாதிய முறைமையை இறுக்கமாகப் பின்பற்றப்படாததாலும் தமக்கருகே தனியான சமூகமாக வாழ்ந்து வந்த முஸ்லீம்களுடன் முரண்பாடுகளற்ற உறவுகளை அவர்கள் பேணி வந்தார்கள்.

யாழ்ப்பாணத் தமிழர் (வட தமிழீழம்)

தெற்கே ஆனையிறவிலிருந்து வடக்கே காங்கேசன்துறை வரையும் கிழக்கே வெற்றிலைக்கேணியிலிருந்து மேற்கே தீவுப்பகுதிகள் வரையிலான பாகங்களை உள்ளடக்கியதாக யாழ்ப்பாணம் அமைகின்றது. கிழக்கு மற்றும் வன்னியுடன் ஒப்பிடுகையில் சிறிய நிலப்பரப்பில் மக்கள் செறிவாக வாழுகின்ற பிரதேசமாக இது நிலவுகின்றது. சிறிய நிலப்பரப்பில் செறிவான குடிப்பரம்பலைக் கொண்ட பிரதேசமாக இருப்பதால் இங்கு மிக நெருக்கமான சமூகத் தொடர்புகள் நிலவின. இம்மக்கள் யாழ்ப்பாண அரசுகளின் கீழும் சில சமயம் தென்னிந்திய அரசர்களின் கீழும் வாழ்ந்து வந்தார்கள். இவற்றின் விளைவாக இவர்களின் சமூக இயக்கம் முற்றிலும் தனித்துவமான பண்புகளைக் கொண்டதாக அமைந்திருந்தது.

அனேகமாக முழுப்பகுதியும் கடலால் சூழப்பட்ட ஒரு தீபகற்பமாக யாழ்ப்பாணம் அமைந்திருக்கின்றது. கூடவே பல சிறு தீவுப்பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. தொடர் கங்கைகள் மற்றும் பெரிய ஆறுகள் போன்றனவும் இங்கில்லை. எனினும் நிலத்தில் ஆழ்கிணறுகளின் மூலம் பயிர்செய்யும் மரபை இம்மக்கள் பெற்றிருந்தார்கள். இவ்வாறு வளமிக்க மண்ணையும், வற்றாத கிணற்று நீரையும் கொண்டிருந்ததால் விவசாயமும் கடலால் சூழப்பட்டிருந்தால் கடற்றொழிலும் இங்கு செழிப்புற்று விளங்கின.

இங்கு நெல் உற்பத்தியோடு வர்த்தகப் பயிர்ச் செய்கையும் பிரதான இடத்தை வகித்தன. விவசாயத்தில் நிலவுடமை உறவுகள் நிலவின. வெள்ளாளர்கள் போன்ற ஆதிக்கப் பிரிவினருக்கே உற்பத்தி நிலங்கள் சொந்தமாக இருந்தன. இந்நிலச் சொந்தக்காரர்களின் கீழ் குத்தகை விவசாயிகளும் அடிமைகளும் கட்டுப்பட்டிருந்தார்கள். அடிமை முறைமை நன்கு இறுக்கமாக நிலவியது. திட்டமிடப்பட்டதும் நன்கு முறைப்படுத்தப்பட்டதும் ஆழ்கிணற்று நீரைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதும் அடிமை உழைப்பின் திரண்ட உபரியைக் கொண்டதுமான விவசாயத்துறை நிறைந்த வருமானத்தைக் கொடுத்தது.

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலும் செழிப்புற்றிருந்தது. இங்கு சம்மாட்டியார் என்ற பிரிவினர் கடற்றொழிலில் ஆக்கம் செலுத்தினர். மீன்பிடியோடு சங்குகள் சிற்பிகள் போன்றவற்றின் சேகரிப்பும் இடம்பெற்றன. இவற்றோடு கப்பற் போக்குவரத்தும் முக்கிய தொழிலாக இருந்தது. மறவர் சாதியைச் சேர்ந்தவர்கள் தென்னிந்திய மன்னர்கள் மற்றும் வர்த்தகர்களின் கப்பலைச் செலுத்தியும் தாமே கப்பல்களைக் கட்டியும் தென்னிந்தியா, பர்மா, கிழக்கிந்தியத் தீவுகள், ரோம் போன்ற நாடுகளுடனான ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்துடன் தொடர்புற்றிருந்தார்கள்.

**யாழ்ப்பாணத்தில் சாதீய முறைமை இறுக்கமாகப் பின்பற்றப்பட்டது. வெள்ளாள, மடைப்பள்ளி போன்ற சாதிகள் ஆதிக்க நிலையில் விளங்கின. குறுகிய நிலப்பரப்பில் செறிந்து வாழ்ந்ததும் நெருக்கமான சமூகத் தொடர்புகள் நிலவியதும், தொடர்ச்சியாக பெருகிக் கொண்டிருந்த உபரியும், நிலையான அரசு முறைமையும், இங்கு நிலவிய சாதிய முறைமையை நன்கு நிலைபெறுவதற்கு காரணங்களாகின.**

இவற்றோடு இங்கு கோயில்களை மையமாகக் கொண்ட சமூக நிர்வாக முறைமைகள் நிலவியதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவுடன் நெருக்கமானதும் தொடர்ச்சியான தொடர்புகள் நிலவியதும் யாழ்ப்பாணத்தில் சாதி முறைமை அதன் தீவிர வடிவத்தில் பின்பற்றப்படுவதை சாத்தியமாக்கின. இங்கு சாதிய முறைமையானது உறுதியான படிநிலையமைப்பைக் கொண்டதாகவும் நிறுவன வடிவம் கொண்டதாகவும் பேணப்பட்டது.

இங்கு ஆணாதிக்க முறைமையும் ஒப்பீட்டளவில் இறுக்கமாக இருந்தது. குறிப்பாக சாதி ரீதியாக ஆதிக்க நிலையில் இருந்தவர்கள் மத்தியில் பெண்களின் சுயாதீனம் கணிசமாக கட்டுப்படுத்தப்பட்டு வந்தது. கலாச்சாரம், மதம் போன்றவை இங்கு நன்கு நிறுவனமயப்பட்டு இருந்ததால் ஒழுக்கநெறிகள் கலாச்சார மரபுகள் போன்றவற்றைப் பின்பற்றுவது இப்பெண்கள் மீது விதியாக்கப்பட்டு இருந்தது. எனினும், இவர்கள் சொத்துரிமை பெற்றிருந்ததாலும் தமது வாழ்க்கைக் காலம் முழுவதும் பெற்றோர்களின் தாய்வழிக் குடும்பத்தில் வாழக்கூடியவர்களாக இருந்ததாலும் இத்தகைய மத மற்றும் கலாச்சார இறுக்கங்களையும் மீறி சாதி ரீதியில் ஆதிக்க நிலையில் இருந்த பிரிவினரின் பெண்கள் ஒப்பீட்டளவில் சுயாதீனம் பெற்றவர்களாக இருந்தார்கள். இந்தியாவில் நிலவிய பால்ய விவாகம், சதிமுறை, கட்டாய கைம்மை, தேவதாசி முறைமை என்பன இங்கு நிலவவில்லை. இவர்களை விட சாதிய ஒழுங்கமைவில் கீழ்நோக்கிச் செல்லும்போது பெண்களின் நிலையில் கூடிய சுயாதீனம் காணப்பட்டது. குறிப்பாக, பெண்கள் உற்பத்தியில் ஈடுபடக் கூடியவர்களாகவும் சுயாதீனமாக நடமாடக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். இவ்வாறு குறிப்பிட்ட சாதிய வட்டத்திற்குள் அல்லது அடிமைப்பிரிவுக்குள் பெண்களின் நிலை சுயாதீனமாக இருந்த போதிலும் அவர்கள் சாதி ரீதியில் ஆதிக்க நிலையிலுள்ள ஆண்களில் பாலியல் ரீதியில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

கலாச்சார ரீதியில், நன்கு நிறுவனமயப்பட்ட கலை வடிவங்கள் யாழ்ப்பாணத்தில் வளர்ச்சி பெற்றிருந்தன. நிலையான ஆட்சி முறை தொடர்ச்சியாக நிலவியதாலும் தடையற்ற உபரித் திரட்சி சாத்தியமாகியதாலும் நெருக்கமான தென்னிந்தியத் தொடர்புகள் ஏற்பட்டிருந்ததாலும் கலாச்சார ஊடாட்டமும் வளர்ச்சியும் நிறுவனமாக்கலும் நன்கு இடம்பெற்றன. இயல் இசை நாடகம் என்று சொல்லப்படுகின்ற கலைவடிங்கள் இங்கு வேரூன்றி வளர்ந்தன. அரசர்களையும் செல்வந்தர்களையும் சார்ந்த புலவர்களின் பாரம்பரியம் இங்கு நிலவியது. மதம் நன்கு நிறுவனப்பட்டிருந்தது. திரண்ட உபரியின் ஒரு பகுதி கோயில்களைக் கட்டுவதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும் செலவிடப்பட்டது. சாதிய முறைமை ஆணாதிக்கம் கலாச்சார ஆதிக்கநிலை போன்றவற்றை பேணுகின்ற கருத்தியல் நிறுவனமாக மதம் செயற்பட்டது. எனவே சமூக ஆதிக்கப் பிரிவினரின் ஆதரவிலும் கட்டுப்பாட்டிலும் மத நிறுவனங்கள் நன்கு வேரூன்றியிருந்தன. இங்கு சமூக இயக்கமே கோயில்களை மையமாகக் கொண்டதாக விளங்கியது.

இவ்வாறு யாழ்ப்பாண மக்களின் வாழ்நிலையும் அங்கு நிலவிய ஒப்பீட்டளவில் உறுதியான ஆட்சி முறையும் அம்மக்களின் சமூக இயக்கத்தை தனிக்குறிப்பானதாக அடையாளப்படுத்தின. நமது மக்களின் ஏனைய பிரிவினரான வன்னி மற்றும் மட்டக்களப்புத் தமிழர்களோடு ஒப்பிடும் போது உபரித் திரட்சியும் நிறுவன வடிவங்களும் அதிகார உறவுகளும் வெளிநோக்கிய ஊடாட்டங்களும் கூடிய சமூகமாக யாழ்ப்பாணத் தமிழர்கள் விளங்கினார்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிய எண்ணிக்கையில் முஸ்லீம்களும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் ஒரு பிரிவினர் வர்த்தக முயற்சிகளிலும் ஏனையோர் கூலித் தொழில்களிலும் ஈடுபட்டு வந்தார்கள். இவர்கள் தமக்கென சொந்த உற்பத்தி நிலங்களைக் கொண்டிருக்கவில்லை. சாதிய முறைமை உறுதியாக நிலவிய யாழ்ப்பாணத்தில் வெள்ளாளர் போன்ற ஆதிக்க சாதிகளே நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிருந்ததாலும் சாதியப் படிநிலையில் கீழ்நிலையில் வைக்கப்பட்டவர்களோ பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களோ நிலங்களை சொந்தமாகக் கொள்வது தடுக்கப்பட்டு வந்திருந்ததாலும் முஸ்லீம்களுக்கு உற்பத்தி நிலங்கள் இருக்கவில்லை. யாழ்ப்பாணத் தமிழர்களிடையே நிலவிய சாதிய முறைமைக்குள் முஸ்லீம்கள் எந்தவொரு சாதியாக அமையாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் கருத்தியல் ரீதியாக சாதியப் படிநிலை ஒழுங்கில் அவர்கள் ஆகவும் கீழ்நிலையில் உள்ளவர்களாக கருதப்பட்டார்கள். சாதி மத கலாச்சார இறுக்கங்களும் அதிகாரப் படிநிலை அமைப்பும் தீவிரமாக பின்பற்றப்பட்ட யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலான உறவு பல சந்தர்ப்பங்களில் முரண்பாட்டுக்கு உரியதாக நிலவியது. இத்தகைய முரண்பாடுகள் தீவிரமடைகின்ற நிலையில் அது முஸ்லீம்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களாகவும் அவர்களது வாழ்விடங்களிலிருந்து அவர்களை வெளியேற்றுவதாகவும் அமைந்திருந்தன. இத்தகைய வன்முறைத் தாக்குதல்கள் பெரிதும் ஆதிக்கப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இவ்வாறு நமது மக்களின் மூன்று பெரும் பிரிவினரும் தமக்கென தனித்தனியான சமூக இயக்கங்களைக் கொண்டிருந்த போதிலும் இவர்களுக்கு இடையே குறிப்பிட்ட அளவில் சமூக பொருளாதாரத் தொடர்புகளும் இடம்பெற்று வந்துள்ளன. பண்டப் பரிமாற்றம் சார்ந்த வர்த்த ரீதியான தொடர்புகளும் சில இடங்களில் திருமண உறவுகளும் இவர்களிடையே ஏற்பட்டிருந்தன. இவற்றோடு வட்டார வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் கூட மொழி, மதம், கலாச்சாரம் சார்ந்த ஒற்றுமை இவர்களிடையே தொடர்ச்சியாக நீடித்து வந்துள்ளது. எனினும், இவை இம்மூன்று பிரிவினரையும் ஒரே சமூக இயக்கத்திற்குள் பிணைக்கக்கூடிய அளவுக்கு போதுமான வலிமையைக் கொண்டிருக்கவில்லை. இவ்வாறு நமது மக்களின் மூன்று பிரிவினரும் தமக்குரிய தனித்துவமான சமூக இயக்கங்களைக் கொண்டிருந்த நிலையில்தான் போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பு இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் பின் நமது மக்களின் நிலை

## போர்த்துக்கீசர் மற்றும் ஒல்லாந்தர் ஆதிக்கக் காலம்

இலங்கையை முதலில் ஆக்கிரமித்த போர்த்துக்கீசரின் முக்கிய இலக்கு கடல்சார் வர்த்தகத்தின் மீது தமது ஆதிக்கத்தை நிறுவுவதாக இருந்தது. எனவே அவர்கள் பிரதான கப்பல் போக்குவரத்து மையங்களை கைப்பற்றுவதையே முதன்மை இலக்காகக் கொண்டார்கள். இவ்வகையில் அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் சென்ற முதல் நமது மக் பிரிவாக யாழ்ப்பாண சமூகம் அமைந்தது.

ஏற்கனவே தென்னிந்தியா, பர்மா, கிழக்கிந்திய நாடுகள் ரோம் போன்ற நாடுகளுடன் கப்பல் போக்குவரத்துத்தைக் கொண்டிருந்ததோடு கடல்போக்குவரத்தினதும் மையமாக யாழ்ப்பாணம் அமைந்திருந்ததால் அதைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பது போர்த்துக்கீசருக்கு முக்கியத்துவம் உடையதாக இருந்தது. எனினும் யாழ்ப்பாணத்தை அவ்வளவு எளிதாக அவர்களால் ஆக்கிரமிக்க முடியவில்லை. தென்னிலங்கையில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்தி, ஒரு நூற்றாண்டுக்குப் பின்னரே, போர்த்துக்கீசரால் யாழ்ப்பாணத்தின் மீது தமது ஆதிக்கத்தை நிறுவ முடிந்தது. யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிப்பதற்கு பல தடவைகள் முயற்சித்து, தோல்வி கண்ட பின்னர், 1619 இல் உள்சதியின் மூலம், சங்கிலிய மன்னனை கடத்தி, தூக்கிலிட்டதன் பின்னரே, போர்த்துக்கீசரால், யாழ்ப்பாணத்தின் மீது தமது ஆதிக்கத்தை ஏற்படுத்த முடிந்தது.

ஆக்கிரமிப்பாளர்கள் எங்கும் மேற்கொள்வது போன்று யுத்தத்தின் பின்னர் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தின் மீது கடுமையான அடக்குமுறைகளை பிரயோகித்தார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்த வர்த்தக நிலையங்களை அழித்தார்கள். போர்வீரர்களாக இருந்த மறவர் சாதிகளை நிராயுதபாணியாக்கினார்கள். இந்துமத வழிபாட்டுக்கு தடைவிதித்தார்கள். சில இடங்களில் இந்துக்கோவில்களை இடித்தழித்தார்கள். இவற்றோடு பலவந்தமான மதமாற்றத்தையும் மேற்கொண்டார்கள். எனினும் இந்த நிலைமை நீண்ட காலத்திற்குத் தொடரவில்லை. தாம் ஆக்கிரமித்துள்ள மக்கள் மீது தொடர்ச்சியான அடக்குமுறைகளை மேற்கொள்வதன் மூலம் தமது நலன்களைத் தொடர்ந்தும் பேணமுடியாது என்பதை ஆக்கிரமிப்பாளர்கள் தமது சொந்த அனுபவங்களுக்கு ஊடாக கற்றுக்கொண்டு விடுகிறார்கள். இவ்வகையில் போர்த்துக்கீசரும் அதற்குப் பின்வந்த ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்களும் படிப்படியே வன்முறை ரீதியான அடக்குமுறைகளைக் கைவிட்டு நமது மக்களின் ”சம்மதத்துடன்” தமது ஆக்கிரமிப்பை நீடிக்க முயன்றார்கள்.

**ஏற்கனவே உறுதியான முறையில் அதிகாரப்படி நிலையாக்கம் செய்யப்பட்டும் நிறுவனமயப்பட்டும் உள்ள ஒரு சமூகத்தின் அதிகாரப் பிரிவினருடன் ஏற்படுத்துகின்ற சிநேக உறவின் மூலமாக அங்கு தமது ஆதிக்கத்தையும் சுரண்டலையும் தொடருவது ஆக்கிரமிப்பாளருக்கு ஒரு எளிதான வழிமுறையாக அமைகின்றது.**

இவ்வகையில் யாழ்ப்பாண சமூக அமைப்பு சாதிரீதியாக நன்கு நிறுவனப்பட்டும் அதிகாரப்படி நிலையாக்கம் செய்யப்பட்டுமிருந்த அதிகாரப் படிநிலையில் ஆதிக்க நிலையிலிருந்த வெள்ளாள, மடைப்பள்ளி போன்ற பிரிவினருடன் போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பாளர்கள் வர்த்தக ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தினார்கள். இதன் மூலம் போர்த்துக்கீசரும் ஏனைய ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களும் நமது மக்கள் மீதான, தமது ஆதிக்கத்தை தீவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்புக்களின்றி நீண்ட காலத்திற்குத் தொடருவது சாத்தியமாயிற்று.

போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தின் கீழ் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட பின், வன்னி மற்றும் கிழக்குப் பகுதிகள் அவர்களின் ஆதிக்கத்திற்கு உட்படுவதில் பெரிய சிரமங்கள் இருக்கவில்லை. வன்னிப் பகுதி நிலையற்ற ஆட்சியைக் கொண்டிருந்ததாலும் மட்டக்களப்பு கண்டிய மன்னனின் ஆதிக்கத்திலிருந்து நெடுந்தொலைவில் இருந்ததாலும் இப்பகுதிகள் அதிக எதிர்ப்புக்களின்றி போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. மட்டக்களப்பில் மட்டும் சில எதிர்ப்புக்கள் குறிப்பாக குஞ்சலி மரைக்கார் போன்ற முஸ்லீம் படைத்தளபதிகளின் தலைமையில் இடம்பெற்ற போதும் அவை எளிதாக முறியடிக்கப்பட்டன. இவ்விதம் நன்கு நிறுவனமயப்பட்டு தமக்கென தனியான ஆட்சி முறைமையைக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியோடு இணைந்ததாக நமது மக்களின் ஏனைய பிரிவினரான மட்டக்களப்பு மற்றும் வன்னித் தமிழர்களும் போர்த்துக்கீசரின் ஆதிக்கத்திற்கு உட்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

நமது மக்கள் மீதான போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பு 39 வருடங்களே நீடித்தன. இதன் பின்னர், 1658 இல் ஒல்லாந்தர் நமது மண்ணை ஆக்கிரமித்தார்கள். 1795இல் ஆங்கிலேயரினால் தோற்கடிக்கப்படும்வரை, ஒல்லாந்தரின் ஆதிக்கம் இங்கு நிலவியது. போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் நமது மண்ணை ஆக்கிரமித்திருந்த 175 ஆண்டு காலத்தில், நமது மக்களின் சமூக இயக்கத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. இவ்விரு ஆக்கிரமிப்பாளர்களும், தமது வர்த்தக ரீதியான ஆதிக்கத்தையும், வர்த்தக சுரண்டலையும் இங்கு உறுதிப்படுத்துவதற்கேற்ப சட்டங்கள் மற்றும் நிர்வாக முறைமைகளை இங்கு ஏற்படுத்திய போதிலும், இவை நமது மக்களின் சமூக இயக்கத்தில் தீவிர பாதிப்புக்களை ஏற்படுத்தவில்லை. நமது மக்களிடையே நிலவிய தனித்துவமான சமூக, கலாச்சார இயக்கங்களும், உறவுகளும், உற்பத்தி முறைகளும், இந்த ஆக்கிரமிப்பாளர்களின் வர்த்த மேலாதிக்கத்திற்கும், சுரண்டலுக்கும் தடையாக அமைந்திராததால், இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இவர்களுக்கு ஏற்படவில்லை.

எனினும் இந்தக் காலகட்டத்தின் ஊடாக நமது மக்களிடையே குறிப்பாக ஆதிக்கப் பிரிவினர்களிடையே குறிப்பிடத்தக்க சில நிகழ்வுகள் இடம்பெற்றன. 137 வருடங்களாக எம்மை ஆக்கிரமித்திருந்த ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை முற்றாக தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருந்ததால் அவர்களுடன் வர்த்தக உறவுகளையும் நிர்வாக உறவுகளையும் கொண்டிருந்த தமிழ் வர்த்தகர்கள் குறிப்பாக யாழ்ப்பாண வர்த்தகர்கள் கொழும்பு காலி போன்ற துறைமுகப் பகுதிகளிலும் தமது வர்த்தக முயற்சிகளை மேற்கொள்ள முடிந்தது. பண்டப் பரிமாற்றமும் பணப்புழக்கமும் செல்வத் திரட்சியும் அதிகளவில் இடம்பெற்று வந்த இந்தத் துறைமுகப் பகுதிகளில் குறிப்பாக, கொழும்பில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் தமது வர்த்தக நிறுவனங்களை நிறுவியதானது பின்னாட்களில் நமது மக்களின் சமூக மற்றும் அரசியல் வாழ்வில் கணிசமான தாக்கங்கள் நிகழக் காரணமாகியது. நமது சமூகத்தின் ஆதிக்கப் பிரிவினர் நாட்டின் தலைநகரில் தமது கால்களைப் பதித்ததாலும் தொடர்ச்சியான செல்வத் திரட்சியைப் பெற முடிந்ததாலும் பன்முகத் தொடர்புகளுக்கும் ஊடாட்டங்களுக்கும் உட்பட முடிந்ததாலும் இப்பிரிவினர் பின்னாட்களில் நமது மக்களின் அரசியல் தலைமையாக தம்மை எளிதில் நிறுவ முடிந்தது. இவர்களைத் தொடர்ந்து நமது மக்களின் மேலும் சில பிரிவினர் தெற்கே இடம்பெயர ஆரம்பித்தனர். வர்த்தக உதவியாளர்களாகவும் வேலையாட்களாகவும் ஒல்லாந்தரின் அரசு, நிர்வாக நிறுவனங்களில் பங்கேற்பவர்களாகவும் பலர் கொழும்பில் நிலை கொள்ள ஆரம்பித்தார்கள். இத்தகைய இடப்பெயர்வானது நமது மக்களின் குடிப்பரம்பலிலும் சமூக அமைவிலும் சடுதியான மாற்றங்களை ஏற்படுத்தியது. இதுவரை காலமும் பெரிதும் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குள்ளேயே எல்லைப்பட்டிருந்த நமது மக்களின் சமூக இயக்கமானது இப்போது தெற்கு நோக்கியும் திரும்பியது. இது பின்னாட்களில் நமது மக்களின் அரசியல் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கங்கள் ஏற்படக் காரணமாகியது.

நமது மக்களிடையே இடம்பெற்ற இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்பெயர்வுகளோடு விட போர்த்துக்கீசர் மற்றும் ஒல்லாந்த ஆக்கிரமிப்பின் கீழ் வடக்குக் கிழக்கில் ஆங்காங்கே நகரவாக்கங்களும் இடம்பெற்றன. மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், புத்தளம், யாழ்ப்பாணம் போன்ற துறைமுகப் பகுதிகளில் இவர்கள் தமது கோட்டைகளை அமைத்ததோடு அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளை திட்டமிட்ட ரீதியில் நகரங்களாகவும் மாற்றினார்கள். இதன் காரணமாக நகர்சார் கலாச்சாரமும் நகரப் பிரிவினரும் நமது மக்களிடையே உருவாகத் தொடங்கினார்கள். இவ்வாறு உருவான இப்பிரிவினரும் பின்னாட்களில் நமது மக்களின் சமூக அரசியல் வாழ்வில் தாக்கங்கள் நிகழ்த்துவோராக அமைந்தனர்.

## ஆங்கிலேயர் ஆதிக்கக் காலம்

ஆங்கிலேய ஆதிக்கத்தின் கீழ் நமது மக்களின் வாழ்வியக்கம் பாரிய மாற்றத்திற்கு உட்பட்டது. ஒருபுறம் நமது மக்களின் சமூக, பொருளாதார, கலாச்சார இயக்கங்கள் புதிய பண்புகளையும் புதிய வடிவங்களையும் பெற்றன. மறுபுறம் அவர்கள் மத்தியில் புதிய அரசியல் இயக்கம் உருவாகி வளர்ச்சியடைந்தது.

**போர்த்துக்கீச, ஒல்லாந்த ஆக்கிரமிப்பாளர்களிலிருந்து ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்கள் இரண்டு முக்கிய அம்சங்களில் வேறுபட்டார்கள். ஒன்று, ஆங்கிலேயர்கள் இந்நாட்டில் முற்றிலும் புதிய அரசியல், நீதி மற்றும் நிர்வாக முறைமைகளை அறிமுகப்படுத்தினார்கள். இரண்டு, இங்கு நிலவிய சமூக, பொருளாதார கலாச்சார உறவுகளில் அவர்கள், அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தினார்கள்.**

ஆங்கிலேயர்கள் இந்நாட்டை வெறுமனே தமது வர்த்தகக் கொலனியாக மட்டும் வைத்திருக்கவில்லை. மாறாக, தமது சுரண்டலை உச்சவடிவில் மேற்கொள்ளும் விதத்தில் தமக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்யக்கூடிய இடமாகவும் தமது சந்தையாகவும் இயற்கை வளங்களை தடையின்றி பெறக்கூடிய ஊற்று மூலமாகவும் இலங்கையை மாற்ற விரும்பினார்கள். எனவே, இங்கு நிலவிய சமூக, பொருளாதார, கலாச்சார உறவுகளை மாற்றியமைப்பதும் தமக்குத் சாதகமான உறவுகளை இத்தளங்களில் ஏற்படுத்துவதும் புதிய அரசியல், நீதி நிர்வாக முறைகளையும் நிறுவுவதும் அவர்களுக்கு அவசியமாக இருந்தது.

இவற்றின் விளைவுகள் நமது மக்களை வலிவுடன் தாக்கின. நமது மக்களின் பன்முக இயக்கங்கள் மீது, அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்திய இந்நிகழ்வுகளை நாம் பின்வருமாறு தொகுக்கலாம்.

1 புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் நீதி மற்றும் நிர்வாகத் துறைகளில் நமது மக்களில் ஒரு பிரிவினர் பங்கேற்றார்கள். இவ்வாறு பங்கேற்றவர்களின் முக்கிய பிரிவினராக ஏற்கனவே கொழும்பில் தம்மை நிலைப்படுத்திக் கொண்ட ஆதிக்கப் பிரிவினரும் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மற்றும் மட்டக்களப்புச் சார்ந்த ஆதிக்கப் பிரிவினரும் விளங்கினார்கள். இவ்வாறு நமது சமூகத்தின் ஆதிக்கப் பிரிவினர் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய அரச மற்றும் நிர்வாக கட்டமைப்புக்களில் உள்ளூர் நிர்வாகிகளாக மாறியதானது, பின்வந்த நீண்ட காலங்களுக்கு, நமது மக்களின் அரசியல் இயக்கத்தில், இப்பிரிவினர் தாக்கம் செலுத்துகின்றவர்களாக விளங்குவதற்கு காரணமாகியது.

2. 1833 இல் ஆங்கிலேயர் முழுநாட்டையும் ஒரே ஆட்சி முறையின் கீழ் நிர்வகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இதன் காரணமாக ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் கீழ் அதுவரை தனியான சமூகமாக இயங்கியும், அடையாளம் காணப்பட்டும் வந்த நமது மக்கள் இலங்கையிலுள்ள ஏனைய சமூகங்களுடன் ஒன்றாக இணைக்கப்பட்டார்கள். நமது மக்களின் சுயாதீனத்தையும், தனித்துவத்தையும் உரிமைகளையும் மறுத்த இந்த நிகழ்வானது, பின்னாட்களில் சிங்கள ஆதிக்கத்தின் கீழ், நமது மக்கள் அடக்கப்படுவதற்கான கருவாக அமைந்தது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் நீதி மற்றும் நிர்வாகத் துறைகளில் நமது மக்களின் ஒரு பிரிவினர் கொழும்பில் ஏற்கனவே தம்மை நிலைப்படுத்திக் கொண்ட ஆதிக்கப்பிரிவினரும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார் மற்றும் மட்டக்களப்பைச் சார்ந்த ஆதிக்கப் பிரிவினரும் தம்மை இணைத்துக் கொண்டார்கள். இதனுடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு முரண்பாடுகளை எதிர்கொண்ட போதிலும் நமது மக்கள் ஒரே சமூகமாக இணைவதற்கான அத்திவாரம் இடப்பட்டது.

3. 1844ம் ஆண்டு ஆங்கிலேயர் இங்கு நிலவிய அடிமை முறையை நீக்கினார்கள். இது நமது மக்களின் சமூக உறவுகளில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தியது. வன்னி, மட்டக்களப்பு தமிழர்களைப் பொறுத்தவரை அடிமை முறைமைகளின் நீக்கமானது ஏற்கனவே தளர்வாகப் பிணைக்கப்பட்டிருந்த கணிசமான பிரிவினரை சுதந்திரமான உழைப்பாளர்களாக மாற்றியது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அடிமை முறைமை நீக்கப்பட்டதானது உடனடியாக பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஏனெனில், அங்கு நிலவிய இறுக்கமான சாதியக் கட்டமைவில் இந்த அடிமைகள் ஏற்கனவே கீழ்நிலையில் வைக்கப்பட்டிருந்ததால் அடிமை முறைமை நீக்கப்பட்ட பின்பும் கூட அவர்கள் தொடர்ந்தும் சாதிப் படிமுறையின் அதேநிலையில் நீடிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். எனினும், இவர்கள் அடிமை நிலையில் இருந்து விடுவிக்கப்பட்டதானது சுதந்திரமான முறையில் இயங்கவும் பிற்காலத்தில் சாதிய முறைக்கு எதிரான போராட்டங்களில் இவர்கள் தீவிரமாகப் பங்குகொள்ளவும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய சக்தியாக மாறவும் வழியேற்படுத்தியது.

4. முழுநாட்டையும் ஒரே நிர்வாக மற்றும் ஆட்சி முறைக்குள் வைத்திருப்பதற்கும் பொருளாதார நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்வதற்கும் போக்குவரத்து எளிதாக்கப்படுவது அவசியம். எனவே, ஆங்கிலேயர்கள் நாட்டின் பல பகுதிகளையும் ஊடறுத்துச் செல்கின்ற நீண்ட வீதிகளையும் இரயில் பாதைகளையும் ஏற்படுத்தினார்கள். இது நமது மக்களை வெளியிடங்களுடன் தொடர்புபடுத்திய அதேநேரத்தில் இதுவரை காலமும் தமக்கிடையே நெருங்கிய தொடர்புகள் இன்றி வெவ்வேறு பிரதேசங்களில் தனித்து வாழ்ந்து வந்த நமது மக்களிடையே அடிக்கடியும் நெருக்கமானதுமான தொடர்புகள் ஏற்படுவதற்கும் வழிவகுத்தது. இதனால் அவர்கள் ஒரே சமூகமாக ஒன்றிணைவதற்கான புறநிலை வாய்ப்புக்களும் உணர்வுத் தூண்டலும் அதிகரித்தன.

5. 1833இல் வர்த்தகத் துறையில் அரசின் கட்டுப்பாடு அகற்றப்பட்டதால் அத்துறையின் தனியாரின் பங்கேற்பு துரிதமாக அதிகரித்தது. ஏற்கனவே முழுநாட்டையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததாலும் முழுநாட்டையும் இணைப்பதற்கான போக்குவரத்து மார்க்கங்கள் உருவாக்கப்பட்டதாலும் இப்போது வர்த்தகத்தில் அரசுக்கு இருந்த ஏகபோகம் நீக்கப்பட்டதாலும் வர்த்தத் துறையானது பெரும் வளர்ச்சி பெற்றது. இது விவாசயத் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. விவசாயமானது மேலும் மேலும் சந்தையை இலக்காகக் கொண்டதாக வர்த்தகப் பயிர் உற்பத்தியாக மாற்றம் அடைந்து வந்தது. குறிப்பாக யாழ்ப்பாண விவசாயிகள் வர்த்தகப் பயிர் உற்பத்தியில் முன்னைவிடத் தீவிரமாகவும் ஆர்வமாகவும் ஈடுபடத் தொடங்கினார்கள்.

6. ஆங்கிலேய அரசு கல்வி வளர்ச்சியிலும் அக்கறை செலுத்த வேண்டிய நிலை உருவாகியது. தனது நிர்வாகத்தை முறையாகவும் ஒழுங்காகவும் மேற்கொள்வதற்கு கல்வி கற்ற உள்ளூர் பிரிவினர் அந்த அரசிற்கு அவசியமாக இருந்தார்கள். நிர்வாகம் விரிவடைவதற்கு ஏற்ப இப்பிரிவினரின் அவசியமும் அதிகரித்தது. எனவே, கூடுதல் எண்ணிக்கையில் கல்வி கற்றவர்களை உருவாக்குவதற்காக அதிக மிஷனரிப் பாடசாலைகளை ஆங்கிலேயர்கள் நிறுவினார்கள். பாடசாலையில் கற்பதற்கும் உத்தியோகம் பெறுவதற்கும் மதம் மாறுவது அவசியம் என்றிருந்த முன்னைய விதிமுறை நீக்கப்பட்டது. எனவே, நமது மக்களில் கணிசமானோர் இப்போது கல்வி கற்பவர்களாக மாறினார்கள்.

இப்போது ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர் மேற்கொண்ட சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார மாற்றங்களினால் நமத மக்களிடையே புதிய உறவுகளும், புதிய நலன்களைக் கொண்ட பிரிவினர்களும் வேகமாக உருவாகி வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச நிர்வாகத் துறைகளில் பங்கேற்றோர், வர்த்தகர்கள், கல்வி கற்றோர்... என தொடர்ச்சியாக அதிகரித்து வந்த இப்பிரிவினர்களின் நலன்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கு, அரசியல் ரீதியிலும், பொருளாதார கலாச்சார ரீதியிலும் தொடர்ச்சியாக மாற்றங்கள் ஏற்பட வேண்டியது அவசியமாகியது. கூடுதல் அரசியல் பிரதிநிதித்துவம், நிர்வாகத் துறைகளில் அதிகமளவில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் நிர்வாகத் துறையில் நுழைவதற்கும் கல்வி கற்பதற்கும் தடையாக அமைந்த காரணிகள் அகற்றப்படுதல், வர்த்தகத்திற்கும் உற்பத்தி முயற்சிகளுக்கும் மேலும் கூடுதல் வாய்ப்புகள் என . . . புதிதாக உருவாகிய பிரிவினரின் நலன்கள் விரிந்து சென்றன. இவ்வாறு, புதிய பிரிவினர்கள் அதிகரித்த அளவில் உருவாவதும் அவர்களின் நலன்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கு புதிய மாற்றங்கள் ஏற்படுத்துவதும் ஒரு அவசிய சுழல்போன்று இங்கு மாறி, மாறி நிகழ்ந்தன. இதன் விளைவாக, இலங்கையில் அரசியல் திருத்தங்கள், சட்டத் திருத்தங்கள் . . . என ஒரு குறுகிய காலத்திற்குள் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

எனினும் இத்தகைய மாற்றங்கள், புதிதாக உருவாகி வந்த பிரிவினரின் நலன்களை பூர்த்தி செய்யக் கூடிய அளவிலும், வேகத்திலும் அமைந்திருக்கவில்லை. ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு மாற்றமும் ஒவ்வொரு அரசியல் சீர்திருத்தமும் இலங்கையின் மீதான அவர்களின் ஆதிக்கப்பிடியை பலவீனப்படுத்துவதாக அமைந்தன. இதனால் இத்தகைய மாற்றங்களை சிறிய அளவிலும், நீண்டகால இடைவெளியிலும் மேற்கொள்வதில் ஆங்கிலேயர் அக்கறை கொண்டார்கள். இவ்வாறு வேகமாக அதிகரித்து வந்த புதிய பிரிவினரின் நலன்கள் போதிய அளவிலும், போதிய வேகத்திலும் பூர்த்தி செய்யப்படாமல் தொடர்ந்ததன் காரணமாக, நமது மக்கள் மத்தியில் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக செயற்படக்கூடிய பிரிவினர்கள் படிப்படியே உருவாகி வந்தார்கள். இந்த எதிர்ப்புகள் மதத்தளத்திலும் அரசியல் தளத்திலும் வெளிப்பட்டன.

**ஒரு சமூகம் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர், ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக அந்த சமூகத்திடம் இருந்து வெளிப்படுகின்ற எதிர்ப்புத் தளங்களில் ஒன்றாக மதமும் விளங்குகின்றது. மதம் என்பது வழிபாட்டுக்குரிய ஒரு அம்சம் மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் நம்பிக்கையுடனும் வரலாற்றுடனும் கலாச்சாரத்துடனும் பின்னிப் பிணைந்து நிற்கின்றது.**

இந்நிலையில் ஒரு ஆக்கிரமிப்பாளரினால் சுதேசிய மக்களின் கலாச்சாரம் மதம் என்பவை பாதிப்புக்குள்ளாகும் பொழுது அச்சமுகத்தின் நம்பிக்கைகள் கேள்விக்குள்ளாக்கப் படும்போது ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான வித்து மதத் தளத்திலும் முளைவிடத் தொடங்குகின்றது.

போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் பின்னர் ஆங்கிலேயரும் இந்து மதத்தின் மீதும் அதன் கொள்கைகள் மற்றும் வழிபாடுகள் மீதும் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆரம்பத்தில் இவை, இந்துக் கோயில்களை அழித்தல், மத வழிபாடுகளுக்கு தடை விதித்தல், கட்டாய மதமாற்றம் . . . போன்ற வன்முறை வடிவங்களில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பின்னர் பெரிதும் கருத்தியல் வடிவத்திலும் அமைந்தன. பிரச்சாரம், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார வசதிகள், ”விருப்பபூர்வமான” மதமாற்றம் போன்ற செயற்பாடுகளுக்கூடாக இந்து மதத்தின் மீது, குறிப்பாக நமது மக்களில் பெரும்பாலானோர் பின்பற்றுகின்ற சைவ மதத்தின் மீது இவர்கள் தமது தாக்குதல்களை தொடுத்து வந்திருக்கின்றார்கள். ஐரோப்பிய ஆக்கிமிப்பாளர்களின் இத்தகைய மத ரீதியான தாக்குதல்களுக்கு எதிராக இந்து மக்களிடையே வெளிப்படையான போராட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. ஆரம்பநிலையில் சங்கிலியன் மன்னன் மதமாற்றத்திற்கு எதிராக தீவிரமாக செயற்பட்ட போதிலும், ஐரோப்பிய ஆதிக்கம் இங்கு உறுதியாக நிலைபெற்றுவிட்ட பின்னாட்களில், இவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் பகிரங்கமாக முன்னெடுக்கப்படவில்லை.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் மத மாற்றத்திற்கும் ஆங்கிலேய கலாச்சார ஆதிக்கத்திற்கும் எதிராக, பகிரங்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த எதிர்ப்பு ஆறுமுகநாவலர் என்ற மனிதருடாக முன்னெடுக்கப்பட்டது. ஐரோப்பிய ஆக்கிரமிப்பினால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மதத்திற்கும், அதன் அனுஷ்டானங்களுக்கும் ஏற்பட்டிருந்த பாதிப்புகளுக்கும், தமிழ் கலாச்சாரத்தில் ஏற்பட்டு வந்த மாற்றங்களுக்கும் எதிராக தனித்து, துணிவுடன் குரல் கொடுத்த மனிதராக ஆறுமுகநாவலர் விளங்கினார். முற்றிலும் மதத்தளத்தில், மதத் தூய்மையாக்கம் சார்ந்தே இவரது எதிர்ப்புகள் அமைந்திருந்த போதிலும், ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு குரலாகவும், தமிழத் தேசிய இயக்கத்தின் தொடக்கமாகவும் இவரது செயற்பாடுகள் அமைந்தன.

பைபிளை மொழிபெயர்க்க உதவியதால் கிறிஸ்தவ மதம் பறிய அறிவும், சுயகற்றலின் விளைவாக ஆழ்ந்த சைவமத அறிவும் பெற்றவராக நாவலர் விளங்கினார். எனவே, ஒரே நேரத்தில் கிறிஸ்த-வத்திற்கு எதிராக உறுதியுடன் வாதிடக் கூடிய-வராகவும், சைவ மதத்தை நிறுவனப்படுத்-துபவராகவும் நாவலர் செயற்பட்டார். கிறிஸ்தவ மதமாற்றத்திற்கும் ஆங்கிலேய கலாச்சாரத்திற்கும் எதிராக, சைவ சமயத்தையும் சைவத்தை அடிப்-படையாகக் கொண்ட வாழ்க்கை முறையையும் அவர் முன்னிறுத்தினார். இதன் காரணமாக, நாவலரின் செயற்பாடுகள், ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக அமைந்த கலகக் குரலாக வெளிப்பட்ட அதேநேரத்தில், மறுபுறம் நமது மக்களிடையே சாதிய முறைமையும், சை மதமும், ஆணாதிக்க கருத்தியலும் மறுவார்ப்பு செய்யப்-படுவதற்கும் நிறுவன வடிவம் பெறுவதற்கும் காரணமாயின.

மதமாற்றத்திற்கும் ஆங்கிலேய கலாச்சார ஆதிக்கத்திற்கும் எதிராக ஆறுமுகநாவலர் முன்னெடுத்த செயற்பாடுகள், அன்றைய யாழ்ப்பாண சமூகத்தின் ஆதிக்கப் பிரிவினரின் நலன்களுடன் ஓரளவுக்கு நெருக்கமாக பிணைந்திருந்தன. ஐரோப்பிய ஆதிக்கத்தினுடாக, வெள்ளாள சாதியினர், ஏனைய சாதிகளை விட, தம்மை ஆதிக்க நிலையில் நிறுத்தியிருந்தார்கள். ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு முன்னர், சமூக ரீதியில் செல்வாக்கு பெற்றிருந்த ஏனைய ஆதிக்கப் பிரிவினர்களான மடைப்பள்ளி, மறவர் போன்ற சாதிகளை பின்னுக்குத் தள்ளி, வெள்ளாளர்கள் தம்மை ஆதிக்க நிலையில் இருத்தியிருந்தார்கள். ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு முன்பே, வெள்ளா-ளர்கள் நிலச் சொந்தக்காரர்களாகவும், கலாச்சார ஆதிக்கம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஐரோப்பிய ஆதிக்கத்தின் பின்னர், அரச நிர்வாகத் துறைகளின் அதிகளவில் பங்கேற்பவர்களாகவும் இவர்கள் இருந்தார்கள். எனினும் ஐரோப்பிய ஆதிக்கமானது சாதியப் படிநிலையில் அடுத்தடுத்த மட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆதிக்கமும் செல்வாக்கும் பெறக்கூடிய சாத்தியத்தையும் ஏற்படுத்தியது. குறிப்பாக, மதமாற்றத்தினுடாக, இப்பிரிவினர்கள் கல்வி கற்பதற்கும் அரச, நிர்வாகத் துறைகளில் நுழைவதற்குமான வாய்ப்புகள் கிடைத்தன. 1830களில் வர்த்தக் துறையில் அரசின் ஏகபோகம் அகற்றப்பட்டதால், கடலோடிகள் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் வர்த்தகத்துறைக்குள் நுழைய முடிந்தது. இவ்வாறு சாதி ரீதியாக அடுத்தடுத்த நிலைகளில் இருந்த பிரிவினர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, வர்த்தகம் . . . போன்றவற்றினுடாக சமூக ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்று வந்ததானது வெள்ளாளரின் சமூக ஆதிக்கத்திற்கு ஒரு சவலாக அமைந்தது. இவ்வாறான ஒரு சூழலில்தான் ஆறுமுகநாவலரின் ஆங்கிலேய எதிர்ப்பு நடவடிக்கைகளும், மதச்சீர்திருத்த நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

**மதமாற்றத்திற்கும், ஆங்கிலேய கலாச்சாரத்திற்கும் எதிராக நாவலர் முன்னெடுத்த நடவடிக்கைகள், சைவ-வேளாள பிரிவினரின் ஆதிக்க நலன்களுக்கு இசைந்ததாக அமைந்திருந்தன. ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய கல்வியைக் கற்பதையோ அல்லது ஆங்கிலேயரின் அரச, நிர்வாகத் துறைகளின் உத்தியோகங்கள் பெறுவதையோ நாவலர் எதிர்க்கவில்லை. மாறாக, கல்வி கற்பதற்கும், உத்தியோகம் பெறுவதற்கும் மதம் மாறுவதையே அவர் எதிர்த்தார்.**

மத மாற்றத்தினுடாக சைவ மதப்பிரிவைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை ஓரளவு குறையக் கூடியதாகவும், வெள்ளாளரல்லாத பிரிவினரின் சமூக ஆதிக்கம் அதிகரிக்கக் கூடியதாகவும் இருந்த நிலையில், மதமாற்றம் நிறுத்தப்படுவதன் மூலம் இத்தகைய போக்கை தவிர்க்கக் கூடியதாக இருந்தது. மதமாற்றம் நிறுத்தப்படுவதால், சைவ மதத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை குறை-யாமல் பாதுகாக்கப்படக் கூடியதாக இருந்ததோடு, மதமாற்றத்திற்குட்படாமலேயே வெள்ளார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அதிகளவில் கல்வி கற்கவும் உத்தியோகங்களில் நுழையவும், எனவே அவர்களின் ஆதிக்கம் தொடர்ந்தும் பேணப்படக் சுடியதாகவும் இருந்தது.

**ஆங்கிலேயக் கலாச்சாரம், சாதிய முறைமைக்கு எதிரானதாகவும் பெண்களின் உரிமைகளை வலியுறுத்துவதாகவும் அமைந்தது. இத்தகைய ஆங்கிலேய கலாச்சாரத்திற்கு எதிராக, நாவலர் முன்னெடுத்த நடவடிக்கைகள் சாதிய முறைமைகளை தீவிரமாக வலியுறுத்துவதாகவும் ஆணாதிக்க முறைமையை மேலும் வலுவாக உயர்த்துவதாகவும் அமைந்தன.**

இவ்வகையில் நாவலர் முன்னெடுத்த ஆங்கிலேய எதிர்ப்பு நடவடிக்கைகள் அன்றைய நிலையில், சைவ - வேளாள ஆதிக்கப் பிரிவினரின் நலன்களுக்கு இசைவானவையாக அமைந்திருந்தன. இந்த எதிர்ப்பானது, ஒருபுறம் ஆங்கிலேய ஆதிக்கத்தின் மீதான கண்டனமாகவும் மறுபுற சைவசமயத்தையும் சாதி மற்றும் ஆணாதிக்க முறைமை மற்றும் மேலும் அழுத்தமாக மறுவார்ப்புச் செய்வதாகவும் அமைந்தது.

எனினும், ஆறுமுகநாவலர் முன்னெடுத்த ஆங்கிலேய எதிர்ப்பு நடவடிக்கைகள் நமது மக்களிடையே ஒரு கிளர்ச்சிக்குரிய சூழலை ஏற்படுத்தவில்லை. இவ்வாறு நிகழாமைக்கு பின்வரும் காரணங்களான நாம் அடையாளம் காணமுடியும்.

1. யாழ்ப்பாண சைவ வேளாள ஆதிக்கப் பிரிவினர், ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களுடன் நெருக்கமான உறவுகளை பேணிவந்தார்கள். ஒப்பீட்டளவில் சிறிய நிலப்பரப்பில், அதிக செறிவில் வாழ வேண்டியவர்களாக இருந்ததால், இந்த ஆதிக்கப் பிரிவினர், தமது நலன்களையும், வளங்களையும் பெருக்கிக் கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் அவற்றை பற்றிப் பிடிக்கின்ற தன்மையை கொண்டிருக்கின்றார்கள். ஐரோப்பிய ஆக்கிரமிப்பானது, குறிப்பாக ஆங்கிலேய ஆக்கிரமிப்பு அரச, நிர்வாகத் துறைகளில் பங்கேற்பதற்கும், தமது பிரதேச எல்லையைக் கடந்து தென்னிலங்கைக்கு மட்டுமன்றி, பிற நாடுகளுக்கும் குடிபெயரக் கூடிய வாய்ப்புகளையும் இவர்களுக்கு வழங்கியிருந்தது. இதனால், இப்பிரிவினர் ஆங்கிலேய ஆக்கிரமிப்புக்கு எதிராக தீவிரமாகப் போராட வேண்டிய அவசியம் அற்றவர்களாக இருந்தார்கள். மதமாற்றமும் அதனுடனான விளைவுகளும் இவர்களின் செல்வாக்கின் மீதும், ஆதிக்கத்தின் மீதும் ஓரளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வந்தபோதிலும், ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்கள் மதமாற்றத்தை அவசியமான நிபந்தனையாக்குவதை தவிர்த்திருந்ததால், அதன் பாதிப்பு குறைந்து வந்தது. எனவே மதமாற்றத்திற்கு எதிராக ஆறுமுகநாவலர், முன்னெடுத்த நடவடிக்கைகள் இந்த ஆதிக்கப் பிரிவினால் ஒரு எல்லைக்குட்பட்ட ஆதரவையே பெற்றிருந்தது.

2. நாவலரின் செயற்பாடுகள் சாதிய முறைமையை மீளுருவாக்கம் செய்வதாகவும், மேலும் அழுத்தமாக நிறுவனப்படுத்துவதாகவும் அமைந்ததால், சாதியப் படிநிலையில் அடுத்தடுத்த மட்டங்களில் வைக்கப்பட்டிருந்தவர்களும், அடக்கப்பட்ட மற்றும் விளிம்புநிலை மக்களும் நாவலரின் ஆங்கிலேய எதிர்ப்பு நடவடிக்கைகளினால் எவ்விதத்திலும் கவரப்படவில்லை. மாறாக, கடலோடிகள் போன்ற சில பிரிவினர் ஆறுமுகநாவலரை எதிர்த்து செயற்பட்டார்கள்.

3. நமது மக்களைப் பொறுத்தவரை, ஆறுமுகநாவலரின் செயற்பாடுகள் பெரிதும் யாழ்ப்பாணத்திற்குள்ளேயே எல்லைப்பட்டிருந்தன. இதனால் வன்னி மற்றும் மட்டக்களப்பு தமிழர்கள் மத்தியில், நாவலரும், அவரது செயற்பாடுகளும் பெரிதும் அறியப்படாதவனவாகவே இருந்தன.

இவ்வாறு நாவலர் தனித்து முன்னெடுத்த ஆங்கிலேய எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒரு சமூக இயக்கமாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய சமூகப் பிரிவினர் எவரும் நமது மக்களிடையே இருக்கவில்லை. இதனால் நாவலரின் செயற்பாடுகள், நமது சமூகத் தளத்தில், சிறு அதிர்வை, மெல்லிய சலனத்தை மட்டும் ஏற்படுத்திய எதிர்ப்பாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துவிட்டது.

நாவலர் சைவத்தின் உயர்நிலையைப் பேணுவதற்காக தமிழ் மொழியையும் சைவத்தையும் ஒன்றிணைத்தார். இது ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிரான தேசிய உணர்வின் மொழி ரீதியான வெளிப்பாடாகவும் மொழி உணர்வானது நமது மக்களிடையே திட்டவட்டமான அரசியல் உணர்வாக மாற்றமடைவதற்கான ஒரு முதல் தொடக்கமாகவும் அமைந்திருக்கின்றது.

**சைவமும் தமிழும் என்ற இணைவானது பின்னாட்களில் சைவத்திற்கு வெளியேயுள்ள மக்கள் தமிழுக்கு ஆற்றியிருக்கின்ற பங்களிப்பை முதன்மைப்படுத்தாத மரபு சைவத்தைப் பின்பற்றுகின்ற நமது மக்களிடையே உருவாவதற்கு காரணமாக இருந்த போதிலும் மறுபுறத்தே, மொழி குறித்து ஆறுமுக நாவலர் வெளிப்படுத்தியுள்ள தீவிரமானது நமது மக்களின் தேசிய உருவாக்கத்திலும் தேசிய இயக்கத்திலும் ஒரு உறுதியான தொடக்கமாக அமைந்திருக்கின்றது.**

ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக அரசியல் தளத்தில் ஒப்பீட்டளவில் உறுதியான எதிர்ப்பு வெளிப்பட்டது. இந்த எதிர்ப்பு, ஆரம்பத்தில் முழு இலங்கையையும் தழுவியதாக முன்னெடுக்கப்பட்டது. ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய அரச முறைமைக்குள் இணைந்து கொண்ட தமிழ், சிங்கள, முஸ்லீம் தலைமைகளினால் இத்தகைய எதிர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையை பன்முக சுரண்டலுக்குரிய இடமாக மாற்றி வந்த ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்கள், இத்தகைய சுரண்டலை தடையற்ற முறையில் மேற்கொள்வதற்கு ஏற்ற, அரச, நிர்வாக முறைமைகளை இங்கு ஏற்படுத்தினார்கள். தாம் ஆக்கிரமித்துள்ள இலங்கை மக்களுடன் ஏற்படக் கூடிய இணக்கமான உறவானது, தமது ஆதிக்கத்தையும் சுரண்டலையும் தடையற்று, நீடிக்க உதவும் என்ற அடிப்படையில் அரச, நிர்வாக துறைகளில் இலங்கையைச் சேர்ந்தவர்களையும் இணைத்துக் கொள்கின்ற முறைமையை ஆங்கிலேயர் நடைமுறைப்படுத்த ஆரம்பித்தார்கள். இதற்கமைய, இங்கு அரசியல் விவகாரங்களை கையாள்வதற்காக சட்டசபையையும், நிர்வாக விடயங்களை மேற்கொள்வதற்காக நிர்வாக சபையும் உருவாக்கப்பட்டன.

ஆரம்பத்தில், சட்டசபைக்குரிய உறுப்பினர்கள், உத்தியோகப் பற்றுள்ளவர்கள், உத்தியோகப்பற்றற்றவர்கள் என்ற அடிப்படையில் பங்கேற்றார்கள். உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினர்கள் தமது உத்தியோகங்கள் சார்ந்தும், உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் நியமன அடிப்படையிலும் சட்ட சபையில் அங்கம் வகித்தார்கள். இந்த அங்கத்தினர்களில் இலங்கை மக்களின் சார்பில் நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. (1833இல் உருவாக்கப்பட்ட முதலவாது சட்ட சபையில், மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆகவும், இவர்களின் உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினர் 9 ஆகவும், உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களில் ஆங்கிலேயர் 3, பறங்கியர் 1, தமிழ் 1, சிங்களவர் 1 ஆகவும் இருந்தனர்.) இவ்வாறு உருவாக்கப்பட்ட சட்ட சபையில் மிக நெருக்கமாக இருந்த ஆதிக்கப் பிரிவைச் சேர்ந்தவர்களையே தமிழ் மற்றும் சிங்கள மக்களின் பிரதிநிதிகளாக ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்கள் நியமித்தார்கள். இவ்வகையில் ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்த, ஏற்கனவே கொழும்பில் தம்மை நிலைப்படுத்தியிருந்த தமிழ் மேட்டுக்குடியினரே, தமிழ் முஸ்லீம் மக்களின் சார்பில் முதலில் நியமிக்கப்பட்டார்கள்.

1833 இல் நடைமுறைக்கு வந்த முதலாவது சட்ட சபையில் அரசியல்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஆறுமுகம் குமாரசாமியில் தொடங்கி, 1940கள் வரை, ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, கொழும்பு தமிழ் மேட்டுக் குடியினரே நமது மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். எமது மக்களிடமிருந்து அந்நியப்பட்டிருந்த இப்பிரிவினர் நமது மக்களின் நலன்களை பேணுகின்ற வகையில் செயற்படவில்லை. மாறாக, தாம் பிரதிநித்துவப்படுத்திய ஒரு சிறுபிரிவினரின் நலன்களையும், அந்தஸ்தையும் பேணுவதே இவர்களின் நோக்கமாக இருந்தது. எந்த மக்களின் பிரதிநிதிகளாக இவர்கள் நியமிக்கப்பட்டார்களோ, அந்த மக்களைச் சேர்ந்த எந்தப் பிரிவினருடனும் தம்மை இணைத்துக் கொண்டிராத இந்த கொழும்புத் தமிழ் மேட்டுக் குடியினர், இதற்கு மாறாக சிங்கள ஆதிக்கப் பிரிவினருடன் நெருங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுவதன் மூலம் தமது நலன்களை உயர்த்திக் கொள்வதற்கு முயன்றர். இக்காலகட்டத்தில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் (Ceylon National Congress-CNC) என்ற அமைப்பு இராமநாதனின் தலைமையில் உருவாக்கம் பெற்றது.

**இவ்வாறு தமிழ், சிங்கள ஆதிக்கப் பிரிவினரிடையே அரசியல் ரீதியில் இணைவு ஏற்பட்டதன் மூலம் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கான ஒரு பரந்த தளம் உருவாகியது. அதேவேளை கொழும்புத் தமிழ் மேட்டுக்குடித் தலைமையானது, இலங்கை முஸ்லீம்களினதும், சமூக ரீதியில் அடக்கப்பட்டு வந்த மக்களினதும் பெண்களினதும் உரிமைகளுக்கு எதிராக செயற்படுகின்ற நிலைக்கு, இந்த இணைவு இட்டுச் சென்றது.**

தமிழ், சிங்கள ஆதிக்கப் பிரிவினரிடையே, ஆரம்பத்தில் அரசியல் ரீதியாக நெருக்கமான உறவுகள் நிலவின. சட்டசபையிலும் நிர்வாக சபையிலும் இலங்கையர்களுக்கான பிரதிநித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இவர்கள் வாதிட்டார்கள். இவ்விரு சமூகங்கள் மத்தியில் கல்விகற்ற பிரிவினரும், புதிய சமூகப் பிரிவினர்களும் ஆதிக்கம் பெற்று வந்ததற்கேற்ப, இக்கோரிக்கைகள் உறுதியாகவும் அழுத்தமாகவும் முன்வைக்கப்பட்டன. எனினும், இப்பிரிவினர்களின் வளர்ச்சியே ஒரு நிலையில் கொழும்புத் தமிழ் மேட்டுக்குடித் தலைமைக்கு அரசியல் நெருக்கடிகளையும், அரசியல் பலவீனத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்தது. இத்தகைய முதல் நெருக்கடியை, இலங்கை முஸ்லீம்களின் அரசியல் பிரதிநிதித்துவம் என்ற வடிவில் இந்தத் தலைமை எதிர்கொண்டது.

1889 வரை ஈழத்து தமிழர்களும், இலங்கை முஸ்லீம்களும் ஒரே இனமாகக் கருதப்பட்டு அவர்களின் அரசியல் பிரதிநிதிகளாக கொழும்பு தமிழ் மேட்டுக்குடித் தலைமையே நியமிக்கப்பட்டு வந்தது. எனினும், 1880 களில் இலங்கை முஸ்லீம்கள் மத்தியில் உருவாகி வந்த புதிய சமூகப் பிரிவினர்களும், கல்வி கற்ற பிரிவினரும் தமக்கென தனியான அரசியல் பிரதிநிதித்துவத்தை கோர ஆரம்பித்தார்கள். தமது அரசியல் ஆதிக்கத்தில் பலவீனம் ஏற்படப் போகின்றது என்பதை உணர்ந்த கொழும்பு மேட்டுக்குடித் தலைமை முஸ்லீம்களுக்கென தனியான அரசியல் பிரதிநித்துவம் வழங்கப்படுவதை எதிர்த்தது.

தனது சொந்த மக்களுடன் நெருங்கியிராத கொழும்பு தமிழ் மேட்டுக்குடித் தலைமை தனது அரசியல் ஆதிக்கத்தைப் பேணுவதற்காக சிங்களத் தலைமையுடன் மேலும் நெருக்கமாக இணைந்து செயற்பட்டது. 1915இல் இலங்கை முஸ்லீம்கள் மீது சிங்கள தலைமையின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்ட இனவன்முறைகளில் குற்றஞ் சாட்டப்பட்ட சிங்கள தலைமைகளுக்கு சார்பாக இந்தத் தமிழ் தலைமை செயற்பட்டது.

ஒரு அரசியல் தலைமை, தனது சொந்த மக்களுடன் நெருக்கமாக இணைந்திராத போது அந்த மக்கள் சமூக, அரசியல் ரீதியில் பெறுகின்ற உரிமைகளினால், அந்தத் தலைமையின் ஆதிக்கம் பலவீனப்படுகின்ற நிலை உருவாகின்றது. இவ்வாறான நிலையில் அந்தத் தலைமை, தனது சொந்த மக்களுக்கே எதிராகச் செயற்படுகின்ற நிலைக்குச் செல்கின்றது. இத்தகைய நிலைமைதான் கொழும்புத் தமிழ் மேட்டுக்குடித் தலைமைக்கும் ஏற்பட்டு வந்தது. இலங்கையின் சமூக, அரசியல் தளத்தில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் இந்தத் தலைமையின் அதிகாரத்தில் பல முனைகளிலிருந்து தாக்கங்களை ஏற்படுத்தின. 1844இல் அடிமைநிலை நீக்கப்பட்டமை, பாடசாலைகளில் சாதி வேறுபாடுகள் அகற்றப்பட்டமை? சமூக ரீதியில் சாதிய வழமைகள் மீறப்பட்டமை, இறுதியில் 1931இல் அடக்கப்படுகின்ற பிரிவினர் மற்றும் பெண்கள் உட்பட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டமை போன்ற அனைத்தும் இந்தத் தலைமையின் சமூக அரசியல் ஆதிக்கத்தை பலவீனப்படுத்துபவைகளாக அமைந்தன. எனவே இவை அனைத்தையும் எதிர்க்கின்ற நிலைக்கு இத்தலைமை சென்றது.

**இவ்வாறு, தாம் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு சிறுபிரிவினரின் நலன்களை இலக்காகக் கொண்டு செயற்பட்ட கொழும்பு தமிழ் மேட்டுக்குடித் தலைமை, நமது மக்களின் அரசியல் நலன்கள் குறித்து அக்கறை கொள்ள வேண்டிய அரசியல் சூழல் இலங்கையில் படிப்படியே உருவாகி வந்தது.**

ஆரம்பத்தில் இருந்தே தமிழ் மேட்டுக்குடித் தலைமையானது சிங்கள அரசியல் தலைவர்க-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடன் இணைந்து அரசியல் சீர்திருத்தத்திற்காக போராடிய போதிலும், இத்தகைய போராட்டத்தின் மூலம் பெறப்பட்ட அரசியல் விளைவுகள் சிங்கள அரசியல் தலைமைக்கே சாதகமாக அமைந்து வந்தது. இவ்வாறு அமைவதை நமது தலைமையால் சிறிதும் தடுக்கமுடியவில்லை. கொழும்பு தமிழ் மேட்டுக்குடித் தலைமையுடன் ஒப்பிடும்போது, அதனுடன் இணைந்து செயற்பட்ட சிங்கள அரசியல் தலைமை ஒரு அடிப்படை வேறுபாட்டைக் கொண்டிருந்தது. தமிழ் அரசியல் தலைமையானது நமது மக்களுடன் தொடர்ந்தும் அந்நியப்பட்டிருந்த போது, சிங்கள அரசியல் தலைமையோ தனது ஆதிக்க நிலையையும் கடந்து, தனது மக்களுடன் குறைந்தது தனது மக்கள் மத்தியில் புதிதாக உருவாகி வந்த பிரிவினருடன் நெருக்கமாகப் பிணைந்திருந்தது. இன்னும் துல்லியமாகக் கூறினால், சிங்கள அரசியல் தலைமை, தான் பிரதிநிதித்துவப்படுத்திய, ஒப்பீட்டளவில் பரந்ததாக இருந்த பிரிவினரின் நலன்களையும் கோரிக்கைகளையும் அரசியல் ரீதியில் உறுதியாக வெளிப்படுத்த வேண்டிய அவசியத்தைக் கொண்டிருந்தது. எண்ணிக்கை ரீதியிலும், பிரதேசம் சார்ந்தும் பெரும்பான்மையினராக இருந்த தமது மக்களின் அரசியல் தலைமை என்ற வகையில், தமது மக்கள் சார்பாக சட்ட சபையிலும், நிர்வாகத் துறையிலும் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று சிங்கள அரசியல் தலைமை கோரிக்கை எழுப்பியது. நடைமுறையில் இருந்த இனரீதியான பிரதிநிதித்துவமும், நியமன முறையும் இவர்களின் கோரிக்கைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கவில்லை. எனவே சிங்கள அரசியல் தலைமை, இன ரீதியான பிரதிநித்துவத்திற்கும் நியமன முறைக்கும் பதிலாக, பிரதேச ரீதியிலான பிரதிநிதித்துவத்தையும், தெரிவு முறையையும் நடைமுறைப்படுத்தும்படி கோர ஆரம்பித்தது.

ஆங்கிலேய அரசைப் பொறுத்தவரை, தனது ஆதிக்கத்தை இங்கு தொடர்வதற்கு, எண்ணிக்கை ரீதியில் பெரும்பான்மையாக உள்ள சிங்கள மக்களின் அரசியல் தலைமையினது கோரிக்கைக்கு கூடுதல் அக்கறை கொடுப்பது ஆங்கிலேயே அரசு தனது ஆதிக்கத்தை இங்கு தொடர்வதற்கு அவசியமாக இருந்தது. எனவே தமிழ் அரசியல் தலைமையின் கண்டனங்களையும் மீறி ஆங்கிலேயே அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு அரசியல் சீர்திருத்தமும் சிங்கள அரசியல் தலைமைக்கு சாதகமாக அமைந்தது. 20ம் நூற்றாண்டின் முதல் காலப் பகுதியின் இறுதியில், இனவாத சாரம் பெற்றுவிட்ட சிங்கள அரசியல் தலைமையுடன் தான் இணைந்து செயற்படுவது இனியும் சாத்தியமற்றது என்ற முடிவுக்கு கொழும்பு தமிழ் மேட்டுக் குடித்தலைமை வந்தது. 1921இல் பொன். அருணாச்சலம் இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து நமது மக்களுக்கென முதலாவது தனியான அரசியல் அமைப்பான தமிழர் மகாஜன சபை யை உருவாக்கினார்.

**கொழும்புத் தமிழ் மேட்டுக்குடித் தலைமை தனது சொந்த மக்களிலிருந்து அந்நியப்பட்டதாகவும், அவர்களின் வெகுஜன நலன்களுக்கு எதிராக செயற்படுவதாகவும் இருந்தும் கூட, புறத்தே உருவாகி, வளர்ச்சியடைந்து வந்த அரசியல் நிலைமைகள், தனது சொந்த மக்களுடன் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை இத்தலைமைக்கு ஏற்படுத்தின.**

சிங்கள மக்களிடையே புதிதாக உருவாகிவந்த கல்விகற்ற பிரிவினரும், அரச, நிர்வாக முறைமைக்குள் இணைந்து கொண்டவர்களும் வர்த்தகப் பிரிவினரும் தமது நலன்கள் தடையற்றும், விரிந்த அளவிலும் பேணப்படுவதற்கு அரசியல், பொருளாதார, கலாச்சார நிலைமைகளில் தீவிர மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கோரினார்கள். நடைமுறையிலிருந்த சட்டசபையில், சிங்கள மக்களின் பிரதிநிதித்துவமானது ஏறக்குறைய தமிழ், முஸ்லீம் பிரதிநிதித்துவத்திற்கு சமனானதாகவும், ஆங்கிலேய பிரதிநிதித்துவத்திற்கு குறைவானதாகவும் இருந்தது. பொருளாதார துறையைப் பொறுத்தவரை, பெருந்தோட்டத்-துறையில் ஆங்கிலேயரின் ஆதிக்கமும், ஏற்றுமதி இறக்குமதியிலும் கொழும்பை மையமாகக் கொண்ட வர்த்தகத்திலும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தோடு, முஸ்லீம்களதும், இந்தியத் தமிழர்களினதும், ஈழத்தமிழர்களினதும் ஆதிக்கமும் வலுவாக வேரூன்றியிருந்தன. நிர்வாகத் துறையில் ஈழத்தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையில் பங்கேற்பவர்களாக இருந்தார்கள். இத்தகைய நிலைமை மாற்றியமைக்கப்படுவதினூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே, தமது நலன்கள் பேணப்படுவதும் வளர்ச்சியடைவதும் சாத்தியமாகும் என சிங்கள ஆதிக்கப் பிரிவினர்களும் புதிதாக உருவாகி வந்த பிரிவினர்களும் உணர்ந்தார்கள். எனவே, அரசியல் பொருளாதார, நிர்வாக ரீதியில் ஆங்கிலேயருக்கு எதிராக மட்டுமன்றி, தமிழ், முஸ்லீம்களுக்கு எதிராகவும் செயற்படுகின்ற போக்கு, இச்சிங்களப் பிரிவினரிடையே உருவாகியது. இந்நாட்டின் சகல துறைகளிலும் தமது ஆதிக்கத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின், அரசியல் தளத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவது அவசியம் என்ற முடிவுக்கு இவர்கள் வந்தார்கள். ஆங்கிலேயர், ஈழத்தமிழர், இந்தியத் தமிழர் மற்றும் இலங்கை முஸ்லீம்கள் ஆகிய சமூகங்களின் ஆதிக்கப் பிரிவினர்களின் ஓட்டுமொத்த ஆதிக்கத்துடன் ஒப்பிடுகையில், சிங்கள ஆதிக்கப் பிரிவினர் பலவீனமானவர்களாக இருந்தார்கள். எனவே தமது பலத்தையும், ஆதிக்கத்தையும் வலுப்படுத்தக் கூடிய மார்க்கம் என்றவகையில், இவர்கள் தமது மக்களுடன் மேலும் மேலும் நெருக்கமாக தம்மை இணைத்துக் கொண்டார்கள்.

இவ்வாறு சிங்கள மக்களுடன், சிங்களத் தலைமைகள் (அரசியல், பொருளாதார, கலச்சாரத் தலைமைகள்) இணைந்து கொண்டதானது, சிங்கள மக்கள் ஒரேதேசமாக திரள்வதையும், அவர்கள் தமக்கென தனியான தேசிய இயக்கத்தை முன்னெடுப்பதையும் துரிதப்படுத்தின. **ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களுடன் ஒப்பிடுகையில், சிங்களத் தலைமை மிகப் பலவீனமாக இருந்ததால், அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சிங்கள மக்களின் தேசிய இயக்கமானது, இலங்கையில் வாழ்ந்த முஸ்லீம்கள், மலையகத் தமிழர் மற்றும் ஈழத்தமிழர்களுக்கு எதிரான அரசியல் இயக்கமாக மாற்றமடைந்தது.** இந்த சமூகங்களுடனான தமது முரண்பாடுகளை, இனவெறியுடனும், திட்டமிட்ட ரீதியிலும், மிகவெளிப்படையாகவும் சிங்களத் தலைமைகள் முறைப்படுத்திக், கையாண்டன. முதலில், முஸ்லீம்கள் மீதும், பின்னர் மலையகத் தமிழர்கள் மீதும், இறுதியில் ஈழத்தமிழர்கள் மீதும் வன்முறை சார்ந்த தாக்குதல்களை சிங்களத் தலைமை தொடுத்தது.

**சிங்கள தலைமைகள் மத்தியில், இலங்கையிலுள்ள ஏனைய சமூகங்கள் மீது தொடர்ச்சியாக வெளிப்பட்டு வந்த இனக்குரோதமும் இனவெறுப்பும் சிங்கள மக்களின் தேசிய இயக்கத்தில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. சிங்கள மக்களிடையே, இலங்கையிலுள்ள ஏனைய சமூகங்கள் மீது வெறுப்பும், குரோதமும், ஆதிக்க உணர்வும், ஆக்கிரமிப்பு மனோபாவமும் தோன்றி, தீவிரமடைவதற்கு இவை காரணமாகின.**

இவ்வாறு சிங்கள தலைமையிடமும், சிங்கள மக்களிடமும், இவர்களினால் முன்னெடுக்கப்பட்ட தேசிய இயக்கத்திலும், இலங்கையில் வாழ்ந்த ஏனைய சமூகங்களின் உரிமைகளையும் நலன்களையும் மறுக்கின்ற போக்கு உருவாகி, ஆழ வேரூன்றியது. குறிப்பாக, அரசியல் தளத்தில் தமது ஆதிக்கத்தை நிறுவுவதினூடாகவே, ஏனைய தளங்களில் தமது கட்டுப்பாட்டைப் பேண முடியும் என்பதை தெளிவாக உணர்ந்து கொண்ட சிங்கள அரசியல் தலைமை, இனரீதியான பிரதிநிதித்துவம், நியமன முறை என்பவற்றுக்கு பதிலாக, பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம், தெரிவுமுறை என்பவற்றை உறுதியாக கோரியது. இதன் விளைவாக, அதுவரைக்கும் சட்டசபையில் ஏறக்குறைய சிங்கள அரசியல் தலைமைக்கு சமமான முக்கியத்துவத்தைப் பெற்றிருந்த கொழும்பு தமிழ் மேட்டுக்குடித் தலைமையின் அரசியல் அந்தஸ்தும் முக்கியத்துவமும் பறிக்கப்படுகின்ற நிலை படிப்படியே உருவாகி வந்தது. இறுதியில், 1921இல் மானிங் முன்வைத்த அரசியல் சீர்திருத்தத்தினுடாக, சிங்கள அரசியல் தலைமையின் ஆதிக்கம், சட்ட சபையில் உறுதியாக நிறுவப்பட்டது. இந்தச் சீர்திருத்தத்தினுடாக தெரிவு செய்யப்பட்ட சட்டசபையில், சிங்கள பிரதிநிதிகளின் எண்ணிக்கை 13 ஆக இருந்த அதேநேரத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை வெறும் 3 ஆக இருந்தது.

ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்கள், இலங்கையில் தமது நலன்கள் தொடர்ந்தும் உத்திரவாதப்படுத்து-வதற்குரிய ஒரு வழிமுறையாக, எண்ணிக்கை ரீதியில் பெரும்பான்மையாக இருந்த சிங்கள மக்களின் அரசியல் பிரதிநிதிகளின் கோரிக்கைக-ளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஈழத் தமிழர்கள் தனியாக வாழ்ந்த சமூகம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி, தமது ஆக்கிரமிப்பின் ஒரு குறிப்பிட்ட காலம் வரை, தாம் அவர்களை தனியாக நிர்வகித்து வந்திருக்கின்றோம் என்பதையும் உதாசீனப்படுத்திய ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்கள், சிங்கள அரசியல்வாதிகளின் ஆதிக்கத்தின் கீழ், நமது மக்கள் அடக்கப்படக்கூடிய அரசியல் சூழலை படிப்படியே உருவாக்கி வந்தார்கள். இதுவரை காலமும் நமது மக்களுடனும் அவர்களின் நலன்களுடனும் எவ்விதத் தொடர்புமற்றிருந்ததோடு, அவர்களில் பெரும்பாலானோரின் நலன்களுக்கு விரோதமாகவும் செயற்பட்டு வந்த கொழும்பு தமிழ் மேட்டுக்குடித் தலைமை, இப்போது சிங்கள அரசியல்வாதிகளால் தமது அதிகாரமும், செல்வாக்கும் அகற்றப்பட்டு வருவதையும், ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களை அதற்கு சட்ட அங்கீகாரம் கொடுப்பதையும் தடுக்க முடியாததாக இருந்தது. இந்நிலையில் தனது மக்களுடன் நெருங்குகின்ற ஒரு அரசியல் முயற்சியாக, 1921இல் இந்தத் தலைமை "தமிழர் மகாஜன சபை" என்ற தனியான அரசியல் அமைப்பை உருவாக்கியது.

1830 களிலிருந்து 1920 கள் வரை கொழும்புத்தமிழ் மேட்டுக்குடி அரசியல் தலைமையின் செயற்பாடுகள் தமிழ்ப் பாரம்பரியம் நோக்கியும் தமிழ் தேசிய அரசியல் நோக்கியும் ஒரு படிமுறை சார்ந்த வளர்ச்சியை பெற்று வந்திருப்பதை அவதானிக்க முடியும். 1833 இல் முதலாவது தமிழர் பிரதிநிதியாக சட்டசபைக்கு நியமிக்கப்பட்ட ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி ஆங்கிலேய ஆட்சியாளரிடம் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார். அந்த ஆட்சியாளரின் மதிப்புக்குரிய பிரமுகராகவும் கருதப்பட்டார். 1844இல் ஆங்கிலேய அரசு நமது மக்களிடையே நிலவிய அடிமை முறையை நீக்குவதற்காக இயற்றிய சட்டத்தை எதிர்த்ததைத் தவிர வேறு எந்த வகையிலும் இவர் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்க்கவில்லை.

இவருக்குப் பின்னர் இவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே சட்டசபைக்கு நியமிக்கப்பட்டும் தெரிவுசெய்யப்பட்டும் வந்தார்கள். ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமிக்குப் பின்னர் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட அவரது மருமகன் எதிர்மணசிங்கமும் தமது மாமன் வழியை அப்படியே பின்பற்றினார். ஒரு நேர்மையான ஆங்கிலேய விசுவாசியாக அவர் செயற்பட்டார். எனினும், இவருக்குப் பின்னர் 1861இல் தெரிவு செய்யப்பட்ட ஆறுமுகம்பிள்ளை குமரசாமியின் மகன் முத்துக்குமாரசுவாமியின் செயற்பாடுகளில் ஒரு மாற்றப் போக்கு ஏற்பட்டது. இவர், ஆரம்பத்தில் மேற்கத்தைய கலாச்சாரத்திலும் அதன் வேகமான வாழ்க்கையிலும் ஆர்வம் கொண்டிருந்தார். தனது வாழ்க்கையின் கணிசமான காலத்தை அவர் லண்டனில் கழித்திருந்தார். எனினும், பிற்காலத்தில் இவர் மத மற்றும் கலாச்சார ரீதியில் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக செயற்படுபவராக மாறினார்.

முத்துக்குமாரசாமிக்குப் பின்னர் கல்வி கற்றவர்களால் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட பொன். இராமநாதன் ஆரம்பக் காலங்களில் ஆங்கிலேயக் கலாச்சாரத்தில் மூழ்கியவராக இருந்தார். எனினும் பிற்காலங்களில் ஆங்கிலக் கல்விக்கும் ஆங்கிலேயக் கலாச்சார மோகத்திற்கும் எதிராக இவர் செயற்பட்டார். ஆங்கிலேயக் கலாச்சாரத்திலிருந்து விலகி பாரம்பரிய தமிழ்க் கலாச்சாரத்தைப் பின்பற்றுபவராக மாறினார். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை அதாவது தமிழ் மண்ணை நோக்கி இவர் நகரத் தொடங்கினார். முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் இவர் ஆரம்பித்த இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி தாய் மண்ணை நோக்கிய இவரது நகர்வுக்கு சாட்சியாக விளங்குகின்றது. அரசியல் தளத்தில் முழு நாடும் தழுவிய தேசிய இயக்கத்தில் இணைந்திருந்த போதும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான எதிர்ப்புக் குரல் இவரிடமிருந்து வெளிப்பட்டது. இவ்வகையில் ஆங்கிலேயரது ஆதிக்கத்திற்கு எதிராக அரசியல் தளத்தில் செயற்பட்ட முதல் நபராக இராமநாதன் விளங்கினார். இவருக்குப் பின்னர் தெரிவு செய்யப்பட்ட இவரது சகோதரர் அருணாச்சலம் முழு இலங்கை என்ற அரசியல் பாரம்பரியத்தில் இருந்து தெளிவாக முறித்துக் கொண்டு நமது மக்களக்கென தனியான அரசியல் இயக்கத்தை தோற்றுவித்தார்.

**இவ்வாறு ஆங்கிலேய ஆட்சியில் ஒரு நூற்றாண்டு கால தமிழர் தலைமையானது ஒரு படிமுறை வளர்ச்சியைப் பெற்று வந்திருப்பதை தெளிவாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவதானிக்க முடியும். இந்தப் படிமுறை வளர்ச்சியானது முதலில் ஆங்கிலேய சார்பு அரசியல் நிலையிலிருந்து, பின்னர் முழுநாட்டிற்குமான தேசிய அரசியல் என்ற பாதையினூடாக, இறுதியில் நமது தமிழ் தேசிய அரசியலுக்குள் நுழைவதை காணமுடியும்.**

இந்த இயக்கப் போக்கு தற்செயலானதோ அல்லது குறிப்பிட்ட தனிநபர்களின் சொந்த விருப்புச் சார்ந்ததோ அல்ல. மாறாக, இது ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இலங்கையில் ஏற்பட்டு வந்த சமூக அரசியல் மாற்றங்களில் தவிர்க்கமுடியாத துல்லியமான வெளிப்பாடாக அமைந்திருந்தது. இந்த சமூக அரசியல் மாற்றங்களை பின்வருமாறு தொகுக்க முடியும்.

ஒருபுறம், சிங்கள அரசியல் தலைமைக்குள் திரண்டு வந்த இனவாத உணர்வுகள் இந்த இனவாத உணர்வுகளுக்கு ஊடாக சிங்கள மத்தியில் இடம்பெற்று வந்த தேசிய இயக்கம் தமது நலன்களைப் பேணுவதற்காக ஆங்கிலேய அரசு சிங்களத் தலைமையுடன் இணங்கிப் போன நிலை. மறுபுறம், நமது மக்கள் மத்தியில் ஏற்பட்டு வந்த சமூகப் பொருளாதார மாற்றங்களும் அதன் விளைவாக அங்கு தோன்றிய புதிய சமூகப் பிரிவுகளின் அரசியல் அபிலாசைகளும்.

நமது மக்கள் மத்தியில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், 20 ம் நூற்றாண்டின் ஆரம்பித்திலேயே கல்வி கற்ற பிரிவினர் கணிசமான எண்ணிக்கையில் உருவாகியிருந்தார்கள். இவர்களில் ஒரு பிரிவினர் தாராண்மைவாத ஜனநாயகக் கருத்துக்களுடன் பரிச்சியம் கொண்டவர்களாகவும் இந்தியாவில் காந்தியினால் முன்னெடுக்கப்பட்ட தேசிய இயக்கத்தினால் எழுச்சி ஊட்டப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். கொழும்புத் தமிழ் தலைமைக்கு முற்றிலும் மாறாக, தமது சொந்த மண்ணில் சொந்த மக்களுடன் இணைந்த வெகுஜன அரசியலில் இவர்கள் ஆர்வம் கொண்டிருந்தார்கள். இவர்கள் ஒரு சிறுபிரிவினரின் நலன்களுக்காக அன்றி, நமது மக்களின் அனேகமாக அனைத்துப் பிரிவினரதும் நலன்களை உள்ளடக்கிய அரசியல் உரிமைகளுக்காக போராடக்கூடியவர்களாக இருந்தார்கள்.

இவ்வகையில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்வி கற்ற பிரிவினரால், 1924இல் யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸ் என்ற பெயரில் ஒரு அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. அன்றைய சூழலில் முற்போக்குத் தன்மையும் ஜனநாயகப் பண்பும் கொண்ட கொள்கைப் பிரகடனத்துடன் இந்த அமைப்பு தனது அரசியற் செயற்பாடுகளை முன்னெடுத்தது. சுய ராஜ்ஜியம், அனைவருக்கும் வாக்குரிமை, தீண்டாமை ஒழிப்பு, பெண்களுக்கு சம உரிமை.... என இந்த அமைப்பு முன்வைத்த கோஷங்கள் நவீன அரசியலில் வெளிப்பட்ட நமது மக்களின் ஜனநாயகப் பாரம்பரியத்தின் வித்தாக வேரூன்றியது. காந்தியை யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கக் கூடியளவுக்கு இவ்வமைப்பு வலிமையும் மக்கள் ஆதரவும் பெற்றிருந்தது. 1935இல் லங்கா சமாஜக் கட்சியுடன் இணைந்து செயற்பட்ட இந்த அமைப்பு 1940களின் தொடக்கத்தில் செயலற்ற நிலைக்கு ஆளான போதும் அதனால் முன்னெடுக்கப்பட்ட ஜனநாயகப் பாரம்பரியம் நமது தேசிய இயக்கத்தில் தொடர்ந்து நிலைபெறக் கூடியளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இவை அனைத்தும் இணைந்து கொழும்பைத் தளமாகக் கொண்டிருந்த தமிழ் அரசியல் தலைமையின் படிப்படியானதும் தெளிவானதுமான பண்புமாற்றத்திற்கு காரணமாகின. இதன் விளைவாக நமது அரசியல் தலைமையானது கொழும்பிலிருந்து மெல்ல மெல்ல நமது தாயகத்தை நோக்கி, குறிப்பாக யாழ்ப்பாணத்தை நோக்கி அரசியல் நகர்வை மேற்கொண்டது.

யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸின் அரசியல் தோல்வியானது, நமது மக்களிடையே முதன் முதலாக உருப்பெற்ற முற்போக்கு ஜனநாயக அரசியல் இயக்கத்திற்கு ஏற்பட்ட தற்காலிகத் தோல்வியாக அமைந்தது. 1930களிலிருந்து நமது மக்கள் ஒரு தேசமாக ஒன்றிணைய வேண்டிய நிகழ்வுப் போக்கில் இருந்தார்கள். சிங்கள மக்களிடையே எழுச்சி பெற்று வந்த தேசிய இயக்கத்துடன் ஒப்பிடுகையில், 1930களில் நமது மக்கள் மத்தியில் தேசிய உணர்வும், தேச இணைவும் பலவீனமாகவே வெளிப்பட்டன. கொழும்பு தமிழ் மேட்டுக்குடி அரசியல் தலைமை, நமது மக்களிலிருந்து முற்றாக விலகியிருந்ததும், நமது மக்களுடன் இணைந்த அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளை முன்னெடுக்காததும் வேறுபட்ட பிரதேசங்களில் தனித்துவமாக வாழ்ந்து வந்த நமது மக்களிடையே நெருங்கிய உறவுகள் இன்னமும் ஏற்படாதிருந்ததும் இதற்கான முக்கிய காரணங்களாக இருந்தன. எனினும் 1921இல் தமிழர் மகாஜன சபை என்ற தனியான அரசியல் அமைப்பை உருவாக்கி, நமது மக்களுக்கு என தனியான அரசியல் இயக்கம் ஒன்று அதன் தளிர்நிலையில் ஆரம்பிக்கப்பட்டதோடு இணைந்ததாக நமது மக்கள் மத்தியில் தேச உருவாக்கம் கருக்கொண்டது. 1931இல் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமை, நமது மக்களின் அனைத்துப் பிரிவினரும் அரசியல் தளத்திற்குள் கொண்டுவரப்படுவதை சாத்தியமாக்கியது.

இவ்வாறு நமது மக்கள் அரசியல் தளத்தில் ஒன்றுதிரளத் தொடங்கியதன் ஊடாக, நமது தேச உருவாக்கம் வளர்ச்சி பெற ஆரம்பித்தது. 1940களில் நமது மக்கள் தேசமாக திரள்கின்ற போக்கு வேகம் பெற்றதோடு, 1950 களில் அவர்கள் திடமான தேசமாக தம்மை நிறுவிக் கொள்ளத் தொடங்கினார்கள். எனவே அன்றைய சூழலில் நமது மக்களை முழுவதும் தழுவியதாக அவர்களுக்கென தனியான தேசிய இயக்கத்தை முன்னெடுக்கக் கூடிய அரசியல் அமைப்பே வரலாற்று அவசியமாக இருந்தது. ஆனால் யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸ் இந்த வரலாற்று அவசியத்திற்கு மாறாக, இலங்கைத் தேசியம் என்ற கொள்கை உயர்த்திப் பிடித்ததோடு அதன் செயற்பாடுகள் பெரிதும் யாழ்ப்பாணத்திற்குள் எல்லைப்பட்டதாகவும் இருந்தது. இவ்வாறு நமது மக்களின் அரசியல் உணர்வுடனும் வரலாற்றின் அன்றைய அவசியத்துடனும் தன்னை இணைத்துக் கொள்ள முடியாதிருந்த யாழ் வாலிபர் கொங்கிரஸ் தமிழ்த் தேசியத்தை உறுதியாக முன்வைத்து முழுத் தமிழ் மக்களினதும் அரசியல் தலைமையாக தம்மை உருவாக்கி வந்த ஜி. ஜி. பொன்னம்பலம் போன்றவர்களால் தோற்கடிக்கப்படக் கூடிய நிலைமைக்கு ஆளாகியது. யாழ் வாலிபர் கொங்கிரசுக்கு எதிராக ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையிலான பிரிவினர், கிறிஸ்தவ எதிர்ப்பு என்ற கோஷத்தை முன்வைத்திருந்த போதிலும் யாழ் வாலிப கொங்கிரசின் அரசியல் தோல்விக்கு அது ஒரு முக்கிய காரணமாக அமைந்திருக்கவில்லை. இன்னும் சிறிது காலத்திற்குப் பின்னர் ஒரு கிறிஸ்தவரான, எஸ்.ஜே.வி. செல்வநாயகம் நமது தேசிய இயக்கத்தின் புதிய கட்டத்திற்கு தலைமை தாங்குபவராக மாற இருந்தார் என்ற உண்மையுடன் யாழ் வாலிபர் கொங்கிரஸின் அரசியல் தோல்வியை, ஒப்பிடும்போது ஜி. ஜி. போன்றவர்களினால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கிறிஸ்தவ எதிர்ப்பு ஒரு தீர்க்கமான காரணியாக அமைந்திருக்க முடியாது என்பதை உணர முடியும். இவ்வகையில் யாழ் வாலிபர் கொங்கிரஸின் அரசியல் தோல்விக்கு நமது மக்கள் மத்தியில் அன்று உருவாகி வந்த தேசிய உணர்வுடன் தம்மை இணைத்து தனியான தேசிய இயக்கத்தை முன்னெடுக்க முடியாதிருந்த அதன் பலவீனமே முக்கிய காரணியாக அமைகின்றது.

## அனைவருக்கும் வாக்குரிமையும் ஈழத் தமிழரின் தேசிய இயக்கமும்

1931 இலிருந்து நமது மக்களின் அரசியல் இயக்கம் சடுதியான முறிவைப் பெற்றது. அனைவருக்கும் வாக்குரிமை என்பதும் தெரிவுமுறை பிரதிநிதித்துவத்தின் அறிமுகமும் நமது மக்களின் அரசியல் இயக்கத்தை புதிய திசைக்கு இட்டுச் சென்றன. வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்பது நமது மக்கள் மத்தியிலுள்ள சகல பிரிவினரையும் அரசியல் வாழ்வுக்குள் இழுத்துவிட்டது. எந்தவித வேறுபாடுகளும் இன்றி குறிப்பிட்ட வயதை அடைந்த அனைவரும் வாக்களிக்கும் உரிமைகளைப் பெற்றார்கள். அதேநேரம், சர்வசன வாக்குரிமையின் ஊடாக இடம்பெற்ற தேர்தலானது தொகுதி அடிப்படையில் அமைந்தது. அதாவது, இதுவரை நிலவிய இனரீதியான பிரதிநிதித்துவம் அகற்றப்பட்டு பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவை அனைத்தும் இணைந்து நமது மக்களின் அரசியல் இயக்கத்திலும் அரசியல் கோரிக்கைகளிலும் அரசியல் தலைமையிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின.

அனைவருக்கும் வாக்குரிமையும் தெரிவுமுறை பிரதிநிதித்துவமும், அரசியல் தலைமைக்கும் மக்களுக்குமிடையிலான நெருங்கிய இணைப்பை அவசியமாக்குகின்றன. மக்கள் ஏதோவகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கு நெருக்கமாக உள்ள அரசியல் பிரதிநிதிகளை ஆதரிப்பதும், அவர்களைத் தெரிவு செய்வதும் இங்கு நிகழ்கின்றன. மக்களுக்கும் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கும் அந்நியமானவர்கள், அவர்கள் எத்தகைய திறமைசாலிகளாக இருந்தாலும் தெரிவு செய்யப்படுவது சாத்தியமற்றதாகின்றது. எனவே, அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் மக்களின் அரசியல் உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்களாகவும் மக்களினால் அங்கீக-ரிக்கப்பட வேண்டியவர்களாகவும் இருப்பது அவசியமாகின்றது. இனவாரிப் பிரதிநிதித்துவம் நிலவிய போது அப்பிரதிநித்துவத்தின் எண்ணிக்கையும் அதற்காக போட்டியிடக் கூடியவர்கள் மற்றும் வாக்களிக்கக் கூடியவர்களின் தகுதியும் வரையறுக்கப்பட்டிருந்ததால் மக்களுடன் எவ்விதத் தொடர்புமற்ற அவர்களின் அரசியல் பிரதிநிதியாக நியமிக்கப்படுவது அல்லது தெரிவு செய்யப்படுவது சாத்தியமாகியது (இதனாலேயே தமிழரின் அரசியல் பிரதிநிதிகளாக கொழும்புவாழ் தமிழ் மேட்டுக்குடித் தலைமை நியமிக்கப்பட்டதும் அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் ஒருவரான முத்துக்குமாரசுவாமி தனது அரசியல் கடமைகளை ஒதுக்கிவிட்டு வருடக் கணக்கில் லண்டனில் தங்கியிருந்ததும் சாத்தியமாகியது.) இதற்கு மாறாக சர்வசன வாக்குரிமையும் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமும் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த வெவ்வேறு சமூக மட்டங்களைச் சேர்ந்த பிரிவினர் அரசியல் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பு உருவாகின்றது. இது ஒரு சமூகத்தின் அரசியல் இயக்கத்தை முற்றாகவே மாற்றக்கூடியது. பல்வேறு பிரதேசங்களையும் சமூகப் பிரிவுகளையும் சேர்ந்த அரசியல் பிரதிநிதிகள் ஒன்றிணைவதும் வேறுபட்ட மக்களின் நலன்கள் ஒன்றுகலப்பதும் அவற்றிலிருந்து பொது இலக்குகள் தீர்மானிக்கப்படுவதும் இங்கு நிகழ்கின்றன.

அதேவேளை பிரதேச ரீதியிலான பிரதிநிதித்-துவமானது எண்ணிக்கை ரீதியில் பெரும்பான்-மையாக உள்ள மக்களின் அரசியல் அதிகாரத்தை வலுவுடன் நிலைநிறுத்தக் கூடியது. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் என்பது இத்தகைய எண்ணிக்கை சார்ந்த பெரும்பான்மையின் மூலமே தனது அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்வதால் இப்பாராளுமன்ற அரசியல் முறைமையானது எப்போதும் எண்ணிக்கை ரீதியில் பெரும்பான்மையாக உள்ள சமூகத்தின் அரசியற் கருவியாக மாறிவிடக் கூடிய சாத்தியத்தை கொண்டிருக்கின்றது.

இத்தகைய அனைத்து அரசியல் நிலைகளையும் அன்றைய நமது அரசியல் தலைமை எதிர்கொண்டது. மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற புதிய அரசியற் பிரதிநிதிகளை ஒன்றிணைக்கக் கூடிய வகையிலும் தமது மக்களின் ஆதரவைப் பெறக் கூடிய வகையிலும் அதேவேளை பெரும்பான்மை சிங்களவர்களின் ஆதிக்கம் சட்டசபையில் ஏற்படுவதைத் தவிர்க்கக் கூடிய வகையிலும் தனியான அரசியல் இயக்கத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியம் அப்போது எதிர்கொள்ளப்பட்டது. இத்தகைய அவசியத்தை நிறைவேற்றக் கூடிய அரசியல் ஆளுமையையோ, சமூகத் தளத்தையோ கொழும்பு தமிழ் மேட்டுக்குடி தலைமை கொண்டிருக்கவில்லை. 1910ம் ஆண்டில் சட்டசபைக்கான தனது தெரிவை உறுதிப்படுத்துவதற்கும், பின்னர் சிங்கள அரசியல் தலைமையின் இனவாத போக்குகளை எதிர்ப்பதற்கும் நமது மக்களின் சில பிரிவுகளுடன் இணைய வேண்டிய நிலைமைக்கு இத்தலைமை ஆளான போதிலும், இந்த இணைப்பு உள்ளார்ந்த ரீதியானதாகவோ வலிமையான பிணைப்புடன் கூடியதாகவோ இருக்கவில்லை. இத்தலைமையிடம் ஆழமாக படிந்து விட்டிருந்த அந்நியத் தன்மையும், மேட்டுக்குடி மனோபாவமும், அதிகாரத்துவமும், இறுதிவரையும் தமது மக்களுடன் உள்ளார்ந்த ரீதியில் இணைய முடியாமல் இத்தலைமையை தடுத்து வந்திருக்கின்றது.

1920களிலேயே நமது மக்களுக்கென ஒரு அரசியல் அமைப்பை இத்தலைமை உருவாக்கிய போதிலும், 1931இல் தமது சொந்த இனத்தைச் சேர்ந்த பெண்களுக்கும், அடக்கப்படுகின்ற மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்படுவதை தீவிரமாக எதிர்க்கின்ற மக்கள் விரோத தலைமையாகவே இது தன்னை வெளிப்படுத்தி வந்திருக்கின்றது. இத்தலைமை சிங்கள ஆதிக்கத்தையும் இனவாதத்தையும் எதிர்த்து வந்த போதிலும், அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பு தொடர்ச்சியானதாகவோ, உறுதியானதாகவோ இருக்கவில்லை. இத்தலைமையின் கடைசி வாரிசான அருணாச்சலம் மகாதேவா 1944இல் சிங்கள அரசியல் தலைமையுடன் இணையக் கூடியளவுக்கே, இத்தலைமையின் சிங்கள இனவாதத்திற்கும் ஆதிக்கத்திற்குமான எதிர்ப்பு அமைந்திருந்தது. இலங்கையின் அரசியல் தளத்தில் தெளிவாக ஏற்பட்டு வந்த இனரீதியலான பிளவுகளை புரிந்து, நமது மக்களின் அரசியல் இயக்கத்துடன் இணைந்து கொள்ளாதது மட்டுமன்றி, தமது சொந்த நலன்களையும் அந்தஸ்தையும் பேணிக் கொள்வதற்காக, சிங்கள அரசியல் தலமைையுடன் அருணாச்சலம் மகாதேவா இணைந்து கொண்டதானது, கொழும்பு தமிழ் மேட்டுக்குடித் தலைமை, நமது அரசியல் இயக்கத்திலிருந்து முற்றாகவே அகற்றப்படுவதற்கு காரணமாகியது.

கொழும்புத் தமிழ்மேட்டுக்குடி அரசியல் தலைமையின் கடைசி வாரிசு, சிங்கள அரசியல் தலைமையுடன் இணைந்து கொண்ட நேரத்தில், புதிய அரசியல் தலையாக உருவாகவிருந்த பிரிவினர், கொழும்பில் மையப்பகுதியிலிருந்து விலகி, நமது மண்ணை நோக்கி விரைவாக நகர ஆரம்பித்தார்கள். இலங்கை ”சுதந்திரத்தை” நெருங்க, நெருங்க அதன் அரசியல் தளத்தில் சிங்கள ஆதிக்கம் வலுவாக வேரூன்றுவதும் தீவிரமடைந்தது. இலங்கை அரசு, சிங்கள ஆதிக்கத்திற்குள் உட்படவிருக்கின்றது என்பது அச்சுறுத்தும் எதார்த்தமாக வெளிப்பட்டது. இத்தகைய ஆதிக்க நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக, விரைந்தும் உறுதியாகவும் செயற்பட வேண்டிய தேவை நமது அரசியல் தளத்தில் உணரப்பட்டது. நமது மக்களின் பல்வேறு பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஒரு அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து, தீவிரமாக விவாதிக்கப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக புதிதாக உருவாக வேண்டிய அரசியல் தலைமையானது, நமது மக்கள் அனைவரினதும் அரசியல் தலைமையாக அமைய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவையனைத்தையும் நிறைவேற்றி நமது மக்கள் அனைவரினதும் அரசியல் கட்சியாக 1944 இல் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் அகில இலங்கைத் தமிழ் கொங்கிரஸ் உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் பின் ஈழத் தமிழரின் அரசியல் இயக்கம்

## (1) அரசியல் சட்ட வரம்பிற்குள் ஈழத் தமிழர்களின் தேசிய இயக்கம்

## ஈழத்தமிழரின் தேசிய இயக்கமும் அகில இலங்கை தமிழ் கொங்கிரசும்

நமது மக்களின் அரசியல் வரலாற்றில் தமிழ் கொங்கிரஸ் முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றது. அதற்கு முன்னர் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தில் முன்னெடுக்காத அரசியல் முயற்சியாக தமிழ் கொங்கிரஸின் உருவாக்கம் அமைந்தது. இதற்கு முன்னர் 1921இல் உருவாக்கப்பட்ட தமிழர் மகாஜன சபை போல், நமது மக்களின் நலன்களை சாரப்படுத்துவதாக, பெயரளவில் மட்டும் நமது மக்களுக்குரிய அரசியல் அமைப்பாக தமிழ் கொங்கிரஸ் உருவாகவில்லை. மாறாக, அது ஈழத் தமிழர்கள் அனைவரையும் அரசியல் ரீதியில் ஒன்றிணைத்தது. நமது மக்களின் வரலாற்றில் தேசிய இயக்கத்தின் துல்லியமான தோற்றுவாயாக அது விளங்கியது. தடுக்க முடியாது பெருகி வந்த தேசிய அலையின் முதல் எழுச்சியாக அது அமைந்தது. நமது தேசத்தின் அரசியல் அபிலாஷைகளை அரசியல் நலன்களை தமிழ் கொங்கிரஸ் தெளிவாக சாரப்படுத்தியது. அதேநேரம், சிங்கள இனவாத ஆதிக்கத்திற்கு எதிராக தனது உறுதியான, சமரசமற்ற எதிர்ப்பை தமிழ் கொங்கிஸ் வெளிப்படுத்தியது.

எனினும், தமிழ் கொங்கிரஸின் பெரும்பாலான உறுப்பினர்களும் அரசியல் பிரதிநிதிகளும் தமிழ் சமூகத்தின் ஆதிக்கப் பிரிவினராகவும் பெரிதும் சட்டத்துறை சார்ந்தவர்களாகவும் இருந்தார்கள். எனவே சிங்கள இனவாதத்திற்கு எதிராக இவர்களது போராட்டமானது மக்களை ஒன்றிணைத்த வெகுஜனப் போராட்டமாக அமையாமல் பெரிதும் விண்ணப்பங்கள் மற்றும் சட்டவாதத் திறமை போன்ற வடிவில் முன்னெடுக்கப்பட்டது. இத்தகைய போராட்ட வழிமுறைகளில் அக்கறை கொள்கின்ற அதிகாரத் தலைமை இருக்கும் வரைதான் இப்போராட்ட வடிவம் வெற்றியைப் பெற்றுத் தரக்கூடியது. ஆனால் அத்தகைய அதிகாரத் தலைமை - ஆங்கிலேய அரசு - அகற்றப்பட்டு வன்முறை ஒன்றையே தனது பதிலாகத் தரக்கூடிய புதிய சிங்களத் தலைமை அதிகாரத்திற்கு வந்த பின்னும் தமிழ் கொங்கிரஸ் அதே வழிமுறையையே பின்பற்றி வந்தது. இது அத்தலைமையின் அரசியல் துாரநோக்கற்ற தன்மையை வெளிப்படுத்திய அதேநேரத்தில், நமது சொந்த நலன்களை சிறிதும் இழக்காமல், அரசியல் உரிமைகளை பெறவிரும்பிய அதன் போர்க்குணாம்சமற்ற தன்மையையும் வெளிப்படுத்தியது.

50 : 50 என்ற அரசியல் கோரிக்கையானது, அன்றைய நிலையில் முன்னேற்றகரமானதாகவும் இலங்கையிலுள்ள சமூகங்களின் அரசியல் பிரதிநிதிகளிடையே அதிகாரச் சமநிலையை பேணுவதாகவும் அமைந்தது. இலங்கையில் உருவாகவிருந்த புதிய பாராளுமன்றத்தில் சிங்கள அரசியல் பிரதிநிதிகளின் ஆதிக்கம் நிலைபெறுவதை, கொள்கை அளவில் தடுக்கிற அரசியல் பொறிமுறையாக இது விளங்கியது. எனினும் இக்கோரிக்கையை முன்வைத்த தமிழ் கொங்கிரஸ் அதை வென்றெடுப்பதற்கு எவ்வித வெகுஜனப் போராட்டத்திலும் ஈடுபடவில்லை. தமிழ் கொங்கிரஸின் அரசியல் தலைமையின் பண்பைப் புரிந்து கொள்ளும் போது இது ஆச்சரியப்படுத்தாத எதார்த்தமாகத் தெரியும். தமிழ் கொங்கிரஸ் நமது மக்களின் அரசியல் கட்சியாக உருப்பெற்றிருந்தும் அதன் தலைமை இன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது காலை நமது மண்ணில் உறுதியாக ஊன்றவில்லை. அதன் அரசியல் இலக்கு என்பது நமது தேசத்தின் நலன்கள் என்பதைக் காட்டிலும் தான் பிரதிநிதித்துவப்படுத்திய ஆதிக்கப் பிரிவினரின் நலன்களாகவே அமைந்திருந்தன. அது நமது தேசத்தின் நலன்களை சாரப்படுத்தியது உண்மைதான். 50 : 50 என்ற அரசியல் கோரிக்கையானது, அதன் உண்மையான அர்த்தத்தில், அன்றைய அரசியல் சூழலில் நமது தேச அரசியல் நலன்களின் சாரமாக அமைந்திருந்தது. ஆனால் தமிழ் கொங்கிரஸ் தலைமையானது நடைமுறையில் இக்கோரிக்கையை நமது தேசத்தின் நலன்களை உத்திரவாதப்படுத்துவதை நோக்கி வளர்த்தெடுக்காமல் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற பலத்தைக் கொண்டும் அதன் மூலம் கிடைக்கக்கூடிய வலுவான பேரம் பேசும் பலத்தைக் கொண்டும் தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூக ஆதிக்கப் பிரிவினரின் நலன்களை உறுதிப்படுத்துவதேயே அத்தலைமை இலக்காகக் கொண்டிருந்தது.

50 : 50 அரசியல் கோரிக்கையை, நமது தேசத்தின் அரசியல் உணர்வுடன் நெருக்கமாக இணைப்பதற்கு தமிழ் கொங்கிரஸ் தலைமை முயற்சிக்கவில்லை. அக்கோரிக்கையை வென்றெடுப்பதற்காக, முஸ்லீம் மற்றும் மலையக மக்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படுவதில் தமிழ்க் கொங்கிரஸ் தலைமை அரசியல் நேர்மையுடன் ஈடுபடவில்லை. ஆரம்பத்தில் இக்கோரிக்கை தொடர்பாக சிங்களத் தலைமயுடன் எவ்வித சமரசத்திற்கும் இடம் கொடுக்காத திட உறுதியை வெளிப்படுத்திய தமிழ் கொங்கிரஸ் தலைமை இக்கோரிக்கைகளை வென்று கொள்வதற்காக நமது தேசத்தின் வெவ்வேறு பிரிவைச் சேர்ந்த அரசியல் பிரதிநிதிகளுடன் கூட நெருக்கமாகச் சேர்ந்து செயற்படுவதில் அக்கறை கொள்ளவில்லை. இவ்வாறு தான் முன்வைத்த அரசியல் கோரிக்கையை நடைமுறைச் சாத்தியப்படுத்துவதற்காக ஏனைய சமூகங்களின் அரசியல் தலைமைகளுடன் இணைந்தும், நமது மக்களின் அரசியல் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு பரந்த அரசியல் அமைப்பாகவும் செயற்பட முடியாத பலவீனத்தை தமிழ் கொங்கிரஸ் வெளிப்படுத்தியது. இந்தப் பலவீனம்தான், 1947 இல் இடம்பெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் அமோக வெற்றி பெற முடிந்த தமிழ் கொங்கிரஸ் வன்னி மற்றும் கிழக்குப் பகுதிகளில் திருகோணமலை தவிர்ந்த ஏனைய அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வியைத் தழுவுவதற்கு காரணமாகியது.

1940 களில் நமது தேசத்தின் பிரதான அரசியல் கோரிக்கையை தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் பிரிவினரின் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு கருவியாக பயன்படுத்த தமிழ் கொங்கிரஸ் முயற்சித்தது. இந்த முரண்பாடுதான் 1947 தேர்தலில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அக்கட்சி வெற்றிபெறவும் 48 சுதந்திரத்தின் பின் 50 : 50 என்ற கோரிக்கையை கைவிட்டு தனது சொந்த நலன்களை உறுதிப்படுத்துவதற்காக அதன் தலைமை சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கும் காரணமாகியது.

இவ்வாறு நமது தேசிய இயக்கத்தின் முதலாவது அரசியல் உருவமாகவும் தீவிரமான அதேநேரத்தில் போராட்டத் திராணியற்ற, உணர்ச்சிகரமான அதேநேரத்தில் மக்களின் நலன்களுடன் தன்னை இணைத்துக் கொள்ள முடியாத அரசியல் அமைப்பாகவும் பகட்டுடன் செயற்பட்ட தமிழ் கொங்கிரஸ் தனது அரசியல் மகுடத்தை விரைவிலேயே இழந்தது. இலங்கையின் அரசியல் தளத்தில், சிங்கள இனவாதம் பகிரங்கமாகவும், தீவிரமாகவும் தன்னை வெளிப்படுத்தி வந்த சூழலில், நமது மக்களின் தேசிய இயக்கத்தை தலைமை தாங்கி, அதை உறுதியாக முன்னெடுத்து செல்கின்ற அரசியல் அமைப்பாக செயற்பட வேண்டிய கடப்பாட்டை தமிழ் கொங்கிரஸ் பெற்றிருந்தது. இதற்கு மாறாக, **தமிழ் கொங்கிரஸ் தலைமை, நமது மக்களின் நலன்களுடன் தனது நலன்களை இணைத்துக் கொள்ளாததாகவும் அந்த நலன்களை வென்று கொள்வதற்கு போராட முடியாத தலைமையாகவும் செயற்பட்டதால் நமது மக்களின் அரசியல் அரங்கிலிருந்து தமிழ் கொங்கிரசும் அதன் தலைமையும் விரைவிலேயே அகற்றப்பட்டன.** 1949 மார்கழியில் நமது தேசிய இயக்கத்தின் இன்னொரு பரிமாணத்தின் வெளிப்பாடாக தமிழரசு கட்சி உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழர் தேசிய இயக்கத்தில் தமிழரசுக் கட்சி

தமிழரசுக் கட்சியின் உருவாக்கமானது தமிழ் தேசிய இயக்கத்தில் வெகுஜனப் போராட்டங்களின் தோற்றத்தைக் குறிக்கின்றது. இதற்கு முன்னர் நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் முன்னெடுக்கப்பட்ட முதலாவது வெகுஜனப் போராட்டமாக 1931 இல் சர்வசன வாக்குரிமையின் அடிப்படையில் இடம்பெற்ற முதலாவது தேர்தல் யாழ்ப்பாண மக்களின் ஒத்துழைப்புடன் பகிஸ்கரிக்கப்பட்டமை அமைந்தது. இருந்தும், அது நமது தேசிய இயக்கத்தின் வெளிப்பாடாகவோ முழுத் தமிழ் மக்களையும் இணைத்ததாகவோ அமைந்திருக்கவில்லை. இதற்கு மாறாக, தமிழரசுக் கட்சி என்பது தேசம் தழுவிய போராட்டத்தை தோற்றுவிக்கும் அரசியல் அமைப்பாக, நமது மக்களின் அரசியல் உணர்வுடனும் போராட்ட ஆற்றலுடனும் தன்னை இணைத்துக் கொண்ட அமைப்பாக உருப்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் தோற்றமே கிளர்ச்சிமிக்கதாக அமைந்தது. 1947ல் வெற்றி பெற்ற பின்னர், 1948 இல் சிங்கள அரசியல் தலைமையுடன் இணைந்துவிட்ட தமிழக் கொங்கிரஸ் தலைமை "சுதந்திரத்தின்" பின்னரான முதலாவது பாராளுமன்றத்தில் மலையகத் தமிழரினதும் நமது மக்களினதும் நலன்களுக்கு முரணாகச் செயற்பட்டதை எதிர்த்து அக்கட்சியிலிருந்து துணிவுடன் வெளியேறிய அரசியல் ஓர்மத்தையும் மக்களின் நலனுடன் தன்னை பிணைத்துக் கொண்டதன் அரசியல் நேர்மையையும் வெளிப்படுத்துவதாக அதன் உருவாக்கம் அமைந்திருந்தது. நமது மக்களின் அரசியல் வரலாற்றில் மக்களின் நலனுக்காக தான் சார்ந்துள்ள கட்சியிலிருந்து வெளியேறக் கூடிய அரசியல் மரபின் உறுதியான வெளிப்பாடாக இந்த வெளியேற்றம் அமைந்தது. இது வெறுமனே அரசியல் ரீதியான வெளியேற்றத்தை மட்டும் குறிக்கவில்லை, கூடவே நமது மக்களுடனும் நமது மண்ணுடனும் தன்னை முற்றாகப் பிணைத்துக் கொண்ட முதலாவது அரசியல் கட்சியின் உருவாக்கத்தையும் குறித்தது.

தமிழ் கொங்கிரஸின் அரசியல் தோல்வியும் தமிழரசுக் கட்சியின் புத்துணர்ச்சி மிக்க உருவாக்கமும் அன்றைய அரசியல் அவசியத்துடன் இணைந்திருந்தன. இலங்கையின் சமூக அரசியல் தளத்தில் அப்போது இடம்பெற்று வந்த மாற்றங்கள் இதைத் தெளிவாக நிரூபிக்கக் கூடியன.

"சுதந்திரத்தின்" பின்னர் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கம் சிங்கள அரசியல் பிரதிநிதிகளின் ஆதிக்கத்தைக் கொண்டிருந்தது. ஆரம்பம் முதலே அது சிங்கள இனவாதத்தின் பிரதிநிதியாக தன்னை வெளிப்படுத்தி வந்தது. "சுதந்திரத்தோடு" உடனடியாக இணைந்ததாக வெளிப்பட்ட தேசியக் கொடி விவகாரம், மலையக மக்களின் பிரஜா உரிமை பறிப்பு, தமிழீழத்தில் தொடங்கப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் . . . போன்றவற்றினூடாக சிங்கள அரசியல்வாதிகளின் இனவாத சொரூபம் அப்பட்டமாக வெளிப்பட்டு வந்தது. மறுபுறம் நமது தேசத்தின் பல்வேறு பிரிவினர் மத்தியிலும் பல்வேறு பிரதேசங்களிலும் புதிதாக உருவாகி வந்த படித்த, அரசாங்க உத்தியோகத்தில் இணைந்த, இணையக் காத்திருந்த பிரிவினரின் அரசியல் எதிர்பார்ப்புகள் விரிந்ததாக இருந்தன. தடையற்ற சுதந்திரமான அரசியல் அதிகாரம் அவர்களுக்கு அவசியமாக இருந்தது. நமது பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நமது விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கின. அவர்களின் பயிர்ச்செய்கையும் கால்நடை வளர்ப்பும் கடற்றொழில்களும் பாதிப்புறத் தொடங்கின. இவ்வாறான சூழல்களில் இவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி இவர்களின் அரசியல் உரிமைகளை வென்று கொள்வதற்காகவும் இவர்களது நலன்களை உறுதிப்படுத்துவதற்காகவும் தீவிரமான நடைமுறைச் செயற்பாடுகளில் இறங்கக்கூடிய அரசியல் அமைப்பே அப்போதைய அவசியமாக இருந்தது. ஆனால் மக்களின் உணர்வுகளுடன் கலக்காமலும் சமூக ஆதிக்கப் பிரிவினரின் நலன்களை முதன்மைப்படுத்துவதாகவும் சிங்கள அரசாங்கத்துடன் இணைந்துமிருந்த தமிழ்க் கொங்கிரஸினால் இந்த அரசியல் கடமையை நிறைவேற்ற முடியவில்லை. எனவே இதற்கு மேலும், அது நமது மக்களின் அரசியல் தலைமையாக இருப்பதற்கான தகுதியை இழந்துவிட்டிருந்தது. இவ்வாறு தமிழ் கொங்கிரசின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தோல்வி என்பது ஒரு தவிர்க்கமுடியாத நிகழ்வாகியது.

நமது மக்களின் அநேகமாக சகல பிரிவுகளையும் சேர்ந்தவர்களின் சேர்க்கையாக தமிழரசுக் கட்சி உருவானது. சாதி, மத, வர்க்க, பிரதேச, பால் ரீதியாக வேறுபட்டிருந்த நமது மக்களின் சகல பிரிவினர்களும் தமிழரசுக் கட்சிக்குள் அணிதிரண்டார்கள்.

**நமது மக்களின் அரசியல் வரலாற்றில் முதன்முதலாக ஒரு கிறிஸ்தவர் முழுத் தமிழ் மக்களினதும் அபிமானம் பெற்ற அரசியல் தலைவராக அங்கீகரிக்கப்படுகின்ற அளவுக்கு தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களிடையே அரசியல் ரீதியான ஐக்கியமும் தேசிய சிந்தனையும் வலுப்பெற்றிருந்தன.**

நமது மக்களிடையே புதிதாக உருவாகி வந்த சமூக மற்றும் அரசியல் சக்திகளின் அரசியல் ஊடகமாக தமிழரசுக் கட்சி அமைந்தது. படித்த பிரிவினர் அரசாங்க ஊழியர்கள் விவசாயிகள் மீனவர்கள் போன்ற மத்திய தரப் பிரிவினரின் நலன்களை அரசியல் ரீதியில் பிரதிபலிப்பதாக தமிழரசுக் கட்சி விளங்கியது. இப்பிரிவினர் அனைவரும் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இனவாத நடவடிக்கைகளினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். தமது நலன்களை அரசியல் ரீதியாக உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தவர்களாக இருந்தார்கள். இவ்வாறு நமது மக்களின் உரிமைகளையும் நலன்களையம் உறுதிப்படுத்துவதற்குரிய அரசியல் ஏற்பாடாக சுயாட்சி முறையின் அவசியம் தீவிரமாக உணரப்பட்டது. இவ்வகையில் அன்றைய சூழலில் நமது மக்கள் தமது அரசியல் விவகாரங்கள் தமது அரசியல் பிரதிநிதிகளின் மூலம் செயற்படுத்-தப்படுவதை உறுதிப்படுத்துகின்ற அரசியல் முறைமையாக சமஷ்டி ஆட்சி அமைந்திருந்தது. இந்தக் கோரிக்கையை முன்வைத்ததன் மூலமாக தமிழரசுக் கட்சி நமது மக்களின் அரசியல் தலைமையாக தன்னை நிலைப்படுத்திக் கொண்டது.

தமிழரசுக் கட்சியின் தோற்றம் என்பது நமது மக்களிடையே பலம்பெற்று வந்த புதிய சமூக சக்திகளின் அரசியல் வலிமையைச் சுட்டிக் காட்டியது. இதுவரை காலமும் கொழும்பில் வாழ்ந்த சமூக ஆதிக்கப் பிரிவினரதும் நமது மக்களிடையே சாதி மற்றும் பொருளாதார ரீதியாக ஆதிக்க நிலையில் இருந்த பிரிவினர்களதும் செல்வாக்கே அரசியல் தளத்திலும் மேலோங்கியிருந்தது. இப்போது இந்த நிலையில் தெளிவான மாற்றம் ஏற்பட்டிருந்தது. அரசாங்க ஊழியர்கள் படித்த பிரிவினர்கள் விவசாயிகள் மீனவர்கள் என நமது மக்களிடையே இருந்த மத்திய பிரிவினரின் செல்வாக்கு அரசியல் தளத்தில் மேலெழுந்தது. தேசியக் கொடிக்கு எதிராக தமிழ் மக்களிடையே எழுந்த போராட்டங்களும் தொடர்ச்சியாக அதிகரித்து வந்த சிங்களக் குடியேற்றங்களும் இப்பிரிவினரின் அரசியல் உணர்ச்சியையும் அரசியல் ஈடுபாட்டையும் அரசியல் பலத்தையும் மேலும் மேலும் தீவிரப்படுத்தின. நமது மக்களின் அரசியல் இயக்கம் என்பது முழுமையான முறையில் நமது மக்களின் நேரடி நலன்களுடன் இணைந்ததாக தமிழ் மண்ணுடன் கலந்ததாக மாறியது.

**தமிழரசுக் கட்சியின் உருவாக்கத்திலும் அதன் தொடர்ந்த செயற்பாடுகளிலும் படித்த மத்திய தரப் பிரிவைச் சேர்ந்த இளைஞர்களின் பங்கு முக்கியமானதாக அமைந்தது. கட்சியின் கொள்கைகளில் சோஷலிசப் பொருளாதாரம் தீண்டாமை எதிர்ப்பு போன்றவற்றை ஆதிக்கப் பிரிவினருடனான கடும் விவாதத்தின் ஊடாக இந்த இளைஞர்கள் இணைத்துக் கொண்டார்கள்.**

அதன் கொள்கைகளில் மட்டுமின்றி செயற்பாடுகளிலும் கூட தமிழரசுக் கட்சி போர்க்குணாம்சமும், தேசிய உணர்வும் கொண்டதாக விளங்கியதற்கு, அதில் இணைந்திருந்த இளைஞர்களே அடிப்படையாக அமைந்தார்கள். 1950 இலிருந்து 65 வரையிலான காலகட்டத்தில் நமது தேசிய இயக்கத்தில் தொடரான வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்த தீவிர அமைப்பாக அது விளங்கியது. அதன் தலைவர் செல்வநாயகம் அக்கட்சி அமைக்கப்படுவதற்கு முன்பே துணிவுமிக்க ஒரு தீவிர தேசியவாதியாக தன்னை வெளிப்படுத்தியிருந்தார். 1948ல் தேசியக் கொடியாக சிங்கக் கொடியை சிறிலங்கா அரசு அறிவித்த போது அதை எதிர்த்து சங்கிலி மன்னனின் நந்திக் கொடியை தனது காரில் ஏற்றியபடி கொழும்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் துணிவுடன் வலம் வந்தார்.

1950 இல் தீவிரமிக்க இளைஞர்களின் பலமான ஆதரவைப் பெற்றிருந்த தமிழரசுக் கட்சி அன்றைய மகாதேசாதிபதியாக இருந்த சோல்பெரியின் யாழ்ப்பாண வருகையை வெற்றிகரமாக பகிஷ்கரித்ததின் ஊடாக அதன் வெகுஜனப் போராட்ட அரசியல் வரலாறு தொடங்கியது. அதன் பின்னர் மொழிச் சட்டம், சிங்கள ஸ்ரீ எழுத்து, குடியேற்றத் திட்டங்கள் போன்றவற்றை எதிர்த்து மாபெரும் சத்தியாக்கிரகங்களையும் ஹர்த்தால்களையும் அது முன்னெடுத்ததோடு, இத்தகைய போராட்டங்களின் உச்சவடிவாக, தமிழருக்கென தனியான தபால் தலையையும் அது வெளியிட்டது. இத்தகைய போராட்டங்களில் அதன் தலைவர்களே முன்னின்று வழிநடாத்தினர். சிங்களப் படைகளின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர், சிறையிலடைக்கப்பட்டனர். இத்தகைய போராட்டங்களில் பங்குகொண்ட திருகோணமாலை பாராளுமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் கந்தையா போன்றவர்கள் தாக்குதலுக்குள்ளாகி மரணமடைகின்ற அளவுக்கு தமிழரசுக் கட்சி உறுதியாகவும் உணர்வுபூர்வமாகவும் இப்போராட்டங்களில் பங்கு கொண்டது. இவ்வாறு நமது தேசிய இயக்கத்தில் வெகுஜனப் போராட்ட வடிவம் உறுதியாக நிலைப்படுவதற்கு காரணமாக அமைந்திருந்த, வரலாற்று நினைவுக்குரிய தமிழரசுக் கட்சித் தலைமை இறுதியில் 1965ல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்ததின் ஊடாக தனது வெகுஜனப் போராட்ட அரசியலைக் கைவிட்டதோடு நமது தேசிய இயக்கத்தில் இருந்தும் படிப்படியே மறைய ஆரம்பித்தது.

## சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினரின் சமூக அரசியல் எழுச்சிகளும் மரபுவழித் தமிழ் இடதுசாரிகளும்

சாதியம்

மரபார்ந்த சமூகத்தில் சாதியம் என்பது குறிப்பிட்ட விதத்திலமைந்த வேலைப் பிரிவினையாக தொடக்கத்தில் அமைந்து பின் சித்தாந்தத்துடன் இணைந்து ஒரு ஆழமான சமூகப் பிரிவாகவும் ஆகிவிட்டது. சாதிய முறைமையை நிலையாக பேணுவதில் சித்தாந்தத்தின் பாத்திரம் மிகவும் முக்கியமானது.

சாதியம் என்பது குறிப்பிட்ட விதத்திலமைந்த சமூக உறவாகும். குறிப்பிட்ட சமூகத்திலுள்ள பல்வேறு சாதிகளும் தமக்குள் குறிப்பிட்ட விதத்திலான பொருளாதார, அரசியல், சடங்குரீதியான உறவுகளைக் கொண்டுள்ளன. இந்த உறவுகளிலிருந்து பிரித்துவிட்டால் குறிப்பிட்ட சாதிக்கென எந்தவொரு அர்த்தமும் இருக்காது. இன்னொரு சாதியுடன் குறிப்பிட்ட சாதியினர் கொண்டுள்ள உறவிலேயே சாதியம் என்ற சமூகக் கட்டமைப்பு அர்த்தம் பெறுகிறது. சாதிய அடிப்படையிலான சமுதாயத்தில் ஒவ்வொரு சாதியினரும் தமக்கென குறிப்பான நடைமுறை சார்ந்த பாத்திரத்தைக் (குரவெழையெட சுழடந) கொண்டுள்ளார்கள். இப்படியாக பல்வேறு சாதிகள், உபசாதிகள் என்பவற்றிற் கிடையிலான உறவினாலேயே சமூக முழுமையானது உயிரோட்டமுள்ள முழுமையாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இப்படியாக சாதியம் என்பதில் உற்பத்தி உறவு என்ற அம்சத்திற்கும் மேலதிகமாக அதிகாரப்படிநிலைவரிசை, தூய்மை - தீட்டு என்ற கருத்தாக்கத்தை உள்ளடக்கிய தீண்டாமை, அகமணமுறை, சடங்குகள் . . . போன்ற பல்வேறு அம்சங்களும் தொடர்புடையதாகின்றன.

இந்து மதத்தின் "மனுதர்ம சாத்திரம்" நான்கு வர்ணங்களைக் குறிப்பிட்டு அவை இறைவனால் படைக்கப்பட்ட, இயற்கையான, மாற்ற முடியாத அம்சங்களாக காட்டுகிறது. தத்தமது சாதிக்குரிய கடமைகளை மீறாது கடைப்பிடிப்பதே இந்து தர்மம் என வலியுறுத்துகிறது. சாதியத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாத மதங்கள் கூட தென்னாசிய பிராந்தியத்தில் பரவும் போது ஏற்கனவே சமூகத்திலுள்ள சாதிய பிரிவினைகளுடன் சமரசம் செய்து கொண்டே போக வேண்டிய அளவிற்கு சாதியத்தின் பிடிப்பு இறுக்கமானதாகும். இம் மதங்கள் இந்து மதத்தைப் போல சாதியத்தை வெளிப்படையாகவே ஆதரிக்கத் தலைப்படா விட்டாலும் தமது மதங்களின் மூலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளுக்கு ஏற்ப சாதிய ஏற்றத்தாழ்வுகளைகளைய போராட முனையவில்லை.

மனுதர்மப்படி பிராமணர்கள் மிகவும் உயர்ந்த சாதியினராவர். இந்தியாவில் பிராமணர்களது கரங்களிலேயே நிலம், மூலதனம், தொடர்புசாதன ஆதிக்கம், அரசியல் அதிகாரம், கல்விக் கூடங்கள் அனைத்தும் உள்ளன. இதனால் இவர்களே பிரதான ஆதிக்க சக்திகளாவர். ஆனால் ஈழத்தில் வேளாளர்களே ஆதிக்க சக்திகளாவர். நிலம், கல்வி, அதிகாரம், தொடர்புசாதனங்கள் போன்ற அனைத்தும் இவர்களது கரங்களிலேயே இருந்து வந்துள்ளன. இன்னும் இருந்து வருகின்றன. இங்கு பிராமணர்கள் என்போர் மரபான அர்த்தத்தில் வேளாளரை விட உயர்ந்த சாதியினராகக் கருதப்பட்டாலும், அது வெறுமனே பெயரளவிலான, சடங்குரீதியானது மட்டுமேயாகும். சமூக அதிகாரங்கள் எதுவுமே பிராமணர்களின் கரங்களில் கிடையாது. பிராமணர்கள் வெள்ளாளருக்கு சேவை செய்யும் - அதாவது மதக்கிரிகைகளை செய்யும் - சாதியினராகவே இருந்து வருகின்றனர். வெள்ளாளரிடம் ஊதியம் பெறுபவர்களாகவே இவர்கள் உள்ளனர்.

இந்த விதமாக சமூகம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் போதுதான் அடிநிலை மக்களிடம் இருந்து அபகரிக்கப்படும் சிறுபகுதி உபரிகள் ஒன்றாக திரண்டு மேல் நிலையில் இருப்பவர்களது கரங்களில் பெரும் செல்வமாக திரளமுடியும். இதன்மூலம் அப்பிரிவினரின் உல்லாச வாழ்வை உத்தரவாதப்படுத்துவதும் சாத்தியப்படும். அடிமையுடைமை சமூதாயத்தில் பல்லாயிரக் கணக்கான, இலட்சக்கணக்கான அடிமைகளுக்கு சில நூறு, சில ஆயிரம் எஜமானர்கள் இருந்தனர். நிலப்பிரபுத்துவத்திலும் பிரபுக்களினதும் பண்ணையடிமைகளினதும் எண்ணிக்கை விகி-தாசாரம் இவ்வாறே இருந்தது. முதலாளித்துவத்-திலும் பெரிய முதலாளிகளுக்கும், பாட்டாளிக-ளுக்கும் இடையிலுள்ள விகிதாசாரம் இப்படிப்பட்டதே. இந்தியாவில் கீழ் நிலையில் உள்ளவர்களுக்கும் பிராமணர்களுக்கும் இடையிலுள்ள விகிதம் இப்படிப்பட்டதே.

யாழ்ப்பாண நிலைமை தலைகீழகாவுள்ளது. அதாவது வெள்ளாளர் மிகவும் கூடிய எண்ணிக்கையிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் குறைந்த எண்ணிக்கையிலும் உள்ளனர். இந்த குறிப்பான தன்மைக்கான காரணங்களை நாம் வரலாற்று பூர்வமாக யாழ்ப்பாணத்தில் குடியமர்வு நடைபெற்ற விதம், யாழ்ப்பாணத்தின் குறிப்பான வளங்களின் தன்மை, யாழ்ப்பாணத்தின் பொருளாதார கட்டமைவின் தன்மை, போன்ற பல அம்சங்களுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட தலைகீழ் பிரமிட் வடிவமானது தனித்து சாதிய உற்பத்தி முறையில் மாத்திரம் செல்வம் திரள்வதற்கான வாய்ப்புகளை மட்டுப் படுத்தியே வைத்திருக்கும் என்பதும் புரிந்து கொள்ளத் தக்கதே. யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதியத்தில் இந்த தலைகீழ் பிரமிட் வடிவமாதிரியானது யாழ்ப்பாணத்தில் சாதியத்திற்கு குறிப்பான பண்புகளை கொடுக்கிறது. இதனால் ஏனைய தென்னாசிய சமூகங்களில் வழக்கிலுள்ள சாதியமுறைகள் பற்றிய ஆய்வுகளை யாழ்ப்பாண சாதிய முறைக்கு பிரயோகிப்பதில் அதிக கவனம் தேவைப்படுகிறது.

தேசவழமைச் சட்டமானது யாழ்ப்பாணத்திலுள்ள 40 சாதிகளைப் பற்றிக் கூறுகிறது. இவர்களுள் வெள்ளாளர் முதல் நிலையில் உள்ளனர். இவர்களை அடுத்து சாதிய உற்பத்தி முறையில் நேரடியாக இவர்களுடன் பிணைக்கப்பட்ட அடிமை, குடிமை முறைகளுடனும், ஒரளவு சுயாதீனமாகவும் பல்வேறு சாதிகள் அடுக்கமைவு பெறுகின்றனர். கரையார் பொதுவாக நேரடியாக நிலம் சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடாதவர்கள் என்றவகையில் இந்தவிதமான அடுக்கமைவினுள் வராதவர்கள் என்ற போதிலும் இவர்களும் வெள்ளாளருக்கு அடுத்த கீழ் நிலையில் வைத்தே கருதப்படுவர். பொதுவில் சாதியம் என்பது ஒரு இறுக்கமான, கறாரான பாகுபாடாகக் கருதப்பட்-டாலுங்கூட கால ஓட்டத்தில் பொருளாதாரத்தில், அதிகாரத்தில் பலம் பெற்றுவரும் சாதிகள் படிப்படியாக சாதிய அதிகாரப் படிநிலைவரிசையில் தம்மை உயர்த்திக்கொள்ள அல்லது தமக்கு மேல்நிலையிலுள்ள சாதியினருடன் கலந்து மேல்நிலைப்படும் நிலையும் காணப்படுகிறது. "கள்ளர், மறவர், கனத்த அகம்படியார் மெல்ல மெல்ல வந்து வேளாளர் ஆனார்கள்" என்ற ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமொழியும் கூட இருக்கிறது. புள்ளி விபரங்களும் ஓரளவு இதனை நிரூபிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் 1790 இல் 30 வீதம் ஆக இருந்த வெள்ளாளர் தற்போது கிட்டத்தட்ட 50 வீதம் ஆக அதிகரித்துள்ளனர். இந்த மாற்றமானது ஒருவித மேல் நிலையாக்கத்தினால் ஏற்பட்டதாகும்.

கொலனித்துவ ஆட்சியாளர்கள் கொண்டு வந்த சீர்திருத்தங்களும், பின்பு நடைபெற்ற பொருளாதார, அரசியல் மாற்றங்களும் சாதிய அமைப்பில் பெருமளவு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த விதத்தில் குறிப்பிடத்தக்க சில அம்சங்கள் வருமாறு. . . . 1844 இல் அடிமை முறை சட்டவாக்கம் மூலமாக நீக்கப்பட்டது. பின்பு ஏற்பட்ட கல்வி அறிமுகம், பாடசாலையில் சம ஆசனம், சமபந்தி போசன நடவடிக்கைகள், 1930 இல் கொண்டுவரப்பட்ட சர்வசன வாக்குரிமை, அடுத்து வந்த கிறித்தவ ஆலயங்களிலும், பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும் சம ஆசனத்திற்கான போராட்டம், 1960 களில் வந்த பசுமைப் புரட்சியுடன் கூடிய இயந்திர பாவனைகள் பலரை சாதிய உற்பத்தி முறையிலிருந்து விடுவித்தமை, 60 களின் பிற்பகுதியில் இடதுசாரிகள் தலைமையில் நடைபெற்ற ஆலய பிரவேச, உணவக, சலூன் பிரவேச போராட்டங்கள் ... போன்றவை இதில் குறிப்பிடத்தக்க சில நிகழ்வுகளாகும். இந்த நிகழ்வுகள், போராட்டங்கள் மூலமாக சாதிய அமைப்பு முறை ஓரளவு தளர்ந்து போயுள்ளது என்பது உண்மை. ஐரோப்பியர் வருகைக்கு முந்தியிருந்த நிலைமை அல்லது சுதந்திரத்திற்கு உடனடியாக அடுத்து வந்த நிலைமை இப்போது கிடையாது. ஆனால் இவ்வாறு கூறுவது சாதிய ஒடுக்கு முறையை ஒழித்துவிட்டதற்கு சமமாக ஆகாது. பொதுக் கிணறுகளும், பல ஆலயங்களும் இன்றுங்கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறக்கப்படாமலே உள்ளன. யாழ் பல்கலைகழக "செனட்" போன்ற அமைப்புகளிலே "சாதிய பிரக்ஞை" நிலவுகிறது. இந்த விதமான பிரச்சனைகள் வெறுமனே அற்பமான, வெறும் அடையாளப்படுத்தல் மட்டத்திலான பிரச்சனைகள் அல்ல. இவை இன்று வரை சமூகத்தில் ஆழமாகப் புரையோடிப் போயுள்ள ஒரு பிரச்சனையின் வெளிப்பாடுகளே. இன்று வரையில் தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் பயிர் செய்ய நிலமோ அல்லது அடிப்படையான வீட்டு, சுகாதார வசதிகளோ இன்றி திட்டிகளில் உள்ள சேரிகளில் தான் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகள் உயர் சாதியினரால் மிகவும் நுட்பமாக மறுக்கப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டு அன்றாடம் அவமதிக்கப்பட்டு மூலையில் இருத்தப்பட்டுள்ளனர். இதனால் இவர்கள் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதற்கான வாய்புகள், என்றென்றைக்கும் மறுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். "தேசவழமைச் சட்டம்" என்பது சாதிய ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்தும் ஒரு சட்டமே. கோவிய சாதியைச் சேர்ந்த ஒருவரது மரண ஊர்வலத்தில் பறை அடித்ததை வெள்ளாளர் தடுத்ததற்கு ஆதரவாக பொன்.இராமநாதன் தேச வழமைச் சட்டத்தை ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

ஈழத்தமிழரிடையே நிலவும் இந்த சாதிய ஒடுக்கு முறையானது தனது தேசத்தின் ஒரு பிரிவினருக்கு அடிப்படை மனித உரிமைகளையே மறுக்கும் மிகவும் ஜனநாயக விரோதமான நடைமுறையாகும். இப்படிப்பட்ட ஒடுக்கு முறையை தன்னகத்தே கொண்டுள்ள ஒரு தேசம் தனது பிரஜைகள் அனைவரையும் ஒன்றிணைந்து ஒரு பலமான தேசமாக உருப்பெற்று தனது வரலாற்றுக் கடமைகளை ஆற்றும் தகுதியைப் பலவீனப்படுத்துவதாகும். இந்த விதமான ஒரு ஜனநாயக விரோத நடைமுறையை தனது அன்றாட வாழ்க்கை நெறியாக கொண்டுள்ள ஒரு சமூகத்தில் புரட்சிகர - ஜனநாயக அமைப்புகள் உருவாகி வருவதும் இலகுவானதல்ல. தேசவிடுதலை என்பது பரந்து பட்ட மக்களது வாழ்வில் அர்த்தம் பொதிந்ததாக இருக்க வேண்டுமானால், அது சாதிய ஒடுக்கு முறைக்கு சாவுமணி அடிப்பதாகவும் இருக்க வேண்டும்.

சாதி முறைமை என்பது நமது மக்களிடையே எங்கும் ஒரேவிதமான வடிவத்தில் நிலவவில்லை. கிழக்கு மற்றும் வன்னிப் பகுதிகளில் இது தளர்வுற்றுக் காணப்பட, யாழ்ப்பாணத்தில் மிகவும் இறுக்கமான வடிவில் பின்பற்றப்பட்டது என்பதை நாம் முன்னர் பார்த்திருந்தோம். நாவலரின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மீளுருவாக்கம் செய்யப்பட்ட சாதிய முறைமையானது 1920 களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து எதிர்ப்பைச் சந்திக்கத் தொடங்கியது. 1920 களில் ஆங்கிலேய அரசு பாடசாலைகளில் சமபந்தி முறையை அறிமுகப்படுத்திய போது அதை எதிர்த்து வெள்ளாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக அவர்களுக்கும் சாதி ரீதியில் அடக்கப்பட்டிருந்த மக்களுக்கும் இடையே வன்முறை மோதல்கள் இடம்பெற்றன. சாதிய ஆதிக்கத்திற்கு எதிராக அடக்கப்படுகின்ற மக்களிடமிருந்து சமூக அளவில் வெளிப்பட்ட குமுறலாக இந்த வன்முறை மோதல்கள் அமைந்தன. அதன் பின்னர் சாதிய இறுக்கமானது கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலத்திற்கு சமூக ரீதியிலான பலமான எதிர்ப்புகள் இன்றி பின்பற்றப்பட்டு வந்தது. எனினும், 1960 களில் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்கள் மத்தியில் வெடித்துக் கிளம்பிய பெருமைக்குரிய எழுச்சியின் மூலமாக இந்த சாதிய இறுக்கத்தில் பாரிய தளர்வுகள் ஏற்பட்டன.

**சாதிய உறவுகள் ஆதிக்கத் தன்மை கொண்டது. தமக்குள் தீராத பகைமையைக் கொண்டிருப்பவை. சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினரிடையே சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார ரீதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் வளர்ச்சி என்பவற்றின் ஊடாக இந்தப் பகைமையானது பகிரங்கத் தளத்தில் வெடித்துக் கிளம்புகின்றது. இத்தகைய ஒரு பகிரங்க மோதல் 1960 களில் யாழ்ப்பாண சாதிய முறைமையில் வெளிப்பட்டது.**

யாழ்ப்பாண சாதிய ஒழுங்கில் சாதிய ரீதியில் ஆதிக்க நிலையில் இருப்பவர்கள் அதிக எண்ணிக்கையிலும் அடக்கப்படுகின்ற மக்கள் குறைந்த எண்ணிக்கையிலும் இருக்கின்றனர். இந்தக் குறிப்பான நிலையானது, அடக்கப்படுகின்ற மக்கள் தொடர்ந்தும் அதேநிலையில் வைக்கப்படுவதற்கான காரணிகளில் ஒன்றாகத் தொழிற்படுகின்றது. எனவே ஐரோப்பிய ஆதிக்கம் பின்னர் இலங்கையின் "சுதந்திரம்" அதன் பின்னரான சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார மாற்றங்கள் போன்றவை நிகழ்ந்து வந்த போதிலும் இம்மக்களின் அடக்கப்பட்ட நிலையில் பாரிய மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை. எனினும், இந்தக் காலகட்டத்தின் ஊடாக அவர்கள் மத்தியில் தெளிவான வளர்ச்சிப் போக்கு திடமாக உருப்பெற்று வந்தது.

1844 இல் மேற்கொள்ளப்பட்ட அடிமை முறைமை ஒழிப்பு சாதிய அடுக்கில் ஆகக் கீழ்நிலையில் வைக்கப்பட்டிருந்வர்களின் சமூக நிலைமையை மாற்றியமைத்தது. அவர்களின் சாதிய அமைவு தொடர்ந்தும் நீடித்த பொழுதிலும் அடிமை என்ற நிலையிலிருந்து சுதந்திரப் பிரஜைகளாக அவர்கள் மாறினார்கள். யாழ்ப்பாணத் தமிழர்களில் அடக்கப்படுகின்ற பிரிவினரிடையிலும் சகல சாதியினர் மத்தியிலும் அப்போது இடம்பெற்று வந்த கிறிஸ்தவ மதமாற்றம் முன்னைய சாதிய இறுக்கத்தை சற்றுத் தளர்த்தியது. சாதி ரீதியாக அடக்கப்பட்டிருந்த மக்களுக்கும் படிப்படியே முறைசார் கல்வி கற்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. (இவ்வாறு ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய கல்வி கற்றுவந்த பறையர் சாதியை சேர்ந்த போல் என்பவர் பொன். இராமநாதனுக்கு பெருத்த சவாலாக விளங்கினார்.) சர்வசன வாக்குரிமை-யானது இம்மக்களையும் பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி அரசியலுக்குள் இழுத்துவிட்டது. சுதந்திரத்தின் பின்னர் கல்வி கற்பதிலும் அரசியல் வாழ்வில் பங்குபற்றுவதிலும் இப்பிரிவினருக்கு கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

பொருளாதரத் தளத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த மாற்றங்களும் இப்பிரிவினரின் சமூகத் தன்மையில் தாக்கங்களை ஏற்படுத்தின. ஐரோப்பிய ஆதிக்கத்துடன் இணைந்ததாக போக்குவரத்தில் தீவிர வளர்ச்சி ஏற்பட்டதால், யாழ்ப்பாணத்தில் வர்த்தகம் மேலும் செழித்து வளர ஆரம்பித்தது. இதற்கேற்ப பொருட்களை ஏற்றி இறக்குவதும் அவற்றை இடம் மாற்றுவதும் அதிகரித்தன. எனவே இத்தகைய பணிகளைப் புரிவதற்கான தொழிலாளர்களின் தேவை மேலும் மேலும் அதிகரித்தது. இக்கடினமான பணிகளைச் செய்வதற்காக சாதி ரீதியாக அடக்கப்பட்ட பிரிவினர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

சுதந்திரத்தின் பின்னர் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்ட சீமெந்துத் தொழிற்சாலையில் அடக்கப்படுகின்ற மக்களில் பல நூற்றுக் கணக்கானோர் தொழிலாளராக சேர்ந்து கொண்டனர். நமது தேசத்தில் உருவாகிய முதலாவது தொழிற்துறை பாட்டாளி வர்க்கமாக இவர்கள் அமைந்தனர். மேலும், சுதந்திரத்தின் பின்னர் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடெங்கும் தடையற்ற பரிமாற்றத்திற்கு உள்ளானது. இவற்றின் விளைவாக யாழ்ப்பாணத்தில் போக்குவரத்தும் வர்த்தகமும் மேலும் வளர்ச்சியடைந்தன. எனவே, பொருட்களை ஏற்றி இறக்குவதில் இன்னும் அதிகமாக அடக்கப்படுகின்ற பிரிவினர் இணைக்கப்பட்டார்கள். இத்தகைய நிலைமைகள் அவர்களை நகர்சார் தொழிலாளர்களாக மாற்றியதுடன் அவர்கள் மத்தியில் அமைப்புருவாக்கத்தையும் ஏற்படுத்தின. தமக்கென உருவாக்கப்பட்ட "வகுப்புத் தொழிலாளர் சங்கம்" போன்ற தொழிற்சங்கங்களில் இவர்கள் தம்மை இணைத்துக் கொண்டனர்.

இவற்றோடு விவசாயம் நவீன மயமாக்கப்பட்டதாலும் அது முற்றிலும் வர்த்தக இலக்காக்கப்பட்டதாலும் அத்துறையில் இயந்திரங்கள், செயற்கை உரம் மற்றும் இரசாயன மருந்துகள் என்பவற்றின் பாவனை அதிகரித்தது. இதுவரை காலமும் விவசாய கூலியாட்களாக செயற்பட்டு வந்த இம்மக்களின் ஒரு பிரிவினர் இந்த இயந்திரங்களை கையாள்பவர்களாக மாறினார்கள். இதனால் இத்தகைய இயந்திரங்கள் மற்றும் அவற்றையொட்டிய விடயங்கள் சார்ந்த அறிவு இவர்களுக்குள் வளர ஆரம்பித்தது. இதன் விளைவாக இத்தகைய இயந்திரங்களை பழுதுபார்ப்பவர்களாகவும் இவர்கள் மாறினார்கள். ஒரு குறிப்பிட்ட இயந்திரத்தின் அமைப்பு மற்றும் தொழிற்பாடு பற்றிய அறிவு ஏனைய இயந்திரங்கள் பற்றிய அறிவைப் பெறுவதற்கு உதவுகின்றது. இவ்வாறு இந்தப் பிரிவினர் விவசாய இயந்திரங்களான ட்ராக்டர், தௌிகருவிகள் என்பவற்றோடு பிற வாகனங்களையும் பழுதுபார்க்கக் கூடிய அறிவைப் பெற்றார்கள். இதன் விளைவாக சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்களில் ஒரு பிரிவினர் நகர் சார்ந்து கராஜ் தொழில் செய்பவர்களாக மாறினார்கள். இவ்விதம் தொழில்சார்ந்த அடக்கப்படுகின்ற பிரிவினர்களின் ஒரு சாராரிடையே ஏற்பட்ட மாற்றங்களினால், அத்தொழில்களில் ஈடுபட்டவர்களின் அசைவியக்கம் அதிகரித்தது. இவர்களுக்கும் சமூகத்தின் ஏனைய பிரிவினர்களுக்கும் இடையே சுயாதீனமானதும், அதிகரித்த அளவிலும் ஊடாட்டங்கள் நிகழத் தொடங்கின.

இவ்வாறு கல்வி அறிவு, புதிய தொழில்களுடனான அறிமுகம், தொழிற்சங்கங்களில் இணைதல், அதிகரித்த நகர்சார் ஊடாட்டம் இவற்றோடு இவர்களின் வாக்குரிமை சார்ந்த அரசியல் பங்களிப்பு போன்ற காரணிகள் சாதிரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினர் மத்தியில், பொருளாதார, கலாச்சார, அரசியல் ரீதியாக வளர்ச்சிபெற்ற பிரிவினர்களை தோற்றுவித்தன. காலம் காலமாக தம்மீது மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற அடக்குமுறைகளையும் சமூக இழிவுபடுத்தல்களையும் கேள்விக்குள்ளாக்குகின்றவர்களாக இவர்கள் மாறினார்கள். இத்தகைய அடக்குமுறைகளையும் இழிவுபடுத்தல்களையும் இனியும் சகிக்க முடியாத உணர்வுகளை பெற்றவர்களாக இப்புதிய பிரிவினர்கள் மாறிவந்தார்கள். இவ்விதம் இவர்கள் மத்தியில் திரண்டு வந்த உணர்வுகளுக்கு அரசியல் வடிவம் கொடுப்பவர்களாக தமிழ் மரபுவழி இடதுசாரிகள் செயற்பட்டார்கள்.

1960கள் உலக இடதுசாரி அரசியலில் பெரும் விவாதங்களையும் எழுச்சிகளையும் பிளவுகளையும் ஏற்படுத்திய காலகட்டமாக விளங்கியது. இக்காலப் பகுதியில் சோவியத் - சீன முரண்பாடு உச்ச நிலையை அடைந்ததோடு உலக இடதுசாரி இயக்கங்கள் இவ்விரண்டு நாடுகளின் சார்பாக பிரிந்து நின்றன. உலக இடதுசாரி இயக்கங்களில் பெரும்பாலானவை மாவோவின் கருத்துக்களுடன் இணைந்து கொண்டன. பெரும் கிளர்ச்சியை தோற்றுவித்த சீனக் கலாச்சாரப் புரட்சி இந்த இயக்கங்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டும் அனுபவமாக அமைந்தது.

உலக அரங்கில் இடம்பெற்ற இத்தகைய நிகழ்வுகளின் தாக்கம் இலங்கையின் மரபுவழி இடதுசாரி இயக்கங்களிலும் எதிரொலித்தது. இலங்கை இடதுசாரிகள் சீன, சோவியத் என இரு முகாம்களாகப் பிரிந்தார்கள். உலகெங்கும் சீன சார்பு இடதுசாரி அமைப்புக்களில் நிலவிய எழுச்சிமிக்க தன்மைக்கு இசைந்ததாக இலங்கையில் சண்முகதாசனின் தலைமையிலான இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி தீவிர செயற்பாடு கொண்ட அமைப்பாக இயங்கியது. புதிய அரசியல் எழுச்சியினால் தூண்டப்பட்டு இருந்த இவர்கள் யாழ்ப்பாணத்தில் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்கள் மத்தியில் உருப்பெற்று வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்புணர்வுகளுடன் தம்மை இணைத்துக் கொண்டார்கள். இத்தகைய இணைப்பானது நமது மக்களின் அரசியல் வரலாற்றில் இன்னுமொரு போராட்ட இயக்கம், தீவிர பரிமாணத்தில் வெளிப்படக் காரணமாகிளது.

**இதுவரை காலமும் நமது மக்களின் அரசியல் இயக்கமானது தம்மீதான புற ஆதிக்கத்திற்கு எதிரான அரசியல் வெளிப்பாடாகவே அமைந்திருந்தது. இதற்கு மாறாக, இப்போது சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்கள் முன்னெடுத்த போராட்டமானது நமது மக்களின் ஒரு பிரிவினர் தம்மீதான இன்னொரு பிரிவினரின் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்த அரசியல் இயக்கமாக வெளிப்பட்டது.**

தமிழ் இடதுசாரிகளின் பூரண ஆதரவுடனும் பங்குபற்றுதலுடனும் இம்மக்கள் தம் மீதான சாதிய அடக்குமுறைக்கும் இழிவுபடுத்தலுக்கும் எதிராக உறுதியாகவும் தீவிரமாகவும் போராடினார்கள். தமது உரிமைகளுக்காகவும் தம்மீது மரபாக்கப்பட்டுள்ள சமூக இழிநிலையை அகற்றுவதற்காகவும் தாம் சமத்துவமாக நடாத்தப்பட வேண்டுமென்று கோரியும் இவர்கள் நீண்ட உறுதியான போராட்டத்தை மேற்கொண்டார்கள். அடக்கப்பட்ட மக்களின் இந்தத் தீரமிக்க எழுச்சியானது சாதி ரீதியாக ஆதிக்க நிலையிலிருந்த பிரிவினரின் கையாட்களாலும் பொலிஸாராலும் கொடூரமாக நசுக்கப்பட்ட போதிலும் இப்போராட்டத்தின் மூலம், தமது தீரத்தையும் போராட்ட உணர்வையும் அம்மக்கள் உறுதியாக வெளிப்படுத்தினார்கள். நமது மக்களின் நவீன வரலாற்றில் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்களின் போராட்ட உணர்வையும் ஒற்றுமையையும் வெகுஜன எழுச்சியாக வெளிப்படுத்திய முதலாவது சந்தர்ப்பமாக இது திகழ்கின்றது.

சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்களின் இந்த எழுச்சி தோற்கடிக்கப்பட்ட போதிலும் அது யாழ்ப்பாண சாதியமைப்பின் இறுக்கத்தில் கூரிய தாக்கங்களை ஏற்படுத்தின. இதன் பின்னர் சாதிய முறைமையின் பகிரங்க வெளிப்பாடுகளும் இழிவுபடுத்தல்களும் தவிர்க்கப்பட்டன. சமபந்தி போசனம் என்பவை நடைமுறைக்கு வந்தன. சாதிப் பெயர் கொண்டு அழைப்பது ஒழிக்கப்பட்டது. உள்ளூராட்சி நிறுவனங்களிலும் பாராளுமன்றத்திலும் இவர்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படக் கூடிய நிலைமைகள் உருவானது. சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்கள் முன்னெடுத்த இப்போராட்டமானது யாழ்ப்பாணத்தில் சாதிய முறைமையை முற்றாக அகற்றாத போதிலும், பிற சமூகப் பிரிவினர்களுடனான அவர்களின் உறவுகளிலும், அவர்களின் சுயாதீனமான இயக்கத்திலும் பல்வேறு துறைகளுக்குள் நுழைவதிலும், அரசியலில் பங்கேற்பதிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. இதன் பின்னர் குறிப்பாக சாதிரீதியாக அடக்கப்படுகின்ற மக்கள் மத்திய புதிதாக உருவாகி வந்த பிரிவினர்களின் அந்தஸ்தும், இருப்பும் உறுதியான முறையில் சமூக அங்கீகாரம் பெற்றன. 1970களின் தொடக்கத்தில் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்கள் தவிர்க்க முடியாத அரசியல் சக்திகளாக உருவாகியிருந்தார்கள். இதன் பின்னர் 1980களில் பெருக்கெடுத்த நமது தீவிர தேசிய இயக்கத்தில் தாக்கம் நிகழ்த்துகின்ற முக்கிய பிரிவினராக இவர்கள் மாறினார்கள்.

**1960களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்களின் எழுச்சியில் மரபுவழி இடதுசாரிகளின் பங்கேற்பு என்றும் நினைவு கூரத்தக்க முறையில் அமைந்திருந்தன. இம்மக்களை அமைப்பாக்குவதிலும் அப்போராட்டங்களில் தாமே நேரடியாகப் பங்குபற்றுவதிலும் இவர்கள் தீவிரமாக ஈடுபட்டார்கள். இம்மக்களின் உணர்வுகளை ஒன்று குவிப்பதிலும் இவற்றைத் தெளிவான கோரிக்கைகளாக சாரப்படுத்துவதிலும் இவர்கள் பிரக்ஞைபூர்வமாக செயற்பட்டார்கள்.**

இவ்வகையில் இம்மக்களின் சமூக, அரசியல் அந்தஸ்த்தில் தீவிர மாற்றங்கள் ஏற்பட்டதில் மரபு வழி இடதுசாரிகளின் பங்களிப்பு வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாக அமைந்தது. எனினும், இவர்களால் இம்மக்களை தொடர்ந்தும் சாதிய அல்லது வர்க்க அடிப்படையில் ஒரே அணியில் வைத்திருக்கவோ தமிழ் அரசியல் இயக்கத்தில் தாம் தலைமைப் பாத்திரம் வகிக்கவோ அல்லது அவ்வியக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவார்களோ செயற்பட முடியவில்லை. மாறாக, 1970 களின் பிற்பகுதியில் மரபுவழி இடதுசாரிகளின் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கு தமிழ் அரசியல் இயக்கத்திலிருந்து முற்றாகவே மறைந்துவிட்டது. இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றை அடையாளம் காணமுடியும்.

1. அன்றைய கட்டத்தில் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்களின் எழுச்சியில் உள்ளடங்கியிருந்த சமூக மற்றும் அரசியல் இலக்குகள் அடையப்பட்டமை. அதாவது, தம்மீது மரபாக்கப்பட்டிருந்த சாதிய அடக்குமுறைகளும், இழிவுபடுத்தல்களும் அகற்றப்பட்டு தமது சமூக அரசியல் அந்தஸ்து உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பதே இந்த மக்களின் குறிப்பாக இப்போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்ற புதிய பிரிவினர்களின் பிரதான இலக்காக அமைந்திருந்தது. இது நிறைவேறியதும் இப்போராட்டத்தை ஒழுங்கமைத்து வழிநடாத்திய மரபுவழி தமிழ் இடதுசாரிகளின் அன்றைய வரலாற்றுப் பணி முடிவடைந்து விட்டது.

2. அன்றைய கட்டத்தில் நமது மக்களின் ஒட்டுமொத்த அரசியல் இயக்கமானது, எழுச்சி பெற்ற தேசிய இயக்கமாக தனியான அரசியல் அதிகாரத்தை வென்று கொள்வதற்கான திசையில் திடமாக முன்னேறிக் கொண்டிருந்தது. எனவே அன்றைய அரசியல் சூழலானது நமது மக்களின் அனைத்துப் பிரிவினரும் ஒரே தேசம் என்ற அடிப்படையில் ஒரு பொதுவான அரசியல் இயக்கத்திற்குள் ஒன்றுதிரள்வதை அவசியமாக்கியிருந்தது. இந்த அவசியத்திற்கு மாறாக, முழுநாட்டிற்குமான வர்க்கப் போராட்டம் என்ற அரசியல் இலக்கைக் கொண்டிருந்த மரபுவழி தமிழ் இடதுசாரிகளினால் நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் மட்டுமல்ல இதன் பின்னர் அடக்கப்படுகின்ற மக்களின் அரசியல் வாழ்விலும் செல்வாக்கைச் செலுத்த முடியவில்லை.

3. நாட்டின் முழு அரசியல் சூழ்நிலையிலும் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் மரபுவழித் தமிழ் இடதுசாரிகளின் செல்வாக்கின் மீது ஓங்கித் தாக்கின. 1970இல் பதவிக்கு வந்த சிறிலங்கா அரசு சீன அரசாங்கத்துடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தியது சிறிலங்கா அரசு அரசியல் யாப்பு மாற்றத்தின் ஊடாக தன்னை பௌத்த சிங்கள அரசாக நிறுவிக் கொண்டது. சீன சார்புக் கம்யுனிஸ்ட் கட்சியில் அதன் உயிர்துடிப்புமிக்க ஒரு பிரிவினர் - விஜயவீர தலைமையிலான சிங்களப் பிரிவினர் - பிரிந்து தனியான அரசியலமைப்பை உருவாக்கினார்கள். சீனக் கம்யுனிஸ்ட் கட்சி முற்றிலும் சட்ட வழிப்பட்டும் கடுமையான அடக்குமுறைச் சட்டங்களையும் மீறி செயல்படும் தலைமறைவு வேலைமுறைகளை கொண்டிருக்கவில்லை. இவை அனைத்தும் சேர்ந்து, அந்தக் கட்சியின் அரசியல் ஆணிவேரையே பிடுங்கி எறிந்துவிட்டது. இதன் பின்னர் அன்றுவரை நமது மக்களின் எந்தப்பிரிவுடனும் உள்ளார்ந்த இணைப்பைக் கொண்டிராத இக்கட்சியைச் சேர்ந்த மரபுவழி தமிழ் இடதுசாரிகள் தமிழ் அரசியல் இயக்கத்தில் இருந்து எளிதாக அகற்றப்பட்டு விட்டார்கள் அல்லது அகன்று விட்டார்கள். (1960 களில் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினர்களின் போராட்டங்களில் மரபுவழி தமிழ் இடதுசாரிகளின் பங்களிப்பு என்பது உள்ளார்ந்த இணைப்பு சார்ந்ததாக அமைந்திருக்கவில்லை.

இவர்களில் ஒரு பிரிவினர், சாதிரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினர்களின் சமூக, அரசியல் அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டதானது, அவர்கள் நமது மக்களின் ஏனைய பிரிவினர்களுடன் ஒரே தேசமாக இணைவதற்கும், நமது தேசிய இயக்கத்தில் ஒரு பிரதான சக்தியாக மாறுவதற்கும் வழிவகுத்த காரணிகளில் ஒன்றாக அமைந்தது. இவ்வகையில், இத்தகைய சூழலை உருவாக்கப்படுவதற்கு காரணமாக அமைந்த போராட்டத்தில் பங்கேற்றவர்கள் என்ற வகையில் மரபுவழித் தமிழ் இடதுசாரிகள் நமது மக்களின் தேசிய இயக்கத்திற்கு, பங்களிப்பு வழங்கியவர்களாக அமைகின்றார்கள்.

## ஈழத்தமிழரின் அரசியல் இயக்கத்தில் இளைஞர்களின் பாத்திரம்

1950 களின் இறுதிப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட மொழிச்சட்டத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சியும் நமது மக்களும் மேற்கொண்ட சத்தியாக்கிரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் நமது தேசிய இயக்கத்தில் கடுமையான தாக்கங்களை நிகழ்த்தின. சிறிலங்கா அரசின் இனவாதக் கோர முகம் அப்பட்டமாக வெளிப்பட ஆரம்பித்த போது அதற்கு எதிரான அரசியல் சக்திகளும் அரசியல் போராட்ட முறையும் நமது மக்களிடையே தோற்றம் பெறுவதற்கான அவசியம் உருவானது.

நமது மக்களின் வெகுஜனக் கட்சியாக உருப்பெற்றிருந்த தமிழரசுக் கட்சி, அம்மக்களின் நலன்களை அரசியல் தளத்தில் தொடர்ச்சியாக பிரதிபலித்து வந்தது. சிறிலங்கா அரசின் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக மாபெரும் வெகுஜனப் போராட்டங்களை தொடராக முன்னெடுத்தது. எனினும், இக்கட்சியின் தலைமையானது, பெரிதும் சமூக ஆதிக்கப் பிரிவினரதும் சட்டத்துறையை சேர்ந்தவர்களதும் சேர்க்கையாக இருந்ததால் இவர்களின் போராட்ட எல்லையானது சமரச மற்றும் மிதவாத வடிவத்திற்குள்ளும் அரசியல் சட்ட எல்லைக்குள்ளும் வரம்பிடப்பட்டிருந்தன. சட்டத் திருத்தங்கள் அரசியல் ஒப்பந்தங்கள் அமைதி வழிப் போராட்டங்கள் என்ற வழிமுறைகளுக்கு ஊடாக இவர்கள் தாம் முன்வைத்த அரசியல் இலக்குகளை வென்று கொள்ள முயற்சித்தார்கள். இந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்ததோடு இவற்றுக்கு முற்றிலும் எதிரான திசையில் சிறிலங்கா அரசு அரசியல் அமைப்பு ரீதியாகவும் வன்முறை ரீதியாகவும் தன்னை சிங்கள பௌத்த அரசாக ஸ்தாபித்து வந்தது.

தீவிரமடைந்து வந்த சிறிலங்கா அரசின் இனவாத வன்முறைப் போக்குகளுக்கு எதிராக தமிழரசுக் கட்சி ஹர்த்தால், கடையடைப்பு, உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் இறுதியில் தமிழரசுத் தபால் சேவை போன்றவை பொருத்தமான போராட்ட வடிவங்களாக அமைந்திருக்கவில்லை. இப்போராட்ட வடிவமானது சிறிலங்கா அரசின் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு என்ற வகையில் முக்கியத்துவம் பெற்றிருந்தனவே தவிர, இவற்றினால் நமது தேசத்தின் நலன்களை எவ்விதத்திலும் உறுதிப்படுத்த முடியவில்லை. இவ்வாறான நிலையில் புதிய போராட்ட வடிவங்கள் குறித்து தமிழரசுக் கட்சி சிந்தித்திருக்க வேண்டிய அவசியம் இருந்தது. எனினும், அக்கட்சிக்குள் ஆதிக்கம் பெற்றிருந்த பிரிவினரின் சமூக உள்ளடக்கமானது தேர்தல் வெற்றிகளை மையமாகக் கொண்ட சமரசத் தீர்வுகளை இலக்காகக் கொண்டே தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும்படி அக்கட்சியை நிர்ப்பந்தித்தது. ஆனால் உண்மை என்னவென்றால், இத்தகைய அரசியல் வழிமுறைகள் ஒருபோதும் வெற்றியைப் பெற்றுத் தரவில்லை.

சிங்கள அரசியல் தலைமையுடன் தாம் மேற்கொண்ட ஒவ்வொரு ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டதையும் சிங்கள அரசியல் தலைமையினால் தங்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் துரோகத்தனமான முறையில் மீறப்பட்டதையும் தமிழரசுக் கட்சித் தலைமை அவமானத்துடன் எதிர்கொண்டது. இந்த அவமானமும் அதனுடாகத் திரண்ட தன்மான உணர்ச்சிகளும் தேர்தல் மேடைகளில் ஆவேசப் பேச்சுக்களாக வெளிப்பட்டன. பொருத்தமான போராட்ட வடிவங்களைத் தீர்மானித்து அவற்றை உறுதியாக முன்னெடுப்பதைத் தவிர்த்து அரசியல் மேடைகளில் இவர்கள் வெளிப்படுத்திய உணர்ச்சிமிக்க பிரச்சாரங்கள் நமது மக்களின் அரசியல் நலன்களுக்கு எவ்வித உத்திரவாதத்தையும் வழங்காத போதிலும், அவை நமது மக்களின் தேசிய இயக்கம் புதிய திசையில் முன்னெடுக்கப்படுவதற்கான ஊக்கிகளாக அமைந்தன.

1960 களின் நடுப்பகுதியில் நமது மக்களின் பல்வேறு பிரிவினரிடையே திரண்டு வந்த அரசியல் உணர்ச்சிகளை ஒன்று குவிப்பதாகவும் அவற்றை வலிமையூட்டுவதாகவும் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரச்சாரங்கள் அமைந்திருந்தன. ஒவ்வொரு தேர்தலும் முடிவடைந்த பின்னர் அத்தலைமையின் அரசியல் ஆவேசம் தணிந்து விடுகின்ற பொழுதிலும் தமது நலன்கள் பேணப்படாமலும் உதாசீனப்படுத்தப்பட்டும் வந்ததால், நமது மக்களிடையே தோன்றிய உணர்ச்சிப் பிழம்புகள் அவிந்து விடாமல் தொடர்ந்தும் கனன்று கொண்டேயிருந்தன.

சிறிலங்கா அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த இன அடக்குமுறைகள் நமது மக்களிடையே கனன்று கொண்டிருந்த உணர்ச்சிக் கனலை பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளம்புகளாக்கின. 1950 களின் இறுதியில் நிறைவேற்றப்பட்ட மொழிச் சட்டமும் வாகனங்களில் சிங்கள ஸ்ரீ எழுத்து பாவிக்கப்பட வேண்டும் என்ற சிறிலங்கா அரசின் சட்டமும் நமது மக்களிடையே பெருங்கொந்தளிப்பைத் தோற்றுவித்தன. சிங்கள மொழியானது அரச மற்றும் நிர்வாக எல்லைகளையும் கடந்து நமது மக்களின் வீடுகளுக்குள்ளும் நுழைந்தது. தாம் வெறுக்கின்ற அதிகார மொழியை தமது சொந்த வாகனங்களுக்குப் பாவிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவர்களின் எதிர்ப்புணர்வை பன்மடங்கு அதிகரித்தது. இது ஸ்ரீ எதிர்ப்பு இயக்கமாக உருவாகி வளர்ச்சியடைந்தது. நமது மக்களிடையே வெகுஜனத் தன்மையைப் பெற்ற இந்த சிறி எதிர்ப்புப் போராட்டம் 60களின் முற்பகுதியில் ஆங்காங்கே வன்முறை வடிவிலும் வெளிப்பட்டது. சிங்கள ஸ்ரீ எழுத்துப் பொறிக்கப்பட்டிருந்த பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இவ்வாறு நமது மக்களின் தேசிய இயக்கத்தில் வன்முறைப் போராட்ட வடிவத்திற்கான கரு மெல்ல மெல்ல உருவாகியது.

மொழிச் சட்டத்திற்கும் சிங்கள ஸ்ரீ சட்டத்திற்கும் எதிரான போராட்டங்கள் தமிழ் இளைஞர்களையும் மாணவர்களையும் அரசியல் இயக்கத்திற்குள் வலுவாக இழுத்துக் கொண்டது. போராட்டத்தின் தீவிரமும் ஆங்காங்கே வெளிப்பட்ட வன்முறையும் தமிழர் அரசியல் இயக்கத்தில் பலம்பெற்று வந்த, அந்த இயக்கத்தை விரைவில் தலைமையேற்கவிருந்த புதிய தலைமுறையின் வரவை கிளர்ச்சி பொங்க அறிவித்தன. இவ்வாறு நமது அரசியல் தளத்தில் உறுதியாக திகழ்ந்த இளைய தலைமுறையின் பிரச்சன்னமானது நமது மக்களின் அரசியல் இயக்கத்தை தெளிவான முறையில் மாபெரும் தேசிய எழுச்சியாக மாற்றியமைத்தது. 1960களிலிருந்து 1970கள் வரையிலான காலப்பகுதியில், நமது இளைஞர்களின் அரசியல் பங்கேற்பானது, ஒரு புறம் தமிழரசுக் கட்சியிலும் பின்னர் குறிப்பிட்ட காலம்வரை தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் மரபுவழி அரசியல் தலைமைகளின் கீழ் அமைந்ததாகவும், இன்னொரு புறம் தமக்கென சுயாதீனமான, தீவிரத் தன்மை கொண்ட அமைப்புக்களை ஏற்படுத்தி செயற்படுவதாகவும் இடம்பெற்றது.

சிறிலங்கா அரசின் மொழிக் கொள்கையும் அதன் விளைவுகளும் நமது மக்களிடையே இருந்த படித்த பிரிவினரை கடுமையாகப் பாதித்தது. குறிப்பாக நூற்றாண்டு காலமாக உறுதியான கல்வி மரபைக் கொண்டிருந்த யாழ்ப்பாண படித்த பிரிவினரை இவை நேரடியாகத் தாக்கின. தமது பொருளாதார அடித்தளங்களில் ஒன்றாகவும் தமது சமூக அந்தஸ்தின் வெளிப்படையான குறியீடாகவும் அமைந்திருந்த அரசாங்க உத்தியோகம், பதவியுயர்வு என்பவை பாதிக்கப்பட்டதானது இப்பிரிவினரின் நலன்கள் மீதான நேரடித் தாக்குதல்களாக அமைந்தன. இதனால் இப்பிரிவினர்களில் ஒரு சாரார் தமிழரசுக் கட்சியைச் சூழ்ந்து திரள ஆரம்பித்தார்கள். இவ்விதம் தமிழரசுக் கட்சிக்குள் திரண்ட கல்வி கற்ற, அரச உத்தியோகத்திலிருந்து வந்த இளைஞர்கள், நமது சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். உயர்கல்வி கற்பதற்கும், அரச உத்தியோகங்களில் இணைவதற்கான வாய்ப்பு, சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவினர்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்ததால் இப்போது சிறிலங்கா அரசின் இனஒதுக்கல் கொள்கைகளினால் நமது சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த கல்விகற்ற இளைஞர்கள் பாதிக்கப்பட்டார்கள். தமது நலன்களையும், உரிமைகளையும் அரசியல் ரீதியில் உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்ட இவர்களில் ஒரு பிரிவினர், தமது சமூகநிலை பற்றிய (சாதி, பால், வர்க்க, பிரதேசம் . . . சார்ந்த) வேறுபாடுகளின்றி, தமிழரசுக் கட்சிக்குள் இணைந்து கொண்டார்கள்.

**இவ்வாறு நமது சமூகத்தின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த இளைஞர்கள், தமிழரசுக் கட்சிக்குள் திரளாக இணைந்ததானது, அக்கட்சியில் உறுப்பினர் சேர்க்கையிலும் பண்பிலும் ஆழ்ந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. போர்க்குணாம்சமும், உணர்வெழுச்சியும், தீவிரமும் கொண்டிருந்ததோடு, வேறுபட்ட சமூகப் பிரிவுகளை சேர்ந்தவர்களாகவும் இவர்கள் இருந்ததால் தமிழரசுக் கட்சியின் உள்ளடக்கத்திலும், அதன் அரசியல் கொள்கையிலும் புதிய மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் தோன்றியது. இதனால் அக்கட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமுரண்பாட்டுக்குரிய களமாக மாற்றப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் பெற்றிருந்த மரபுவழித் தலைமையானது, சமூக ஆதிக்கம் பெற்றிருந்த பிரிவினர்களதும் பெரிதும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களதும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இத்தலைமை நமது மக்களின் பல்வேறு பிரிவினர்களுடனும் நெருக்கமான அரசியல் பிணைப்பைக் கொண்டிருந்த போதிலும், அது தேர்தல்க் கால உறவாக இருந்த அளவுக்கு நமது மக்களின் அடிப்படை நலன்களுடன் உள்ளார்ந்த இணைப்புக் கொண்டதாக இருக்கவில்லை. கொழும்பு, யாழ்ப்பாண தமிழ் வர்த்தகர்களின் நலன்களையும் உயர் நிர்வாகப் பிரிவினரின் நலன்களையுமே இத்தலைமை அதிகம் பிரதிபலித்தது. இதன் சிந்தனை மற்றும் செயற்பாடுகளில் சாதிய படிமங்கள் நீங்காமல் தொடர்ந்தன. யாழ் ஆதிக்க மனோபாவம் அகலாமல் இருந்தது. இதனால் நமது மக்களில் அனைத்துப் பிரிவுகளுடனும் அவர்களின் நலன்கள் சார்ந்தும் உணர்வுபூர்வமாகவும் உள்ளார்ந்தும் ஒன்று கலக்கமுடியாத நிலையில் தமிழரசுக் கட்சி மரபுவழி தலைமை காணப்பட்டது. இந்த எதார்த்த நிலைமையானது தமிழரசுக் கட்சியின் மரபுவழித் தலைமையானது நமது மக்களின் அரசியல் உரிமைகளையும் நலன்களையும் வென்று கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் கூடிய போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியாத நிலையை தோற்றுவித்தது.

ஆனால், இந்த மரபுவழித் தலைமைக்கு மாறாக படித்த இளைய பரம்பரையினர் தீவிரமும் உத்வேகமும் உணர்வெழுச்சியும் கொண்டவர்களாக இருந்தார்கள். சமரச வழிமுறைகளை நிராகரித்து உறுதியான போராட்டங்களுக்கு ஊடாக அரசியல் உரிமைகளை வென்று கொள்ள வேண்டிய அவசியத்தை இவர்கள் உணர்ந்து கொண்டார்கள். தமது சொந்த நலன்களோடு நமது மக்களின் ஏனைய பிரிவினர்களின் நலன்களும் சிறிலங்கா அரசினால் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதை இவர்கள் புரிந்து கொண்டார்கள். எனவே மக்களுடன் இணைந்ததான மக்களின் அனைத்துப் பிரிவினர்களையும் உள்ளடக்கியதான தீவிர அரசியல் இயக்கத்தின் தேவையை உணர ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியானது முற்றிலும் எதிரான முரண்பட்ட இரு பிரிவினர்களுக்கு இடைப்பட்ட போராட்டக் களமாக மாறியது. மரபுவழித் தலைமை பெற்றிருந்த சாதிய, பொருளாதார மற்றும் கருத்தியல் ஆதிக்கத்திலும் பார்க்க புதிய தலைமுறையினரின் தீவிரமும் வேகமும் உணர்வெழுச்சியும் மக்களுடனான இணைவும் படிப்படியே வலிமை பெற்று வந்தன. அதிகரித்து வந்த சிறிலங்கா அரசின் இன அடக்குமுறைகளும் நமது மக்களிடையே அவை ஏற்படுத்திய அதிர்வுகளும் புதிய தலைமுறையினருக்கு மேலும் வலிமை ஊட்டின. இவற்றோடு அன்றைய சூழலில் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சிகள் இப்புதிய பிரிவினரின் சிந்தனையில் தீவிர மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன. சாதிய இழிநிலை அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை இப்போராட்டங்கள் அவர்களுக்கு உணர்த்தின. எனவே சாதிய இழிநிலைக்கு எதிராக கட்சி ரீதியாகவே போராட்டத்தை முன்னெடுக்க இவர்கள் தீர்மானித்தார்கள். இதன் விளைவாக கட்சிக்குள் மரபு வழித் தலைமைக்கும் இப்புதிய தலைமுறைக்கும் இடையே கடுமையான முரண்பாடுகள் தோன்றின. இறுதியில், தீவிர விவாதத்தின் முடிவில் இளைஞர் அணி வெற்றி பெற்றது. தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம், சமபந்தி போசனம் போன்ற நடவடிக்கைகளை தமிரசுக் கட்சியே முன்னின்று நடத்தும் நிலைமை உருவானது. இவ்வாறு தமிழரசுக் கட்சியுடன் இணைந்திருந்த இளைஞர் அணி சாராம்சத்தில் 1924 இல் உருவான யாழ் வாலிபர் கொங்கிரஸின் மறுபதிப்பாக அமைந்தது. நமது மக்களின் அரசியல் வரலாற்றில் ஜனநாயக முற்போக்கு மற்றும் புரட்சிகரப் பண்புகளின் அழியாத் தொடர்ச்சியாக இது விளங்கியது.

தீவிர அரசியல் உணர்வு பெற்ற நமது இளைஞர்களின் இன்னொரு பிரிவினர், தமிழரசுக் கட்சிக்கு வெளியே ”மாணவர் பேரவை” என்ற அமைப்பை உருவாக்கி, சுயாதீனமான முறையில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களாக மாறினார்கள். குறிப்பாக, 1971இல் அதிகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறை, 1972இல் இலங்கை அரசு, பௌத்த-சிங்கள குடியரசாக மாற்றப்படமை... போன்ற நிகழ்வுகள் நமது மாணவர்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களையும் மேலும் அதிகளவில் அரசியலுக்குள் இழுத்துக் கொண்டன. ஏற்கனவே தமிழரசுக் கட்சி, ஐ.தே.க. அரசாங்கத்தில் இணைந்தும், தனது போராட்ட மரபை இழந்தும் வந்திருந்த நிலையில், அரசியல் சட்ட வரம்பிற்குள், நமது மக்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்ட முடியாது என்பது அரசியல் சட்ட ரீதியாகவே நிறுவப்பட்டு விட்ட நிலையில், தமிழரசுக் கட்சி நமது தேசத்தின் அரசியல் தலைமை என்ற நிலையிலிருந்து அகலத் தொடங்கியது. இந்நிலையில் சிறிலங்கா அரசின் தரப்படுத்தல் முறையினால் பாதிக்கப்பட்டும், அரசியல் யாப்பு திருத்தத்தினால் ஆவேசமுற்றும் இருந்த நமது மாணவர்களும், இளைஞர்களும் புதிய அரசியல் வழிமுறைகளை நோக்கி உறுதியாக நகர்ந்தார்கள். இது "மாணவர் பேரவை" என்ற தீவிர அமைப்பின் தோற்றத்திற்கு வழிவகுத்தது.

**நவீன அரசியல் வரலாற்றில், நமது தேசிய இயக்கத்தில் தோன்றிய முதலாவது தலைமறைவு அமைப்பாக மாணவர் பேரவை உருவாகியது. பாராளுமன்ற பாதை, அரசியல் சட்ட வரம்பிற்குட்பட்ட எதிர்ப்புகள் . . . போன்றவை காலம் கடந்த, வினைபயனற்ற போராட்ட முறையாக மாறிக் கொண்டிருந்தது.**

இந்நிலையில், புதிய தலைமுறையினர், தீவிர விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதும், நமது மக்களின் உரிமைகளை நிலைநிறுத்தக் கூடியதுமான போராட்ட முறையில் அக்கறை கொண்டார்கள். இத்தகைய போராட்ட முறை குறித்த தெளிவான வரையறைகள் எதையும் அம்மக்கள் உருவாக்கியராத போதிலும், இப்போராட்ட முறை சிறிலங்கா அரசையும், அதன் படைகளையும் நேரடியாகப் பாதிக்க கூடியதாக அமைய வேண்டும் எனற் உறுதியான புரிதல் அவர்களிடையே நிலவியது. இத்தகைய புரிதல் தலைமறைவுச் செயற்பாட்டின் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்தின. இவ்வாறு மாணவர் பேரவையானது தொடக்கத்திலிருந்தே ஒரு தலைமறைவு அமைப்பாக இயங்கியது.

மாணவர் பேரவை ஒரு தனியான அமைப்பாக இயங்கிய போதிலும், அது மையப்படுத்தப்பட்ட தலைமையையோ, வரையறைகளைக் கொண்ட நிறுவனத் தன்மையையோ கொண்டிருக்கவில்லை. சத்தியசீலன் என்பவரின் தலைமையில் இது இயங்கிய போதிலும் அவரது தலைமை மையப்பட்டதாகவோ, அதிகாரம் கொண்டதாகவோ இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு பிரதேசங்களை சேர்ந்த இளைஞர்களும், மாணவர்களும் மாணவர் பேரவையில் இணைந்து கொண்ட போதிலும், பொதுத் தலைமை, வரையறைகள் என்பவற்றுக்கு கட்டுப்பட்ட நிலையில் இவர்கள் செயற்படவில்லை. பதிலாக, இவர்கள் தனித்தனிக் குழுக்களாக இயங்கினார்கள். இவ்வாறு தனித்தனிக் குழுக்களின் தொகுப்பாக அமைந்திருந்த, மாணவர் பேரவை வன்முறை அரசியலின் கருவூலமாக விளங்கியது. சட்ட வரம்பிற்குட்பட்ட போராட்ட முறைகள் பயனற்றுப் போயிருந்த நிலையில், சட்ட வரம்பை மீற வேண்டிய போராட்ட முறையின் அவசியமான-தொரு வன்முறைப் போராட்ட வடிவத்தை தோற்றுவித்தது. 1972இல் சிறிலங்காவின் குடியரசு தின பிரகடனத்திற்கு எதிராக, மாணவர் பேரவையில் இயங்கிய இளைஞர்கள், அரச வாகனங்களை எரித்தல், சிறிலங்கா அரசுடன் இணைந்திருந்த தமிழ் அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு குண்டு வீசுதல் . . . போன்ற வன்முறை நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள். இவ்வாறு நமது தேசிய இயக்கத்தில் வன்முறை போராட்டமானது, அமைப்பு வடிவில் முகிழ்ந்தது. இன்னும் சில வருடங்களில், நமது தேசிய இயக்கத்தை மாபெரும் எழுச்சியுடன், ஆயுதப் போராட்ட வடிவத்தில் முன்னெடுத்து செல்லவிருக்கின்ற அமைப்புக்களின் மூல ஊற்றாகவும், விளைநிலமாகவும் மாணவர் பேரவை விளங்கியது.

தமிழரசுக் கட்சியில் இணைந்திருந்த இளைஞர் அணியும் தலைமறைவு அரசியலை முன்னெடுத்த மாணவர் பேரவையும் யாழ் வாலிபர் கொங்கிரஸ் போன்றே பெரிதும் யாழ்ப்பாணத்திற்கு மையப்பட்டிருந்தமை ஒரு புரிந்து கொள்ளத்தக்க கூடிய நிகழ்வாகவே அமைந்திருந்தது. நமது மக்களின் அரசியல் வரலாற்றில் யாழ்ப்பாணமானது எப்போதும் அரசியல் கொதிகளமாக விளங்கி வந்திருந்தது. நமது மக்களில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பகுதியினர் ஒப்பீட்டளவில் சிறிய நிலப்பரப்பில் திரண்டிருந்ததாலும் கல்வி, அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகம், நிர்வாகம் போன்றவற்றில் நுழையக்கூடிய வாய்ப்புக்களை அதிகளவு பெற்றிருந்ததாலும் அசைவியக்கமும் தீவிரத் தன்மையும் கொண்ட பிரிவினர் அதிகளவிலும் விரைவாகவும் உருவாகக் கூடிய சாத்தியம் யாழ்ப்பாணத்தில் எப்போதும் நிலவியது. இதனால் எந்த ஒரு அரசியல் திருப்பத்தினாலும் உடனடியாகவும் நேரடியாகவும் பாதிக்கக்கூடிய பிரிவினரின் திரட்சியை யாழ்ப்பாணம் எப்போதும் கொண்டிருந்தது. எனவே தமிழரசுக் கட்சியில் ஒரு அங்கமாக இருந்த இளைஞர் அணியும் சுயாதீனமாக இயங்கிய மாணவர் பேரவையும் யாழ்ப்பாணத்திலே கருக்கொண்டு, வளர்ந்தன என்பது புரிந்து கொள்ளத்தக்க அரசியல் வெளிப்பாடுகளாக அமைந்திருந்தன

தமிழரசுக் கட்சி இளைஞர் அணியும் மாணவர் பேரவையும் பெரிதும் யாழ்ப்பாணத்தில் மையப்பட்டிருந்த போதிலும் அவர்களது அரசியல் பாதைகள் முழுத் தமிழர்களினதும் உணர்வைப் பிரதிபலிப்பதையும் சாரப்படுத்துவதையும் நோக்கி குவிந்திருந்தன. நமது மக்களின் அரசியல் இயக்கம் குறித்தும் தாம் எத்தகைய பாதையைப் பின்பற்றுவது என்பது குறித்தும் இன்னமும் இவர்களிடையே தெளிவான கருத்துக்கள் உருத்திரளாத போதும் தமது சிந்தனையில் நமது மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பரந்த வீச்சை இவர்கள் உருவாக்கி வந்ததார்கள். இவ்வாறு படித்த இளைஞர் பிரிவினர் நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் பலமடைந்து வந்த நிலையில் அவர்களின் முற்றான தலைமையை சாத்தியமாக்கிய நிகழ்வுகள் புறத்தே இடம்பெறலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.

# ஈழத்தமிழர் தேசிய இயக்கத்தில் ஆயுதப் போராட்ட வடிவம்

## ஆயுதப் போராட்ட வடிவத்தின் தோற்றம்

1970 இல் சிறிலங்காவில் SLFP தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்குத் தெரிவு செய்யப்பட்டது. அது தனது முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக, பல்கலைக் கழக அனுமதியில் தரப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தியது. கூடவே, தான் பெற்றிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் இலங்கையை அரசியல் யாப்பு ரீதியாகவே ஒரு பௌத்த சிங்கள நாடாக அது மாற்றியது. இவையிரண்டும் நமது மக்களின் அரசியல் வாழ்வில் அடிப்படைத் திருப்பத்தை ஏற்படுத்திய முக்கிய நிகழ்வுகளாக அமைந்தன.

தரப்படுத்தல் முறையானது நமது மாணவர்களின், குறிப்பாக யாழ் மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதிக்கான வாய்ப்பை பெருமளவில் பறித்துவிட்டது. குறிப்பாக, நமது மக்களிடையே மிக அதிகளவில் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு வந்த யாழ்ப்பாண மத்தியதர வர்க்கப் பிரிவினர் இத்திட்டத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். இவர்களைப் பொறுத்த வரையில் கல்வி என்பது பொருளாயத மூலங்களில் ஒன்றாக, பொருளாதார அடிப்படைகளில் ஒன்றாக வாழ்வின் இலக்கை நிர்ணயிப்பதாக அமைந்திருந்தது. கல்வியின் மூலம், அதனூடான அரசாங்க உத்தியோகத்தின் மூலம் தமது பொருளாதார நிலையை உறுதிப்படுத்த இவர்களால் முடிந்தது. பெருவீதத் தொழில்துறையும் தனியார் நிறுவனங்களும் அதிக வளர்ச்சியைப் பெற்றிராத சமூகத்தில் அரசாங்க உத்தியோகம் என்பது பொருளாதார ஊற்றுமூலங்களின் ஒன்றாக அமைகின்றது. இத்தகைய அரசாங்க உத்தியோகங்களில் நுழைவதும் உயர்பதவிகளை அடைவதும் பெரிதும் ஒருவர் பெறுகின்ற முறைசார் கல்வியின் அளவில் பெரிதும் தங்கியிருக்கின்றது. எந்தளவுக்கு ஒருவர் முறைசார் கல்வியில் உயர்ந்த நிலையை அடைகின்றாரோ அந்தளவுக்கு அவர் அரசாங்க உத்தியோகம் பெறுவதும் பதவியுயர்வை அடைவதும் உறுதிப்படுகின்றது. **அதேவேளை கல்வி என்பது ஒருவரது (மற்றும் அவரது குடும்பத்தின்) சமூக அந்தஸ்து பேணப்படுவதற்கும் உயர்வதற்கும் காரணமாகின்றது. அதிகாரப்படி நிலையும் மீறமுடியாத சாதிய ஒழுங்கும் நிலவுகின்ற ஒரு சமூக அமைப்பில் கல்வி என்பது ஒருவரது சமூக நிலையை உறுதியாகப் பேண உதவுகின்றது. கூடவே, இதன் மூலம் கிடைக்கின்ற பொருளாதார உறுதிப்பாடு மற்றும் சமூக அந்தஸ்தின் விளைவாக கல்வியானது தலைமுறையாக்கம் செய்யப்படக் கூடியதாக, தனது சந்ததிகளுக்கு தொடர்ச்சியாக கையளிக்கக் கூடியதாக மாறுகின்றது. இவ்வாறு இத்தகைய சமூகங்களில் கல்வி என்பது ஒருவகை சொத்து வடிவமாகவும் அமைகின்றது.**

இவ்வகையில் நமது மக்களை குறிப்பாக, யாழ்ப்பாணத் தமிழர்களைப் பொறுத்தவரை, கல்வி என்பது ஒரு தனிநபரினதும் அவரது குடும்பத்தினரதும் சமூக இருப்பைத் தீர்மானிக்கின்ற காரணிகளில் ஒன்றாக மாறியிருந்தது. யாழ்பாணமானது ஒப்பீட்டளவில் சிறிய நிலப்பரப்பாக இருந்ததாலும் அதன் உற்பத்தி நிலங்கள் அனைத்தும் ஏற்கனவே ஆதிக்கப் பிரிவினருக்குச் சொந்தமாக இருந்ததாலும், அல்லது நிலம் சார்ந்து புதிய உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு மிகவும் எல்லைப்பட்டதாக புதிய உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்து வந்திருக்கின்றது. இந்த நிலை, புதிதாக சமூக வாழ்விற்குள் காலடி வைக்கின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, ஒரு நபரினதும், அவரது குடும்பத்தினதும் பொருளாதாரத்திற்கான அடிப்படையாக கல்வியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகின்ற போக்கை மேலும் வலுப்படுத்தியது. ஒருவரது கல்வி வளர்ச்சியில் அவரது திறமை ஆர்வம் என்பது மட்டுமல்ல அவரது குடும்பத்தின் அக்கறை அர்ப்பணிப்பு ஒறுத்தல் ஆகிய அனைத்தும் தமது தடங்களை உறுதியாகப் பதித்திருந்தன. இந்நிலையில் தரப்படுத்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதானது யாழ்ப்பாண மத்தியதரப் பிரிவைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களின் பொருளாதார நலன்களிலும் சமூக இருப்பிலும் நேரடியான பாதிப்பை ஏற்படுத்தியதாக அமைந்தது. அவர்களது வாழ்வின் இருப்பின் வேரையையே அது அசைத்துவிட்டது. ஏற்கனவே மொழிச்சட்டத்தின் மூலமாக தமது பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட அனுபவத்தைக் கொண்டிருந்த யாழ்ப்பாண படித்த மத்தியதரப் பிரிவினர் மத்தியில், இப்போது அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறை ஆவேச உணர்வுகளை எழுப்பின. இந்த ஆவேசமானது தீவிரப் போராட்டங்களாக வெடித்துக் கிளம்பியது.

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடாக மாற்றப்பட்டதானது, நமது மக்கள் மத்தியில் பெரும் உணர்வெழுச்சிகளை தோற்றுவித்தன. அரசியல் யாப்பு ரீதியாகவே தாம் அடக்கப்படுகின்ற இனமாக மாற்றப்பட்டு விட்டோம் என்ற உணர்வு நமது மக்களை பலமாகத் தாக்கியது. தமது நலன்களையும் உரிமைகளையும் பேணவேண்டிய நிலையோடு, இப்போது இந்த அரசியல் யாப்பு மாற்றத்தின் காரணமாக, நமது சமூக இருப்பையே உறுதிப்படுத்த வேண்டிய முதன்மை அவசியம் நமது மக்களுக்கு ஏற்பட்டது. நிலவும் அரசுக்குள் பிரஜைகள் என்ற நிலை தமக்கு மறுக்கப்பட்டுள்ளதை திட்டவட்டமாக உணர்ந்து கொண்டார்கள். தமக்கு முன்னே நிட்சயமற்றதும் தாம் முற்றாக ஆக்கிரமிப்படக் கூடியதுமான எதிர்காலம் உருவாகி வருவதை நமது மக்கள் அடையாளம் கண்டார்கள். இவை அனைத்தும் நமது மக்கள் மத்தியில், புதிய போராட்ட முறைகளின் அவசியத்தை வலியுறுத்தியதோடு, தமக்கென ஒரு தனியான நாடு அவசியம் என்ற கருத்து திடமாக கருக்கொண்டு வளர்வதற்கும் காரணமாகியது.

இவ்வாறு புறத்தேயும், எமது மக்களின் அக உணர்வுகளிலும் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் வெகுஜன போராட்ட வடிவத்திலும், ஆங்காங்கு இடம்பெற்ற வன்முறை போராட்ட வடிவிலும் வெளிப்பட்டன. எனினும் இத்தகைய இப்போராட்டங்களின் உட்பொருளை, அது பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஏற்படுத்திய பாதிப்புக்களை சிங்கள அரசாக மாறிவிட்ட சிறிலங்கா அரசு புரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. மாறாக, தனது ஆயுதப் படைகளைக் கொண்டு இப்போராட்டங்களை அடக்க முற்பட்டது. சிறிலங்கா அரசின் மூர்க்கத்தனமானது நமது மக்களின் நலன்களையும் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு புதிய போராட்ட வழிமுறைகள் அவசியம் என்பதை மேலும் வலுவாகவும் மேலும் தெளிவாகவும் உணர்த்தின. நமது மக்கள் முன்னெடுத்த வெகுஜனப் போராட்டங்களுக்கான சிறிலங்கா அரசின் பதில் வன்முறை இயந்திரத்தின் வடிவில் வெளிப்பட்டதால் அதன் எதிர்வினையாக நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் வன்முறைப் போராட்டமானது உறுதியாக வேர்கொள்ள ஆரம்பித்தது.

1971 இல் சிறிலங்கா அரசுக்கு எதிராக சிங்கள இளைஞர்கள் முன்னெடுத்த ஆயுதக் கிளர்ச்சியானது நமது இளைஞர்களின் முன்னே இன்னமும் சூடு ஆறாத ஆகர்ஷிப்புக்குரிய முன்னுதாரணமாகக் காட்சியளித்தது. இந்த ஆயுதக் கிளர்ச்சியின் தோல்வி அல்ல, மாறாக அதன் எழுச்சிமிக்க வெளிப்பாடே நமது இளைஞர்களில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. மாணவர் பேரவையில் இணைந்திருந்த இளைஞர்கள் தனித்தனிக் குழுக்களாக வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கின்ற போதிலும், இப்போது சிவகுமாரன் தலைமையிலான குழு ஒரு போராட்ட வடிவம் என்ற அர்த்தத்தில் ஆயுதப் போராட்டத்திற்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டது. 1974 இல் தமிழராய்ச்சி மாநாட்டின் போது சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்ட தாக்குதல்கள் ஆயுதப் போராட்ட வடிவமானது நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் பிரதான போராட்ட வடிவமாக மாறுவதை உந்தித்தள்ளின. சிறிய அளவில் உருவாகி பிரதான போராட்ட வடிவமாக வளர்ச்சியடைந்த ஆயுதப்போராட்டத்துடன் இணைந்ததாக நமது மக்களின் அரசியல் இயக்கமானது வரலாற்றின் பக்கங்களில் மங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களில் குறிப்பிடப்படப் போகின்ற மாபெரும் தேசிய இயக்கமாக எழுச்சி பெற்றது.

## அரசியல் சட்ட வரம்பிற்குள் முன்னெடுக்கப்பட்ட ஈழத்தமிழர் அரசியல் இயக்கத்தின் மாற்றுப் போக்குகள்

1830 களிலிருந்து 1970 வரையிலான காலகட்டத்தில் நமது மக்களின் அரசியல் இயக்கத்திலும் அதன் தலைமையின் பண்புகளிலும் ஒரு தெளிவான வளர்ச்சிப் போக்கை அடையாளம் காணமுடியும்.

1830 களிலிருந்து 1940 கள் வரை நமது மக்களின் அரசியல் இயக்கமானது ஆதிக்கப் பிரிவினரின் அரசியல் நலன்களை உத்தரவாதப்படுத்துகின்ற இயக்கமாகவும் கொழும்பில் தம்மை நிலைநிறுத்தியிருந்த தமிழ் மேட்டுக் குடிப் பிரிவினரின் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற இயக்கமாகவும் அமைந்திருந்தது. சொந்த மண்ணிலிருந்தும் மக்களிடமிருந்தும் தொடர்பு அற்றிருந்த ஒரு சில குடும்பங்களைச் சேர்ந்த இந்த தலைமையின் அரசியல் செயற்பாடுகள் நமது மக்களின் நலன்களை இலக்காகக் கொள்வதிலிருந்து மிகவும் தூர விலகியிருந்தது. ஆங்கிலேயர், அறிமுகப்படுத்திய அரசு, நிர்வாக முறைமைகளிலும், சட்ட முறைமையிலும் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதே இத்தலைமையின் பிரதான அரசியல் இலக்காக அமைந்தது. இவர்கள் ஆங்கிலேய ஆட்சியாளர்களுடனும் சிங்கள ஆதிக்கப் பிரிவினர்களுடனும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிந்தார்கள். எனினும், 1920களிலிருந்து இப்போக்கில் ஒரு திருப்பம் ஏற்படுவதைக் காணலாம். சிங்கள அரசியல் தலைவர்களின் இனவாதப் போக்குகளும் அரசியல் துரோகங்களும் தமிழ் மக்களுக்கு என ஒரு தனியான அரசியல் இயக்கமாக தமிழர் மகாஜன சபையை உருவாக்குகின்ற நிலைக்கு இட்டுச் சென்றது.

1940 களிலிருந்து 1950கள் வரை நமது மக்களின் அரசியல் இயக்கமானது இம்மக்களின் அரசியல் நலன்களின் சாரமாக அமைந்திருந்த கோரிக்கைகளை முன்னெடுத்த தேசிய இயக்கமாக மாற்றமடைந்திருந்தது. எனினும், அதன் தலைமையானது பெரிதும் கொழும்பில் தன்னை நிலைநிறுத்தியிருந்ததாகவும் சமூக ஆதிக்கப் பிரிவினரின் நலன்களை காக்க முயற்சிப்பதாகவும் சமரசப் போக்குக் கொண்டதாகவும் விளங்கியது. கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் ஆதிக்கப் பிரிவினரின் நலன்களை அரசியல் தளத்தில் பிரதிபலித்த இத்தலைமையிடம், சாதிய, வர்க்க உணர்வும் யாழ் மையவாதமும் ஆழப்பதிந்திருந்தன. இதனால் வன்னி மற்றும் கிழக்கைச் சேர்ந்த நமது மக்களுடன் மட்டுமல்ல, அவர்களின் அரசியல் பிரதிநிதிகளுடனும் தன்னை இணைத்துக் கொள்ளாத போக்கை இத்தலைமை வெளிப்படுத்தியது. மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமையை பறிக்கின்ற சட்டத்தை ஆதரித்ததின் மூலமாகவும் கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு துணைபோனதன் மூலமாகவும் தனது மக்கள் விரோதப் பண்புகளை அது தெளிவாக வெளிப்படுத்தியிருந்தது.

1950 களிலிருந்து 1970 வரை தமிழ் தேசிய இயக்கமானது நமது மக்களின் அரசியல் நலன்களை ஒன்றுதிரட்டி அவற்றை வென்றெடுப்பதற்காக தொடரான வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்த அரசியல் இயக்கமாக வளர்ச்சியடைந்தது. இந்த அரசியல் இயக்கத்தை முன்னெடுத்த தலைமை சொந்த மண்ணுடனும் மக்களுடனும் தன்னைப் பிணைத்திருந்தது. தொடக்க காலங்களில், இத்தலைமை போர்க்குணாம்சம் கொண்டதாகவும் மக்களுடன் இணைந்து தாமே நேரடியாக போராட்டங்களில் பங்கேற்பதாகவும் விளங்கியது. எனினும் இத்தலைமையின் ஆதிக்க நிலையிலிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளிடம் உள்ளுணர்ந்திருந்த சாதிய, வர்க்க ஆதிக்க பண்பும் சமரசப் போக்குகளும் யாழ் மையவாதமும் நமது மக்களின் தேசிய இயக்கத்தை முழு வீச்சுடனும் அனைத்து மக்களும் தழுவியதாகவும் தொடர்ச்சியான போர்க்குணாம்சத்துடன் முன்னெடுக்க முடியாது தடுத்தன.

1970களின் தொடக்கத்தில் மரபுவழித் தலைமைகள் தமக்கிடையே ஒன்றிணைந்து, அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்டார்கள். 1970 களின் ஆரம்பத்தில், SLFP தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் இலங்கை அரசியல் யாப்பை திருத்துவதற்கு தீர்மானித்தது. அதுவரை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றப்பட்டு வந்த அரசியல் யாப்பில், இலங்கையிலுள்ள ஏனைய சமூகங்களின் அரசியல் உரிமைகளை பாதுகாத்தல் என்ற அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 29வது ஷரத்தை அகற்றியதோடு, இலங்கையை பௌத்த-சிங்கள நாடாக அடையாளப்படுத்திய புதிய அரசியல் யாப்பையும் இந்த அரசாங்கம் உருவாக்கியது. அரசியல் யாப்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆதிக்க நடவடிக்கைகளுக்கு எதிராக, உறுதியுடன் போராட வேண்டிய அவசியத்தை நமது அரசியல் தலைமைகள் எதிர்கொண்டன. நமது தேசத்தின் அனைத்துப் பிரிவினரையும் நேரடியாகப் பாதிக்கக் கூடிய, இந்த அரசியல் யாப்பு மாற்றத்திற்கு எதிராக, அனேகமாக அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்தார்கள். இவர்கள் அனைவரும் ஒரு அரசியல் அமைப்பின் கீழ் இணைந்து, செயற்படக் கூடிய விதத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற புதிய அரசியல் கட்சி உருவாக்கப்பட்டது. சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்பு ரீதியான ஆதிக்கத்திற்கு எதிராக, ஒரு பரந்த அரசியல் எதிர்ப்பு தளத்தை உருவாக்குவதற்கான இந்த முயற்சி, அதன் ஆரம்ப நிலையில், நமது தேசிய இயக்கத்தில் புத்துணர்ச்சியும் நம்பிக்கையையும் ஊட்டுகின்ற நிகழ்வாக இருந்தது. நமது தேசத்தின் அனைத்துப் பிரிவினராலும் மரபுவழித் தலைமைகள் மத்தியில் இடம்பெற்ற இந்த அரசியல் ஐக்கியம் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது. எழுச்சி பெற்று வந்த மாணவர்களும் இளைஞர்களும் கூட, இந்த நிகழ்வினால் கவரப்பட்டார்கள். புதிதாக நிறுவப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒரு அங்கமாக இணைந்திருந்த இளைஞர் அணியினர் மட்டுமன்றி, சுயாதீனமாகவும், வன்முறை சார்ந்ததுமான அரசியலை முன்னெடுக்க எத்தனித்த மாணவர் பேரவை போன்ற அமைப்புக்களைச் சேர்ந்த இளைஞர்களும் மற்றும் ஆயுதக் குழுக்களும் கூட, மரபுவழித் தலைமைகளுக்கிடையிலான அரசியல் இணைவினால் நம்பிக்கையூட்டப்பட்டார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது, நமது தேசிய இயக்கத்தின் மிக முக்கியமான திருப்புமுனைக்கு ஒரு காரணமாக அமைந்தது. 1976ம் ஆண்டு வட்டுக் கோட்டையில் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மகாநாட்டில், நமது மக்களுக்கென தனியான அரசை ஏற்படுவதற்காகப் போராடுவது என்ற வரலாற்று முக்கியத்துமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. **1977 பொதுத்தேர்தல், நமது மக்களுக்கென தனியான அரசை அமைத்ததல் என்ற கோரிக்கை மீதான சர்வசன வாக்கெடுப்பாக பயன்படுத்துவது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானம் மேற்கொண்டது. இதன் மூலம், நமது தேசத்திற்கு என தனியான அரசை அமைத்தல் என்ற கோரிக்கைக்கு நமது மக்களின் உணர்ச்சியில் ஆதரவை திரட்டுவதற்கும் இக்கோரிக்கை சட்டபூர்வ அங்கீகாரம் பெறுவதற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை வழிவகுத்தது.** எனினும் இக்கூட்டுத் தலைமைக்குள் உறைந்து விட்டிருந்த சமரசப் போக்குகளும், ஆதிக்கப் பிரிவினரின் நலன்களையே இறுதி இலக்காகக் கொள்வதும், இவற்றோடு இத்தலைமையிடமிருந்து முற்றாகவே அகன்றுவிட்ட போர்க்குணாம்சமும் நமது மக்களுக்கென தனியான அரசை அமைத்தல் என்ற மகத்தான இலக்கை வென்று கொள்வதற்காக உறுதியுடன் செயற்பட முடியாமல் இக்கட்சியைத் தடுத்தன.

இவ்வாறு நமது மக்களின் ஒன்றரை நூற்றாண்டு கால அரசியல் வரலாற்றில் நமது தலைமையானது கொழும்பில் இருந்து தமிழ் மண்ணை நோக்கியும் அதன் அரசியல் இலக்குகள் சமூக ஆதிக்கப் பிரிவினரின் நலன்களில் இருந்து வெகுஜன நலன்களை நோக்கியும் படிப்படியே நகர்ந்து வந்திருப்பதை அவதானிக்கலாம். இந்தப் பரிணாம வளர்ச்சியானது அந்தத் தலைமைகளின் விருப்பத்தினால் இடம்பெற்றதல்ல. மாறாக, நமது மக்களின் சமூக, அரசியல், பொருளாதார கலாச்சார நிலைமைகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கின்ற மாற்றங்களும், நமது அரசியல் இயக்கத்தில் தாக்கம் செலுத்தி வந்திருக்கின்ற அக, புற காரணிகளும் இந்த வளர்ச்சிப் போக்கின் உந்துவிசைகளாக அமைந்திருக்கின்றன. இவற்றை பின்வருமாறு சாரப்படுத்தலாம். நமது மக்களிடையே புதிதாக உருவாகி வந்த பிரிவினர்களினதும், சமூக சக்திகளினதும் நலன்களுக்கும், மரபுவழித் தலைமைகளின் நலன்களுக்கும் இடையே நிலவி வந்திருக்கின்ற முரண்பாடுகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்களும் தொடர்ச்சியாகவும் வன்மமாகவும் அதிகரித்து வந்த சிறிலங்கா அரசின் அடக்குமுறைகளும், ஆக்கிரமிப்பும் இவற்றின் விளைவாக நமது மக்களில் பல்வேறு பிரிவினர்களிடையே ஆழமாகி வந்த அரசியல் விழிப்புணர்வும் கோரிக்கைகளும், இவற்றினுடாக இப்பிரிவினர்கள் நமது தேசிய இயக்கத்தில் நிகழ்த்தி வந்துள்ள தாக்கங்கள் . . . இவை அனைத்தும் நமது அரசியல் இயக்கத்திலும் அதில் செயற்பட்டு வந்திருக்கின்ற தலைமைகளின் பண்புகளிலும் உறுதியான வளர்ச்சிப் போக்கு நிகழ்வதற்கு காரணமாகியுள்ளன.

இந்த 150 வருடகால அரசியல் இயக்கமானது, ஒரு சிறுபிரிவினரின் ஆதிக்க நலன்களை பேணுவதிலிருந்து, படிப்படியே பரந்த, தேசம் தழுவிய நலன்களை உள்ளடக்குவதாக மாற்றமடைந்து வந்திருக்கின்றது:

1920 களில் நமது மக்களுக்கென தனியான அரசியல் அமைப்பாக தமிழர் மகாஜன சபை உருவாக்கப்பட்டதன் மூலமாக, நமது மக்களிடையே தனியான தேசிய இயக்கம் கருக்கொண்டது. 1940களில் இது, சட்டவாத தேசிய இயக்கமாக மாற்றமடைந்தது. 1950களில் இருந்து நமது மக்களின் வெகுஜன போராட்டங்களினுடாக முன்னெடுக்கப்பட்ட சட்ட எதிர்ப்பு தேசிய இயக்கமாக இது வளர்ச்சியடைந்தது. 1970களில், ஒரு தனியான அரசை நிறுவுவதை இலக்காகக் கொண்டு, நமது மக்களின் மகத்தான எழுச்சியுடன் இணைந்த மாபெரும் தேசிய இயக்கமாக இது பரிணாமம் அடைந்தது. இவ்வாறு நமது தேசிய இயக்கமானது, அரசியல் தலைமைகளினால் முன்வைக்கப்பட்ட சட்டவாதங்கள், அரசியல் தலைவர்களுக்கிடையிலான ஒப்பந்தங்கள் என்ற போராட்ட வடிவில் ஆரம்பித்து, நமது மக்களின் நேரடிப் பங்கேற்புடன் கூடிய வெகுஜனப் போராட்டங்கள் என்ற வடிவத்தினுடாக நமது மக்களின் எழுச்சியுடன் இரண்டறக் கலந்து ஆயுதப் போராட்ட வடிவமாக மாற்றமடைந்தது.

## ஈழத்தமிழரின் தேசிய எழுச்சியும் ஆயுதப் போராட்டமும்

1970 களில் ஆரம்பத்தில் இருந்து நமது மக்களின் அநேகமாக அனைத்து மக்கள் பிரிவினர் மத்தியிலும் தனிநாடு என்ற உணர்வு உருப்பெற்று வளர்ந்து வந்தது. சுதந்திரத்தின் பின்னர் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் குறிப்பாக, கிழக்கு மற்றும் வண்ணியில் வாழ்ந்த விவசாயிகளின் உற்பத்தி முயற்சிகளும் கால்நடை வளர்ப்பும் கடுமையாகப் பாதிக்கப்பட்டதன் பலர் தமது வாழ்விடங்களிலிருந்தும் வெளியேற்றப்பட்டார்கள் அல்லது வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதையொத்த நிலைமைகள் அங்கு வாழ்ந்த தமிழ் மீனவர்களுக்கும் ஏற்பட்டன. குடியேற்றப்பட்ட சிங்கள மீனவர்களினால் இவர்களின் கடல்சார் தொழில்கள் பல இடங்களில் முற்றாகவே பாதிக்கப்பட்டன. பலர் தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். 1970 களின் பிற்பகுதியில் ஐ.தே.க. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீவிர சிங்களக் குடியேற்றத் திட்டம் இத்தகைய நிலைமையை மேலும் ஆழப்படுத்தியது.

படித்த அரசாங்க உத்தியோகங்களில் இணைந்து கொண்ட மற்றும் தம்மை இணைத்துக் கொள்ள முயன்ற பிரிவினர் 1956 இல் மொழிக் கொள்கையாலும் பின்னர் 1972 இல் தரப்படுத்தல் முறையாலும் கடும் பாதிப்புக்கு உள்ளானர்கள். ஏற்கனவே தமிழரசுக் கட்சியில் ஒரு சக்தியாக மாறியிருந்த பிரிவினர் 1970 களின் நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிரப் பிரிவாக மாறினார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வெளியே படித்த பிரிவினரும் மாணவர்களும் சுயாதீனமாக ஒன்றிணைந்து மாணவர் பேரவை போன்ற தலைமறைவு அமைப்புக்களை உருவாக்கி வன்முறைப் போராட்ட வழியில் செயற்பட ஆரம்பித்தார்கள். 1970களின் பின் அரைப்பகுதியில், தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்திருந்த இளைஞர் அணியின் ஒரு பிரிவின், அதிலிருந்து விலகி □ஈழ விடுதலை இயக்கம்□ என்ற தலைமறைவு இயக்கத்தை உருவாக்கி செயற்பட்டார்கள்.

சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினரைப் பொறுத்தவரை 1960 களின் பிற்பகுதியில் இவர்களிடையே தோன்றிய எழுச்சியானது 1970 களில் ஓய்ந்திருந்தது. தேசிய அரசியலில் தீவிரம் பெற்று வந்த புதிய தலைமுறையின் தீண்டாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிப்பு நடவடிக்கைகளும் ஆலயப் பிரவேசம் போன்ற சாதிய இழிநிலைக்கு எதிரான போராட்டங்களும் அவர்களின் முற்போக்கான கருத்துக்களும் இந்த அடக்கப்பட்ட பிரிவினரை கவரக்கூடியவனவாக இருந்தன. சிறிலங்கா அரசின் வரிவிதிப்பு முறையும் பொலிசாரின் கெடுபிடிகளும் இவர்களின் ஒரு பகுதியினரின் தொழில்களான, சீவல் தொழில், கசிப்பு உற்பத்தி, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பொருட்களைக் கடத்துதல் போன்றவற்றை பாதித்து வந்தன. எனவே அடக்கப்படுகின்ற பிரிவினர்களும் நமது தேசிய இயக்கத்துடன் இணைந்து கொள்ளக் கூடிய நிலையில் இருந்தார்கள்.

நமது பெண்கள் அரசியல் உணர்ச்சிமிக்க நிலையில் இருந்தார்கள். ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்தே குறிப்பாக யாழ்ப்பாணப் பெண்கள் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள். சுதந்திரத்தின் பின்னர் இவர்களிடையே கல்வி கற்கும் வீதம் வேகமாக அதிகரித்தது. குறிப்பாக, வடக்கு வன்னி மற்றும் கிழக்கின் நகரப்பகுதிகளில் ஆண்களுக்கு இணையாக பெண்களும் கல்வி கற்பவர்களாகவும் அரசாங்க உத்தியோகங்களில் ஈடுபடக் கூடியவர்களாவும் இருந்தார்கள். இவ்வகையில் சிறிலங்கா அரசின் மொழிக்கொள்கைகளும் தரப்படுத்தலும் ஆண்களைப் போன்றே பெண்களையும் சம அளவில் பாதித்தது. இவற்றோடு நமது பெண்கள் சொத்துரிமை பெற்றவர்களாகவும் தமது வாழ்க்கைக் காலம் முழுவதும் தமது பெற்றோருடனும் தாய்வழிக் குடும்பத்துடனும் வாழக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்களாகவும் இருந்ததால் இவர்களிடையே ஒப்பீட்டளவில் உயர்வான சுதந்திர உணர்வே நிலவி வந்திருக்கின்றது. இப்போது சிறிலங்கா அரசினால், தமது கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் பாதிக்கப்பட்டதோடு, சிறிலங்கா அரசின் அடக்குமுறைகளினதும் ஆக்கிரமிப்பினதும் விளைவுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்கொள்பவர்களாகவும் இவர்கள் இருந்தார்கள். எனவே, தமது நலன்களோடு, நமது தேசத்தின் நலன்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு நமது பெண்கள் மத்தியில் வேரூன்றி வந்தன.

சிங்கள இனவாதிகளால் முதலில் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்ற பிரிவினராக, தமிழ் வர்த்தகர்கள் இருந்தார்கள். 1958இல் இருந்து அதிகரித்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த இன அழிப்பு நடவடிக்கையினால், சிறிலங்காவில் தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வந்த தமிழ் வர்த்தகர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் போது, தெற்கில் காலி, கொழும்பு போன்ற துறைமுக நகரங்களில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்திருக்கின்ற தமிழ் வர்த்தகர்கள், இத்தகைய இனவன்முறைகளின் முதல் இலக்குகளாக ஆக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். தெற்கின் சில பகுதிகளிலிருந்து இவர்கள் முற்றாகவே வெளியேற்றப்பட்டார்கள். இவ்வகையில் நமது தேசிய இயக்கத்தின் தீவிரமாக பங்கு கொள்ளக் கூடிய பிரிவினர்களில் ஒன்றாக வர்த்தகப் பிரிவினர் மாறியிருந்தார்கள்.

இதுவரை நமது மக்களின் ஒன்றிணைந்த அரசியல் ஐக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்தி வந்திக்கின்ற முக்கிய காரணிகளில் ஒன்றாக நமது மக்கள் மத்தியில் நிலவிய பிரதேச வேறுபாடுகள் அமைந்திருந்தன. சுதந்திரத்திற்கு முன்புவரை நமது மக்கள் மூன்று வெவ்வேறு பெரும் பிரதேசங்களில் தமக்கேயரிய தனித்துவமான பண்புகளுடன் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதை முன்னர் பார்த்திருந்தோம். மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் என்ற பெரும்பிரிவுகளின் அடிப்படையில் வாழ்ந்த தமிழ் மக்களிடையே நெருக்கமான குடும்ப உறவுகளோ சமூகத் தொடர்புகளோ ஏற்பட்டிராத நிலையில் இவர்களின் சமூக இயக்கங்கள் தனித்தும் வேறுபட்டும் இருந்தன. சுதந்திரத்தின் பின்னர் இவர்களிடையே அரசாங்கத் தொழில் சார்ந்தும் கல்வி ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் தொடர்புகளும் ஊடாட்டங்களும் அதிகரித்தளவில் ஏற்பட்டன. இதன் விளைவாக வேறுபட்ட பிரதேசங்களைச் சேர்ந்த நமது மக்களிடையே முரண்பாடுகள் உருவாகி வெளிப்படத் தொடங்கின. ஒவ்வொரு பிரதேச மக்களிடையேயும் வெளிப்பட்ட தனித்துவங்கள் புரிந்துகொள்ளப்படாமல் தம்மிலிருந்து வேறுபட்டிருக்கின்றார் என்ற காரணத்திற்காகவே அவர்களை தாழ்வாக மதிக்கின்ற போக்கு நமது மக்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகத் தொடங்கியது. குறிப்பாக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரிவினர் வர்த்தகத்திலும் அரசாங்க உத்தயோகங்களிலும் அதிகளவில் ஈடுபடக்கூடியவர்களாக இருந்ததால் இவர்களே வெளியிடங்களுக்கு செல்லக் கூடியவர்களாகவும் செல்ல வேண்டியவர்களாகவும் இருந்தார்கள். ஏற்கனவே கல்வியிலும் வர்த்தகத்திலும் இவர்கள் உயர்ந்த நிலையில் இருந்ததாலும் விவசாய உற்பத்தியில் திட்டமிட்ட ரீதியில் கடினமாக உழைக்கக் கூடியவர்களாக இருந்ததாலும் தமது இத்தகைய பண்புகளிலிருந்து வேறுபடுகின்ற வன்னி மற்றும் கிழக்குப் பிரதேச மக்களை தாழ்வாகக் கருதுகின்ற ஆதிக்கப் போக்கும் இவர்களிடையே வெளிப்பட்டன. இதன் எதிர்வினையாக வன்னி கிழக்குத் தமிழர்களிடையே யாழ்ப்பாணத்திற்கு எதிராகவும் தமது பிரதேசம் சார்ந்தும் உணர்வுகள் தீவிரமடைந்தன. ஒரு நிலையில் யாழ் அகற்றிச் சங்கம் என்ற பெயரில் இப்பிரதேசங்களில் அமைப்புக்கள் உருவாகி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களும் எதிராக செயற்படுகின்ற அளவுக்கு இவர்களிடையே யாழ்ப்பாணத்தவருக்கு எதிரான உணர்வுகள் உக்கிரம் பெற்றிருந்தன.

இத்தகைய பிரதேச முரண்பாடுகளைக் கடந்து நமது மக்கள் அனைவரையும் ஒரே அரசியல் இயக்கத்தின் கீழ், முழுமையாக ஒன்றிணைக்கும் ஆற்றலை அன்றைய நமது தலைமைகள் கொண்டிருக்கவில்லை. நமது மக்களுடன் உள்ளார்ந்த அர்த்தத்தில் இணையாதிருந்த இத்தலைமைகளின் அரசியல் போக்குகள் மட்டுமன்றி இவர்களின் மத்தியிலும் நிலவிய பிரதேசவாதங்கள் இத்தகைய இணைப்பை சாத்தியமற்றதாக்கின. **குறிப்பாக நமது மரபுவழித் தலைமைகளில் அனேகமாக எப்போதும் (ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் தலைமையாக செயற்பட்ட கொழும்பு தமிழ் மேட்டுக்குடியின் தவிர) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே ஆதிக்க நிலையில் இருந்தார்கள். இவர்களில் அனேகமாக அனைவரிலும் யாழ்மையவாதம் இறுகப்படிந்திருந்தது. இந்த யாழ்மைய வாதமானது ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த நமது தமிழ் மக்களின் நலன்கள் உரிமைகளை மட்டுமன்றி அவர்களின் அரசியல் தலைமைத்துவத்தையும் உதாசீனப்படுத்துவதாக வெளிப்பட்டு வந்திருக்கிறது.**

இத்தகைய போக்கு தொடர்ந்து நீடித்து வந்ததானது, யாழ்ப்பாணத்திற்கு வெளியிலே உருவான தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சமத்துவமான முறையில் தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் இணைந்து செயற்படுவதற்கு தடையாக அமையக் காரணமாகியது. வந்திருக்கின்றது. இதனால் ஒரே கட்சிக்குள் இணைந்து செயற்பட்ட போதிலும் கூட, இந்த அரசியல் பிரதிநிதிகளிடையே உறுதியான அரசியல் ஐக்கியம் நிலவ முடியவில்லை. மேலும் வெவ்வேறு பிரதேங்களைச் சேர்ந்த இந்த அரசியல் பிரதிநிதிகளின் அனேகமானோர், நமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக உறுதியுடன் செயற்படுகின்றவர்களாகவோ அதற்காக இறுதி வரை போராடுகின்றவர்களாகவோ இருக்கவில்லை. எனவே, இந்த அரசியல்வாதிகளுக்கிடையிலான ஒற்றுமை என்பது தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களின் நலன்கள் சார்ந்த ஐக்கியமாக இல்லாமல் தமது நலன்களை, தமது தேர்தல் வெற்றிகளை இலக்காகக் கொண்டதாகவே பெரிதும் அமைந்திருந்தன. தமிழ் அரசியல் கட்சிகளில் பெரும் ஆதிக்கம் பெற்றிருந்த யாழ்ப்பாணத் தலைமையானது, கல்லோயத் திட்டம், சேருவிலத் தொகுதி உருவாக்கம், வெலிஓயக் குடியேற்றம் போன்ற கிழக்கு, வன்னித் தமிழர்களின் வாழ்வை நேரடியாகப் பாதித்த சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மற்றும் இனவாதத் திட்டங்கள் தொடர்பாக யாழ்ப்பாணத் தலைமை தீவிர அக்கறையற்று இருந்தது.

இவ்வாறு நமது மக்களிடையே பிரதேச ரீதியாக நிலவிய முரண்பாடுகளைக் கடந்து அவர்கள் அனைவரையும் ஒரே அரசியல் இயக்கத்திற்குள் இணைக்கக் கூடிய அரசியல் பண்பை மரபுவழித் தலைமைகள் கொண்டிராத நிலையில், அன்று வரையிலான நமது அரசியல் இயக்கமானது, நமது மக்களின் ஆழ்ந்த உயிரோட்டமான பிணைப்பின் தளத்தில் இடம்பெற முடியாத நிலையை கொண்டிருந்தது. இந்நிலை மாறி நமது மக்கள் அனைவரும் ஒரே அரசியல் இயக்கத்திற்குள் ஒரே தேசமாக இணையக்கூடிய சாத்தியம் 1970களில்தான் உருவானது. தரப்படுத்தலும் தொடர்ச்சியான மொழிரீதியான பாகுபாடுகளும் சிங்களக் குடியேற்றங்களின் வேகமான அதிகரிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் விளைவுகளும் புதிய தலைமுறையின் முற்போக்கான கருத்துக்களும் நமது மக்கள் அனைவரையும் பிரதேச வேறுபாடுகளையும் மீறி ஒன்றிணைத்தன.

**நமது மக்களை ஒரே தேசமாக வளர்த்ததில், தொடர்பூடகங்கள் முக்கிய பாத்திரம் வகித்தன. செய்திப் பத்திரிகைகள், கவிதைகள் . . . என்பன இவற்றில் பிரதான இடம் வகித்தன. ஒரே அரசியல் தலைவிதியினால் பிணைக்கப்பட்டுள்ள மக்கள் உலகில் எந்த மூலையில் வாழ்ந்த போதிலும், அவர்களை ஒரே தேசமாக உணரச்செய்வதிலும், பிணைப்பிலும் தொடர்பூடகங்கள் முதன்மைப் பாத்திரம் வகிக்கின்றன.** வெவ்வேறு பிரிவினர்களாகவும், வெவ்வேறு பிரதேசங்களிலும், பன்முகத் தன்மைகளுடனும் வாழ்கின்ற ஒரு குறிப்பிட்ட மக்கள் மீதான அடக்குமுறைகளையும், துயரங்களையும் அவர்களின் போராட்டங்களையும், வெற்றிகளையும், சாதனைகளையும் உணர்ச்சிபூர்வமாக வெளிப்படுத்துவதினுடாக, அம்மக்கள் அனைவரையும் ஒரு உணர்ச்சியினால் தொடர்பூடகங்கள் பிணைக்கின்றன. தாம் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள், தமக்கிடையே ஒத்த தன்மைகளும், பொதுவான வரலாற்றுணர்வுகளும் நிலவுகின்றன என்ற உண்மைகளோடு தம்மீதான அடக்குமுறைகளும் ஒரே மாதிரியானவை என்ற எதார்த்தத்தையும் தொடர்ச்சியாக வெளிப்படுத்துவதினூடாக, ஒரு குறிப்பிட்ட மக்கள், ஒரே தேசமாக திரள்வதற்கு, தொடர்பூடகங்கள் ஒரு முக்கிய அடிப்படையில் அமைகின்றன.

1970 களில், நமது மக்களை முன்னெப்போதையும் விட ஒரே தேசமாக இறுகப் பிணைப்பதில் "சுதந்திரன்" பத்திரிகை முக்கிய பங்கு வகித்தது. சுதந்திரன் பத்திரிகை வாசிக்காத, கேட்டறியாத தமிழர் இல்லையெனும் அளவிற்கு அது மக்களை ஈர்த்து, வலுவான தேசமாக்கியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை போர்க்குணாம்சத்தை இழந்து, சமரசப் போக்குடையதாகவும் நமது மக்களிடையே திரண்டு வந்த தேசிய எழுச்சியை முறையாக முன்னெடுத்து செல்ல முடியாததாகவும் இருந்த போது, நமது மக்கள் மத்தியில் தேசிய உணர்வையும் தேசிய வேட்கையையும் மங்காமல் ஒளியூட்டிய பணியை சுதந்திரன் பத்திரிகை மேற்கொண்டது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையிடம் ஆழமடைந்து வந்த அரசியல் பலவீனத்தை துல்லியமாக பகிரங்கப்படுத்தியதோடு. புதிய, எழுச்சிமிக்க, சமரசத் தன்மையற்ற போராட்ட முறையின் அவசியத்தையும் இப்பத்திரிகை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைக்கும், அதன் அரசியல் நடவடிக்கைகளுக்கும் வெளியே நமது மக்களை அரசியல்மயப்படுத்திய கருத்தியல் ஊடகமாக சுதந்திரன் பத்திரிகை செயற்பட்டது.

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்று மாற்றப்பட்டதன் மூலம் நமது மக்கள் சிறிலங்கா அரசில் இருந்து முற்றாக அந்நியப்படுத்தப்பட்டார்கள். தாம் தெளிவாகவே இரண்டாம் தரப் பிரஜைகளாக்கப்பட்டு விட்டோம் என்ற உணர்வு அவர்களை தனித்துவமாக ஐக்கியப்படுத்துகின்ற வலிமையான அரசியல் இழையாக மாறியது. தமக்கென சொந்த நாடு வேண்டும் என்ற கோஷத்தின் கீழ் அவர்கள் உறுதியாக ஒன்றிணைந்தனர். இவ்வாறான கொதிநிலையில்தான் 1974 இல் தமிழராய்ச்சி மாநாட்டின் போது சிறிலங்காப் படைகள் மேற்கொண்ட வன்முறைத் தாக்குதல்கள் நமது மக்கள் மத்தியில் எரியும் தீயாக விடுதலை உணர்ச்சியை பரவச் செய்தன. 1970 ம் ஆண்டில் சிறிலங்கா அரசும், சிங்களப் படைகளும், சிங்கள வன்முறையாளர்களும், நமது மக்கள் மீது பௌதீக ரீதியான அடக்குமுறைகளையும், வன்முறைகளையும் அதிகரித்த அளவில் மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள். கைது செய்தல், தாக்குதல், பொருளாதார மூலங்களை எரித்தல், இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றுதல் . . . என விரிவடைந்து வந்த வன்முறை நடவடிக்கைகளினால், நமது தேசத்தைச் சேர்ந்த அனேகமான பிரிவினர்களும் பாதிக்கப்பட்டார்கள். இத்தகைய பௌதிக ரீதியான வன்முறை நடவடிக்கைகள், நமது மக்கள் மத்தியில் விடுதலை உணர்ச்சியை மேலும் திடப்படுத்தி, ஆழப்படுத்தின.

இவ்விதம் நமது மக்களிடையே உருத்திரண்டு வந்த தேசிய எழுச்சியைத் தூண்டுவதாகவும் தமக்கு நிச்சயம் தனிநாடு கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையின் பிரகாசமான ஒளியாகவும் பங்களாதேஷ் தனிநாடாக மாறியது அமைந்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தது. தம் காலத்தில் தம் கண்ணெதிரேயே தேசிய அடக்குமுறைகளுக்கு எதிராக போராடிய பங்களாதேஷ் மக்கள் தமக்கென ஒரு தனிநாட்டை உருவாக்கியமை நமது மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே ஆர்வத்தையும் திடமான நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

இவ்வாறு 1970களின் நடுப்பகுதியில் நமது மக்களின் அனேகமாக அனைத்துப் பிரிவினரும் தனிநாடு என்ற அரசியல் இலக்கின் கீழ் ஒரே தேசமாக தமக்குள் ஒன்றிணைந்தவர்களாகவும் மாபெரும் தேசிய இயக்கத்தை முன்னெடுக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் தலைமைக்கு வெளியே இவ்விதம் தன்னெழுச்சியாகத் திரண்டு வந்த நமது மக்களின் தேசிய உணர்வையும் தேசிய எழுச்சியையும் ஒன்றிணைத்து முன்னெடுக்கக் கூடிய அரசியல் ஆளுமையையும் தகுதியையும் அந்த அரசியல் தலைமை ஏற்கவே இழந்து விட்டிருந்தது. இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்திருந்த மரபுவழித் தலைமை தனது அரசியல் வாழ்வின் அந்திமக் கட்டத்தில் நமது மக்களின் தேசிய வேட்கையாக வெளிப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து, 1977 பொதுத் தேர்தலை தனிநாட்டுக்கான சர்வசன வாக்கெடுப்பாக மாற்றியது.

1977 தேர்தலின் பின்னர் தமிழரின் மீது சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளும், இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என அறிவித்து சிங்களத் தலைமையின் முற்றான அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்திய அரசியல் யாப்பு மாற்றங்களும் ஆயுதப் போராட்டம் ஒன்றே நம் தேசத்தின் விடுதலைக்கான ஒரே வழி என்பதை தீர்க்கமாக அறிவித்தன. 1970களின் ஆரம்பத்தில் கருக்கொண்ட ஆயுதப் போராட்டம் 1970 களின் இறுதியில் உறுதியான பாதையில் வளர்ச்சியடைந்தது. இதனூடாக நமது தேசிய இயக்கமானது மரபுவழித் தலைமையிடமிருந்து புதிய தீவிர போராட்டத் தலைமைகளுக்கு கைமாறுகின்ற நிகழ்வுப் போக்கு இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை தனது அரசியல் பலவீனத்தையும், அரசியல் அரங்கிலிருந்து தான் அகற்றப்பட இருப்பதையும் தெளிவாக உணர்ந்து கொண்டது. ஒரு, இறுதி முயற்சியாக தனது முழுப்பலத்தையும் பாவித்து அரசியல் மேடைகளில் ”தம்பிமாருக்கு” எதிராக முழங்கித் தள்ளியது. எனினும், நமது தேசிய இயக்கத்தைப் பொறுத்தவரை பிரச்சார மேடைகளில் அரசியல் போராட்டம் நடாத்துகின்ற காலம் முடிவடைந்து போர்க்களத்தில் நேருக்கு நேரான யுத்தத்தில் ஈடுபடுகின்ற காலம் ஏற்கனவே தொடங்கி விட்டிருந்தது. தமிழர் கூட்டணித் தலைமையின் தொய்ந்து, சுரத்திழந்து விட்ட உபதேசங்கள் மற்றும் கோரிக்கைகளோடு அவர்களின் அரசியல் இருப்பையும் ஒதுக்கிவிட்டு புதிய ஆயுதப் போராட்டத் தலைமைகள், நமது மக்களின் தேசிய இயக்கத்தை கையகப்படுத்திக் கொண்டன. இந்தத் தலைமையைச் சூழ்ந்து நமது தேசத்தின் பெரும் பகுதியினர் அரசியலில் படிப்படியே நேரடியாகப் பங்குபற்றுகின்ற புதிய சூழல் உருவானது.

**நமது மக்களின் தேசிய இயக்கத்தின் தலைமையை புதிய பிரிவினர் வென்று கொண்டமை தற்செயலாக அல்லது எளிதாகவோ இடம்பெறவில்லை. மாறாக, பத்து வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற தீரா மோதலின் விளைவாக, ஒரு வரலாற்று அவசியமாக இது நிகழ்ந்தது.** தமிழரசுக் கட்சிக்குள்ளும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளும் அவற்றுக்கு வெளியேயும் மரபுவழித் தலைமைக்கும் புதிய தலைமுறையினருக்கும் இடையே கடுமையான முரண்பாடுகள் தோன்றி வெடித்தன. கொள்கை ரீதியாகவும் போராட்ட வடிவம் தொடர்பாகவும் இடம்பெற்று வந்த இத்தகைய மோதல்கள், தற்காலிகச் சமரசங்கள் மீண்டும் வெடிப்பு என்ற விதத்தில் பத்து வருடங்களாகத் தொடர்ந்தன. இந்தப் போராட்டத்தின் ஊடாக புதிய தலைமுறையினர் பலம் பெற்று வந்த போதிலும் அவர்களின் இறுதி வெற்றி 1970களின் கடைசிப் பகுதியில்தான் சாத்தியமாகியது. இந்த வெற்றியும் கூட அப்பிரிவினரின் பலத்தினால் மட்டும் சாத்தியமாகவில்லை. மாறாக, நமது மக்களிடையே ஓயாமல் திரண்டு வந்த தேசிய எழுச்சிதான் அவர்களின் வெற்றிக்குக்குரிய உறுதியான அடித்தளமாக அமைந்தது.

நமது தேசத்தைச் சேர்ந்த அநேகமாக அனைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினரும் தனிநாடு என்ற உணர்வினால் ஈர்க்கப்பட்டிருந்தார்கள். தனிநாடு என்ற சொல் அவர்களின் நலன்களுடன் இருப்புடன் ஆன்மாவுடன் நெருங்கிப் பிணைந்திருந்தது. அது தொட்டுணரத்தக்க பிம்பமாக, அவர்களுக்கு எதிரே அவர்களால் அடையாளம் காணக்கூடிய பொருளாக மாறியிருந்தது. தனிநாடு ஒன்றே தமது நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பையும் இருப்பையும் உறுதிப்படுத்தும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவர்களிடையே ஆழ்ந்து, பதிந்தது. இந்த உயர்ந்த தனிநாட்டை வென்றெடுக்கக் கூடிய ஆற்றல் மரபுவழித் தலைமைகளிடம் இல்லை என்பதை நமது மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். உணர்ச்சிமிக்க மேடைப் பேச்சுக்களும் வக்கீல் வாதங்களும் சமரச ஒப்பந்தங்களும் தனிநாட்டைப் பெறுவதற்குரிய வழிமுறைகள் அல்ல என்பதை நமது மக்கள் தமது சொந்த அனுபவத்தின் ஊடாக உணர்ந்திருந்தார்கள். தமது சொந்த நலன்களுக்கும் மரபுவழித் தலைமையின் நலன்களுக்கும் இடையே கடக்க முடியாத இடைவெளி இருப்பதை இப்போது அடையாளம் கண்டார்கள். ஒரு கட்டத்தில் தம்முடன் இணைந்து, நேரடியாக போராட்டத்தில் பங்கேற்ற மரபுவழித் தலைமைகளின் போர்க்குணாம்சமும் விடுதலை வேட்கையும் அகன்றுவிட்டதை, நமது மக்கள் புரிந்து கொண்டார்கள். சிறிலங்கா அரசின் வன்முறையும் ஆக்கிரமிப்பும் இனஅழிப்பும் தீவிரமடைந்து வந்த நிலையில், இவற்றுக்கு எதிராக விட்டுக்கொடாத, சமரசத்தன்மையற்ற, போராட்ட முறைகள் அவசியமாயிருந்தன. ஆனால் இவற்றுக்கு மாறாக, நமது மரபுவழி அரசியல் தலைமையின் சமரசவாத அரசியல் வழிமுறை, காலத்திற்கு ஒவ்வாத, வினைதிறனற்ற போராட்ட வடிவமாக இருப்பதை நமது மக்கள் உணர்ந்து கொண்டார்கள். எனவே இதற்குப் பின்னர் இந்த மரபுவழித் தலைமை தனிநாட்டை வென்று தரக்கூடும் என்பதில் நமது மக்கள் அறவே நம்பிக்கை இழந்துவிட்டிருந்தனர்.

**மக்களின் அனுபவம் பரந்தது. கூர்மையானது. வளமானது. இத்தகைய அனுபவத்தின் ஊடாக அவர்கள் எப்போதும் தமது நலன்களுக்கு சாதகமான முடிவுகளையே எடுக்கின்றார்கள். தாம் பெருமையுடன் தூக்கிக் கொண்டாடுகின்ற தலைமை எப்பொழுது தங்கள் நலன்களுக்கு எதிராகச் செயற்படுகின்றதோ அந்தக் கணமே அதைத் தூக்கி எறிவதற்கு அவர்கள் ஒரு போதும் தயங்கியதில்லை.** ஜி. ஜி. யின் வாதத் திறமையிலும் சர்வதேசப் புகழிலும் பெருமிதப்பட்டு, அவரில் தம்மை அடையாளம் கண்ட அதே மக்கள் ஒரேநாளில் அவரின் அரசியல் விலாசத்தை அழித்துவிட்டார்கள். தமிழரசுக் கட்சியினதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் வீர முழக்கத்தில் தமது உணர்ச்சிகளை அடையாளம் கண்ட நமது மக்கள் இப்போது அரசியல் ஓர்மத்தை இழந்துவிட்ட அந்தத் தலைமையை தூக்கி எறியத் தயராகிவிட்டனர்.

தமது உணர்வுகளுடன் கலந்துவிட்ட தனிநாட்டை பெற்றுத் தரக்கூடிய புதிய தலைமைகளை நமது தேசம் ஏற்கனவே அடையாளம் கண்டுவிட்டது. தங்களுக்காக தனது உயிரை இழந்த சிவகுமாரனின் வடிவத்திலும் நமது மக்களின் தேசிய நலன்களுக்கு துரோகமிழைத்த வந்த துரையப்பாவைக் கொல்வதில் துணிச்சலுடன் செயற்பட்ட புதிய தமிழ்ப் புலிகள், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மற்றும் ஈழவிடுதலை இயக்கம் என்ற வடிவத்திலும் தமது புதிய அரசியல் தலைமைகளை நமது மக்கள் கண்டுகொண்டார்கள். இப்புதிய தலைமைகளை, தங்களுக்காக, தங்களது விடுதலைக்காக, தங்களுக்கென ஒரு தனியான நாட்டைப் பெற்றுத் தருவதற்காக தம்மை அர்ப்பணிக்கத் தயாராகி விட்ட இந்த இளைஞர்களை தமது தலைமைகளாக ஏற்றுக் கொள்ள நமது தேசம் தயராக நின்றது. இதுநாள் வரை நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் நிறுவப்பட்டிருந்த மரபுகள் அனைத்தும் இப்போது மறக்கப்பட்டன. அரசியல் தலைமை என்றால் என்னவென்று விதியாக்கப்பட்டிருந்த முன்னைய வரைவிலக்கணங்கள் அழிக்கப்பட்டன. கல்விப் புலமை, சட்ட அறிவு, சமூக அந்தஸ்த்து, உணர்ச்சி கொப்பளிக்கும் மேடைப் பேச்சுக்கள் போன்ற அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. முகந்தெரியாத இளைஞர்களை தாம் இதுவரை கேட்டிராத, அறிந்திராத நபர்களை, தங்கள் தலைமைகளாக ஏற்றுக் கொள்வதற்கு நமது மக்கள் ஆர்வத்துடன் திரண்டார்கள். இதுதான் தேசிய உணர்வின் வலிமை. நமது மக்களுக்கு அவசியப்பட்டதெல்லாம் தமது உரிமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று தரக்கூடிய தமக்கென தனிநாட்டைப் பெற்று தரக்கூடிய அதற்காக இறுதிவரை போராடக் கூடிய தலைமைகளையே. அத்தகைய தலைமைகளாக புதிய ஆயுதப் போராட்டத் தலைமைகள் உருவெடுத்த போது எவ்விதத் தயக்கமுமின்றி அவர்களை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களது பிறப்பை மறந்தார்கள். சாதியை மறந்தார்கள். பிரதேசத்தை மறந்தார்கள். மதத்தை மறந்தார்கள். இவை எல்லாவற்றையும் மறந்து அவர்களுக்கு உணவளித்தார்கள். அவர்களுக்கு உறைவிடம் தந்தார்கள். தங்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை கவனத்தில் கொள்ளாது அவர்களைப் பாதுகாத்தார்கள். இவ்வாறு நமது மக்களின் அரசியல் வரலாற்றில் முதன்முதலாக மக்களுடன் இணைந்த, மக்களுடன் உறவாடிய, மக்களினால் தொட்டுத் தடவப்பட்ட, மக்களினாலேயே பாதுகாத்து, வளர்க்கப்பட்ட அரசியல் தலைமைகள் உருவாகின.

இவ்வாறு, புதிய தலைமுறையினர் நமது தேசிய இயக்கத்தின் தலைமைகளாக மாறுவதில் நமது மக்களிடையே திரண்டெழுந்த தேசிய உணர்வும் இப்புதிய தலைமுறைக்கு அவர்கள் வழங்கிய பூரண ஆதரவும் அடிப்படைப் பாத்திரம் வகித்தன. நமது தேசத்தின் தலைமையாக நமது தேசத்தினாலேயே உருவாக்கப்பட்ட இப்புதிய பிரிவினர் நமது தேசத்தின் பூரண தலைமைகளாக மாறுவதை 1982இல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதும், 1983இல் நமது மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட திட்டமிட்ட இன அழிப்புகளும் துரிதப்படுத்தின. சிங்கள அரசின் பூரண ஆதரவுடன் நமது தேசத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தகைய திட்டமிட்ட அழிப்பிற்குப் பின்னர் தனிநாடு என்பதே நமது தேசத்தின் ஒரே அரசியல் இலக்காகவும் ஆயுதப் போராட்டம் ஒன்றே அதை அடைவதற்கான போராட்ட வடிவமாகவும் உறுதியுடன் நிறுவப்பட்டன.

## ஆயுதப் போராட்ட அமைப்புக்கள்

1960 களின் முற்பகுதியில் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தின் போது ஆங்காங்கே நடைபெற்ற தன்னெழுச்சியான வன்முறைப் போராட்ட வடிவமானது 1970 களின் முற்பகுதியில் பிரக்ஞைபூர்வமான முறையில் முன்னெடுக்கப்படுவதாக மாறத் தொடங்கியது. சிங்கள இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சி, பங்களாதேஷின் விடுதலையில் ஆயுதப் போராட்டம் முக்கிய பங்கு வகித்தமை, 1970களில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஆயுதப் போராட்டம் பெற்றிருந்த பரபரப்பான முக்கியத்துவம்..என்பவை நமது மக்களிடையே உருவாகி வந்த புதிய தலைமுறைகளின் சிந்தனைகளில் அழுத்தமான தாக்கங்களை ஏற்படுத்தின. முதலில், சிலர் இணைந்து சிறு குழுக்களாக இயங்க ஆரம்பித்தார்கள். 1974இல் தமிழராய்ச்சி மாநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஆயுதப் போராட்டமானது தீர்க்கமான முறையில் முன்னெடுக்க வேண்டுமென்ற அவசியத்தை வலியுறுத்தின.

தமிழரசுக் கட்சியிலும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் இணைந்திருந்த இளைஞர் அணியின் ஒரு பிரிவினரும் மாணவர் பேரவையில் செயற்பட்ட பிரிவினரும் இணைந்து 1970 களின் பிற்பகுதியில் ஆயுதப் போரட்ட அமைப்புக்களை உருவாக்குவதில் தீவிரமாகச் செயற்பட்டார்கள். இவர்களில் ஒரு பிரிவினருடன் புலம்பெயர்ந்து வாழ்ந்த சிலரும் இணைந்து ஈரோஸ் அமைப்பும், தமிழீழத்தில் வாழ்ந்தவர்களினால் தமிழ்ப் புதிய புலிகள் அமைப்பும் உருவாக்கப்பட்டன. விரைவிலேயே இவ்விரு அமைப்புக்களிலும் இடம்பெற்ற அகமுரண்பாடுகள் காரணமாக இவற்றில் உடைவுகள் ஏற்பட்டன. இவ்வாறு குறுகிய காலத்திற்குள் நமது தேசிய இயக்கத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் உருவாகின. 1980களின் தொடக்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ், ரெலோ, புளொட், ஈபி என அளவில் "பெரிய" அமைப்புக்களுடன் என்.எல்.எப்.ரி., டெலா, டெலி, ரீ, தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை, பாசறை, நாகபடை, கழுகுபடை போன்ற "சிறிய" அமைப்புக்களும் காணப்பட்டன.

நமது மக்களின் அரசியல் வரலாற்றில் இது ஒரு குறிப்பான நிலைமையாக அமைகின்றது. இதற்கு முன்னர் ஒவ்வொரு கட்டத்திலும் அநேகமாக தனித்தனி நபர்கள், தனியான அரசியல் அமைப்புக்கள் அல்லது கட்சிகளே நமது மக்களின் ஒரே தலைமையாக செயற்பட்டிருந்தன. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தலைமை என்பதே, நமது அரசியல் இயக்கத்தின் பொதுப்பண்பாக இருந்து வந்திருக்கின்றது. 1920 களில் மரபுவழித் தலைமைக்கு வெளியே, யாழ். வாலிபர் கொங்கிரஸ் இயங்கியபோதிலும், அதன் அரசியல் செயற்பாட்டுப் பரப்பும், செயற்பாட்டுக் காலமும், எல்லைக்குட்பட்டிருந்தன. பின்னர், 1950 களில் தமிழரசுக் கட்சி நமது அரசியல் இயக்கத்தின் தலைமையை வென்று கொண்ட போதிலும், தமிழரசுக் கொங்கிரஸின் செல்வாக்கு கணிசமான காலத்திற்கு நீடிக்கவே செய்தது. எனினும், தமிழ்க் கொங்கிரஸின் செல்வாக்கு படிப்படியே எல்லைக்குட்பட்டு வந்ததோடு, விரைவில் அது அனேகமாக மறைந்தும் விட்டது. 1960 களில் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சாதி எதிர்ப்பு போராட்டத்திற்கு தலைமை வகித்த தமிழ் இடதுசாரிகளின் செயற்பாடுகளும் கூட, செயற்பரப்பிலும் காலஅளவிலும் எல்லைக்குட்பட்டாகவே இருந்தன. இவ்வாறு **ஒவ்வொரு காலகட்டத்திலும், தனித்தலைமையின் பூரண செல்வாக்கு என்பதே நமது அரசியல் இயக்கத்தின் பொதுநிகழ்வாக தொடர்ந்திருக்கின்றது. ஒவ்வொரு காலகட்டத்திலும் தனித்தலைமையாக செல்வாக்குடன் விளங்குகின்ற அரசியல் அமைப்பின் தலைமை, தனக்கு வெளியே செயற்படுகின்ற அரசியல் அமைப்புக்கள் மீது கடுமையான விமர்சனங்களையும், கருத்தியல் தாக்குதல்களையும் மேற்கொண்டு வந்திருக்கின்றன. தமக்கு வெளியே செயற்படுகின்ற அரசியல் அமைப்புக்களின் அரசியல் இருப்பை அகற்றுவதில் தனித்தலைமைகள் திட்டமிட்டும், வன்மத்துடன் செயற்பட்டு வந்திருக்கின்றன.**

பிரதேசம், சாதி, வர்க்கம், பால், கலாச்சாரம் . . . என பன்முக ரீதியில் வேறுபட்டும் தனித்துவமாகவும் இயங்கி வந்திருக்கின்ற நமது மக்கள் மத்தியிலிருந்து பன்முக அரசியல் அமைப்புக்கள் வெளிப்பட்டன. இவை தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்கள் பிரிவின் நலன்களை அரசியல் தளத்தில் பிரதிபலிக்க வேண்டியவனவாக இருந்தன. ஆனால் தனித்தலைமையாக தம்மை நிறுத்திக் கொண்ட மரபுவழித் தலைமைகள் இவற்றுக்கு எதிராக, மக்களின் விருப்பங்களுக்கும் நலன்களுக்கும் எதிராக செயற்பட்டு வந்திருக்கின்றன. நமது மக்களின் அனைத்துப் பிரிவினர்களின் நலன்களுடனும் தம்மை இணைத்துக் கொள்ளாதிருந்த இம் மரபுவழித்தலைமைகள், தமக்கு வெளியே அப்பிரிவினர்களின் நலன்கள் பிரதிபலிக்கப்படுவதையும், பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதையும் எதிர்ப்பவையாக இருந்தன. நமது மக்களின் அனைத்துப் பிரிவினரையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதால் மட்டுமே, அரசியல் தளத்தில் தமது பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படுவதும், தமது சமூக, பொருளாதார, கலாச்சார ஆதிக்கம் தொடர்ந்து பேணப்படும் என்பதில் உறுதியாக இருந்தன. இது, சாராம்சத்தில் ஆதிக்கப் பிரிவினரின் அதிகாரமும், நலன்களும் தொடர்ந்தும் பேணப்படுவதையே இலக்காகக் கொண்டிருந்தது.

இப்போது நமது மக்கள் அனைவரும் ஒரே தேசமாக ஒன்றிணைந்துவிட்ட நிலையில் பல போராட்ட அமைப்புக்கள் தேசிய இயக்கத்தில் செயற்படத் தொடங்கியிருந்தன. **முன்பு நமது மக்கள் அனைவரும் ஒரே அரசியல் இயக்கத்திற்குள் முழுமையாக ஒன்றிணைக்கப்பட முடியாதிருந்தபோது, அரசியல் தலைமையானது ஒன்றாக இருந்தது. இப்போது இதற்கு முற்றிலும் மாறாக, நமது மக்கள் ஒரே தேசமாக ஒன்றிணைந்திருந்த நிலையில் அரசியல் தலைமையானது பிரிந்து, பலவாக உருவாகியிருந்தது.** இத்தகைய முரண்பட்ட நிலைமை நடைமுறைச் சாத்தியம் பெற்றதற்கான காரணங்களாக நாம் பின்வருவனவற்றை அடையாளம் காணமுடியும்.

1 முன்னைய தலைமைகள் மக்களின் அரசியல் பாத்திரத்தையும் பங்களிப்பையும் பெரிதும் தேர்தல் காலச் செயற்பாடுகளாக எல்லைப்படுத்தியிருந்தன. தேர்தல் வெற்றி என்பதே அதாவது, அரசியல் சபைகளில் தங்கள் பிரதிநித்துவம் என்பதே இவற்றின் பிரதான இலக்காக இருந்தது. இத்தகைய இலக்கானது மக்களுக்கு இடையிலான உணர்வுபூர்வமான ஐக்கியத்திற்குப் பதிலாக அவர்களது அரசியல் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்தர்ப்பவாத ஐக்கியத்தையே முதன்மையாகக் கொள்கின்றது. இது பொது இலக்கு நோக்கி மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிதிரட்டுவதற்குப் பதிலாக மக்களின் அரசியல் பிரதிநிதிகளை ஒரே தலைமைக்குள் அணிதிரட்டுவதை பிரதானமாகக் கருதுகின்றது. தனது சொந்த மக்களிடையே சாதி ரீதியாக, பிரதேச ரீதியாக, மத ரீதியாக மோதல்களும் இரத்தக் களரிகளும் நிகழ்கின்ற போது அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல்வாதிகளிடையே நெருக்கமான உறவுகள் நிலவுகின்ற 'அற்புதம்' இதன் மூலம்தான் சாத்தியமாகின்றது.

2. நமது மக்களின் மத்தியில் ஒரு வலிமையான கருத்தியல் ஆதிக்கம் தொடர்ச்சியாக நிறுவப்பட்டிருந்தது. அதாவது படித்த, பேச்சாற்றலும் வாதத் திறமையும் கொண்ட, சாதிய மற்றும் வர்க்க ரீதியில் ஆதிக்க நிலையிலுள்ள நபர்களே தலைவர்களாகும் தகுதி கொண்டவர்கள் என்ற மரபு நமது அரசியல் தளத்தில் நிலைநாட்டப்பட்டிருந்தது. இத்தகைய மரபில் மக்கள் தமக்கிடையிலான வேறுபாடுகளைக் கடந்து தமக்கு முன்னே வகைமாதிரியாக நிறுத்தப்பட்டிருக்கின்ற தலைவர்களுக்கு ஆதரவளிப்பது சாத்தியமாகின்றது. தமக்குள் முரண்பட்டும் மோதிக் கொண்டுமிருக்கின்ற மக்கள் ஒரே தலைவருக்கு ஒரே தலைமைக்கு ஆதரவளிப்பதை, சாத்தியமாக்கின்ற காரணிகளில் ஒன்றாக இத்தகைய கருத்தியல் ஆதிக்கம் விளங்குகின்றது.

3. இதற்கு முன்னர் தமிழ் தலைவரோ அல்லது தலைமையோ மக்களினால் உருவாக்கப்படவில்லை. மாறாக, மக்களின் முன்னால் நிறுத்தப்பட்டார்கள். ஆறுமுகம் குமாரசுவாமி முதல் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வரை இதுவே மரபாக இருந்தது. இவ்வாறு மக்களுக்கு வெளியே தலைவர்கள் அல்லது தலைமை உருவாக்கப்படுவது என்பது ஒரே தலைமை அல்லது அரசியல் பிரதிநிதிகளுக்கிடையிலான உடன்பாடு மூலம் உருவாகின்ற ஐக்கியப்பட்ட தலைமை என்பதை எளிதில் சாத்தியமாக்குகின்றது.

4. இவற்றுக்கு மாறாக, மக்களினால் மக்கள் மத்தியில் நிகழ்த்தப்படுகின்ற தலைமை உருவாக்கம் என்பது முற்றிலும் வேறுபட்ட முறையில் இடம்பெறுகின்றது. மக்களின் உணர்வுகள் சுயாதீனமானவை. தன்னெழுச்சியானவை. உயிர்த்துடிப்பு மிக்கவை. தூய்மையானவை. எல்லாவற்றுக்கும் மேலாக அவை ஜனநாயகத் தன்மை கொண்டவை. தமது உணர்வுகளுடன், தமது நலன்களுடன் நெருக்கமாக உள்ளவர்களை, தம்மால் தொட்டுணரத்தக்கவர்களை அவர்கள் தமது தலைவர்களாக தெரிவு செய்கின்றார்கள். தமது உணர்வுகளின் உயிருள்ள பிம்பமாக, தமது எதிர்பார்ப்புகளின் உயிர்ச்சாரமாக அவர்கள் தமது தலைவர்களைக் காண்கின்றார்கள். தமது பிரதேசம் சார்ந்து, தமது சாதி சார்ந்து, தமது மதம் சார்ந்து, தமது வர்க்கம் சார்ந்து... என வேறுபட்ட தலைவர்களை, தலைமைகளை மக்கள் உருவாக்குகின்றார்கள். எனவே மக்களினால் தெரிவுசெய்யப்படுகின்ற தலைமை என்பது பன்முகத் தன்மை கொண்டதாக ஒன்றுக்கு மேற்பட்டதாக அமைவது ஒரு இயற்கை விதி போன்றே விளங்குகின்றது.

**இவ்வாறு மக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வேறுபட்ட தலைமைகளை உருவாக்குவதானது மக்கள் மத்தியில் ஐக்கியமின்மை நிலவுகின்றது என்பதைக் குறிக்கவில்லை. மாறாக, ஒரே அரசியல் இலக்குச் சார்ந்து, அதை வென்று கொள்வது குறித்து மக்கள் மத்தியில் நிலவுகின்ற உணர்வுபூர்வமான ஐக்கியத்தை இது வலிவுடன் குறிக்கின்றது. மக்களின் அரசியல் ஐக்கியம் என்பது ஒரேயொரு தலைமையின் கீழ் அவர்கள் அணிதிரட்டப்படுவதைக் குறிக்கவில்லை. மாறாக, மக்கள் தம் அனைவருக்கும் பொதுவான அரசியல் இலக்குகளை உணர்வுபூர்வமாக ஏற்றுக் கொள்வதையும் அவற்றை வென்று கொள்வதற்காக தத்தமக்குரிய வழிகளில் உறுதியாகப் போராடுவதையுமே மக்களின் அரசியல் ஐக்கியம் என்பது குறிக்கின்றது.**

மக்கள் பன்முகம் கொண்டவர்கள். தமக்கிடையே சாதி ரீதியான, பிரதேச ரீதியான, வர்க்க ரீதியான, மத ரீதியான, பால் ரீதியான இன்னும் இதுபோன்ற பிரிவினர்களையும் வேறுபாடுகளையும், எனவே தமக்கேயுரிய தனித்துவங்களையும் கொண்டவர்கள். மக்கள் மத்தியில் நிலவுகின்ற இத்தகைய வேறுபாடுகளும் தனித்துவங்களும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குகின்ற தலைமையிலும் அவர்களின் போராட்ட வடிவங்களிலும் தெளிவாகப் படிந்திருக்கும். எந்தளவுக்கு மக்களது சுயாதீனமான வெளிப்பாட்டுக்குரிய அதாவது தமக்குரிய தலைமைகளையும் போராட்ட வடிவங்களையும் உருவாக்குவதற்கான சுதந்திரம் நிலவுகின்றதோ அந்தளவுக்கு குறித்த போராட்டமானது, மக்களின் நேரடிப் பங்குபற்றுதலுடன் கூடிய உண்மையான வெகுஜனப் போராட்டமாக மாற்றமடைகின்றது. அந்தளவுக்கு போராட்டத்தின் பொதுஇலக்கு அடையப்படுவது சாத்தியமாகின்றது. அந்தளவுக்கு மக்களின் ஒவ்வொரு பிரிவினரதும் நலன்களும் உரிமைகளும் அப்போராட்டத்தில் உறுதியாக நிலைநாட்டப்படுவதும் சாத்தியமாகின்றது.

இத்தகைய உணர்ச்சியும் கிளர்ச்சியும் நிறைந்து ததும்பிய ஒரு காலகட்டமாக 1980 களின் முற்பகுதி மாறியது. மக்கள் தமக்குரிய தலைமையை அடையாளம் கண்டார்கள். தமக்குரிய தலைமையை உருவாக்கினார்கள். தமது தேசிய இயக்கத்தில் நேரடியாக பங்குபற்றினார்கள். தனிநாடு என்று பொதுவான இலக்கில் தமது சொந்த நலன்களை தமது சொந்த உரிமைகளை அவர்கள் அடையாளம் கண்டார்கள். தமிழீழ விடுதலைக்காகப் போராடுவதன் ஊடாக தமது சொந்த விடுதலையையும் வென்று கொள்வதற்கு தமிழ் தேசத்தின் ஒவ்வொரு பிரிவினரும் ஆர்வம் கொண்டிருந்தார்கள். விவசாயிகள் நிலத்தின் மீதும் உற்பத்தியின் மீதும் தமக்குரிய உரிமை உறுதிப்படுத்தப்படும் என்று நம்பினார்கள். மீனவர்கள் தமது வாழ்விடமும் தமது தொழிலும் உத்தரவாதப்படுத்தப்படும் என்று நம்பினார்கள். பெண்கள் தமக்கு சுதந்திரமும் விடுதலையும் கிடைக்கும் என்று நம்பினார்கள். மாணவர்கள் தமது கல்விக்கான வாய்ப்பும், படித்தவர்கள் தமக்கான உத்தியோகமும், அரசாங்க ஊழியர்கள் தமக்கான பதவி உயர்வுகளும் உறுதிப்படுத்தப்படுமென நம்பினார்கள். சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினர் தமது சமூக இழிநிலையும் துயரங்களும் முற்றாக மறையும் என்று நம்பினார்கள். உழைப்பாளர்களும் விளிம்புநிலை மக்களும் தமக்கு நிச்சயம் சிறப்பான வாழ்க்கை ஒன்று கிடைக்கும் என்று நம்பினார்கள். எனவே தமிழீழ விடுதலைக்காக தம்மை அர்ப்பணிப்பதற்கு எத்தகைய இடர்களையும் சுமைகளையும் தாங்குவதற்கு மக்கள் அனைவரும் தயராக இருந்தார்கள். இவ்வாறு நமது தேசிய இயக்கமானது உண்மையான மக்கள் இயக்கமாக மக்களின் உணர்வுகளுடன் கலந்த இயக்கமாக மாறியது.

1983 இன அழிப்புக்கள் நமது தேச இயக்கத்தின் வெகுஜனப் பண்பை மேலும் பல மடங்கு உயர்த்தியது. இப்போது ஒவ்வொரு பிரதேசமும் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு நபரும் போராட்டத்தின் மையமாக, போராட்டத்தின் ஊற்று மூலமாக மாறியது. தனிநாடு அமைப்பது என்பது மேலும் ஆழமாக, மேலும் உறுதியாக மக்களின் உணர்வுகளில் கலந்தது. தமது இருப்புக்கும் பாதுகாப்புக்கும் வாழ்வுக்கும் கௌரவத்திற்கும் உரிமைகளுக்கும் உத்தரவாதமாக அமையக்கூடிய தனிநாட்டை உருவாக்குவதற்கான ஆயுதப் போராட்டத்தில் பெண்களும் ஆண்களுமாக இளைய தலைமுறையினர் பல நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் திரண்டார்கள்.

1980களின் முற்பகுதியில் நமது மக்களின் தேசிய இயக்கத்தில் நம்பிக்கைகளுடன் வெளிப்பட்ட இத்தகைய கிளர்ச்சிமிக்க நிலை 1980களின் நடுப்பகுதியில் தலைகீழாக மாற்றம் பெற்றது. இப்போது ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் முழு அதிகாரத்துடன் பவனி வந்தன. மக்களுடான அவர்களின் உரையாடல்கள் ஆயுத மொழியில் இடம்பெறத் தொடங்கின. தம்மைப் பாதுகாத்த, போஷித்த, உருவாக்கிய மக்கள் மீது எவ்விதத் தயக்கமும்மின்றி வன்முறையையும் அதிகாரத்தையும் இவை பிரயோகித்தன. மக்களின் சுய வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முற்றாகத் தடைசெய்தன. இவற்றோடு ஆயுதப் போராட்ட அமைப்புகளிடையேயும் முரண்பாடுகள் உருவாகி, அவை முற்றி வெடிக்க ஆரம்பித்தன. இவையனைத்தும் நமது மக்கள் மத்தியில் அச்சமும் அவநம்பிக்கையும் நிறைந்த இறுகிய சூழலை தோற்றுவித்தன. வரலாறு என்றும் கண்டிராதளவுக்கு இரண்டு வருடங்கள் என்ற மிகக் குறுகிய காலத்தில் ஆயுதப் போராட்டத் அமைப்புகள் அனைத்தும் மக்கள் விரோத அமைப்புக்களாகவும் தமக்குள் முரண்படுபவையாகவும் மாற்றமடைந்தன. இது எப்படி நிகழ்ந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை விளக்குவதற்கு ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் பற்றிய ஒரு விவரணத்தை முன்வைப்பது பொருத்தமாக இருக்கும்.

ஆரம்பத்தில் ஆயுதப் போராட்ட அமைப்புக்களில் இணைந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் மாணவர்களையும், இளைஞர்களையும் மத்தியதர வர்க்கத்தையும் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். மாணவப் பருவமும், இளவயதும், சமூக இயக்கம் குறித்து, ஆழமானதும், அக்கறைக்குரியதுமான கண்ணோட்டங்களை பெறுவதில் கணிசமான பாதிப்புக்களை ஏற்படுத்தின. இவர்களிடம் போர்க்குணாம்சமும், விடுதலை உணர்ச்சியும் நிறைந்திருந்த அளவுக்கு, தேசிய இயக்கம் குறித்தும் தேச விடுதலையை பாதிக்கக் கூடிய அக, புற காரணிகள் பற்றியுமான புரிதல்கள் ஆழமாக இருக்கவில்லை. ஒரு விடுதலைப் போராட்டத்தில் மக்களுக்குள்ள முதன்மைப் பாத்திரம் குறித்தும் மக்களுக்கும் அரசியல், போராட்ட அமைப்புக்களுக்கும் இடையிலான பிரிக்க முடியாத உறவு குறித்தும் இவர்களிடையே அக்கறையுடன் கூடிய புரிதல்கள் இருக்கவில்லை. இதன் காரணமாக, **ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் உருவாக்கத்திற்கும் மக்கள் வழங்கிய ஆதரவுக்கும் இடையிலான நெருங்கிய உறவை எந்த அமைப்பும் புரிந்து கொள்ளவில்லை. தம்மைப் பாதுகாத்தவர்கள் உணவு வழங்கியவர்கள் தமக்குரிய பொருள்வகை உதவிகளை வழங்கி வருபவர்கள் என்பவற்றுக்கு மேலாக தமது அமைப்புகளுக்கான மனித வளங்களையும் வழங்குபவர்கள் மக்கள்தான் என்ற அடிப்படை உண்மையை எந்த அமைப்பும் உணரவில்லை. தாமே தமது மக்களின் ஒரு கூறுதான் என்ற எளிமையான உண்மை கூட, இவர்களிடம் ஆழப்பதியவில்லை.**

மேலும், மக்கள் பல பிரிவினராக உள்ளனர் என்ற உண்மையும் ஒவ்வொரு மக்கள் பிரிவும் தமக்குரிய அமைப்புக்களை உருவாக்குவதற்கும் தாம் விரும்புகின்ற அமைப்புக்கு ஆதரவளிப்பதற்கும் உரிமை பெற்றவர்கள் என்ற உண்மையும் ஆயுதப் போராட்ட அமைப்புக்களால் புரிந்து கொள்ளப்படவில்லை. மாறாக, இன்னொரு அமைப்புக்கு மக்கள் வழங்குகின்ற ஆதரவு என்பது தன்மீதான நிராகரிப்பு என்று ஒவ்வொரு அமைப்பும் அர்த்தப்படுத்தியது. இது தம்மை ஆதரிக்காத மக்கள் பிரிவினரை, தமது எதிரிகளாகக் கருதுகின்ற மனோபாவத்தை அமைப்புகளிடையே தோற்றுவித்தது.

மக்களிடையே நிலவுகின்ற பன்முகத் தன்மையையும் அவர்களின் தேர்வுக்கான சுதந்திரத்தையும் புரிந்து கொள்ளாததோடு மக்களை தம் பக்கம் வென்று கொள்வதற்கு அரசியல் வழிமுறைகளை பின்பற்றாதவைகளாகவும் ஆயுதப் போராட்ட அமைப்புகள் இருந்தன. தமது அரசியல் இலக்குக்கும் மக்களின் நலன்களுக்கும் இடையிலான நெருங்கிய உறவை வெளிப்படுத்தி, அதனூடாக மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்குப் பதிலாக பிற அமைப்புக்களின் பலவீனங்களை பிரச்சாரப்படுத்தி அதனுடாக தமக்குரிய ஆதரவைப் பெற முயற்சித்தன. இது ஆயுதப் போராட்ட அமைப்புக்களுக்கிடையே முரண்பாடும் மோதலும் மேலும் தீவிரமடைவதற்குக் காரணமாகியது.

மேலும் ஆயுதப் போராட்ட அமைப்புக்களில் இணைந்து கொண்ட பெரும்பாலான உறுப்பினர்களிடையே நிலவிய மத்தியவர்க்க மனோபாவம், மக்களுக்கும் ஆயுதப் போராட்ட அமைப்புக்களுக்கும் இடையிலான உறவுகளில் அதிகாரப் பண்புகள் மேற்கொள்வதற்கான ஒரு முக்கிய காரணியாக அமைந்தது. ஒரு சமூகத்தின் படிநிலை அமைப்பில், இடைநடுவில் இருப்பதன் காரணமாக மத்திய தர வர்க்கத்தின் பண்புகள் ஒரு விரிந்த எல்லைக்குள், கீழிருந்து மேலாக மாறுபடக் கூடியதாக இருக்கின்றது. இவர்கள் தமக்குக் கீழே உள்ளவர்களைப் பார்த்து அனுதாபம் கொள்கின்ற அதேவேளை தமக்கு மேலே உள்ளவர்களைப் பார்த்து பிரமிப்படைகின்றார்கள். எனினும், அநேக சந்தர்ப்பங்களில் இம்மத்தியதரப் பிரிவினரின் சிந்தனையில் "அனுதாபத்தை" விட "பிரமிப்பே" தாக்கமுள்ளதாக அமைகின்றது. எனவே தமக்கு வாய்ப்புக் கிடைக்கும் போது இவர்கள் ஒரே பாய்ச்சலில் மேலே சென்றுவிடத் துடிக்கின்றார்கள். இந்த முயற்சியில் தமக்குக் கீழே உள்ளவர்களுக்கு ஏற்படுகின்ற எத்தகைய பாதிப்புக்கள் குறித்தும் இவர்கள் அக்கறை கொள்வதில்லை. கூடவே தமது நலன்களை பெறுவதற்கும் தக்க வைப்பதற்கும் தமக்கு கீழே உள்ளவர்கள் மீது அதிகாரத்தையும் அடக்குமுறைகளையும் பிரயோகிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவர்களாகவும் இவர்கள் மாறுகின்றார்கள்.

இவ்வாறு அதிகார உணர்வும், அடக்குமுறைப் பண்பும் உருவாகி இவற்றை நடைமுறையில் பிரயோகிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும் போது, மிகக் கடுமையான மக்கள் விரோத நிலைப்பாட்டை கொண்டிருப்பவர்களாக இப்பிரிவினர் மாறுகின்றனர்.

நமது மக்களிடையே சாதி, வர்க்கம், பாலினம் சார்ந்த அதிகாரப் படிநிலை முறைமை நிலவுகின்ற நிலையில், தமது மேல்நோக்கிய நகர்வுக்கு தாம் சார்ந்துள்ள அமைப்பை கருவியாகப் பயன்படுத்துகின்ற போக்கு சகல ஆயுதப் போராட்ட அமைப்புக்களிடமும் காணப்பட்டது. **ஆயுதப் போராட்டச் சூழலில் ஆயுதங்களும் அதைப் பயன்படுத்துவதால் பெறப்படுகின்ற அதிகாரமும் முதன்மைச் சக்திகளாக மாறுவதால் அந்த ஆயுதங்களின் மூலம் சமூகத்தைக் கட்டுப்படுத்துவதும் அதிகார மேல்நிலையாக்கமும் எளிதில் சாத்தியமாகின்றன. எனவே ஒவ்வொரு ஆயுதப்போராட்ட அமைப்பும் அதிகாரப்படி நிலையின் உச்சியில் தன்னை நிறுத்துவதற்கு முற்பட்டது.** ஆயுதங்களின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட இத்தகைய அதிகார மேல்நிலையாக்க முயற்சியானது, ஒரு புறம் அதிகாரப் படிநிலையில் கீழுள்ள மக்கள் பிரிவினரோடு மேலுள்ள பிரிவினரையும் கட்டுப்படுத்தும்படி செய்கின்றது. எனவே மக்களின் கருத்துச் சுதந்திரம், தேர்வுச் சுதந்திரம், அமைப்பாகும் சுதந்திரம் போன்ற அனைத்தையும் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் கட்டுப்படுத்தின.

மறுபுறம் இந்த அமைப்புக்கள் தமக்குள்ளேயே முரண்பட்டு மோதத் தொடங்கின. பெரும்பாலான ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் வேறொரு ஆயுதப் போராட்ட அமைப்பிலிருந்து முரண்பட்டு வெளியேறுகின்ற நபர்களால் உருவாக்கப்பட்டவர்களாக இருந்தன. ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பில் நபர்களுக்கிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகளின் பின்னே உள்ள கொள்கை ரீதியிலான வேறுபாடுகள் குறித்து நமது தேசிய இயக்கத்தில் அதிக அக்கறை காட்டப்படுவதில்லை. தாம் முரண்படுவதற்கான காரணங்களை தெளிவாக முன்வைக்கவோ, தமது நிலைப்பாடுகள் மக்களின் நலன்களுடன் எவ்வாறு இணைந்திருக்கின்றன என்பதை விளக்கவோ முடியாதவர்களாக முரண்படுகின்ற நபர்கள் இருந்தார்கள். இதனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தகைய முரண்பாடுகள், தனிநபர் முரண்பாடுகளாக மாறின; அல்லது அவ்வாறு அடையாளம் காணப்பட்டன. இதனால் முரண்பட்டு வெளியேறுகின்ற நபர்களினால் உருவாக்கப்பட்ட அமைப்பு, முன்னைய அமைப்புடன் பகைமை உறவைப் பேண வேண்டியதாக இருந்தது. தனிநபர் முரண்பாடுகளாக அமைந்த அல்லது அடையாளம் காணப்பட்ட பகைமை பின்னர் அமைப்பாக்கம் செய்யப்பட்டு அமைப்புக்களிடையேயான தீராத பகைமையாக மாற்றப்பட்டன. எனவே ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் தோன்றியது முதலே தமக்கிடையே முரண்பாடுகளும் பகைமையும் கொண்டவைகளாக இருந்தன. இப்போது அதிகாரப் படிநிலையின் உச்சியில், தம்மை இருத்துவதற்கு ஒவ்வொரு அமைப்பும் போட்டியிட்டதால் இவற்றுக்கு இடையிலான பகைமை மேலும் தீவிரமடைந்தது. மற்ற அமைப்புக்களின் வீழ்ச்சியே, ஒரு அமைப்பின் வெற்றியாக கருதப்படுகின்ற சூழல் தோன்றியது. இத்தகைய பகைமை வளர்ந்து, இறுகி ஒரு நிலையில் இயக்க மோதல்களாக வெடித்துக் கிளம்பின.

பல ஆயுதப்போராட்ட அமைப்புக்கள், தமது பின்தளமாக இந்தியாவைப் பயன்படுத்தின. அதிகரித்து வந்த சிறிலங்கா அரசின் நேரடி அடக்குமுறைகளிலிருந்து தப்பிக் கொள்வதற்காக மட்டுமன்றி, தமக்கான ஆயுதப் பயிற்சிகளைப் பெறுவதற்கும் இவை இந்தியாவைப் பின்தளமாக பயன்படுத்தின. இதன் விளைவாக, இந்த அமைப்புக்கள் இந்திய அரசினதும், அதன் படை அதிகாரிகளினதும் கட்டுபாட்டிற்குட்படுகின்ற நிலை உருவாகியது. ஒரு விடுதலைப் போராட்டம், சொந்த மண்ணில் சொந்த மக்களுடன் இணைந்ததாக, திடமாக வளர்ச்சியடைவதுதான் அப்போராட்டத்தின் உண்மையான வெற்றிக்குரிய முதல் நிபந்தனை என்ற அடிப்படையான உண்மையை இந்த அமைப்புக்கள் உணர்ந்து கொள்ளவில்லை. இதனால் பங்களாதேஷின் விடுதலைப் போரில் இந்தியப் படைகள் மேற்கொண்ட கொடிய அடக்குமுறைகள் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கை கொண்டிருந்த அமைப்புக்கள் கூட, இறுதியில் இந்திய அரசினதும் இந்திப் படை அதிகாரிகளினதும் கட்டுபாட்டிற்குட்படுகின்ற நிலை உருவாகியது.

ஆயுதப் போராட்ட அமைப்புக்கள், இந்திய அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்டதில் அந்த அமைப்புக்களின் தலைமைகளுக்கு பிரதானமான பங்கு இருந்தது. தமது சொந்த அமைப்பிலும், விடுதலைப் போராட்ட தளத்திலும் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்குரிய ஆதாரமாக, இந்திய அரசின் ஆதரவைப் பயன்படுத்த இத்தலைமைகள் முயற்சித்தன. இதனால் இந்திய அரசியல் தலைவர்களின் - குறிப்பாக தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக, இந்த ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் தலைமைகள் போட்டி போடுகின்ற நிலை ஏற்பட்டது. ஆதிக்க வெறியும் ஆக்கிரமிப்பு தன்மையும் கொண்ட இந்திய அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்டதன் விளைவாக, நமது மண்ணில், நமது மக்களுடன் இணைந்து போராட வேண்டிய அவசியத்தை, இத்தலைமைகளில் அநேகமானவை கைவிடுகின்ற நிலை உருவாகியது. இந்திய அரசின் ஆதரவில் தமிழீழ விடுதலை வென்று கொள்ள முடியும் என்பதை தாம் ஒரு நிலைப்பாடாக கொண்டதோடு, நமது மக்களையும் நம்ப வைக்கின்ற நிலைக்கு இத்தலைமைகள் பெற்றன.

இவ்வாறு ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் ஆரம்பம் முதலே தமக்கிடையே பகைமை கொண்டதாகவும் மக்களின் நலன்களை ஒதுக்கி அவர்கள் மீது வன்முறையையும் அதிகாரத்தையும் பிரயோகிப்பவையாகவும் இந்திய அரசின் ஆதரவுடன் தமிழீழ விடுதலையை வென்று கொள்ள முடியும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவையாகவும் செயற்பட்டன. இந்த அமைப்புக்களில் எதுவுமே மக்களின் நலன் சார்ந்து தமது செயற்திட்டங்களை உருவாக்கவில்லை. அத்தகைய எண்ணமே அவற்றுக்கு இருந்ததில்லை. **எந்த வழியிலாவது தேசிய இயக்கத்தினதும் நமது தேசத்தினதும் ஆதிக்க தலைமையாக மாறிவிட வேண்டுமென்று என்ற வேட்கை ஒவ்வொரு அமைப்பையும் உந்தித் தள்ளியது. சக அமைப்புக்களை சமத்துவமாகக் கருதவோ அவற்றுடன் அரசியல் நேர்மையுடன் ஐக்கிய முன்னணியை அமைக்கவோ எந்தவொரு அமைப்பும் முயற்சிக்கவில்லை.**

நமது மக்களின் அரசியல் உணர்வுடன் ஒப்பிடும்போது ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மிகவும் பின்தங்கியிருந்தன. இதுவரை நமது மக்களின் மத்தியில் நிலவிய தனித்தலைமை என்ற மரபை நிராகரித்து பன்முகத் தலைமைகள் என்ற கலாச்சாரத்தை விரும்பினர். அதாவது, அவை ஒன்றிணைந்து போராட்டத்தை நடாத்துவதையும் அதன் மூலம் தமிழீழம் அமைக்க வேண்டும் என விரும்பினார்கள். இத்தலைமைகளைப் பின்பற்ற நமது மக்கள் தயாராக இருந்தார்கள். ஆனால் இந்த அமைப்புக்களோ மீண்டும் தனித்தலைமையாக, ஆதிக்கமிக்க தலைமையாக தம்மை நிலைநிறுத்துவதில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தன. மக்கள் தமது நலன்களையும் தேச நலனையும் ஒன்றாக இணைத்தார்கள். ஒன்றாக இனம் கண்டார்கள். ஆனால், இந்த அமைப்புக்களோ தேச நலன்களை ஒதுக்கி, தமது சொந்த நலன்களை, அதிகாரத்தை அடைய விரும்பினார்கள். மக்கள் தமது விடுதலைக்கான போராட்டத்தில் நேரடியாகப் பங்குகொள்ள விரும்பினார்கள். ஆனால் இந்த அமைப்புக்களோ, தமது ஆயுதங்களின் மூலமாக அவர்களின் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தினார்கள். மக்கள் ஜனநாயகத்தை விரும்பினார்கள். ஆனால் இந்த அமைப்புக்கள் அவர்களுக்கு அடக்குமுறையை அரசியல் பரிசாகக் கொடுத்தன.

இவ்வாறு பெரும்பாலான ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டும் தமக்கிடையே முரண்பட்டுமிருந்த நிலைமையானது மறுபுறத்தே இந்த அமைப்புகளுக்குள் அடக்குமுறைகளும் உட்கொலைகளும் இடம்பெறுவதற்குக் காரணமாயின. அமைப்புக்களும் அவற்றின் தலைமைகளும் தம்மைத் ஆதிக்கத் தலைமையாக மாற்றுவதற்கு முயற்சித்து வந்ததால், தமது அமைப்புக்களுக்குள் ஏற்படக்கூடிய முரண்பாடுகள் தமது அமைப்பை பலவீனப்படுதி விடும் என்ற அச்சத்தை இவர்களுக்கு ஏற்படுத்தின. இத்தகைய மனோபாவமானது தமது அமைப்புக்குள் முரண்படுகின்றவர்கள் மீதும் அமைப்பிலிருந்து வெளியேறுகின்றவர்கள் மீதும் கடுமையான வன்முறை பிரயோகிக்கின்ற நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்தது. அதிகார வெறியும் பகைமை உணர்வும் கொண்டிருந்த ஆயுதப் போராட்ட தலைமைகள், தமது அமைப்புக்குள் தமக்கு நெருக்கமாக இருந்தவர்களுடன் இணைந்து தம்முடன் முரண்படுகின்றவர்களை குரூரமான முறையில் அடக்கினார்கள். படுகொலை செய்தார்கள்.

இவ்வாறு மிகக் குறுகிய காலத்திற்குள் பல ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மக்கள் விரோத எதேச்சதிகார அமைப்புக்களாகவும் ஒன்றுடன் ஒன்று தீவிர பகைமைகள் கொண்ட அமைப்புக்களாகவும் மாறின. ஈற்றில் 86 இல் வெடித்த இயக்க மோதல்களின் ஊடாக விடுதலைப் புலிகள் அமைப்பு ஏனைய இயக்கங்களை அழித்தும் அவற்றின் செயற்பாடுகளைத் தடைசெய்தும் நமது தேசத்தின் தனித் தலைமையாக தம்மை நிலைநிறுத்திக் கொண்டது. இவ்வாறு நமது மக்களின் அரசியலில் தனித்தலைமை என்ற மரபு மீண்டும் உறுதியாக நிலைநாட்டப்பட்டு விட்டது. இம்முறை விடுதலைப் புலிகள் அமைப்பு தனித்தலைமையாக நிலைபெறுவதற்கு பொருளாதாரப் பலமோ சாதி அந்தஸ்தோ கல்வி ஆற்றலோ நா வன்மையோ பயன்படுத்தப்படவில்லை. மாறாக, இவை எல்லாவற்றையும் விட ”ஆற்றல்” வாய்ந்த துப்பாக்கிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

## ஈழத்தமிழர் தேசிய இயக்கத்தின் இயக்கப் போக்குகள்

விடுதலைப் புலிகள் அமைப்பு ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களை நமது அரசியல் அரங்கிலிருந்து அகற்றி நமது தேசிய இயக்கத்தின் தனித் தலைமையாக மாறியிருப்பதானது, நமது மக்களின் அரசியல் வரலாற்றில் இன்னும் ஒரு முக்கிய திருப்புமுனையைக் குறிக்கின்றது. இதுவரை காலமும் நமது மக்களின் அரசியலில் ஒரு விதியாக நிலை பெற்றிருந்த மேன்நிலை சைவ வேளாளத் தலைமை அகற்றப்பட்டு விட்டதை இது குறிக்கின்றது. தமது சாதிய, வர்க்க, கல்வி மற்றும் கருத்தியல் ஆதிக்கத்தின் மூலம் 150 வருடங்களாக நமது மக்களின் அரசியல் தலைமையாக விளங்கிய சைவ வேளாளத் தலைமை இப்போது முதல்தடவையாக அதன் இடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு ஒரு, வரலாற்று அவசியமாக அமைந்திருக்கின்றது. நமது தேசத்தின் அனைத்துப் பிரிவினர் மத்தியிலும் ஏற்பட்டு வந்திருக்கின்ற அரசியல் விழிப்புணர்வினதும், அவர்களுடைய அரசியல் பங்கேற்பினதும் திரட்சியாக எழுச்சி பெற்றுள்ளன. நமது தேசிய இயக்கத்துடன் ஒத்திசைந்ததாக, இந்தத் தலைமை மாற்றம் அமைந்திருக்கின்றது.

ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு முன்னர் ஒரு தனியான இனமாகவும் ஐரோப்பிய ஆதிக்கத்தின் ஊடாக ஒரு தேசிய இனமாகவும் உருவாகியிருந்த நமது மக்களின் அரசியல் இயக்கமானது குறிப்பாக 1930களிலிருந்து தனியான தேசிய இயக்கமாக முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு நிகழாமைக்கு அன்றைய சமூக அரசியல் நிலைமைகள் என்ற புறக்காரணிகளை காரணமாக முன்வைக்க முடியும். **எனினும், 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே சிங்கள மக்கள் ஒரே தேசமாக இணைந்து, தமக்கென தனியான தேசிய இயக்கத்தை முன்னெடுத்து வந்ததை, கவனத்தில் கொள்ளும் போது, நமது அரசியல் தளத்தில், நமது மக்களுக்கென தனியான தேசிய இயக்கம் எழுச்சி பெறாமல் இருந்தமைக்கு புறக் காரணிகளை விட நமது தலைமையின் அரசியல் நலன்கள், ஒரு குறிப்பான காரணியாக அமைந்து வந்திருக்கின்றன, என்பதை அறிய முடியும்.**

1830 கள் தொடங்கி 1930கள் வரையிலான ஒரு நூற்றாண்டு காலத் நமது தலைமையானது தமிழ் மண்ணிலிருந்து அந்நியப்பட்ட, கொழும்பை வாழ்விடமாகக் கொண்டு விட்ட, சமூக ஆதிக்கம் பெற்ற ஒரு சில குடும்பங்களைச் சேர்ந்த நபர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருந்தது. இந்தத் தலைமைகளில் ஆரம்பத்தில் ஆங்கிலேய சார்பு, பின்னர் முழுநாடும் தழுவிய தேசிய இயக்கம் இறுதியில் தனியான நமது தேசிய இயக்கம் என்ற ஒரு படிமுறை சார்ந்த நகர்வு இடம்பெற்று வந்தபோதிலும் இத்தலைமைகளின் அரசியல் நலன்கள் நமது தேச நலன்களுடன் நேரடியாக இணைந்திருக்கவில்லை. தாம் சார்ந்துள்ள ஆதிக்கப் பிரிவினரின் நலன்களை அரசியல் தளத்தில் பிரதிபலிப்பதும் அவற்றைப் பேண முயற்சிப்பதுமே இவர்களின் அரசியல் செயற்பாடுகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தன. 1844 இல் அடிமை முறைமை ஒழிப்புச் சட்டத்தை ஆறுமுகம் குமாரசுவாமி எதிர்த்ததும் 1915இல் முஸ்லீம்களுக்கு எதிராக சிங்களத் தலைமைக்கு ஆதரவாக இராமநாதன் வாதிட்டதும் 1920 களில் கல்வி நிலையங்களில் சம ஆசனம் மற்றும் சமபந்தி போசனம் என்பவற்றையும் பின்னர், வாக்குரிமையானது பெண்களுக்கும் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினருக்கும் வழங்கப்படுவதையும் இவர் எதிர்த்ததும் தற்செயலான நிகழ்வுகள் அல்ல. இவை தாம் சார்ந்துள்ள ஆதிக்கப் பிரிவினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இவர்களால் பிரக்ஞைபூர்வமாக முன்னெடுக்கப்பட்டவை. 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே சிங்களத் தலைமைகள் கண்டி, கரையோரம் என்றும் ஓரளவுக்கு சாதி ரீதியாகவும் பிளவுபட்டிருந்த சிங்கள மக்களை ஒரே தேசமாக ஒன்றிணைத்து வருவதை நமது தலைமைகள் அவதானித்தே வந்துள்ளன. எனினும், தமது சொந்த மக்களை அவர்களின் வேறுபாடுகளைக் கடந்து ஒரே தேசமாக ஒன்றிணைப்பதில் இவர்கள் எவ்வித அக்கறையும் கொள்ளாத அளவுக்கு இவர்களின் நலன்கள் நமது மக்களின் நலன்களிலிருந்து அந்நியப்பட்டிருந்தன.

1931 இல் சர்வசன வாக்குரிமையின் அறிமுகத்-தோடும் 1948 இல் "சுதந்திரத்தோடு" உருவான சிறிலங்கா அரசின் இனவாதப் போக்கோடும் இணைந்ததாக நமது மக்களை ஒரே தேசமாக இணைத்து ஒரு பலமிக்க தேசிய இயக்கத்தை முன்னெடுக்கக் கூடிய நிலைமைகள் இருந்தன. எனினும், இராமநாதன் சர்வசன வாக்குரிமையை எதிர்த்தும் ஜி. ஜி. மலையக மக்களின் பிரஜாவுரிமையைப் பறிக்கும் சட்டத்தை ஆதரித்தும் செயற்பட்டார்கள். குடியேற்றத் திட்டங்கள் மூலம் கிழக்கு அபகரிக்கப்படுவதை எதிர்த்து, ஒரு வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குப் பதிலாக சீமெந்துத் தொழிற்சாலையிலும் காகிதத் தொழிற்காலையிலும் இத்தலைமை அடங்கிப் போனது. இவ்வாறு தனது சொந்த மக்களின் அரசியல் மற்றும் தேசிய உரிமைகளிலும் சிங்கள இனவாதத்தினால் அடக்கப்படுகின்ற தமிழ் மொழியைப் பேசுகின்ற இன்னொரு இனத்தின் வாழ்வுரிமையிலும் தாம் கொண்டிருந்த அக்கறையின்மையையும், இதனூடாக தமது மக்கள் விரோதப் பண்பையும் இவர்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தினார்கள். இந்நாட்டில் வாழ்கின்ற இன்னொரு இனமான மலையகத் தமிழர்களின் வாழ்வுரிமையை பறிப்பதில், சிங்கள அரசியல்வாதிகளிடம் வெளிப்பட்ட மூர்க்கமான இனவாதமானது, தனது இனத்தின் மீதும் திருப்பப்படும் என்பதை புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இத்தலைமைகளின் நலன்கள் நமது தேச நலன்களிலிருந்து வேறுபட்டிருந்தன.

பின்னர் 1958 ல் சிங்கள மொழிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் அரசியல் யாப்பு மாற்றப்பட்ட போதும், நமது மக்களிடையே வெளிப்பட்ட தேசிய உணர்வினை ஒன்றுகுவித்து மாபெரும் தேசிய இயக்கத்தை தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு அன்றைய தலைமைகளுக்கு இருந்தது. எனினும் சிங்கள அரசியல் தலைமையுடன் ஒப்பந்தங்கள் செய்ததன் மூலமும் எத்தகைய அரசியல் அதிகாரங்களும் அற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு ஆதரவு அளித்ததன் மூலமும் நமது மக்களின் தேசிய உரிமைகளில் தாம் கொண்டிருந்த அக்கறையின்மையை இத்தலைமைகள் தெளிவாக வெளிப்படுத்தின. நமது மக்களின் நலன்களையும் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு பதிலாக, தமது சொந்த அதிகாரத்தையும், நலன்களையும் பேணிக் கொண்டனர்.

1950களின் பிற்பகுதிகளிலிருந்து வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பது இத்தலைமைகளின் போராட்டக் குணாம்சங்களின் வெளிப்பாடாக மட்டும் அமையவில்லை. கூடவே, இத்தலைமைக்கு வெளியே தொடர்ச்சியாகவும் உறுதியான வடிவிலும் அரசியல் உணர்வு பெற்று வந்த மக்களின் போராட்ட உணர்வின் தீவிரத்-தினால் உந்தித் தள்ளப்பட்ட செயற்பாடுகளாக அமைந்திருந்தன. இவ்வாறு நமது மக்கள் மத்தியில் உறுதியாக வளர்ச்சியடைந்து வந்த வெகுஜன அரசியல் உணர்வுதான் இறுதியில் மரபு வழித் தலைமைகள் நமது அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்படுவதற்குக் காரணமாகியது.

1920 களிலிருந்து நமது மக்களிடையே வெகுஜன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் உணர்வு, தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றது. இந்த வெகுஜன அரசியல் உணர்வானது நமது மக்களிடையே சாதி ரீதியாக, வர்க்க ரீதியாக, பிரதேச ரீதியாக, பாலின ரீதியாக, அடக்கப்படுகின்ற, உரிமைகள் மறுக்கப்படுகின்ற மக்கள் பிரிவினரிடையே கருக்கொண்டு திரண்டெழுந்து வளர்ந்து வந்திருப்பதை தெளிவாக அடையாளம் காணமுடியும்.

1920 களில் பாடசாலைகளில் சம ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை வெள்ளாளர் எதிர்த்ததினால் ஏற்பட்ட மோதலானது, வெகுஜன அரசியல் உணர்வின் உறுதியான வித்தாக முளைவிட்டது. சாதி ரீதியாக அடக்கப்பட்டு வந்த மக்கள் தமது சமூக உரிமைகளுக்காக முன்னெடுத்த போராட்டமாக இது விளங்கியது. 1924 இல் யாழ் வாலிபர் கொங்கிரஸ் தனது அரசியல் இலக்குகளில் தீண்டாமை ஒழிப்பு, அனைவருக்கும் வாக்குரிமை போன்ற அம்சங்களை உள்ளடக்கக் கூடிய அளவுக்கு அடக்கப்பட்ட மக்களின் இந்தப் போராட்டம் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

1931 இல் அனைவருக்கும் வாக்குரிமைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நமது மக்களிடையே பல்வேறு அடிப்படைகளின் கீழ் அடக்கப்பட்டு வந்த மக்களின் அரசியல் முக்கியத்துவமும் அரசியல் உணர்வும் சடுதியாக அதிகரித்தன. தமது அரசியல் இருப்பைப் பேணுவதற்கும் தொடர்வதற்கும் மக்களின் ஆதரவில் தங்கியிருக்க வேண்டிய அவசியத்தை அன்றைய அரசியல் தலைமை முகங்கொடுத்தது. இது மக்களின் நலன்கள் குறித்து அக்கறை கொள்ளும்படி, குறைந்த பட்சம் அவை குறித்துப் பேசும்படி அவர்களை நிர்ப்பந்தித்தது. இவ்வாறு மக்களின் நலன்களும் உரிமைகளும் பேசுபொருளாவதானது, மறுபுறம் மக்களின் அரசியல் உணர்வில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மக்கள் தமது நலன்கள் மற்றும் உரிமைகள் குறித்து மேலும் மேலும் சிந்திக்கும்படி தூண்டுகின்றது. தமது நலன்களை புதிது புதிதாக அடையாளம் காண்பதை, அவற்றை தொடர்ச்சியாக விரித்துச் செல்வதை இது சாத்தியமாக்கின்றது. இவ்வாறு நமது மக்களிடையே வெகுஜன அரசியல் உணர்வானது புறநிலை சார்ந்தும் தன்னெழுச்சியாகவும் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியடைந்து வந்தது. வெகுஜன உணர்வின் இத்தகைய வளர்ச்சிதான் 1940களின் ஆரம்பத்தில் அருணாச்சலம் மகாதேவாவின் அரசியல் தோல்விக்கும் தமிழ்க் கொங்கிரஸின் அரசியல் வெற்றிக்கும் பின்னர் 1940 களின் கடைசிப் பகுதியில் தமிழ்க் கொங்கிரஸ் தலைமை ஒதுக்கப்பட்டு தமிழரசுக் கட்சியின் அரசியல் தலைமை நிறுவப்படுவதற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தன.

சுதந்திரத்தின் பின்னர் சிறிலங்கா அரசு முன்னெடுத்த இனவாத நடவடிக்கைகள் நமது மக்களின் இன்னொரு அடக்கப்பட்ட பிரிவினராக அமைந்திருந்த கிழக்கு மக்களையும் வன்னி மக்களையும் தாக்கின. பிரதேச முரண்பாடுகள் இன்னமும் தீவிரமாக வெளிப்படாத பொழுதிலும், நமது மக்களின் அரசியல் தளத்திலும் தலைமையிலும் யாழ் ஆதிக்கமானது உறுதியாக நிறுவப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்திற்கு வெளியே வாழ்கின்ற நமது மக்களின் நலன்களும் உரிமைகளும் (விதிவிலக்காக யாழ் தமிழர்களின் ஒரு நீட்சியான கொழும்பு மேட்டுக்குடித் தமிழர்களின் நலன்கள் தவிர) இந்த அரசியல் தலைமைகளினால் நேர்மையான அக்கறைக்கு உட்படுத்ததப்படவில்லை. அரசியல் தளத்தில் தீவிரமான பேசுபொருளாக்கப்படவில்லை. கிழக்கு மற்றும் வன்னி தமிழ் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் சிறிலங்கா அரசினால் ஏற்படுத்தப்பட்டிருந்த பாதிப்புக்களை விட காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்படவிருந்த சீமெந்து தொழிற்சாலை இந்தத் தலைமைகளுக்கு முக்கியத்துவமிக்க விடயமாக அமைந்தது. தங்களுடைய நலன்களும் உரிமைகளும் தமது அரசியல் தலைமகளினால் போதிய அக்கறைக்குட்படுத்தப்படாத போதிலும் இந்த சிறிலங்கா அரசின் அடக்குமுறைகளால் மக்களின் அரசியல் உணர்வு பலவீனப்படவில்லை. மாறாக, அவர்களின் உணர்வு பன்மடங்கு பலப்பட்டது. இந்த அரசியல் உணர்வுதான் நமது தேசிய இயக்கத்தில் இந்த மக்கள் பிரதான சக்தியாக குவிவதற்கும் நமது தேசிய இயக்கத்தின் பண்பில் அடிப்படை மாற்றம் ஏற்படுவதற்கும் அதன் வீரியம் தொடர்ச்சியாக பேணப்படுவதற்குமான முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 களில் சாதி ரீதியாக அடக்கப்பட்ட மக்களிடையே பிரவகித்த எழுச்சியானது அவர்களது அரசியல் உணர்வின் இன்னொரு வளர்ச்சி நிலையைக் குறிக்கின்றது. 1920 களில் போலல்லாது இம்முறை இவர்களின் எழுச்சி, அமைப்பு வடிவையும் தலைமை வழிகாட்டலையும் பெற்றிருந்தது. இது, இந்த 40 வருட காலத்திற்குள் இவர்களின் அரசியல் உணர்வு அடைந்து வந்துள்ள உறுதியான வளர்ச்சியைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. இது அடக்கப்பட்ட மக்களில் எழுச்சியை மட்டும் வெளிப்படுத்தவில்லை. கூடவே அன்றைய தமிழர் தலைமைக்குள் புதைந்திருந்த சாதிய உள்ளடக்கத்தையும் மக்கள் விரோதப் பண்பையும் அம்பலப்படுத்தியது. சாதி ரீதியாக அடக்கப்பட்ட மக்களிடையே வளர்ந்து வந்துள்ள அரசியல் உணர்வுதான் 1975 இடைத்தேர்தலில், கௌரவத்திற்கும் நேசிப்புக்குமுரிய நமது தலைவராக விளங்கிய செல்வநாயகத்திற்கு எதிராகப் போட்டியிட்ட கம்யுனிஸ்ட் கட்சி வேட்பாளர் வி. பொன்னம்பலம் கணிசமான வாக்குகளைப் பெறுவதற்கும் 1977 தேர்தலில் இராஜலிங்கத்தின் வெற்றிக்கும் காரணமாகியது.

**பெண்களின் எழுச்சியானது நமது மக்களின் தேசிய இயக்கத்தில் நிர்ணயகரமான தாக்கத்தை நிகழ்த்திய இன்னுமொரு காரணியாக அமைந்திருக்கின்றது. நமது மக்களின் சகல சமூகப் பிரிவினரிடையும் பெண்களின் நிலைமையான ஒப்பீட்டளவில் சுதந்திரம் பெற்றிருந்ததும் சொத்துரிமையில் பங்கு, வாழ்நாள் முழுவது தனது பெற்றோரின் குடும்பத்துடன் வாழ்கின்ற நிலை போன்றவையும் நீண்டகாலமாகவே பெண்களின் வாழ்விலும் உணர்விலும் ஒரளவு சுதந்திரத் தன்மை ஏற்பட காரணமாக அமைந்தன.** 20 ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே பெண்கள், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் முறைசார் கல்விகற்க ஆரம்பித்தார்கள். ஆங்கிலேய ஆட்சியில் கிழக்கு மற்றும் வன்னி பகுதிகளில் நகரவாக்கம் துரிதமானதோடு இணைந்ததாக அங்கும் பெண்களின் கல்வி கற்கும் ஆர்வம் அதிகரித்தது. 1931 இல் பெண்களுக்கு வழங்கப்பட்ட வாக்குரிமை அவர்களின் அரசியல் பங்குபற்றலை அதிகரித்தது. சுதந்திரத்தின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட தாய்மொழிக் கல்வி, இலவசக் கல்வி, தனியான பெண்கள் பாடசாலையின் அதிகரிப்புப் போன்றவை நமது மக்களின் பெரும்பாலான சமூகப் பிரிவைச் சேர்ந்த பெண்கள், கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தின. 1970 களின் தொடக்கத்தில் ஏறக்குறைய ஆண்களுக்கு சமமான எண்ணிக்கையில் நமது மக்கள் பெண்களும் கல்வி கற்பவர்களாக இருந்தார்கள். கல்வி வாழ்வுக்கு ஊடாக ஒருபுறம் பெண்களின் அசைவியக்கம் மேலும் அதிகரித்தது. மறுபுறம் அவர்களிடையே பன்முக அறிவுத்திரட்சி இடம்பெற்றது. இவற்றின் விளைவாக பெண்களின் சுதந்திர உணர்வு மேலும் ஆழப்பட்டது. தீவிரமடைந்தது.

இப்போது 1972 இல் தமது பல்கலைக்கழக கல்விக்கான வாய்ப்பு பறிக்கப்பட்டதும் அரசியல் யாப்பின் மூலமாக இந்த நாடு பௌத்த சிங்கள நாடாக மாற்றப்பட்டதும் பெண்கள் மத்தியில் அரசியல் உணர்வு வேகமாகத் திரள்வதை சாத்தியமாக்கின. 1970 களின் ஆரம்பத்தில் சிறிலங்கா அரசுக்கு எதிராக நமது மக்களிடையே புயலாய் எழுந்த போராட்டங்கள், பெண்களின் குறிப்பாக, படித்த இளைய தலைமுறையைச் சேர்ந்த பெண்களின் அரசியல் உணர்வை மேலும் தீவிரப்படுத்தின. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் மேடைகளில் பெண்கள் உணர்ச்சிமிக்க பிரச்சாரகர்களாக மாறினார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபை அமர்வில் தனிநாட்டுக்குரிய நிழல் பாராளுமன்றத்தை அமைப்பதற்கான காலத்தை வரையறுக்கும்படி துணிச்சலுடன் கோரக்கூடிய அளவிற்கு பெண்களின் அரசியல் உணர்வு தீவிரம் பெற்றிருந்தது. 1977, 1983 இன அழிப்புகளின் ஊடாக பெண்களின் அரசியல் உணர்வானது என்றுமில்லாத அளவுக்கு எழுச்சி கொண்டது. தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டத்தில் திரளாகவும் நேரடியாகவும் தீவிரமாகவும் பங்குகொள்கிற அளவுக்கு பெண்களின் அரசியல் உணர்வு வளர்ச்சியடைந்தது. இவ்வாறு நமது பெண்களின் அரசியல் உணர்வில் ஏற்பட்டு வந்த படிப்படியானதும் உறுதியானதுமான வளர்ச்சி, மரபுவழித் தலைமைகளில் அரசியல் அடித்தளத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியதோடு ஈற்றில் அத்தலைமை அகற்றப்படுவதற்கும் ஒரு பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகியது.

இவற்றோடு இளைய தலைமுறையின் மத்தியில் அரசியல் உணர்வானது வேகமாக பரவிக் கனிந்தது. ஒரு சமூகப் பிரிவு என்ற வகையில் இளைய தலைமுறையின் அரசியல் தீவிரம் 1920 களில் தெளிவாக வெளிப்பட்டது. யாழ் வாலிபர் கொங்கிரஸின் ஊடாக, கிளர்ச்சி மிக்க வடிவில் தமது ஜனநாயகத் தன்மையான, முற்போக்கான அரசியல் உணர்வினை இவர்கள் வெளிப்படுத்தினார்கள். யாழ்ப்பாணத்தில் 1931த் தேர்தலை வெற்றிகரமாக பகிஸ்கரித்ததன் மூலம், தமது போராட்ட ஆற்றலை இவர்கள் தெளிவாக வெளிப்படுத்தினார்கள். அதன் பின்னர் குறிப்பிட்ட காலத்திற்கு மரபுவழித் தலைமைகளின் அரசியல் ஆதிக்கத்திற்கு இவர்கள் கட்டுப்பட்டு இருந்த போதும், சிங்கள அரசியல் தலைமையின் இனவாத முன்னெடுப்புக்களும் நமது தலைமையின் மக்கள் விரோத, சமரசப் போக்குகளும் இவர்களின் அரசியல் உணர்வை தொடர்ச்சியாக வளர்த்து வந்திருக்கின்றன. நமது மக்களின் அனைத்துப் பிரிவினர்களினதும் அரசியல் நலன்களை உதாசீனப்படுத்திய தமிழக் கொங்கிரஸை அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதில் இந்த இளைய தலைமுறையினரிடையே திரட்சியடைந்த அரசியல் உணர்வு முக்கிய பங்கு வகித்தது. தமிழரசுக் கட்சியின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் இப்பிரிவினரே அச்சாணியாக அமைந்தார்கள். மொழிக் கொள்கைக்கு எதிரான போராட்டம், சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், சாதிய எதிர்ப்புப் போராட்டம் என்பவற்றில் தமிழரசுக் கட்சியின் முதுகெலும்பாகவும் அதன் போராட்ட ஆன்மாகவும் இப்பிரிவினரே விளங்கினார்கள். 1972 தரப்படுத்தலோடு பெருகித் திரண்ட இவர்களின் அரசியல் உணர்வு, மரபுவழித் தலைமையின் அரசியல் பலவீனத்தின் மீது கடுந்தாக்குதலை தொடுத்தது. இறுதியாக, 1974, 1977, 1981, 1983 இன அழிப்புகளும், 1982இல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதும் இப்புதிய தலைமுறையினரை சேர்ந்த அனைத்துப் பிரிவினரின் அரசியல் உணர்விலும் ஏற்படுத்திய தீர்க்கமான தாக்கமானது, நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் இவர்கள் தலைமைப் பாத்திரம் பெறவும் மரபுவழித் தலைமையை அரசியல் அரங்கிலிருந்து முற்றாகக் கெல்லி எறிவதற்கும் காரணமாகின.

இவ்வாறு நமது மக்களின் அடக்கப்படுகின்ற மற்றும் அரசியல் ரீதியாக ஒதுக்கப்பட்டு வந்திருக்கின்ற மக்கள் மத்தியில் தோன்றி, வளர்ந்து வந்திருக்கின்ற அரசியல் உணர்வானது நமது தேசிய இயக்கத்தின் இயக்கப் போக்கில் அடிப்படை உந்துசக்தியாக அமைந்து வந்திருக்கின்றது. இந்த உணர்வு, நமது தேசிய இயக்கத்தின் அரசியல் உள்ளடக்கத்திலும் அரசியல் இலக்குகளிலும் அதன் போராட்ட வடிவத்திலும் படிப்படியாகவும் உறுதியாகவும் மாற்றங்களை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. தமிழ் தேசிய இயக்கத்தின் அரசியல் உள்ளடக்கமானது, ஆரம்பத்தில் 50:50 என்ற கோரிக்கையிலிருந்து, பின்னர் சமஷ்டி கோரிக்கையாக மாற்றமடைந்து, இறுதியில் நமது தேசத்திற்கென தனியான அரசை நிறுவுதல் என்ற உயர் வடிவத்தை பெற்றிருக்கின்றது. நமது தேசிய இயக்கத்தின் அரசியல் இலக்குகள், சாதி ரீதியாகவும் வர்க்க ரீதியாகவும் கருத்தியல் ரீதியாகவும் ஆதிக்க நிலையில் உள்ள பிரிவினரின் நலன்களைப் பேணுவதில் இருந்து படிப்படியே நமது மக்களின் பல்வேறு பிரிவினர்களின் நலன்களையும் உள்ளடக்கப்படுவதாக மாற்றமடைந்து, ஈற்றில் நமது தேச நலன்களையும் உரிமைகளையும் அடிப்படையாக கொண்டதாக பரிணமித்துள்ளது. நமது தேசிய இயக்கத்தின் போராட்ட வடிவமானது, சட்ட வாதங்கள், விண்ணப்பம் போன்ற வடிவங்களில் இருந்து ஒப்பந்தங்கள் வெகுஜனப் போராட்டங்கள் என்ற வடிவத்தின் ஊடாக ஆயுதப் போராட்ட வடிவமாக நமது மக்களின் போராட்டம் பரிணாமமடைந்துள்ளது. இத்தகைய இயக்கப் போக்கின் ஊடாக, அரசியல் போராட்ட மையமானது யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னி மற்றும் கிழக்கு நோக்கியும் அரசியல் தலைமையானது சாதி மற்றும் வர்க்க ரீதியில் ஆதிக்க நிலையில் இருப்பவர்களிடமிருந்து அடக்கப்படுகின்ற பிரிவினரையும் நோக்கியும் சென்றிருக்கின்றது. இத்தகைய மாற்றங்கள் அனைத்தும் நமது தேசத்தின் அடக்கப்பட்டும் அரசியல் ரீதியில் ஒதுக்கப்பட்டும் வந்திருக்கின்ற பிரிவினர் மத்தியில் திடமாக வளர்ச்சியடைந்து வந்துள்ள அரசியல் உணர்வினால் சாத்தியமாககப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 களின் இறுதிப் பகுதி வரை நமது மக்களின் அரசியல் மையமாக அதன் கொதிகளமாக யாழ்ப்பாணமே அமைந்திருந்தது. சமூகப் பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியான காரணிகளும் சாதிய, வர்க்க ஆதிக்கமும் இதற்குக் காரணமாக அமைந்தன. எனினும், நமது மக்களிடையே சமூகப் பொருளாதார கலாச்சார அம்சங்களில் ஏற்பட்டு வந்த தொடர்ச்சியான மாற்றங்களும் புறத்தே தொடர்ச்சியாக அதிகரித்து வந்த சிறிலங்கா அரசின் இனவெறி அடக்குமுறைகளும் போராட்டத்தின் மையத்தை யாழ்ப்பாணத்தில் இருந்து கிழக்கு மற்றும் வன்னிக்கு இடம்பெயர்த்துள்ளன. போராட்டத்தின் இலக்குகள் பெரிதும் யாழ்ப்பாணத்தில் செறிந்திருந்த சாதிய, வர்க்க ஆதிக்க சக்திகளின் நலன்களையும் படித்த, அரசாங்க ஊழியர்களின் நலன்களையும் காப்பதில் இருந்து விலகி கிழக்கிலும் வன்னியிலும் செறிந்துள்ள விவசாயிகளினதும் மீனவர்களினதும் விளிம்புநிலை மக்களினதும் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதை நோக்கி படிப்படியே நகர்ந்து வந்திருக்கின்றன. இவ்வாறு போராட்ட இலக்குகளில் அதன் உள்ளடக்கத்திலும் போராட்ட வடிவத்திலும் ஏற்பட்டு வந்திருக்கின்ற மாற்றங்களுக்கு ஏற்ப போராட்டத் தலைமையிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. இது யாழ் சைவ வேளாள ஆதிக்கப் பிரிவினரதும் வர்க்க ஆதிக்கப் பிரிவினதும் தலைமையில் இருந்தும் பின்னர் படித்த உயர் மத்திய வர்க்கப் பிரிவிலிருந்தும் விலகி, சாதி ரீதியாக வர்க்க ரீதியாக பாலின ரீதியாக மற்றும் பிரதேச ரீதியாக அடக்கப்பட்டு வந்திருக்கின்ற பிரிவினரை நோக்கி உறுதியாக நகர்ந்து வந்திருக்கின்றது. இவ்வாறு நமது தேசத்திலுள்ள பல்வேறு அடக்கப்படுகின்ற பிரிவினரின் அரசியல் பங்கேற்பின் திரட்சியாக ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் உருவாகின. தமக்கிடையே நிலவிய வேறுபாடுகள் கடந்து, ஒரே தேசம் என்ற உணர்வின் அடிப்படையில் நமது தேசிய இயக்கத்தில் இணைந்து கொண்ட அடக்கப்படுகின்ற மக்கள் பிரிவினரை உள்ளடக்கிய அரசியல் நிறுவனங்களாக, ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் உருவாகின. இந்த அமைப்புக்கள் பண்பு ரீதியில் அடக்கப்படுகின்ற மக்களின் நலன்களை உறுதியாக பிரதிபலிக்காத போதிலும், அளவுரீதியாக இம்மக்களின் அரசியல் தலைமைகளாக இவை விளங்கின. இறுதியில் ஏனைய ஆயுதப்போராட்ட அமைப்புக்களை அழித்தும், அவற்றின் அரசியல் செயற்பாடுகளைத் தடைசெய்தும், தன்னை நமது தேசிய இயக்கத்தின் தனித்தலைமையாக விடுதலைப் புலிகள் அமைப்பு நிலைநிறுத்திய போது, கூடவே அந்த அமைப்பு அடக்கப்படுகின்ற மக்களின் அளவுரீதியான தனித்தலைமையாகவும் தன்னை நிறுவிக் கொண்டுள்ளது.

**நமது மக்களின் அரசியல் தலைமைகள் எந்தளவுக்கு மக்களின் நலன்களைக் கைவிட்டு மக்களின் உணர்வுகளிலிருந்து விலகி, ஆதிக்க அரசுக்கு சாதகமாக செயற்பட்டனவோ அந்தளவுக்கு அத்தலைமைகள் மக்களினால் நிராகரிக்கப்பட்டன. அரசியலிலிருந்து அவை அகற்றப்பட்டன. இறுதியில்**, நமது மக்களின் அரசியல் நினைவுகளிலிருந்து எளிதில் மறக்கப்பட்டன. நமது மக்களிடமிருந்து பிரதேச ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் விலகியிருந்த, ஆங்கிலேய அரசின் முழு விசுவாசிகளாகச் செயற்பட்ட ஆறுமுகம் குமாரசுவாமி அவரது மருமகன் எதிர்மன்ன சிங்கம் மகன் முத்துக்குமாரசுவாமி போன்றோர் நமது மக்களின் அரசியல் வரலாற்றுப் பக்கங்களில் இருந்து முற்றாகவே அழிக்கப்பட்டு விட்டனர். ஆங்கிலேயர்களுக்கு எதிராக அரசியல் ரீதியில் குரல் கொடுத்தவர் என்ற ஒரே காரணத்திற்காகவே இராமநாதனின் பெயர் மெல்லிய அரசியல் நினைவாய் இன்னமும் நமது மக்களின் அரசியல் உரையாடல்களில் தொக்கி நிற்கின்றது. சிங்கள இனவாதத்திலிருந்து முறித்துக் கொண்டவர் என்ற வகையில் அருணாச்சலம் நமது மக்களின் அரசியல் வரலாற்றில் மங்காப் புள்ளியாய் நிலைத்து நிற்க முடிகிறது. தனது தகப்பனின் அரசியல் போக்குக்கு மாறாக சிங்கள அரசியல் தலைமையுடன் மீண்டும் இணைந்து கொண்ட மகாதேவாவை நினைவுகூர்வதற்கு நமது மக்களில் இதுவரை யாருமே இருந்ததில்லை. 1940 களின் ஆரம்பத்தில் நமது மக்களின் அரசியல் பாதையில் தமிழ் கொங்கிரஸ் ஏற்படுத்திய உறுதியான தடம் 1940 களின் இறுதியில் அது சிறிலங்கா அரசில் இணைந்ததன் மூலம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. 1950களில் புத்தெழுச்சியுடன் தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையாக உயர்ந்து நின்ற தமிழரசு கட்சி, 1965இல் சிறிலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலம் தனது பெருமைமிகு அடையாளத்தை இழந்துவிட்டது. மரபுவழி ஆதிக்கத் தலைமையின் கடைசிக் கூட்டாக அமைந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தொடக்கத்திலிருந்தே சிறிலங்கா அரசினதும் இந்திய அரசினதும் காலடியில், அவற்றின் ஆதரவில் தங்கியிருந்ததன் மூலம் தனது அரசியல் மறைவை தானே உருவாக்கிக் கொண்டது. 1980 களில் உருவான ஆயுதப் போராட்ட அமைப்புக்களில் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அமைப்புக்களின் தலைமைகள், பல்வேறு காரணங்களினால், இறுதிநிலையில் இந்திய அரசிடமும் பின்னர் சிறிலங்கா அரசிடமும் சரணடைந்ததன் மூலம் நமது மக்களின் மனங்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழர் அரசியல் தலைமைகள் தமது மக்களுடன் இணைந்து நிற்கும்வரை அவை, மக்களால் ஆதரிக்கப்படுவதும் மக்களின் நலன்களுக்கு விரோதமாக, மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற அரசுகளுடன் இணையும்போது, அத்தலைமைகள் மக்களினால் தூக்கியெறியப்படுவதும் ஒரு விதி போன்றே தமிழ்தேச அரசியலில் நிலவுகின்றது. **இப்போது, விடுதலை புலிகள் அமைப்பு, நமது தேசிய இயக்கத்தின் தலைமையாக மாறியிருப்பதற்கும் மக்களின் ஆதரவை பெற்றிருப்பதற்குமான முக்கிய காரணங்களாக மக்களின் தேசிய நலன்களுடன் அது இணைந்து நிற்பதையும் சிறிலங்கா மற்றும் இந்திய அரசுகளுக்கு எதிராக அது உறுதியுடன் போராடி வருவதையும் அடையாளம் காண முடியும்.**

### ஆயுதப் போராட்ட அமைப்புக்களும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தனித்தலைமையும்:

மரபுவழித் தலைமைகளை மட்டுமன்றி, தனக்கருகே, தன்னுடன் போட்டி போட்டுக் கொண்டிருந்த ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களையும் அரசியல் அரங்கிலிருந்து அகற்றி, நமது தேசிய இயக்கத்தின் தனித் தலைமையாக விடுதலைப் புலிகள் அமைப்பு எவ்வாறு தன்னை நிறுவிக் கொண்டது? சாதிய, வர்க்க, கருத்தியல் ஆதிக்கத்தை தம்வசம் கொண்டிருந்த மரபுவழித் தலைமையையும் இந்திய மற்றும் சிறிலங்கா அரசுகளின் பூரண ஆதரவைப் பெற்றிருந்த ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களையும் நமது தேசிய இயக்கத்திலிருந்து வெளியேற்றி விடுதலைப் புலிகளால் தமது தலைமையை மேலும் மேலும் உறுதியாக நிலைநாட்ட முடிந்தமை எப்படிச் சாத்தியமாகியது?

நமது தேசிய இயக்கத்தில் முதன்மையான போராட்ட வடிவமாக, ஆயுதப் போராட்டம் நிலைபெற்றதானது, ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது. நமது மக்களின் கனவை, தனிநாடு என்ற இலட்சியத்தை நடைமுறைச் சாத்தியமாக்கக் கூடிய திறன்மிக்க போராட்ட வடிவமாகவும் அவசியமான போராட்ட முறையாகவும் ஆயுதப் போராட்டம் உருப்பெற்றது. சிறிலங்கா அரசின் இன அடக்குமுறைகளும் இன அழிப்பும் ஆக்கிரமிப்பும் நிறுவன வடிவம் பெற்று வந்ததுடன் இசைந்ததாகவும் இவற்றை எதிர்ப்பதற்குரிய பொருத்தமான போராட்ட வடிவமாகவும் நமது தேசிய இயக்கத்தில், ஆயுதப் போராட்ட வடிவம் உறுதியான வளர்ச்சி பெற்றது.

1983 இன அழிப்புக்கள், ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் வளர்ச்சியை உந்தித்தள்ளிய புறக்காரணியாக அமைந்தன. குறுகிய காலத்திற்குள் "சிறியதும்" "பெரியதுமாக" 25க்கு மேற்பட்ட ஆயுதப்போராட்ட அமைப்புக்கள் நமது தேசிய இயக்கத்தில் உருவாகின. இவற்றில் பெரும்பாலானவை யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு உருவாகிய போதிலும், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களை மையமாகக் கொண்ட சில சிறிய அமைப்புக்களும் உருவாகின.

**இந்த ஆயுதப் போராட்ட அமைப்புக்களில் இணைந்து கொண்ட அனைவருமே, நமது மக்களின் விடுதலையை தமது இலட்சியமாக கொண்டிருந்தார்கள். நமது மக்களுக்கு என தனியான நாட்டை உருவாக்க வேண்டும் என்ற சுதந்திர உணர்ச்சியால் உந்தப்பட்டவர்களாக இருந்தார்கள். இந்த உயரிய இலட்சியத்தை அடைந்து கொள்வதற்காக தம்மை முழுமையாக அர்ப்பணிக்கக் கூடியவர்களாக இவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருந்தார்கள்.**

இவ்வாறு பல ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் செயற்பட்டதானது, நமது தேசிய இயக்கத்தில் பன்முகத் தலைமைகளை பிரதிபலிப்பதாக விளங்கியது. இருப்பினும், சிறிலங்கா அரசினதும் அதன் படைகளினதும் அடக்குமுறைகள் தீவிரமடைந்து வந்ததால், பல சிறிய ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் தமது இருப்பை பேண முடியாத நிலைமையை எதிர்கொண்டன. கடுமையான சட்டங்களினாலும் தீவிர தேடுதல்களினாலும் இச்சிறிய அமைப்புக்களின் சில தமது செயற்பாடுகளை கைவிட வேண்டிய நிலைமைக்கு ஆளாயின. அதேநேரம் சில "பெரிய" அமைப்புக்கள் "சிறிய" அமைப்புக்களின் தலைவர்களையும், முக்கிய உறுப்பினர்களையும் திட்டமிட்டுக் கொன்றதன் மூலம் அந்த "சிறிய" அமைப்புக்களை செயலற்ற நிலைக்கு ஆளாக்கின. இத்தகைய நிலைகளுக்கு ஊடாக, 1985ல் ஐந்து "பெரிய" அமைப்புக்களோடு என்.எல்.எப்.ரி., பி.எல்.எப்.ரி., தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை, தீப்பொறி... போன்ற சில குறிப்பிட்ட "சிறிய" அமைப்புக்களே செயற்படக் கூடியனவாக இருந்தன. இவற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ விடுதலை இயக்கமும் பெரிதும் "வலதுசாரி" போக்கை பிரதிபலிப்பவையாகவும் ஏனைய அமைப்புக்கள் அனைத்தும் "இடதுசாரி" போக்கைக் கொண்டவையாகவும் இருந்தன.

நமது அரசியல் இயக்கத்தில் யாழ். வாலிபர் கொங்கிரஸினால் முன்னெடுக்கப்பட்ட முற்போக்கு, ஜனநாயக பாரம்பரியத்தின், ஆயுதப் போராட்ட வாரிசுகளாக, "இடதுசாரி" போக்கை பிரதிபலித்த ஆயுதப் போராட்டக் அமைப்புக்கள் ஆரம்பத்தில் விளங்கின. பெண்விடுதலை, சாதிய எதிர்ப்பு, முழுமையான சமூக விடுதலை, வர்க்கப் போராட்டம், சோசலிசத் தமிழீழம்... போன்ற கருத்தாக்கங்களை வெகுஜனமயப்படுத்துவதில் இந்த அமைப்புக்கள் தீவிரமாகச் செயற்பட்டன. ஈ.ம.பு.வி.முன்னணி, சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினகளையும், பெண்களையும் அமைப்புக்குள் உள்வாங்குவதில் ஆர்வத்துடன் செயற்பட்டது. ஆயுதப் போராட்டம் என்பது வெறும் இராணுவத் தாக்குதல்கள் என்று குறுக்கப்படுவதை தவிர்த்து, அதை மக்களின் பங்கேற்புடன் கூடிய ஒரு நீண்டகால போராட்டமாக வரையறுப்பதற்கு த.ம.வி.கழகம் முயற்சித்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தேச விடுதலை என்ற எல்லையையும் கடந்து, ஒரு வர்க்கப் போராட்டமாக அடையாளப்படுத்தி, மலையகத் தமிழர்களையும் எமது போராட்ட எல்லைக்குள் உட்படுவதற்கு ஈ.பு.அமைப்பு எத்தனித்தது. இம்மூன்று அமைப்புக்களும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிய போதிலும், அதற்கு வெளியே வன்னி மற்றும் கிழக்கிலும் தமது அரசியல் செயற்பாடுகளை வலுவாக நிறுவியிருந்தன.

"சிறிய" அமைப்புக்களில், என்.எல்.எப்.ரி., பி.எல்.எப்.ரி போன்றவை அரசியல் திட்டத்தை முன்வைத்துச் செயற்படுகின்ற அமைப்புக்களாயும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வர்க்கப் போராட்டமாக முன்னெடுக்க முயன்ற அமைப்புக்களாகவும் இருந்தன. தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை, முழு இலங்கை சார்ந்த வர்க்கப் போராட்டத்தினுடாக, தமிழர்களின் உரிமைகளை பாதுகாத்தல் என்ற அடிப்படையில் செயற்பட்டது. பாசறையானது, மக்கள் யுத்தம் என்ற கொள்கையை முன்னிறுத்திச் செயற்பட்டது. தீப்பொறியானது, ஆயுதப் போராட்ட அமைப்புக்களுக்குள் ஓங்கியிருந்த அடக்குமுறைகள், அதிகாரத்துவம் என்பவற்றுக்கு எதிராகவும், மக்கள் மீது ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மேற்கொள்கின்ற அடக்குமுறைகள், மற்றும் வன்முறைகளுக்கு எதிராகவும் செயற்பட்டதோடு, சோஷலிசப் பாதையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க முயற்சித்தது. இந்த "சிறிய" அமைப்புக்களும் கூட, பெரிதும் யாழ்ப்பாணத்தில் மையப்பட்டிருந்த போதிலும் தேச விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் அதில் மக்களின் பாத்திரம் தொடர்பாகவும், சமூக மாற்றத்தின் அவசியம் குறித்தும் இவை அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் தமிழ் ஈழ விடுதலை இயக்கமும் பெரிதும் யாழ்ப்பாணத்தில் மையப்பட்டிருந்தன. பெண்களின் உரிமைகள், சாதீயம், சமூக மாற்றம், வர்க்கப் போராட்டம்... போன்றவை குறித்து ஆரோக்கியமான பார்வைகள் இந்த இரு அமைப்புக்களிடம் நிலவவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய "பெரிய" அமைப்புக்களோடு ஒப்பிடுகையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் எண்ணிக்கை குறைவானதாக இருந்தது. உறுப்பினர்கள் பெரிதும் யாழ்பாணத்தைச் சேர்ந்தவர்களாகவும், சாதி ரீதியாக ஆதிக்கப் படிநிலையில் இருந்த பிரிவினர்களை அதிகம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். யாழ்ப்பாணத்திற்கு வெளியே மிகக் குறைந்த உறுப்பினர்களையும், செயற்பாட்டையும் கொண்டதாக இருந்தது. பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்பதை கடுமையாக எதிர்க்கின்ற அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்தது. இவ்வாறு, உறுப்பினர் எண்ணிக்கையிலும், கருத்தியல் ரீதியாகவும் செயற்பரப்பிலும் குறுகிய தன்மையைக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்புத்தான் 1986 நடுப்பகுதியில் நமது தேசிய இயக்கத்தின் தனித் தலைமையாக தன்னை நிறுவிக் கொண்டது.

"இடதுசாரி" போக்கைக் கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்கள், அவற்றின் தலைமைகள் கூட, தாம் முன்வைத்த கொள்கைகளை உணர்வுபூர்வமாக புரிந்து கொள்ளாதவைகளாக இருந்தன. நமது போராட்டச் சூழலில், இத்தகைய கொள்கைகள் நடைமுறைச் சாத்தியமாவதற்கான ஏதுநிலைகள் பற்றிய தெளிவான பரிசீலனைகளை இந்த தலைமைகள் மேற்கொண்டிருக்கவில்லை. மாறாக, நமது தேசத்தில் "வகைமாதிரியான" (உடயளளைஉயட) தொழிலாள வர்க்கம் இல்லாத நிலையில், மலையக தமிழ் தொழிலாளர்களை நமது தேசத்துடன் இணைந்து, நமது தேச விடுதலைப் போராட்டத்தை வர்க்கப் போராட்டமாக முன்னெடுப்பதற்கு சிலர் முற்பட்டனர். சிங்கள தொழிலாளர்களின் தலைமையின் கீழ், நமது தேசத்தின் உரிமைகளை நிலைநாட்டுவது குறித்து வேறு சிலர் சிந்தித்தார்கள். சிலர், சீன மாதிரியைப் பின்பற்றி, புதிய ஜனநாயப் புரட்சியை இங்கும் சாத்தியமாக்குவது குறித்து விவாதித்தார்கள். தமது சொந்த மக்களின் எதார்த்த நிலையிலிருந்தும் தாம் செயற்படுகின்ற போராட்ட சூழலிலிருந்தும் தமது நிலைப்பாடுகளையும் போராட்ட வழிமுறைகளையும் உருவாக்குவதற்குப் பதிலாக, வேறு சமூகங்களில் முற்றிலும் வேறுபட்ட போராட்டச் சூழல்களில் பின்பற்றப்பட்ட கொள்கைகளையும் வழிமுறைகளையும் இங்கு பொருத்திப் பார்ப்பதில் இவர்கள் அதிக அக்கறை செலுத்தினார்கள்.

இவ்வாறு, "இடதுசாரி" போக்கைப் பிரதிபலித்த ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் நமது மக்களுடனும் போராட்ட சூழலுடனும் தம்மை உள்ளார்ந்து இணைக்க முடியாதிருந்ததால், நமது தேசிய இயக்கத்தின் உட்பொருளை, அதன் சாரத்தை புரிந்து கொள்ளத் தவறினார்கள். சிறிலங்கா அரசும், சிங்கள இனவாதமும் மேற்கொள்கின்ற அடக்குமுறைகளும் ஆக்கிரமிப்புமே நமது தேசிய இயக்கத்தின் புறநிலை உந்துவிசைகளாக அமைந்திருக்கின்ற நிலையில், சிங்கள தொழிலாளர்கள் உட்பட முழுச் சிங்கள தேசமும், நமது தேச இருப்பை அழிப்பதிலும் நம்மை ஆக்கிரமிப்பதிலும் ஒன்றுபட்டிருந்த நிலையில் ஐக்கியப்பட்ட புரட்சி என்பது எதார்த்த நிலைக்கு மாறான ஒரு முடிவாக இருந்தது. மலையகத் தமிழர்களை நமது தேசத்தினுள் உட்படுத்தவதன் மூலம் நமது விடுதலைப் போராட்டத்தை வர்க்கப் போராட்டமாக முன்னெடுக்க முடியும் என்ற நிலைப்பாடு, தேசம் பற்றிய புரிதலின்மையோடு, மலையகத் தமிழர்களின் தனித்துவமான இருப்பை நிராகரிக்கின்ற "அதிகாரப் போக்கையும்" வெளிப்படுத்தியது.

மக்கள் யுத்தம், வர்க்கப் போராட்டம், ஜனநாயகம், சோஷலிசம், பெண் விடுதலை . . . போன்ற முற்போக்கான கருத்துக்களை பிரச்சாரப்படுத்தியதோடு வன்னி மற்றும் கிழக்கு மக்களையும் பெண்களையும் சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினர்களையும் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குள் உறுதியாக இணைத்த முக்கிய பணியையும் "இடதுசாரி" தன்மை கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் நிறைவேற்றின. எனினும் தாம் பிரச்சாரப்படுத்திய கொள்கைகளை உணர்வுபூர்வமாக புரிந்தேற்றுக் கொள்ளாதவர்களாக இவை இருந்தன. நமது மக்களினதும், போராட்டச் சூழலினதும் எதார்த்த நிலைமைகளிலிருந்து நிலைப்பாடுகளையும் போராட்ட வழிமுறைகளையும் உருவாக்க இவற்றினால் முடியவில்லை. மேலும் இந்த அமைப்புக்களில் எதுவுமே தேசிய இயக்கம் பற்றிய தெளிவான புரிதலை கொண்டிருக்கவில்லை. இவற்றின் காரணமாக இந்த அமைப்புக்களினால் நமது தேசிய இயக்கத்தில் வலிமையான தாக்கங்கள் எதனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்த முடியவில்லை.

மக்கள் யுத்தம், மக்களின் ஜனநாயக உரிமைகள் பற்றி தீவிரமாகப் பேசிய இந்த அமைப்புக்கள் தாமே மக்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகிப்பனவைகளாக விரைவில் மாறின. சமூக மாற்றம் குறித்து பிரச்சாரம் செய்வதில் அக்கறை காட்டிய இந்த அமைப்புக்கள், தம்மளவில் கருத்தியல் ரீதியாகவோ, செயற்பாட்டிலோ புதிய சமூக உறவுகளை பேண முயற்சிக்காதவைகளாக இருந்தன. சோஷலிசத் தமிழீழம் குறித்து பிரச்சாரம் செய்த அமைப்புக்கள், இதை அடைந்து கொள்வதற்கு, தேசங்களின் சிறைக் கூடமாக உள்ள இந்திய ஆதிக்க அரசின் தயவில் தங்கியிருந்தன. பெண்விடுதலை பற்றிப் பேசி, பெண்களை உள்ளெடுத்த அமைப்புக்கள், இறுதியில் இந்தப் பெண்களின் அரசியல் ஆன்மாவை இழிவுபடுத்து-பவைகளாக மாறின. இந்த அமைப்புக்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியேயும் நமது செயற்பரப்பை விரித்திருந்த போதிலும், யாழ்ப்பாணத்திற்குள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக தீவிரமாக பிரயத்தனப்பட்டன.

இவ்வாறு தமது சொல்லுக்கும் செயலுக்கும் இடையே பாரிய இடைவெளி கொண்டவர்களாக செயற்பட்டு வந்த "இடதுசாரி" போக்குக் கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்கள், நமது மக்களின் அளப்பரிய அர்ப்பணிப்புக்களினால் முன்னெடுக்-கப்பட்டு கொண்டிருந்த நமது தேசியம் குறித்து உறுதியான நிலைப்பாடுகளை கொண்டிராதவை-களாக இருந்தன. எந்தத் தனிநாட்டை முன்னெடுப்பதற்காக நமது மக்கள் தம்மை அர்ப்பணித்து வந்தார்களோ, அந்தத் தனிநாடு குறித்து இந்த அமைப்புக்கள் உறுதியற்ற நிலைப்பாடுகளை கொண்டிருந்தன. "தனிநாடா, ஐக்கியப்பட்ட புரட்சியா?" "ஈழம் என்பது முழு இலங்கையையும் குறிக்கின்றது" என்றெல்லாம் இவை வாதிட்டன.

இவற்றின் விளைவாக "இடதுசாரி" போக்குக் கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்கள், தீவிர போர்க்குணாம்சம் அற்றவையாகவும், சிறிலங்கா படைகளுக்கு எதிராக உறுதியான முறையில் தாக்குதல்களை மேற்கொள்ள முடியாதவைகளா-கவும் மாறின. நமது தேசிய இயக்கத்தின் அவசி-யமான போராட்ட முறையாக பரிணமித்திருந்த ஆயுதப் போராட்டத்தை அதன் உச்ச நிலையில் முன்னெடுக்க முடியாதவைகளாக இவை பலவீனமடைந்தன. போர்க்குணாம்சத்திலும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பதிலும் நம்மிடம் தொடர்ச்சியாக வெளிப்பட்ட பலவீனத்தை மறைப்பதற்குரிய மாற்று வழியாக, இவை தீவிர பிரச்சார நடவடிக்கைகளில் இறங்கின. இதன் பின்னர், தமிழீழத்தின் சுவர்கள் சுவரொட்டிகளால் மறைக்கப்பட்டன. இந்த அமைப்புக்களின் தீரச் செயல்களையும் வெற்றிக-ளையும் ஆர்ப்பாட்டத்துடன் வெளிப்படுத்துகின்ற பிரசுரங்கள் நாள்தோறும் விநியோகிக்கப்பட்டன. ஓய்ந்து விடாது துப்பாக்கி முழக்கங்களினால் தமது தீரத்தை வெளிப்படுத்த வேண்டியிருந்த நிலையில், இந்த அமைப்புக்கள் (குறிப்பாக அளவில் "பெரிய" ஆயுதப் போராட்ட அமைப்புக்கள்) கனல்கக்கும் சொற்களில் தமது வீரத்தை, தாமே பாராட்டிக் கொண்டன. வெற்றி என்பது, அதன் விளைவுகளி-னால் குறிக்கப்படுவதற்கு பதிலாக, இப்போது பிரசுரங்கள் மூலம் பிரச்சாரப்படுத்தப்பட்டது. நடத்தப்படாத தாக்குதல்களையும் கூட, மாபெரும் வெற்றியாக வர்ணிக்கின்ற அளவுக்கு இந்த அமைப்புக்களின் உயிராற்றல் வடிந்து வந்தது. தமது பலவீனத்தை மறைக்க, ஏனைய அமைப்புக்களின் பலவீனங்களை பிரச்சாரப்படுத்துகின்ற நிலைக்கு, இந்த அமைப்புக்கள் கீழிறங்கின. சிறிலங்கா அரசுக்கும், அதன் படைகளுக்கும் எதிராக அர்ப்பணிப்புடன் போராடுவதற்கு பதிலாக, தமக்கிடையே பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதில் இந்த அமைப்புக்கள் அதிக அக்கறை செலுத்தின.

இவ்வாறு, நமது தேசிய இயக்கத்தில் அவசியமான போராட்ட வடிவமாக அமைந்த ஆயுதப் போராட்டத்தை வலிவுடனும் அர்ப்பணிப்புடனும் முன்னெடுக்க முடியாத அமைப்புக்களாக, "இடதுசாரி" தன்மை கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மாறின. தமிழீழ விடுதலையை சாதிப்பதற்காக உறுதியுடன் போராட முடியாத அமைப்புக்களாக பலவீனமுற்றன. ஈற்றில் தமது போராட்டச் செயல்களுக்கு ஊடாக, நமது மக்களின் உணர்வுகளில் தாக்கம் நிகழ்த்த முடியாத அமைப்புக்களாக இவை செயலிழந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த "இடதுசாரி" தன்மை கொண்ட அமைப்புக்களுக்கு மாறாக, "வலதுசாரி" தன்மை கொண்ட தமிழீழ விடுதலை இயக்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் போர்க்குணாம்சம் நிறைந்தவர்களாகவும், ஆயுதப் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுப்பவர்களாகவும் விளங்கின. முற்போக்கான கருத்துக்கள் மீதோ, சமூக மாற்றம் குறித்தோ அதிக ஆர்வம் கொண்டிராத போதிலும், தமிழீழம் என்ற இலட்சித்திலும் சிறிலங்காப் படைகளை தமது எதிரியாக இலக்காக்குவதிலும் இந்த அமைப்புக்கள் உறுதியாகவும் உணர்வுபூர்வமாகவும் செயற்பட்டன. தமது கொள்கைகளினாலோ, பிரச்சாரங்களினாலோ அல்லாமல், சிறிலங்கா படைகளுக்கு எதிரான தமது வெற்றிகரமான தாக்குதல்கள் மூலம் இவை தம்மை அடையாளப்படுத்தின. ஒன்றன் பின் ஒன்றாக, பல தாக்குதல்களை சிறிலங்காப் படைகள் மீது தொடுத்ததன் ஊடாக, நமது தேசிய இயக்கத்தின் உயிர்த்துடிப்பை தொடர்ச்சியாக பேணுகின்றவைகளாக இந்த அமைப்புக்கள் விளங்கின.

இவ்வாறு நமது தேசிய இயக்கத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த இருவிதப் போக்குகள் கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கிடையே கொள்கை ரீதியாக மட்டுமன்றி, செயல் ரீதியிலும் தெளிவான வேறுபாடுகள் வெளிப்பட்டன. ஒருபுறம் முற்போக்கான கருத்துக்கள் கொண்டிருந்த அதேநேரத்தில், உறுதியுடன் செயற்பட முடியாதிருந்த "இடதுசாரி" போக்கு கொண்ட அமைப்புக்கள். **மறுபுறம், நடைமுறையில் இருந்த ஆதிக்க கருத்தியலையும், அதிகார முறைமைகளாகவும் பின்பற்றிய அதேநேரத்தில், தீர்க்கமாகவும், தீவிரமாகவும் செயற்பட்ட "லதுசாரி" போக்கு கொண்ட அமைப்புக்கள். ஒரு அரசியல் அமைப்பின் கொள்கைகளும் நிலைப்பாடுகளும் எவ்வளவு உயர்ந்ததாக இருந்த போதிலும், இவை அந்த அமைப்பினால் உணர்வுபூர்வமாக பின்பற்றப்படாத போது, தமது மக்களின் போராட்டத்துடன் நெருக்கமாக பிணைந்திராத போது, விடுதலையை நோக்கி உறுதியாக இட்டுச் செல்லாத போது, இக்கொள்கைகளும் நிலைப்பாடுகளும் மக்களுடன் இணைய முடியாமல், காற்றில் தொக்கி விடுகின்றன.** இவை மக்களினால் புரிந்து கொள்ளப்படாதவைகளாக, மக்களினால் பற்றிக் கொள்ளப்படாதவைகளாக, எனவே மக்களால் நிராகரிக்கப்படுபவைகளாக மாறுகின்றன. இறுதியில், இந்தக் கொள்கைகளோடு நிலைப்பாடுகளோடும் சேர்ந்து, இவற்றை முன்மொழிகின்ற அரசியல் அமைப்புக்களும் மக்களினால் நிராகரிக்கப்படுகின்ற நிலை உருவாகின்றது.

இத்தகைய ஒரு சோக நிலைமைதான் "இடதுசாரி" தன்மை கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்களுக்கும் ஏற்பட்டு வந்தன. நமது தேசிய இயக்கத்தில், அவசியமான போராட்ட வடிவமாக முன்னிறுத்தப்பட்டிருந்த ஆயுதப் போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுக்காமல், தமது முற்போக்கு கொள்கைகளையும், "வெற்றிச்" செய்திகளையும் பிரச்சாரப்படுத்தியும், நமது மக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியும் வந்த இரண்டு அமைப்புக்கள், நமது தேசிய இயக்கத்தில் தேவையற்ற ஒரு சுமையாக, பயனற்ற உருவாக்கமாக, இன்னும் துல்லியமாகக் கூறினால், நமது மக்களை உறிஞ்சிக் குடிக்கின்ற அரசியல் ஒட்டுண்ணிகளாக மாறிக் கொண்டிருந்தன. நமது மக்களின் விடுதலைப் போராட்டத்தை வீரியமாக முன்னெடுக்கும் திராணியற்றிருந்த இந்த அமைப்புக்களை போஷிப்பதே, பெரும் சுமையாக நமது மக்களினால் உணரப்பட்டது. இந்த அமைப்புக்களின் அடக்குமுறைகளையும், சுதந்திர மறுப்புக்களையும் தாங்குவது, இனியும் சகிக்க முடியாத கொடுமையாக நமது மக்களினால் உணரப்பட்டது. இவ்வாறு நமது மக்களின் தேசிய இயக்கத்திலிருந்தும் போராட்டக் களத்திலிருந்தும், இறுதியில், நமது மக்களின் உணர்வுகளிலிருந்தும் அகற்றப்படக் கூடிய நிலைமையை "இடதுசாரி" போக்கு கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் அடைந்தன.

இதற்கு மாறாக, "வலதுசாரி" போக்குக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் தமிழீழ விடுதலை இயக்கமும் மேலும் மேலும் வலிமை பெற்று வந்தன. இவற்றில் தமிழர் விடுதலை இயக்கம் இந்திய அரசின் ஆதரவையும், இராணுவ உதவிகளையும் அதிகம் பெற்று வந்த அமைப்பாக இருந்தது. 1984 பிற்பகுதியில், சிறிலங்கா ஆக்கிரமிப்பு படைகளின் மீது மேற்கொண்ட சில வெற்றிகரமான தாக்குதல்களின் மூலம், நமது மக்களின் மத்தியில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்திய அமைப்பாக இது விளங்கியது. 1985 பிற்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக, அந்த அமைப்புடன் நேரடியாக மோதுகின்ற அமைப்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மாறியது. ஒரு கணிசமான காலத்திற்கு, தமிழர் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆயுத ரீதியில் போட்டியான அமைப்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வலிமை பெற்றிருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பத்திலிருந்தே போர்க்குணாம்சமும், கட்டுக் கோப்பும் கொண்ட அமைப்பாக உருவாகி வந்தது. சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து நமது தேசத்தை விடுவிக்க வேண்டும் என்பதிலும் அதற்காக ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதிலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை ஊசலாட்டம் எதுவுமற்ற உறுதியைக் கொண்டிருந்தது. கோட்பாட்டுப் பின்புலத்திலி-ருந்தோ, தர்க்க அடிப்படைகளின் இருந்தோ அல்லாமல், சிறிலங்கா அரசும் அதன் ஆக்கிமிப்புப் படைகளும் நமது மக்களின் மீது மேற்கொண்டு வந்த அடக்குமுறைகள், ஆக்கிரமிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே, தமிழீழம் உருவாக்கப்படுவது அவசியம் என்ற தெளிவான புரிதலை விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை பெற்றிருந்தது. இத்தகைய புரிதலினுடாக, சிறிலங்கா படைகளை நமது மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்கு, ஆயுதப் போராட்டம் ஒன்றே உரிய வழி என்ற உறுதியான முடிவுக்கு அத்தலைமை வந்தது. இத்தகைய புரிதலும், முடிவும் சிறிலங்கா படைகளுக்கு எதிராக தீரத்துடன் போராடக் கூடிய வலிமையும், ஆற்றலும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்குள் திடமாக வேரூன்றுவதற்கு அடிப்படைக் காரணமாகின. சிறிலங்கா படைகளுடன் போராடுவதற்கு தேவையான ஆயுதங்கள், பயிற்சிகள் என்பவற்றைப் பெறுவதற்காக, ஆரம்பத்தில் இந்திய மண்ணையும் இந்திய அரசின் உதவிகளையும் நாடிய போதிலும், தமிழீழத்தில் தமக்குரிய தளங்களை உருவாக்குவதில் விடுதலைப் புலிகள் அமைப்பு திட்டமிட்டுச் செயற்பட்டது. இவ்வாறு, படிப்படியே சொந்த மண்ணில், சொந்தப் பலத்தில் அதிகம் தங்கியிருக்கின்ற அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு மாறியது. இதன் விளைவாக, சிங்களப் படைகளுக்கு எதிராக அதிகளவிலும் வெற்றிகரமாகவும் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடிய அமைப்பாக அது விளங்கியது. இத்தகைய தாக்குதல்கள் மூலம் கிடைத்த அனுபவங்களும், சுயதேடல்களும், நமது மண்ணுடன் இணைந்த போராட்ட உத்திகளை வகுக்கக் கூடிய ஆற்றல் கொண்ட அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பை உருவாக்கின. ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களுடன் ஒப்பிடுகையில், ஆயுதப் போராட்ட வடிவத்தை, உணர்வுபூர்வமாகவும் தொடர்ச்சியாகவும் அதன் உயர்நிலைக்கு வளர்த்துச் செல்கின்ற அமைப்பாக விடுதலைப் புலிகள் விளங்கியது.

இவ்வாறு பல ஆயுதப் போராட்ட அமைப்புக்களில் ஒன்றாக இயங்கி வந்த விடுதலைப் புலிகள் அமைப்பு, நமது தேசிய இயக்கத்தின் தனித்தலைமையாக தன்னை நிலைநாட்ட முடிந்ததில் பன்முகக் காரணிகள் பங்கு வகித்திருக்கின்றன:

1 83க்குப் பின் தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சி பெற்றதுடன், "பெரிய" ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மத்தியில், குறிப்பாக அவற்றின் தலைமைகள் மத்தியில், நமது தேசிய இயக்கத்தில் செல்வாக்குமிக்க தலைமையாக தம்மை நிலைநாட்ட வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியிருந்தது. இந்த ஆர்வமானது ஏனைய அமைப்புக்கள் குறித்து தவறான பிரச்சாரங்களை மேற்கொள்வதில் தொடங்கி, அவற்றின் மீது வன்முறை தாக்குதல்களை வரை பல வழிகளில் வெளிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. ஏற்கனவே இந்தத் தலைமை-களில் கணிசமானவை, ஏனைய அமைப்புக்க-ளிலிருந்து வெளியேறி, முரண்பாடுகளும் பகைமையும் கொண்டிருந்ததால், இப்போது ஆதிக்க தலைமைக்கான போட்டி என்பது மேலும் பகைமைத் தன்மை கொண்டதாக மாறியது. குறிப்பாக, விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்பவற்றுக்கும் இடையே தீவிரமான முரண்பாடுகள் நிலவின. இந்த முரண்பாடுகள் ஆங்காங்கே சக போராளிகளின் மீது வன்முறைத் தாக்குதல்களை மேற்கொள்வது, அவர்களை படுகொலை செய்வது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு முற்றியிருந்தன. ஆயுதங்களை கொண்டிருக்கின்ற அமைப்புக்களிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகளும், பகைமைகளும் இறுதியில் கடுமையான அழிவுகளை ஏற்படுத்துகின்ற வன்முறை மோதல்களாக மாறுவது என்பது ஒரு பொதுநிகழ்வாக இடம்பெற்று வந்திருக்கின்றது. ஆதிக்கத் தலைமையாக மாறவேண்டும் என்ற ஆர்வமும், அதனுடாக ஏற்படுகின்ற பகைமைகளும், தனித்தலைமை என்ற கருத்தாக்கத்திற்கு மிக நெருக்கமாக இருக்கின்றது என்பதை புரிந்து கொள்ளும்போது, இந்த மோதல்களில் வெற்றி பெற்ற விடுதலைப் புலிகள் அமைப்பு தனித்தலைமையாக மாறியதன் சாத்தியத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

2. ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களுடன் ஒப்பிடுகையில், உயர்ந்த கட்டுக் கோப்பும், தாக்குதற்திறன் கொண்ட அமைப்பாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பு விளங்கியது. விடுதலைப் புலிகள் அமைப்பு தனது அமைப்பின் விரிவாக்கத்தை தெளிவாக வரையறுத்திருந்தது. தன்னிடமுள்ள வளம் மற்றும் செயற்படக் கூடிய பரப்பு என்பவற்றிற்கு ஏற்ப தனது உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தது. இவ்வாறு தன்னால் வெற்றிகரமாக கையாளக் கூடிய அங்கத்தவர்களை வைத்திருந்ததால், ஒரு கட்டுக் கோப்பான, திறனும் ஆற்றலுமிக்க, வேகமாக நகர்ந்து செயற்படக்கூடிய அமைப்பாக அது இருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பிடம் காணப்பட்ட இத்தகைய பண்புகள், பிற அமைப்புக்களுடன் வன்முறை மோதல்கள் ஏற்பட்ட போது, அந்த அமைப்பு வெற்றிகரமாக செயற்படுவதை சாத்தியமாக்கின.

3. விடுதலைப் புலிகள் அமைப்பு ஏனைய அமைப்புக்களைத் தாக்கி, தனித்தலைமையாக தன்னை நிலைநிறுத்தியதில், அந்த அமைப்பின் தலைமையின் பண்புகளும் குறிப்பான பாத்திரம் வகித்துள்ளன. **நமது அரசியல் தளத்தில் இதுவரை செயற்பட்டு வந்திருக்கின்ற தலைமைகள் அனைத்திலிருந்தும், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை முற்றாக வேறுபட்டிருக்கின்றது. சமூக, கலாச்சார ரீதியில் எத்தகைய ஆதிக்க நிலையையும் கொண்டிராத ஒரு தலைமையாக இத்தலைமை விளங்குகின்றது. நமது தேசிய இயக்கத்தினுடாக உருப்பெற்ற போராட்டத் தலையாகவும், தனது போராட்ட அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்கின்ற தலைமையாகவும் இத்தலைமை விளங்குகின்றது.** ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் தலைமைகளில் காணப்படாத ஒரு விஷேச அம்சம் என்ற வகையில், தான் பெறுகின்ற அனுபவங்களை தேர்வு செய்து, அவற்றில் தனக்குப் பொருத்தமானவற்றை வெற்றிகரமாக உள்வாங்கவும், பிரயோகிக்கவும் கூடிய ஆற்றலை விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை கொண்டிருக்கின்றது. இந்தப் பண்பு, தனது அமைப்பை இராணுவ ரீதியில் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு மட்டுமன்றி, தனக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் குறித்து முன்கூட்டியே தெளிவான புரிதல்களையும், முடிவுகளையும் பெறுவதற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைக்கு உதவியிருக்கின்றது. ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பு பன்முக எதிரிகளினால் தொடர்ச்சியாக சூழப்பட்டிருக்கின்ற போது, தற்காப்பும், தப்பிப்பிழைத்தலும் என்பது அந்த அமைப்பின் முதன்மையான அக்கறைக்குரிய விடயங்களாகின்றன. இவற்றை எதிர்கொள்வதற்கு, முற்றான தலைமறைவு, கண்டிப்பான இரகசிய முறை, இறுக்கமான கட்டுப்பாடுகள், மக்களுடன் நெருக்கமான உறவு . . . என பல தேர்வுகள் உள்ளன. இவற்றோடு, தனக்கருகே இருந்த தனக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடிய அமைப்புக்களை அழிப்பதும், அவற்றை அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதும் ஒரு தெரிவாக இருக்கின்றது. இந்த இறுதித் தெரிவைத்தான் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை செயற்படுத்தியது.

4. ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மக்களின் மீது மேற்கொண்டு வந்த அடக்குமுறைகளினாலும், வன்முறைகளினாலும் இவ்வமைப்புக்கள் மீது நமது மக்கள் அச்சமும் வெறுப்பும் கொண்டிருந்தனர். பெரும்பாலான ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் புறத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுடனான உறவுகளிலும் அகத்தே தாபன ரீதியாகவும் பலவீனப்பட்டு வந்தன. மேலும் சில ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் சிறிலங்கா படைகளுக்கு எதிராகப் போராடுவதற்குப் பதிலாக, தமக்குள் முரண்பட்டதோடு, வெறும் பிரச்சாரங்களிலும், பொய்யான மிகைப்படுத்தல்களிலும் மும்மரமாக ஈடுபட்டு வந்த மேற்படி நிகழ்வுகள், நமது மக்கள் மத்தியில் சலிப்பையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தின. போர்க்குணாம்சத்தை இழந்து கொண்டும், முரண்பாடுகள் மற்றும் உட்கொலைகளினால் சீர்குலைக்கப்பட்டும், தம்மீது அடக்குமுறை பிரயோகித்தும் வருகின்ற இந்த அமைப்புக்களை நாளாந்தம் போஷிக்க வேண்டியிருந்ததும், இவற்றுக்குத் தேவையான அனைத்து வளங்களையும் வழங்க வேண்டியிருந்ததும் நமது மக்கள் மத்தியில் சகிக்க முடியாத வெறுப்பைத் தோற்றுவித்தன. மிகத் தெளிவாகவே இந்த அமைப்புக்கள் நமது மக்களிடமிருந்து வேகமாக அந்நியப்பட்டு வந்தன.

அக நிலையில் விடுதலைப் புலிகள் தவிர்ந்த, ஏனைய அமைப்புக்களில் முரண்பாடுகளும் வெளியேற்றங்களும் தொடராக நிகழ்ந்தன. இதனால் அந்த அமைப்புகள் தாபன ரீதியாக பலவீனப்பட்டுக் கொண்டிருந்தன. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உட்கொலைகள், சித்திரவதைகள், அடக்குமுறைகள் . . . என்பவற்றை எதிர்த்த ஒரு குழுவினர் அழிவிலிருந்து வெளியேறி "தீப்பொறி" என்ற பெயரில் செயற்பட்டதோடு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை மக்கள் மத்தியில் ஆழமாக அம்பலப்படுத்தினர். இதனோடு இணைந்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மேலும் பல பிரிவுகளாக சிதறியது. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்து அதன் இராணுவப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த முக்கிய நபர்கள் உள்ளடங்கிய ஒரு குழு வெளியேறியது. பின்னர் இந்தக் குழுவிற்கு தலைமை வகித்தவர் உட்பட பல உறுப்பி-னர்கள் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த வெளியேற்றமும் படுகொலைகளும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தியிருந்தன. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்தும் இராணுவத்துக்குப் பொறுப்பாக இருந்த உறுப்பினர்கள் உட்பட பலர் வெளியேறிய-தால், அந்த அமைப்பு பலவீனப்பட்டது. ஒரு சிறிய அமைப்பாக இயங்கி வந்த என்.எல்.எப்.-ரி.யும் பிரிந்து, இரண்டு அமைப்புக்களாகின.

இவ்வாறு போராட்ட அமைப்புக்கள் புறத்தே மக்களிடமிருந்து அந்நியப்பட்டு வந்ததோடு, அகத்தே முரண்பாடுகள், உட்கொலைகள், வெளியேற்றங்கள் போன்றவற்றால் பலவீனப்-பட்டும் இருந்த நேரத்தில், விடுதலைப் புலிகள் அமைப்பு தனது அழித்தொழிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் தாக்குதல் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மீது, தீவிர வன்மத்துடன் வெளிப்பட்டது. ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களுடன் ஒப்பிடுகையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வலிமை கொண்டதாக இருந்ததோடு, ஏற்கனவே விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது நேரடித் தாக்குதலை மேற்கொண்ட அமைப்பாகவும் இருந்தது. அன்றைய நிலையில் மக்கள் மீது தீவிரமான அடக்குமுறை பிரயோகித்ததன் மூலம், மக்களின் எதிர்ப்புக்களை அதிகம் பெற்றிருந்த அமைப்பாகவும், முக்கிய உறுப்பினர்களின் வெளியேற்றத்தினாலும், உட்கொலைகளி-னாலும் பலவீனப்பட்டும் இருந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை அழிப்பதில் விடுதலைப் புலிகள் அமைப்பு அடைந்த வெற்றியின் மூலம், ஏனைய அமைப்புக்களை அழிப்பதில், அல்லது தடைசெய்வதில் மேலும் முனைப்-புடன் செயற்படுவதை சாத்தியமாக்கின.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மீது, விடுத-லைப் புலிகள் அமைப்பு முழு அளவிலான தாக்குதல்களை மேற்கொண்ட போதே, ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் அத்தாக்குதல் குறித்து எச்சரிக்கை அடைந்-திருக்க வேண்டும். இத்தகைய ஒரு தாக்குதலை நம்மை நோக்கியும் விடுதலைப் புலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு மேற்கொள்ளும் என்பதை ஊகித்து, அதை எதிர்ப்பதற்காக ஏனைய அமைப்புக்கள் அனைத்தும் ஒரே அணியில் திரண்டு, செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த அமைப்புக்கள் மத்தியில் பரஸ்பரம் நிலவிய பகைமைகளும், போர்க்குணாம்சம் வற்றிவிட்ட நிலையும் இத்தகைய இணைப்பைச் சாத்தியமற்றதாக்கின. மக்களுடன் இணைந்தும் சொந்தப் பலத்திலும் செயற்பட முடியாத தமது பலவீனத்தை இந்த அமைப்புக்கள், குறிப்பாக "பெரிய" அமைப்புக்கள் தெளிவாக வெளிப்படுத்தின. இன்னும் ஒரு வருடத்தின் பின்னர், இந்திய படைகள் தமிழீழத்தை ஆக்கிரமித்த போது, இந்த ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் எவ்வளவு "தீவிரமாக", "மூச்சியுடன்" செயற்பட்டவை என்பதை ஒப்பிடும்போது, விடுதலைப் புலிகள் அமைப்பின் தாக்குதல்களுக்கு எதிராக தமது, சொந்தப் பலத்தில் இயங்க முடியாதிருந்த அவற்றின் பலவீனத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். ஒருவகையில் பார்த்தால், விடுதலைப் புலிகள் அமைப்பு, நமது தேசிய இயக்கத்தின் தனித்தலைமையாக தன்னை நிறுவிக் கொண்டதை சாத்தியமாக்கிய முக்கிய காரணிகளில் ஒன்றாக, இந்த ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் பலவீனமும், போர்க்குணாம்சமின்மையும் அமைந்திருந்தன என்பதை அடையாளம் காண முடியும்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை அழித்தொழித்த பின்னர், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் உடைவு ஏற்பட்டு, அது பலவீனமுற்றிருந்த போது, விடுதலைப் புலிகள் அமைப்பு அதன் மீது தமது தாக்குதல்களைத் தொடுத்தார்கள். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஒரு பிரிவினரைத் தாக்கி, அழித்ததோடு, அந்த அமைப்பும் படிப்படியே அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்பட்டது. இதன் பின்னர், ஏற்கனவே மக்கள் மத்தியில் மோசமாக அம்பலப்பட்டும், தனக்குள் பல பிரிவுகளாக உடைந்து, பலவீனப்பட்டு இருந்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மீது, விடுதலைப் புலிகள் அமைப்பு தாக்குதல் தொடுக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. பதிலாக, அதன் செயற்பாட்டை நிறுத்தும்படி கட்டளையிடுவதே போதுமானதாக இருந்தது. என்.எல்.எப்.ரி. அமைப்பு தலைமறைவாகியது. பி.எல்.எப்.ரி. இந்தியாவுக்குச் சென்றது. தீப்பொறிக் குழுவினர், தமது அமைப்பை தலைமறைவாக்கி விட்டு, தாம் செயற்படாதிருப்பதாக காட்டிக் கொண்டனர். ஏனைய சிறிய அமைப்புக்களும் செயலற்ற நிலையை அடைந்தன. ஈழ புரட்சிகர அமைப்பு மட்டும், அதன் தலைமைக்கும் விடுதலைப் புலிகளின் அமைப்பின் தலைமைக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் மூலம், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

இவ்வாறு ஒரு குறுகிய காலத்திற்குள், ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களை அழித்தும், தடைசெய்தும், கட்டுப்படுத்தியும் தனது முற்றான ஆதிக்கத்தை விடுதலைப் புலிகள் அமைப்பு நிறுவிக் கொண்டது. நூற்றுக்கணக்கான போராளிகளின் சடலக் குவியல்கள் மீது, தனித்தலைமை என்ற தனது ஆதிக்கக் கொடியை அது ஏற்றியது. தன்னுடன் நேரடிச் சவலாக அமையாத "சிறிய" அமைப்புக்களின் உறுப்பினர்களையும் அழித்தன் மூலம், தனக்கு வெளியே எந்தவொரு அரசியல் அமைப்பும் செயற்படுவதை அனுமதிக்கத் தயராக இல்லாத எதேச்சதிகாரப் போக்கின் தெளிவான குறியீடாக விடுதலைப் புலிகள் அமைப்பு தன்னை அடையாளப்படுத்தியுள்ளது.

இதன் பின்னர், இந்த எதேச்சதிகாரப் போக்கு, விடுதலைப் புலிகள் அமைப்பின் உள்ளுறைந்துள்ள ஒரு பண்பாகவே மாறிவிட்டது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமை உறுப்பினர்கள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை, மற்றும் அதன் அரசியல் பிரதிநிதிகள் என்.எல்.எப்.ரி., தீப்பொறி ஆகிய அமைப்புக்களின் தலைமையின் முக்கிய உறுப்பினர்கள் என அரசியல் அமைப்புக்களை அழிப்பதை தனது செயற்பாடுகளில் ஒன்றாக விடுதலைப் புலிகள் அமைப்பு முன்னெடுத்து வருகின்றது. தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்புக்கும், தனித் தலைமைக்கும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியவை என்று தான் கருதுகின்ற அனைத்து அரசியல் அமைப்புக்களையும் அழித்தொழிக்கின்ற எதேச்சதிகாரப் போக்கின் உச்ச திரட்சியாக விடுதலைப் புலிகள் அமைப்பு மாறியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பு, கடந்த 15 வருடங்களாக நமது தேசிய இயக்கத்தின் தனித்தலைமையாக செயற்பட்டு வருகின்றது. அதன் அனைத்துவகை ஜனநாயக விரோத, மக்கள் விரோத எதேச்சதிகாரப் போக்குகளையும் மீறி, விடுதலைப் புலிகள் அமைப்பு நமது தேசிய இயக்கத்தையும் மகத்தான அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வருகின்றது. எத்தகைய சூழலிலும் நமது தேசிய இயக்கத்தின் உயிர்த்துடிப்பை பாதுகாப்பு, வளர்ந்து வருகின்ற அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு செயற்பட்டு வருகின்றது. இந்த 15 வருடகாலத்தில், மிகச் சிறந்த ஆயுதப் போராட்ட அமைப்பாக தன்னை திட்டமிட்டு வளர்த்து வந்திருப்பதோடு, நமது தேசத்தின் அனைத்துப் பிரிவினர்களையும் தனக்குள் இணைத்துள்ள அமைப்பாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பு பரிணமித்துள்ளது. 1985 இல் விடுதலைப் புலிகள் அமைப்பு பெரிதும் யாழ்ப்பாணத்திற்குள் மையப்பட்டும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, சாதி ரீதியாக ஆதிக்க நிலையில் உள்ளவர்களை அதிக எண்ணிக்கையில் உறுப்பினராகக் கொண்டும் பெண்களின் ஆயுதப் போராட்ட பங்கேற்பை நிராகரித்தும் செயற்பட்டது. இன்று, அதே விடுதலைப் புலிகள் அமைப்பு, யாழ்ப்பாணத்திற்கு வெளியே தன்னை மிகத் திடமாகவும், வலுவாகவும் நிலைப்படுத்தியுள்ள அமைப்பாகவும் வன்னி மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவும் அடக்கப்படுகின்ற பிரிவினர்களையும் விளிம்புநிலை பிரிவினரையும் அதிகளவில் தனது உறுப்பினர்களாக கொண்டதாகவும், உலகிலேயே தனது உறுப்பினர்களின் அரைவாசிப் பெண்களைக் கொண்டுள்ள முதல் அமைப்பாகவும் மாற்றமடைந்திருக்கின்றது.

இந்த மாற்றம் தற்செயலானதல்ல; இதற்கு முன்னர் தான் நிராகரித்த, தான் எதிர்த்த அதே நிலைப்பாடுகளை, "இடதுசாரி" தன்மை கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்ட அதே நிலைப்பாடுகளை இப்போது விடுதலைப் புலிகள் அமைப்பு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. இது நமது தேசிய இயக்கத்தின் குறிப்பான தன்மையை பிரதிபலிக்கின்றது. இது நமது தேசிய இயக்கத்தில் வெகுஜன சாரத்தை அளவுரீதியில் வெளிப்படுத்துகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பில் நிலவுகின்ற இறுக்கமான கருத்தியல் ஆதிக்கத்தையும் மீறி, அதன் உள்ளடக்கத்தில் இத்தகைய அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்தேறியிருக்கின்றன.

நமது தேசிய இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய மரபுவழித் தலைமைகள் எதுவும் நமது மக்களை பரந்த அளவில் அரசியல் அமைப்பிற்குள் உள்வாங்குகின்ற பண்பை கொண்டிருக்கவில்லை. மாறாக, தாம் தலைமை வகித்த அரசியல் அமைப்பிற்குள் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான அங்கத்தினர்களை மட்டும் கொண்டிருக்கின்ற அரசியல் மரபையே இவை பின்பற்றின. ஆண்களையும், சாதி ரீதியாக ஆதிக்க நிலையில் உள்ளவர்களையும், பெரிதும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாயும் உள்ளடக்கிய பிரிவினரின் கட்டுப்பாட்டிலேயே இந்த அரசியல் கட்சிகள் இயங்கி வந்திருக்கின்றன. எனினும், 1980 களில் நமது தேசம் தழுவிய வெகுஜன எழுச்சி கிளர்ந்த போது, இந்த போக்கில் மாற்றம் ஏற்பட்டது. வன்னி மற்றும் கிழக்கு மக்களும், சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற மக்களும், விளிம்பு நிலை மக்களும், பெண்களும், இளைஞர்களும் . . . என இதுவரை காலமும் அரசியல் அமைப்புகளுக்குள் உள்வாங்கப்படாமல், ஒதுக்கப்பட்டிருந்த பிரிவினர், தேசிய இயக்கத்தில் அவையென திரண்ட போது, அவர்களை உள்வாங்கிய முதல் அரசியல் அமைப்புக்களாக "இடதுசாரி" போக்கு கொண்ட ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் திகழ்ந்தன. தெளிவான முரண்நகையாக, விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கிலிருந்து அப்போது விலகியிருந்தது.

எனினும், **ஏனைய அரசியல் அமைப்புக்களை நமது அரசியல் தளத்திலிருந்து அகற்றி, நமது தேசிய இயக்கத்தின் தனித்தலைமையாக தன்னை நிறுவிய பின்னர், விடுதலைப் புலிகள் அமைப்பின் உள்ளடக்கத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஒரு குறுகிய காலத்திற்குள் பெண்களும், சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினரும், கிழக்கு மற்றும் வன்னியைச் சேர்ந்தவர்களும் விளிம்புநிலை பிரிவினரும் அந்த அமைப்பில் பெரும்பான்மை பெற்றிருக்கின்றனர்.** இந்த மாற்றம், சிங்களப் படைகளை எதிர்த்துப் போராடுவதற்கு அவசியமான மனித வளங்களை பெறுதல் என்ற நோக்கத்தில் இடம்பெறவில்லை. மாறாக, நமது தேசிய இயக்கம், கிழக்கு மற்றும் வன்னி மக்களின் நலன்களை உள்ளடக்கும் திசையில் நகர்ந்ததும், பெண்கள், அடக்கப்படுகின்ற பிரிவினர்கள் விளிம்புநிலை பிரிவினர் இளைஞர்கள் . . . என நமது மக்களின் பெரும்பான்மைப் பிரிவினரிடையே தொடர்ச்சியாகவும் வலிமையாகவும் திரண்டு வந்த தேசிய உணர்வும் இந்த மாற்றத்திற்கு காரணமாகின. நமது மக்கள் மீது, சிறிலங்கா அரசும் அதன் ஆக்கிரமிப்பு படைகளும், குடியேற்றப்பட்டுள்ள சிங்கள இனவெறியர்களும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ள அழிவுகளும் அடக்குமுறைகளும், நமது மக்களில் தேசிய உணர்வையும், விடுதலை வேட்கையையும் தீயாக வளர்த்து வந்துள்ளன. கனன்று எரியும் இந்த தேசிய உணர்வும், விடுதலை வேட்கையும்தான், விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதிக்க கருத்தியலையும் மீறி, பெண்களையும், சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினரையும் விளிம்பு நிலை பிரிவினரையும், கிழக்கு மற்றும் வன்னி இளைஞர்களையும் அந்த அமைப்பிற்குள் உள்ளெடுப்பதை சாத்தியமாக்கியுள்ளன. விடுதலைப் புலிகள் அமைப்பின் மகத்தான இராணுவ வெற்றிகள் சாதிக்கப்பட்டிருப்பதில், பெண் போராளிகளும், சாதி ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினரும், வன்னி மற்றும் கிழக்கைச் சேர்ந்த இளைஞர்களும் விளிம்பு நிலைப் பிரிவினருமே நிர்ணயகரமான பாத்திரம் வகித்து வருகின்றார்கள். இந்த உண்மை, இவர்கள் வெறுமனே ஆளணி நிரப்புகின்றார்களாக அன்றி, விடுதலைப் புலிகள் அமைப்பின் முதுகெலும்பாகவும் அந்த அமைப்பின் சாரமாகவும் விளங்குவதை தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது.

## ஈழத்தமிழர் தேசிய இயக்கமும் விடுதலைப் புலிகள் அமைப்பும்

நமது தேசிய இயக்கம் இன்று அதன் சமூக உள்ளடக்கத்திலும் போராட்ட வடிவத்திலும் முற்றாக மாற்றமடைந்து விட்டது. கடந்த 15 வருடகாலமாக விடுதலைப் புலிகளின் தலைமையில் இந்த இயக்கம் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் மாபெரும் அர்ப்பணிப்புக்களுடனும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நமது தேசத்தின் அனைத்துப் பிரிவினரும் இந்த தேசிய இயக்கத்திற்குள் உள்வாங்கப்பட்டு இருக்கின்றார்கள். விவசாயிகள், மீனவர்கள், சாதி ரீதியில் அடக்கப்படுகின்ற பிரிவினர்கள், பெண்கள், படித்த மத்தியதரப் பிரிவினர்கள், இளைஞர்கள், வர்த்தகர்கள் மற்றும் விளிம்புநிலைப் பிரிவினர் என நமது தேசத்தின் அனைத்துப் பிரிவினரும் தமிழ் தேசிய இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார்கள். சிறிலங்கா அரசிற்கும் அதன் ஆக்கிரமிப்புப் படைகளுக்கும் எதிராக அவர்கள் கடுமையாகப் போராடி வருகின்றார்கள். யுத்த களத்திலும் விடுவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலும் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டுள்ள பகுதிகளிலும் நமது மக்கள் புதிய வாழ்வைப் படைப்பதற்காக துணிவுடனும், அளவற்ற அர்ப்பணிப்புகளுடனும் போராடி வருகின்றார்கள். சிறிலங்கா படைகளின் வன்முறைத் தாக்குதல்களை எதிர்த்தும் சிறிலங்கா அரசின் இன அடக்குமுறைகளை எதிர்த்தும் அவர்கள் போராடுகின்றார்கள். இத்தகைய போராட்டம், ஒருபுறம் விடுதலை புலிகள் அமைப்பினால் தீவிரமான ஆயுதப் போராட்ட வடிவில் முன்னெடுக்கப்படுகின்றது. அதேநேரத்தில், ஆங்காங்கே மக்களினால் முன்னெடுக்கப்படுகின்ற சுயாதீனமான வெகுஜனப் போராட்ட வடிவிலும் இது அமைந்திருக்கின்து. இவர்கள் அனைவரி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதும் நலன்களும் உரிமைகளும் நமது தேசத்திற்கென தனியான தேச அரசு அமைக்கப்படுவதிலும் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படுவதிலும் தங்கியிருக்கின்றது.

**15 வருடங்களாக விடுதலைப் புலிகள் அமைப்பு நமது தேசிய இயக்கத்தை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வந்திருந்தும் நமது தேசிய இயக்கத்தையும் அதனூடாகத் தன்னையும் இராணுவ அர்த்தத்தில் ஒரு பலமான நிலைக்குக் கொண்டு வந்திருந்தும் நமது தேசத்தின் அனைத்துப் பிரிவினரையும் தனக்குள் கொண்டிருந்தும நமது தேசிய இயக்கத்தின் சமூக உள்ளடக்கம் குறித்தும் அதன் இலக்குகள் குறித்தும் போதிய புரிதலையும் அக்கறையையும் கொண்டிருக்கவில்லை என்பதையே அதன் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.** 15 வருடகால அவர்களின் செயற்பாடுகள், மக்களுடன் அவர்கள் பேணிவந்திருக்கின்ற உறவு முறைகள், சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சாரக் கட்டமைப்புக்கள் தொடர்பாக அவர்கள் கொண்டிருக்கின்ற கருத்துக்கள் மற்றும் அணுகுமுறைகள் என்பவற்றோடு ஏறக்குறைய 5 வருடங்களாக யாழ்ப்பாணத்தை தமது பூரண ஆதிக்கத்தில் ஒரு தனியான அரசு முறையாக நிர்வகித்த அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் பரிசீலிப்பதினூடாக, விடுதலைப் புலிகள் குறித்த ஒரு மதிப்பீட்டை பெற முயற்சிக்கலாம்.

1. விடுதலைப் புலிகள் அமைப்பு அதன் தோற்றத்திலிருந்தே ஒரு ஆயுத அமைப்பாகவும் சிறிலங்கா படைகள் மற்றும் இந்தியப் படைகளின் தாக்குதலில் இருந்தும் தன்னுடன் முரண்பட்டு, மோதிக்கொண்டிருந்த அமைப்புக்களிலிருந்தும் தப்பிப் பிழைக்க வேண்டியதாகவும் இருந்ததால் அது பெரிதும் ஒரு இராணுவ அமைப்பாகவே தன்னை கட்டமைத்துவிட்டது. விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் உள்ளடங்கியுள்ள இந்த இராணுவ சாரமே அதன் பலமாகவும் அதே நேரத்தில் அதன் பலவீனமாகவும் அமைந்திருக்கின்றது.

ஒரு இராணுவ அமைப்பு என்ற அதன் பண்பானது, தன்னைத் தொடர்ந்தும் கட்டுக்கோப்புடன் பேணவும் தன்னைச் சூழவுள்ள பல வலிமைமிக்க எதிரிகளுடன் போராடி வெற்றிபெறவும் அதற்கு உதவியுள்ளது. இதனுடாக அது நமது தேசிய இயக்கத்தை தொடர்ந்தும் உயிர்ப்பு நிலையிலும் தணியாத சுதந்திர வேட்கையுடனும் பேணிவருவது சாத்தியமாகவுள்ளது. இவ்வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் இராணுவ உள்ளடக்கம் என்பது அந்த அமைப்புக்கு மட்டுமின்றி நமது தேசிய இயக்கத்திற்கும் பலமான அம்சமாக உள்ளது.

எனினும், இந்த இராணுவ உள்ளடக்கமானது மறுபுறத்தில் மக்களின் மேல் அதிகாரத்தையும் அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் பிரயோகிப்பதற்கு காரணமாக உள்ளது. தனது சொந்த அமைப்பிற்குள் அதிகாரப் படிநிலை அமைப்பையும் அதிகார உறவுகளையும் இறுக்கமாகப் பேணிவருவதன் காரணமாக அந்த அமைப்பினால் ஜனநாயக மரபுகளையும் மக்களின் சுதந்திரம் மற்றும் சுயாதீனத்தையும் புரிந்து கொள்ளவும் அங்கீகரிக்கவும் முடியாதிருக்கின்றது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் நிறைந்துள்ள இராணுவச் சாரத்தை புரிந்து கொள்ளத் தவறுவோருக்கு அந்த அமைப்பு ஒரு குழுவாத அமைப்பாகத் தோற்றமளிக்கின்றது. இத்தகைய ஒரு கண்ணோட்டத்தினால், விடுதலைப் புலிகள் அமைப்பினர் நீண்ட 15 வருடங்களாக உறுதியாகவும் வெற்றிகரமாகவும் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றதைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. தயக்கமற்ற அர்ப்பணிப்பாளர்களாகவும், பெருமைக்குரிய தற்கொலைப் போராளிகளாகவும் அவர்கள் விளங்குகின்றார்கள். விடுதலைப் புலிகளிடம் காணப்படுகின்ற எவ்வித தன்னல எதிர்பார்ப்புக்களுமற்ற, வரலாற்றில் மிக அரிதாகவே அவதானிக்கக் கூடிய இத்தகைய உயர்ந்த பண்புகளுக்குரிய அடிப்படையாக அவர்களின் தீவிரத் தேசிய உணர்வே காரணமாக அமைகின்றதையும் அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விதத்தில் பலரால், விடுதலைப் புலிகளை ஒரு குழுவாக அடையாளம் காணத் தூண்டுவதற்கு காரணம் விடுதலைப் புலிகளுக்குள் உறைந்துள்ள இராணுவ சாரமே. கட்டுப்பாடும் கட்டளைக்குத் தயக்கமின்றிக் கட்டுப்படுவதும் தனது அமைப்புக்காக எதையும் செய்யத் தயராக இருப்பதும் "குழு மனோபாவமாக" இருக்கின்ற அதேநேரத்தில் தமிழீழ விடுதலைக்காக தன்னையே அர்ப்பணிக்கத் தயராக இருப்பது ஒரு "விரிந்த" தேசிய உணர்வின் வெளிப்பாடாகவும் இருக்கின்றது என்பதும் இங்கு அவதானிக்கத்தக்கது.

## 2. புலிகள் அமைப்பில் ஆதிக்கம் செலுத்துகின்ற கருத்தியல்

**ஒரு சமூகத்தின் உறுப்பினர்களை பிணைத்து வைப்பதிலும் அந்த சமூக அமைப்பை உடையாமல் பாதுகாப்பதிலும் கருத்தியல் வகிக்கின்ற பாத்திரம் முக்கியமானது. அதிகார நிறுவனங்களையும் படிநிலை அமைப்புக்களையும் வன்முறைப் பிரயோகத்தையும் நியாயப்படுத்தி சமூக உறுப்பினர்கள் அவற்றுக்கு கட்டுப்பட்டு வாழும்படி செய்வதில் கருத்தியல் குறிப்பான பங்கு வகிக்கின்றது. இத்தகைய கருத்தியலை அடையாளம் கண்டு அவற்றிலிருந்து பிரக்ஞைபூர்வமாக முறித்துக் கொள்ளாத வரை எத்தகைய ஆயுத பலமும் ஒருவரை அல்லது ஒரு அரசியல் அமைப்பை மாற்றிவிடப் போவதில்லை.**

நமது தேசத்திற்குள் சாதியக் கருத்தியலும் ஆணாதிக்க கருத்தியலும் நீண்ட மரபைக் கொண்டிருக்கின்றன. சாதியக் கருத்தியல், மக்கள் சாதிரீதியாக பிரிக்கப்பட்டிருப்பதையும் அதிகாரப் படிநிலையாக்கப்பட்டிருப்பதையும் நியாயப்படுத்துகின்ற அதேநேரத்தில் சாதி ரீதியான ஆதிக்கத்தையும் மற்றும் அடக்கப்படுகின்ற நிலையையும் வலியுறுத்துகின்றது. இச்சாதியக் கருத்தியல் மதத்துடன் இணைந்துள்ளது அல்லது மதத்தின் ஒரு கூறாகவே உள்ளது. தூய்மை, அசுத்தம், ஒழுக்கமுறை போன்ற மதக் கருத்துக்களும் இணைந்து சாதிய முறையை இயற்கையான மாற்றமுடியாத நிகழ்வாகக் கொள்ளும்படி செய்கின்றது. சாதியக் கருத்தியலும் மதமும் ஒன்றிணைந்திருப்பதால் நமது தேசத்தைச் சேர்ந்தவர்கள் தமக்குள் சாதியப் படிநிலைகளையும் அதிகார உறவுகளையும் ஏற்றுக் கொள்கின்ற அதே நேரத்தில் தமக்கு வெளியேயுள்ள பிற மதங்களைச் சேர்ந்தவர்களை கீழானவர்களாகவும் வெறுப்புக்குரியவர்களாகவும் கருதுகின்ற மனநிலையைப் பெற்று விடுகின்றார்கள்.

ஆணாதிக்கக் கருத்தியல், ஆணின் உயர்ந்த நிலையைக் கேள்விக்கிடமற்றதாக மாற்றுகின்றது. பெண்ணின் மீதான ஆணின் அதிகாரத்தை இயற்கையானதாகக் காட்டுகின்றது. இந்த ஆணாதிக்க கருத்தியலும் மதத்துடன் நெருக்கமாக பிணைந்திருப்பதால் இந்த ஆதிக்க முறைமை மீறப்பட முடியாத ஒன்றாகவே நிலவி வந்திருக்கின்றது. மதம், சாதியக் கருத்தியல் மற்றும் ஆணாதிக்கக் கருத்தியல் ஆகிய மூன்றும் இணைந்தும் தனித்தனியாகவும் தொடர்ச்சியாகவும் செயற்பட்டு வந்திருப்பதால் நமது தேசத்திற்குள் சிக்கலான அதிகாரப் படிநிலை முறைமை உருவாகியுள்ளது. சமூகத்திலுள்ள குறிப்பிட்ட பிரிவினர் தமது ஆதிக்க நிலையை நியாயப்படுத்தக் கூடியதும் ஏனைய பிரிவினர் தமது அடக்கப்பட்ட நிலையை ஏற்றுக் கொள்ளச் செய்வதுமான ஒரு இறுக்கமான சமூக முறைமையை நமது தேசம் பெற்றிருக்கின்றது.

இத்தகைய ஆதிக்கக் கருத்தியிலிருந்து எந்தவொரு அரசியல் தலைமையும் முற்றாக விடுபடவில்லை. இராமநாதன் இக்கருத்தியலின் உயிருள்ள பிம்பமாக விளங்கினார் என்றால் சாதிய முறைமைக்கு எதிராகப் போராடிய இடதுசாரிகள் ஆணாதிக்க முறையைப் பின்பற்றுபவர்களாக இருந்தார்கள். அரசியல் மேடையில் தமது விடுதலைக்காக குரல் எழுப்பிய பெண்கள் மறுபுறத்தில் பிற மதங்களைத் தாழ்வாகக் கருதுகின்றவர்களாக இருந்தார்கள். இறுதியாக உருவான அனைத்து ஆயுதப் போராட்ட அமைப்புக்களும் இத்தகைய ஆதிக்கக் கருத்தியலால் பீடிக்கப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகள் அமைப்பும் இத்தகைய ஆதிக்கக் கருத்தியலுக்குள் கட்டுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. ஒரு அரசியல் தலைமை என்ற வகையில் இதுவரை நிலவி வந்துள்ள சாதிய மற்றும் வர்க்க ஆதிக்கப் பிரிவினரின் தலைமையை விடுதலைப் புலிகள் முறியடித்துள்ள போதிலும் அந்தப் பிரிவினரின் ஆதிக்கக் கருத்தியலை விடுதலைப் புலிகள் அமைப்பினால் முறியடிக்க முடியவில்லை. சாதி ரீதியாகவும் வர்க்க ரீதியாகவும் பாலின ரீதியாகவும் ஆதிக்க நிலையில் இருப்பவர்களை விடுதலைப் புலிகள் அமைப்பு இன்னமும் உயர்வானவர்களாகவே கருதுகின்றது. தனது அமைப்புக்குள் சாதி அடிப்படையிலான சில நடைமுறைகளை கடுமையாக கட்டுப்படுத்தியிருக்கின்ற போதிலும், சமூகத்தில் சாதிய முறைமை பின்பற்றப்படுவதை அந்த அமைப்பினால் தடுக்க முடியவில்லை. சில சாதிய வெளிப்பாடுகளையும், இழிவுபடுத்தல்களையும் தடைசெய்திருக்கின்ற போதிலும், நமது சமூகத்திலிருந்து சாதிய முறைமையை முற்றாகவே அகற்றுவதை நோக்கிய செயற்பாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பு தீவிர அக்கறை கொள்ளவில்லை.

**தனது அங்கத்தினர்களில் ஏறக்குறைய பாதிப்பேர் பெண்களாக இருந்த போதிலும், அதன் இராணுவ வெற்றிகளில் பெண்களின் பங்களிப்பு இன்றியமையததாக மாறிவிட்ட போதிலும் அமைப்பிற்குள்ளும் சமூகத்திலும் ஆணாதிக்க முறையை அகற்றுவதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு பிரக்ஞைபூர்வ-மாகவும் திட்டமிட்ட ரீதியிலும் முயற்சிக்க-வில்லை**. எளிமையான உதாரணம் என்றளவில், பெண் போராளிகளால் கூட ஆணாதிக்க முறைக்கு எதிராக உறுதியுடன் போராடவும் அதன் பிடியிலிருந்து தம்மை விடுவிக்கவும் முடியாத நிலையே தொடர்கின்றது.

பிற மதங்கள் குறித்து ஒரு ஆரோக்கியமான கண்ணோட்டம் நமது தேசத்திற்குள் நிலவியதில்லை. பிற மதக் கொள்கைகளை அவை வலியுறுத்துகின்ற நடைமுறைகளை புரிந்து கொள்ளாததோடு, அவற்றை கீழான-தாகவும் அசிங்கமானதாகவும் கருதுகின்ற மரபு இங்கு நிலைநாட்டப்பட்டுள்ளது. அதிகார படிநிலை முறையும் அதுசார்ந்த வன்முறை மரபும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால் பிற மதத்தினரை நமது தேசத்தில் நிலவுகின்ற அதிகாரப் படிநிலை ஒழுங்கில் ஆகவும் கீழ்நிலையில் வைத்து மதிப்பிடவும் அவர்கள் மீதான வன்முறையை நியாயப்படுத்துவமான கருத்தியல் தர்க்கம் இங்கு ஏற்கனவே உருவாகியுள்ளது. சாதி ரீதியாக அடக்-கப்படுகின்ற பிரிவினர், சாதிய ஆதிக்கத்திற்கு எதிராக கிளர்ச்சியுறும் போது, அவர்களுக்கு எதிரான வன்முறைகள் எவ்விதம் நியாயப்-படுத்தப்படுகின்றனவோ அதேபோன்று மத ரீதியாக கீழ்நிலையில் இருப்பதாகக் கருதப்படுகின்றவர்கள் தமது கட்டுப்பாட்டுக்கு உட்பட மறுக்கும் போதும் அவர்கள் மீது வன்முறைகளைப் பிரயோகிப்பதும் அத்தகைய வன்முறைகள் நியாயப்படுத்தப்படுவதும் சாத்தியமாகின்றது. இத்தகைய உணர்வுக்கு ஒரு சமூகத்தைச் சேர்ந்த அநேகமாக அனைவரும் - அவர்கள் சாதியப் படிநிலையில் எந்த இடத்தில் இருக்கின்றார்கள் என்ற வேறுபா-டின்றி பால்வேறு - பாடின்றி அனைவரும் - ஆட்பட்டு விடுகின்றார்கள்.

முஸ்லீம் தேசத்தின் மீது, ஆரம்பத்தில் மரபுவழித் தலைமைகள் மேற்கொண்ட பிரச்சாரத் தாக்குதல்களுக்கும் பின்னர் ஆயுதப் போராட்ட அமைப்புக்களும் இறுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பும் மேற்கொண்ட வன்முறைத் தாக்குதல்களுக்குமான பின்னணிகளில் ஒன்றாக இத்தகைய ஆதிக்கக் கருத்தியலும் அமைந்திருக்கின்றது. ஒரு தனியான சமூகம் என்ற வகையிலும் தனியான மதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையிலும் முஸ்லீம்கள் வெளிப்படுத்துகின்ற சமூக, கலாச்சார மற்றும் குறிப்பாக அரசியல் தனித்துவங்கள் குறித்து எந்தவொரு தமிழ் அரசியல் தலைமையும் அக்கறை கொண்டிருக்கவில்லை. முஸ்லீம்கள் தமக்குரிய தனியான வழியில் தமக்கான அரசியல் உரிமைகளைக் கோரிய போது அவர்கள் நமது தேசத்தின் கட்டுப்பாட்டை மீறுவதாகவும் நமது தேசத்தின் ஆதிக்கத்திலிருந்து விலகுவதாகவும் எனவே தண்டிக்கப்பட வேண்டியவர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்பட்டது. இந்தக் கருத்தியல் கொண்டிருந்த ஆதிக்க வன்மமானது முஸ்லீம்கள் மீது பல தடவைகள் வன்முறைத் தாக்குதல்களை மேற்கொள்ளவும் அவர்களை நூற்றுக்கணக்கில் படுகொலை செய்யவும், வணக்கத்தலங்களில் வைத்தே அவர்களை மிலேச்சத்தனமான படுகொலை செய்யவும், வடக்கிலிருந்து அவர்களை முற்றாகவே வெளியேற்றவும் காரணமாகியது. விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த சாதி ரீதியில் ஆதிக்க நிலையில் உள்ள ஆண் போராளிகள் மட்டுமல்ல அடக்கப்படுகின்ற பிரிவைச் சேர்ந்த ஆண் போராளிகள் மட்டுமல்ல அனைத்து சாதிகளையும் சேர்ந்த பெண் போராளிகளும் கூட முஸ்லீம்கள் மீதான வன்முறைத் தாக்குதலில் பங்குகொண்டதற்கான காரணங்களில் ஒன்றாக இத்தகைய ஆதிக்கக் கருத்தியலையும் அடையாளம் காணமுடியும்.

3. இராணுவ உள்ளடக்கத்தைக் கொண்டதாகவும் ஆதிக்கக் கருத்தியலால் பீடிக்கப்பட்டுமிருக்கின்றதுமான விடுதலைப் புலிகள் அமைப்பிடமிருந்து ஜனநாயக விழுமியங்களும், ஜனநாயக மரபுகள், ஜனநாகய முறைமைகள் என்பவையும் வெளிப்பட முடியும் என்பது சாத்தியமற்ற எதிர்பார்ப்பாகவே இருக்கும். ஒருபுறம், நவீன ஜனநாயக மரபை அதிகம் பெற்றிராத நமது சமூகத்திலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பு உதித்திருக்கின்றது. கூடவே நமது தேசத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற ஜனநாயக விரோத, ஆதிக்க கருத்தியலை அது ஏற்றுக் கொண்டிருக்கின்றது. மறுபுறம் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ச்சியான யுத்தத்திலும் பன்முனை எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்திலும் ஈடுபட்டுள்ளது. இத்தகைய அக, புற நிலைமைகளும் யுத்தத்திலும் எதிரிகளைத் தோற்கடிப்பதிலும், கொன்றொழிப்பதிலும் அந்த அமைப்பு தொடர்ச்சியாக பெற்று வருகின்ற வெற்றிகளும், சேர்ந்து தான் சார்ந்திருந்த மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகள் குறித்தும் நமது தேசிய இயக்கத்தின் பன்முகப் போராட்ட வடிவங்கள், பன்முகத் தலைமைகள் என்பவை குறித்தும் சிந்திக்க முடியாதவாறு விடுதலை புலிகள் அமைப்பை மாற்றியுள்ளன.

4. மக்களின் சுயாதீனமான போராட்டங்களும் நமது தேசிய இயக்கத்தில் பன்முகத் தலைமைகளும் உருவாவது தனது இருப்புக்கு ஆபத்தானது என்று விடுதலைப் புலிகள் அமைப்பு நம்புகின்றது. இதற்குரிய மிக வெளிப்படையான முதற் காரணமாக ஏனைய அமைப்புக்கள் அனைத்தையும் அது தனது எதிரியாகக் கருதுவதும், தனது வரலாற்றில் பரஸ்பரம் ஒரு அமைப்பை இன்னொரு அமைப்பு அழிக்கக் காத்திருந்த சந்தர்ப்பங்களையே அது சந்தித்து வந்திருக்கின்றது. எனவே இன்னொரு அமைப்பு நமது தேசிய இயக்கத்தில் நுழைவது என்பதை, தன்னை அழிப்பதற்கான முயற்சியாகவே விடுதலைப் புலிகள் அமைப்புக் கருதுகின்றது. **விடுதலைப் புலிகள் அமைப்பைத் தாங்கி நிற்பவர்களாகவும் அந்த அமைப்புக்கான மனித வளங்கள் உட்பட அனைத்து வளங்களையும் வழங்குபவர்களாகவும் மக்களே விளங்குகின்ற போதிலும் மக்களுடன் ஜனநாயக பூர்வமான உறவுகளை ஏற்படுத்தவும் அவர்களின் சுயாதீன போராட்டங்களை அனுமதிக்கவும் தயாராக இல்லை** என்பதையே இன்று வரை அது வெளிப்படுத்தி வந்திருக்கின்றது. இதற்கு பின்வருவன காரணங்களாக அமைகின்றன.

I. ஆதிக்கக் கருத்தியலை ஏற்றுக் கொண்டிருப்பதும் எனவே மக்கள் மீது அதிகாரத்தைச் செலுத்துவது சரியானதே என்ற முடிவும்

II. மக்களது உணர்வுகளையும் அவர்களது நலன்களையும் புரிந்து கொள்ள முடியாதிருப்பது. எனவே மக்கள் சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்படும் போது தமது கட்டுப்பாட்டில் இருந்து விலகிவிடுவார்கள் என்ற அச்சம்.

III. மக்களுக்கும் தமக்குமிடையிலுமான உறவு மிகவும் பலவீனமான நிலையிலும் பல சந்தர்ப்பங்களில் முரண்பட்ட நிலையிலும் இருப்பதை விடுதலைப் புலிகள் அமைப்புப் புரிந்து கொண்டிருப்பது. இந்தப் புரிதல் விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்து கணிசமான மக்கள் வெளி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேற விரும்புகின்றார்கள் என்ற அனுபவத்திலிருந்தும் இந்திய அரசு அல்லது சிறிலங்கா அரசு தமிழ் மக்களுக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுப்பதாகத் தோன்றும் போது அவற்றின் பக்கம் மக்கள் ஈர்க்கப்படுகின்றார்கள் என்பதிலிருந்தும் உருவாகின்றது.

5. **விடுதலைப் புலிகள் அமைப்பு மக்களுக்கு மேலாகத் தன்னை நிலை நிறுத்தியிருக்கின்றது. நமது மக்கள் மத்தியில் நிலவுகின்ற அதிகாரப் படிநிலை ஒழுங்கில் விடுதலைப் புலிகள் அமைப்பு தன்னை அனைவருக்கும் மேலாக, உச்ச இடத்தில் நிறுத்தியிருக்கின்றது. தன்னிடமுள்ள அமைப்பு என்ற அதிகார நிறுவனத்தின் மூலமும் வன்முறைக் கருவிகளின் துணையுடனும் இலகுவான முறையில் தன்னை மேல்நிலையாக்கம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பினால் முடிந்துள்ளது.** நமது மக்களிடையே நிலவுகின்ற சமூகக் கட்டமைப்புக்களை மாற்றுவது குறித்த அக்கறையை விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு போதும் வெளிப்படுத்தியதில்லை. அதிகாரப் படிநிலை குறித்த காத்திரமான விமர்சனப் பார்வைகளையும் அது கொண்டிருக்கவில்லை. இவற்றை நியாயப்படுத்துகின்ற ஆதிக்கக் கருத்தியலை விமர்சனங்கள் எதுவுமின்றி அது ஏற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே அதிகாரப் படிநிலை முறைமையை மாற்றுவதற்குப் பதிலாக அத்தகைய படிநிலை வரிசையில் தனக்குரிய இடத்தை, அதியுயர்ந்த இடத்தை விடுதலைப் புலிகள் அமைப்பு தேர்வு செய்திருக்கின்றது. இவ்வாறு அதிகாரப் படிநிலை அமைப்பின் உச்சியில் விடுதலைப் புலிகள் தமக்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதற்கு அவ்வமைப்பின் உறுப்பினர் சேர்ப்புத் தன்மை ஒரு காரணியாக அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் நமது சமூகத்தில் நிலவுகின்ற அதிகாரப் படிநிலை அமைப்பின் அனைத்து மட்டங்களையும் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். சாதிய இறுக்கமும் வர்க்கத் துருவமயமாக்கலின்மையும் ஆதிக்கக் கருத்தியலும் நிலவுகின்ற சூழலில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் பெரும்பாலும் தமது சமூக இருப்புக் குறித்த சுயபிரக்ஞை அற்றவர்களாக அதில் இணைகின்றார்கள். சாதிய, வர்க்க அதிகாரப் படிநிலையில் மேலிருந்து கீழ் வரையும்; பெண்களும் ஆண்களும்; வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் என நமது தேசத்தின் அனைத்துப் பிரிவினரும் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய முடிகின்றது. இவ்வாறு ஒரு அரசியல் அமைப்பில், பன்முகக் கலப்பில் உறுப்பினர்கள் இணையும் போது, அந்த அமைப்பு தனது சமூகப் பண்பை தீர்மானிக்கும் உயர்ந்த பிரக்ஞையும், ஆழ்ந்த அக்கறையும் கொண்டிருப்பது அவசியம். தனது உறுப்பினர்களின் பன்முகத் தன்மைக்கூடாக, தனது சமூகத்தின் பன்முக நலன்களை சாரப்படுத்துகின்ற கடினமான பணியை நிறைவேற்ற வேண்டிய பாரிய கடப்பாடு அக்கட்சிக்கும், அதன் தலைமைக்கும் இருக்கின்றது. சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரதும் பன்முக நலன்களில் இருந்து, ஒன்றுடன் ஒன்று நெருங்கியதும், பரஸ்பரம் மற்ற பிரிவினர்களுக்கு துணை செய்யக்கூடியதுமான நலன்களை சாரப்படுத்துவதும், அவற்றை தமது உறுப்பினர்களிடையே புரிந்தேற்கச் செய்வதும், மக்கள் மத்தியில் அவற்றை தெளிவாக முன்வைப்பதும் அவசியம். இவ்விதம் சமூகத்தின் பல்வேறு பிரிவினர்களின் நலன்களை முறையாக அரசியலாக்கம் செய்யாத போது, அந்த அமைப்பு மக்களின் நலன்களுடன் தன்னை உள்ளார்ந்த ரீதியில் இணைத்துக் கொள்வது சாத்தியமற்றதாக்குகின்றது. இது அந்த அமைப்பை மக்களிலிருந்து அந்நியப்படுத்தவும், மக்களிற்கு மேலான தன்னை நிறுத்தவும் இட்டுச் சென்று விடுகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் இறுக்கமான, இராணுவத் தன்மை கொண்ட அதிகாரக் கட்டமைப்பும், ஆதிக்க கருத்தியலை விமர்சனமின்றி அது ஏற்றுக் கொண்டிருப்பதும் மக்களின் நலன்கள் குறித்து ஆழ்ந்த அக்கறை கொள்ள முடியாமல் அந்த அமைப்பை தடுத்து வந்திருக்கின்றன. தனது அமைப்பிற்குள் இணைகின்றவர்களை மீற முடியாத அதிகாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிநிலை முறைமைக்குள் உட்படுத்தி, போர்க்குணமிக்க போராளிகளாக மாற்றுவதிலேயே அந்த அமைப்பு முழு அக்கறையும் கொண்டிருக்கிறது. இவ்வாறு வளர்க்கப்படுகின்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள், அமைப்புணர்வும் அர்ப்பணிப்பும், ஆற்றலுமிக்க போராளிகளாக விளங்குகின்ற அதேநேரத்தில் மக்களுடன் தம்மை உயிரோட்டமாக இணைக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பு, அதிகாரமும் ஆற்றலும் அமைப்புணர்வும் கொண்ட ஒரு தனியான நிறுவனமாக, மக்களுக்கு வெளியேறியுள்ள ஒரு அமைப்பாக மாறியிருக்கின்றது. இவ்விதம், நமது மக்களுடன், அவர்களின் எந்தப் பிரிவுடனும் தன்னை இணைத்துக் கொள்ளாதிருக்கின்ற விடுதலைப் புலிகள் அமைப்பு, அதிகாரத்துடன் சமூகப் படிநிலை ஒழுங்கின் உச்சியில் தன்னை நிலை நிறுத்தியுள்ளது. இவ்வாறு அதியுயர் நிலையில் இருப்பதன் காரணமாக அந்த அமைப்பினால் வெவ்வேறு சமூகப் பிரிவினருடன் வெவ்வேறு உறவுகளைப் பேணுவது சாத்தியமாகின்றது. ஒரு புறம், சமூக ஆதிக்க சக்திகளுடனும் மறுபுறம் அடக்கப்படுகின்ற பிரிவினருடனும் நட்புறவைப் பேணுவது அதற்கு சாத்தியமாகின்றது. பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற வர்த்தகர்களிடம் கோடிக் கணக்கில் பணத்தை வசூலிக்கவும் சாரயம் காய்ச்சுகின்ற அடக்கப்படுகின்ற பிரிவைச் சேர்ந்த ஒரு நபரை கடுமையாகத் தண்டிக்கவும் அந்த அமைப்பினால் முடிகின்றது.

எனினும், **இறுதி நோக்கில், விடுதலைப் புலிகள் அமைப்பு சமூக ஆதிக்கப் பிரிவினருக்கு சாதகமாக செயற்பட்டு வந்திக்கின்றது என்பதை அதன் 15 வருட கால அனுபவங்கள் சுட்டிநிற்கின்றன.** தான் வர்த்தகர்களிடம வசூலித்த பணத்தை, அந்த வர்த்தகர்கள் பொருட்களின் விலையை அதிகரித்து மக்களிடமிருந்து மீளப் பெற்று வருவதை விடுதலைப் புலிகள் தடுத்ததில்லை. சாரயம் காய்ச்சுபவரை தண்டிக்கின்ற விடுதலைப் புலிகள் அமைப்பு சட்ட ரீதியாக சாரயத்தை விற்பனை செய்கின்ற வர்த்தகரைத் தண்டிப்பதில்லை. தனக்கு பல ஆயிரக்கணக்கான ருபாய்களை செலுத்திய பின்னர் வெளிநாட்டுக்கு ஒருவர் செல்வதை அனுமதிக்கின்ற விடுதலைப் புலிகள் அமைப்பு, தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து மக்கள் சுயமாக வெளியேறுவதை அனுமதிப்பதில்லை. ஒரு அரசியல் அமைப்பு, தான் எந்த சமூகப்பிரிவை அல்லது பிரிவுகளை பிரதிநித்துவம் செய்கின்றோம் என்ற பிரக்ஞையின்றிச் செயற்படுவதன் விளைவு இது. ஒரு அமைப்பு அனைத்துப் பிரிவினருக்கும் மேலாக தன்னை நிறுத்துவதன் மூலம், தன்னை மக்களின் அமைப்பாக, அடக்கப்படுகின்ற மக்களுக்கு சாதகமாக செயற்படுகின்ற அமைப்பாக மாற்ற முடியும் என்பது ஒரு சாத்தியமற்ற எதிர்பார்ப்பாகவே இருக்கும். ஏனெனில், அதிகாரப் படிநிலையின் உச்சி என்பது, அடக்கப்படுகின்ற பிரிவினரை விட ஆதிக்கப் பிரிவினருக்கே மிகவும் அண்மையிலும் நெருக்கமாகவும் உள்ளது, நெருக்கமானது என்பதைப் புரிந்து கொள்ளும் போது விடுதலைப் புலிகளின் அமைப்பின் செயற்பாடுகள் ஆதிக்கப் பிரிவினருக்கு சாதகமாக அமைந்து விடுவதை விளங்க முடியும்.

6. **விடுதலைப் புலிகள் அமைப்பு குறிப்பாக, அதன் தலைமை அதன் பழமைப்பற்றிலிருந்தும் தனிநபர்வாத பீடிப்பிலிருந்தும் இன்னமும் விடுபடவில்லை. தேசிய உணர்வை வலிமைப்படுத்துவதில் பழமைக்கு ஒரு பாத்திரம் இருக்கின்ற போதும், ஒரு தேசத்தின் தொடர்ந்த வளர்ச்சிக்கு அதன் பயன்பாடு எவ்வளவு தூரம் உதவும் என்பது விவாதத்திற்குரியது. இத்தகைய பழமைப்பற்று பல சந்தர்ப்பங்களில், ஜனநாயக விழுமியங்களுக்கு எதிராக மாறக்கூடியது. தனிநபர் வாதமும் இதன் ஒரு நீட்சியாக தனித்தலைமை என்பதும் நமது மக்கள் அரசியல் இயக்கத்தில் நிலவி வந்திருக்கின்ற ஆதிக்க அரசியல் மரபின் ஒரு தொடர்ச்சி. இந்த மரபுடன் தனது இருப்பு குறித்த அச்சத்தையும் கொண்டிருக்கிற போது, தனிநபர் வாதம் என்பது அதன் தீவிர வடிவத்தைப் பெறுகின்றது.** இந்தத் தீவிரமானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய அரசியல் அமைப்புக்களை அழித்தொழிப்பதாகவும் மக்களின் சுதந்திரத்தையும் அவர்களின் சுயாதீனமான போராட்டங்களையும் மறுப்பதாகவும் அமைகின்றது. இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பு மரபுவழித் தலைமையையும் ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களையும் அகற்றி தோற்றத்தில் வேறுபட்ட ஒரு புதிய தலைமையாக அமைந்த போதிலும், பண்புரீதியாக மரபுவழித் தலைமையிலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பு தீவிரமாக வேறுபடவில்லை. அது மரபுவழித் தலைமையின் தன்மைகளுடன் ஒத்திருக்கின்ற அதேநேரத்தில், அத்தகைய பண்புகளை வன்முறை ரீதியாக வெளிப்படுத்துகின்ற அமைப்பாகவும் மாறியிருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் அடைந்து வருகின்ற மாபெரும் இராணுவ வெற்றிகளையும் மீறி அது வெளிப்படுத்துகின்ற இத்தகைய பண்புகள் நமது தேசிய இயக்கத்தில் அதன் தலைமை குறித்த ஆழ்ந்த கேள்விகளை எழுப்புகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் தேசிய இயக்கத்தின் பன்முகத் தன்மை

இந்தத் தலைப்பில் சில குறிப்புகளை முன்வைப்பதற்கு ஏதுவாக, பின்வரும் விடயங்கள் குறித்து ஒரு விவரணத்தை பெறுவது பொருத்தமாக இருக்கும்.

I. ஈழத்தமிழரின் தேசிய இயக்கத்திற்கும், ஏனைய தேசங்களுக்கும் இடையிலான உறவுகள்

II. ஈழத்தமிழரின் தேசிய இயக்கமும் புலம்பெயர்வுகளும்

III. ஈழத்தமிழரின் தேசிய இயக்கத்தில் ஆணாதிக்கமும் பெண்களும்

## I. ஈழத்தமிழரின் தேசிய இயக்கத்திற்கும், ஏனைய தேசங்களுக்கும் இடையிலான உறவுகள்

ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கு முன்னர், நமது மக்கள் தமக்கிடையேயும், பிற சமூகங்களுடனும் - குறிப்பாக சிங்கள சமூகத்தை - நெருங்கிய தொடர்புகளற்றவர்களாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். வேறுபட்ட பிரதேசங்கள், வாழ்நிலை, ஆட்சி முறை என்பவற்றோடு மிகவும் எல்லைக்குட்பட்டிருந்தது. போக்குவரத்து வாய்ப்புகள் போன்றவை சமூகங்களுக்கிடையே நெருக்கமானதும் தொடர்ச்சியானதுமான ஊடாட்டங்களை சாத்தியமற்றதாக்கியிருந்தன. எனினும் தமக்கருகே வாழ்ந்து வந்திருக்கின்ற முஸ்லீம்களுக்கு, நமது மக்களுக்கும் இடையிலான உறவுகள், பிரதேச ரீதியான வேறுபட்ட தன்மைகள் கொண்டிருந்தன என்பதை ஏற்கனவே பார்த்திருந்தோம்.

ஐரோப்பிய ஆக்கிரமிப்பினூடாக சமூகங்களிற்கிடையிலான தொடர்புகள் ஊடாட்டங்களும் அதிகரித்தன. ஆங்கிலேய ஆதிக்கத்தின் பின்னர் இத்தகைய போக்கு விரிவானதோடு இலங்கையின் சகல சமூகங்களும் ஒரே வகை நிர்வாகமும் அரச முறைமைகளின் கீழ் கொண்டு வரப்பட்டார்கள். இதனால் வெவ்வேறு சமூகங்களுக்கிடையே சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியாக மட்டுமன்றி, அரசியல் ரீதியாகவும் சிக்கலான உறவுகள் உருவாகத் தொடங்கின.

1830க்கும் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசியல் முறையின் கீழ், இனவாரிப் பிரதிநிதித்துவமும், நியமன முறைமையும் பின்பற்றப்பட்டது. இப்பகுதியில் அரைநூற்றாண்டுக் காலத்திற்கு மேல், கொழும்புத் தமிழ் மேட்டுக்குடித் தலைமை ஈழத்தமிழர்களதும் முஸ்லீம்களதும் ஏகப்பிரதிநிதிகளாக சட்டசபையில் நியமிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் இத்தலைமைக்கும் சிங்கள அரசியல் தலைமைக்கும் இடையே நெருக்கமான உறவுகள் நிலவின. 1880 களில் இலங்கை முஸ்லீம்கள் தாம் தனியான இனம் என்றும், எனவே சட்ட சபையில் தனியான பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்று வாதாடிய போது, இராமநாதன் அதற்கு எதிராக செயற்பட்டார். தனது சொந்த மக்களிடமிருந்து அந்நியப்பட்டிருந்த இந்த கொழும்பு மேட்டுக்குடித் தலைமை முற்றிலும் வேறுபட்ட இன்னொரு சமூகத்தில் அரசியல் உரிமைகளையும் தனதாக்கிக் கொள்ள முனைந்த ஆதிக்க வெறியை இராமநாதனின் முயற்சிகள் வெளிப்படுத்தின. ஈழத்தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையிலான அரசியல் முரண்பாட்டின் வித்து, 1880 களில் முளைவிட்டது. இந்நாட்டில் வாழ்ந்த முஸ்லீம்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் உரிமைகள் தொடர்பாக, நமது அரசியல் தலைமைகள் இதன் பின்னர் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருக்கும், அதிகாரப் போக்கின் தொடக்கமாக இராமநாதனின் செயற்பாடுகள் அமைந்தன. பின்னர் 1915இல் சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைகளின் கீழ், முஸ்லீம்கள் மீது இனவன்முறைகள் மேற்கொள்ளப்பட்ட போது, அன்று முன்னின்று நடாத்திய சிங்கள தலைமைகளுக்கு சார்பாக இந்த இராமநாதன் இங்கிலாந்து வரைக்கும் சென்று வாதாடினார். 25 வருடங்களுக்கு முன்னர், எந்த சமூகத்தை தனது இனம் என்று வாதிட்டாரோ, அந்த முஸ்லீம் சமூகத்திற்கு எதிராக இப்போது செயற்படுகின்ற அரசியல் கயமையை இராமநாதன் வெளிப்படுத்தினார்.

1948இல் மலையகத் தமிழர்களின் பிரஜா உரிமையையும் பின்னர் வாக்குரிமையும் பறிக்கப்பட்ட போது, தமிழ் கொங்கிரஸ் தலைமை அதற்கு ஆதரவாக வாக்களித்தது. இதற்கு சில வருடங்களுக்கு முன்புதான் இலங்கையிலுள்ள ஈழத்தமிழர், முஸ்லீம் மற்றும் மலையகத் தமிழர்கள் ஆகியோரின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், 50 : 50 என்ற கோரிக்கையை இத்தலைமை உணர்ச்சிகரமாக முன்னெடுத்து வந்திருந்தது. இப்போது பாராளுமன்றத்தில் தனக்குரிய வாய்புகளும், சலுகைகளும் கிடைத்த போது, எந்த மக்களின் அரசியல் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்று இந்தத் தலைமை வாதிட்டு வந்ததோ அந்த மலையகத் தமிழர்களின் அரசியல் உரிமையும் வாழ்வுரிமையும் பறிக்கப்பட்ட போது, அதற்கு ஆதரவளித்த அரசியல் துரோகத்தை அப்பட்டமாக பிரதிபலித்தது.

இதன் பின்பு, ஈழத்தமிழர்களதும் முஸ்லீம்களதும் தாயகப் பகுதியான வடக்கு கிழக்கில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவதற்கு தமிழரசுக் கட்சி போராடியது. இதை வெற்றி கொள்வதாயின் இக்கோரிக்கையை மையப்படுத்தி இங்குள்ள முஸ்லீம்களின் உண்மையான ஆதரவையும் திரட்ட வேண்டியது அவசியம் இருந்தது. ஆனால் தமிழகத் தலைமையோ மக்களின் பலத்தில் அன்றி பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைப் பலத்தில், இதை செய்து கொள்ள முயற்சித்ததும், முஸ்லீம்களுடன் தன்னை இணைப்பதற்குப் பதிலாக, அவர்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் தேர்தல் கூட்டுக்களை ஏற்படுத்த முற்பட்டது. தேர்தல் கூட்டு என்பது எப்போதும் சந்தர்ப்பவாதமானது, மக்களின் நலன்களை வென்றெடுப்பதற்காக அல்லாமல், தமது சொந்த நலன்களை இலக்காகக் கொண்டே, இக்கூட்டில் சம்பந்தப்படுகின்ற தரப்பினர்கள் செயற்படுகின்றார்கள். எனவே, தேர்தல் வெற்றியில் மட்டுமன்றி, தேர்தலின் பின்னர் நமது நலன்களை மேலும் உறுதிப்படுத்துவதிலும் இந்தத் தலைமைக்கூட்டில் பலம்பெறுகின்ற பிரிவினர் அக்கறை கொள்கின்றார்கள். இத்தலைமைகள் தேர்தல்களில் வெற்றிபெற்ற மறுகணமே, முன்னைய கூட்டிலிருந்து விலகுவதும், புதிய கூட்டுக்களை உருவாக்குவதும் ஒரு சாதாரண செயற்பாடாகவே நிகழ்கின்றது. இங்கு தமிழரசுக் கட்சிக்கும் முஸ்லீம் அரசியல் தலைமைகளுக்கும் இடையில் தேர்தல் கூட்டு என்பதும் இத்தகைய தன்மையைக் கொண்டிருந்தன. தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் முஸ்லீம் உறுப்பினர்கள், அநேகமாக ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டார்கள். இதனை அடிப்படையாகக் கொண்டு, "முஸ்லீம்கள் தொப்பி பிரட்டிகள்" என்பது பகிரங்கமாகவே பிரச்சாரம் செய்கின்ற நிலைக்கு, தமிழரசுக் கட்சித் தலைமை சென்றது. எந்த முஸ்லீம்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்பதை சமஷ்டி கோரிக்கை இலக்காகக் கொண்டிருந்ததோ, அதே முஸ்லீம்களை "தொப்பி புரட்டிகள்" என்று அடையாளப்படுத்துகின்ற நிலைக்கு தமிழரசுக் கட்சி தலைமை சென்றது. ஆனால் ஒரு தெளிவான முரண்நகையாக இதே தமிழரசுக் கட்சித் தலைமை சிங்கள அரசியல்வாதிகளுடன் ஒப்பந்தங்கள் செய்தது மட்டுமன்றி, 1965 இல் ஐ.தே.க. அரசாங்கத்துடன் கூட்டும் அமைத்தது.

இறுதியில் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் நமது தேசிய இயக்கத்தில் தலைமை மாத்திரம் ஏற்றன. நமது மக்களின் அனைத்துப் பிரிவினரையும் மட்டுமன்றி முஸ்லீம்களையும் மலையகத் தமிழர்களையும் கூட, நமது தேசிய இயக்கத்திற்குள் இணைக்க முற்பட்டன. இவர்கள் அனைவரையும் ஒரே தேசமாக அடையாளப்படுத்தவதற்காக, "ஈழவர்கள்" என்றும் "இஸ்லாமியத் தமிழர்கள்" என்றும் அழுத்தமாகப் பெயரிட்டன. வடக்கு கிழக்கில் வாழ்கின்ற முஸ்லீம்களின் தனித்துவத்தையும் அவர்களின் அரசியல் உரிமையையும் வன்மமாக மறுத்து, அவர்களை தமிழ் தேசத்தின் ஒரு கூறாக அடையாளப்படுத்த இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள் கடும் பிரயத்தனப்பட்டன. இந்த முயற்சியில் எதிர்த்து, விலகி, தம்மை அரசியல் ரீதியில் தனித்துவப்படுத்துவதற்கு முஸ்லீம்கள் ஒன்று திரண்டபோது, அவர்கள் மீது கொடூரமான வன்மத் தாக்குதல்களை இந்த அமைப்புக்கள் மேற்கொண்டன. இறுதியில், வடக்கிலிருந்து முஸ்லீம்களை முற்றாகவே வெளியேற்றுகின்ற கொடுஞ்செயல் நிகழ்த்தி முடிக்கப்பட்டது. எந்த முஸ்லீம்களை, நமது தேசம் என்று அடையாளப்படுத்த இந்த ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் கடுமையாக முயற்சித்தனவோ, அதே முஸ்லீம்கள் தம்மை தனியான தேசமாக அடையாளப்படுத்த முயன்ற போது, அவர்களை இனப்படுகொலைக்கும் இனச்சுத்திகரிப்புக்கும் உட்படுத்துகின்ற கொடூர நிலைக்கு இந்தத் தலைமைகள் சென்றன.

இவை அனைத்தும் ஒரு புறம் நமது அரசியல் தலைமையின் குறுகிய நலன்கள், ஆதிக்க வெறி என்பவற்றை வெளிப்படுத்தியதோடு, இன்னுமொரு புறம் சமூகங்களின் தனித்துவம் பற்றியும் தேசம் குறித்தும் நமது மக்களின் தேசிய இயக்கம் குறித்தும் இவை கொண்டிருந்த தவறான புரிதலையும் வெளிப்படுத்தின. ஒரு குறிப்பிட்ட சமூகம் தேசமாக திரள்வதையும், தமக்கென தேசிய இயக்கத்தை முன்னெடுப்பதையும் உந்தித் தள்ளும், அரசியல் காரணிகளை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மாறாக, மொழிரீதியாக வெளிப்படுத்துகின்ற ஒற்றுமை, ஒரே பிரதேசத்தில் வாழ்வது போன்ற அம்சங்கள் வெவ்வேறு சமூகங்களை ஒரே தேசமாக ஒன்றிணைக்கப் போதுமானது என்று முடிவு செய்தன. குறிப்பிட்ட மக்கள் ஒரே தேசமாக திரள்வதில் அவர்களுக்கிடையிலான ஒற்றுமையை விட, அவர்கள் ஏனைய சமூகங்களுடன் கொண்டுள்ள வேறுபாடுகளை - குறிப்பாக அரசியல் ரீதியாக தனித்துவத்தை - நிராகரித்து மொழி மற்றும் பிரதேச ரீதியாக இவ்விரு சமூகங்கள் மத்தியிலும் நிலவுகின்ற ஒற்றுமையை இந்த அரசியல் அமைப்புக்கள் வன்மையாக அழுத்தின. நமது மரபுவழித் தலைமையிடம் நிலவி வந்திருக்கின்ற ஆதிக்க உணர்வின் வன்முறைத் திரட்சியை தம்மிடையே கொண்டிருந்த ஆயுதப் போராட்ட அமைப்புக்கள், தமது ஆயுதப் பலத்தின் மூலம் முஸ்லீம்களை தமிழ் தேசத்திற்குள் பலவந்தமாக இணைக்க முயற்சித்தன. இந்த ஆதிக்க வெறியானது, ஈற்றில் அந்த மக்களை இனஅழிப்புக்கும் இனச்சுத்திகரிப்புக்கும் உட்படுத்துகின்ற அளவுக்கு தீவிரம் பெற்றது.

மலையகத் தமிழர்கள் விடயத்திலும் நமது தலைமையின் குறுகிய நலன்களுக்கும் ஆதிக்கப் போக்குடனும் செயற்பட்டு வந்திருக்கின்றன. 1948இல் அம்மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்படுவதற்கான சட்டத்தை ஆதரித்ததன் மூலம், தமிழ்க் கொங்கிரஸ் தலைமை, சிங்கள ஆதிக்க சக்திகளின் அரசின் கைக்கூலியாக மட்டும் செயற்படவில்லை. கூடவே மலையகத் தமிழர்களின் வாழ்வுரிமை மீது மன்னிக்க முடியாத அத்துமீறலுக்கும் துணை போனது. இதன் பின்னர், "இடதுசாரி" ப் போக்குக் கொண்ட சில ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் "ஈழவர்" என்ற வரையறைக்குள், அந்த மக்களை தமிழ் தேசத்துடன் இணைத்து அவர்களுக்கு ஊடாக தமிழீழ விடுதலையை, வர்க்க விடுதலை முன்னெடுக்க முயற்சித்த தமது அரசியல் முட்டாள்தனத்தை வெளிப்படுத்தின. வரலாற்று ரீதியாகவோ, சமூக ரீதியாகவோ நமது மக்களுடன் எந்தவித இணைப்பையும் கொண்டிராத மலையக மக்களை நமது தேசத்துடன் அடையாளப்படுத்த முயன்றதன் மூலம், அம் மக்களின் அரசியல் தனித்துவத்தையும், உரிமைகளையும் நிராகரிக்கும் ஆதிக்கப் போக்கின் இன்னொரு பிம்பமாக இத்தலைமைகள் விளங்கின.

இவ்வாறு நமது அரசியல் தலைமைகள் மத்தியில், ஏனைய சமூகங்களின் உரிமைகள் தொடர்பாக நிலவி வந்திருக்கின்ற ஆதிக்கப் போக்கின் திரண்ட வடிவமாக இன்று விடுதலைப் புலிகள் அமைப்பு வந்து விட்டிருந்தது. பிற சமூகங்களை சேர்ந்தவர்களை கூட்டுப் படுகொலைக்கு உள்ளாக்குகின்ற வெறித்தனத்தின் உருவகமாக விடுதலைப் புலிகள் விளங்கியது. 1985இல் அனுராதபுரத்தில் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதல்களில் மூலம், தனது கூட்டுப்படுகொலை மரபை விடுதலைப் புலிகள் தொடங்கியது. இதன் பின்னர் அது பல தடவைகள் சிங்கள மக்களையும் முஸ்லீம்களையும் நூற்றுக்கணக்கில் கொன்றது. இதன் உச்ச வடிவங்களில் ஒன்றாக விடுதலைப் புலிகள் அமைப்பு வடக்கிலிருந்து முஸ்லீம்களை முற்றாக வெளியேற்றியது. நமது தேசிய இயக்கத்தின் உறுதிப்பாட்டையும் அதன் வெற்றியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்குள்ளாக்கிய நிகழ்த்தல்களாக இவை அமைந்தன. இத்தகைய கூட்டுப் படுகொலை-களையும் வெளியேற்றங்களையும் நியாயப்படுத்-துவதற்கு முன்வைக்கப்பட்ட காரணங்கள் அரசியல் ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் அவர்களின் அசட்டுத்தனத்தை பிரதிபலிப்பன. குறிப்பிட்ட சில தனிநபர்கள் அல்லது குழுவினர் தம்மைக் காட்டிக் கொடுக்கின்றார்கள் அல்லது தமக்கு எதிராக செயற்படுகின்றார்கள் என்பதோ அல்லது சிறில-ங்காப் படைகளின் தாக்குதலுக்கு பதிலடி என்பதோ ஒரு சமூகத்தின் மீது மேற்கொள்ளப்படும் கூட்டுப் படுகொலைகளுக்கான நியாயம் அல்ல. இவை அப்பட்டமான ஆதிக்க வெறியினதும், இனவெ-றியினதும் வெளிப்பாடு. அதிலும் வருடக் கணக்கில் காத்திருந்து ஒரு நாட்டின் தலைவரையே துல்லியமாக இலக்காகக் கூடிய ஆற்றல்களை கொண்டவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு, காட்டிக் கொடுப்பதாக தான் கருதுகின்ற ஒரு சில நபர்களையோ அல்லது தமக்கு எதிராக செயற்படுகின்றவர்களையோ இலக்காக்க முடிய-வில்லை என்று கூறுவது அசட்டுத்தனத்தை பிரதிபலிக்கவில்லையா? ஒரு சமூகத்தை தூக்-கத்தின் போதும், வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதும் கூட்டுப் படுகொலை மேற்கொள்ள வேண்டியிருந்தது அல்லது வெளியேற்ற வேண்டியிருந்தது என்று கூறுவது இனவெறியின், ஆதிக்க வெறியின் பச்சையான வெளிப்பாடு தவிர, வேறு என்ன?

இத்தகைய நிகழ்த்தல்கள் நமது அரசியல் தலைமையின் பண்புகள் குறித்து, தீவிர விசாரிப்பை மேற்கொள்ளுமாறு எம்மை நிர்ப்பந்திக்கின்றன. **ஒரு சமூகத்தில் அரசியல் தலைமை என்பது அந்த சமூக மரபாகப் பெற்றிருக்கும், ஜனநாயகமான, முற்-போக்கான அம்சங்களை தனக்குள் உள்வாங்-கியதாக அவற்றை தம்மளவில் உணர்வுபூர்வமாக பின்பற்றுவதாக இருக்க வேண்டும். இதன் மூலம் அந்த அமைப்பு தனது அரசியல் இலக்கும், அதனை அடைவதற்கான வழிமுறைகளுக்கும் இடையே தொடர்ச்சியான இணைப்பைப் பேணு-வது சாத்தியமாகும். தனது அரசியல் இலக்கின் நியாயத்தை மட்டுமல்ல, அதன் மக்கள் சாரத்தையும் உறுதியாக பிரச்சாரப்படுத்த முடியும். இதனை நோக்கி பிற சமூகங்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் குவிக்க முடியும்.** இதற்கு மாறாக, தனது அரசியல் இலக்கின் பெயரால், பிற சமூகங்களை இன அழிவுக்கும், கூட்டுப் படுகொலைகளுக்கு உட்படுத்துவது, அந்தப் போராட்டத்தின் அரசியல் நியாயத்தை மட்டுமல்ல, தார்மீக நியாயத்தையும் கூட அகற்றிவிடக் கூடியது.

நமது அரசியல் தலைமைகளின் மத்தியில் தொடர்ச்சியாக நிலவி வந்திருக்கும், ஆதிக்க வெறியை சரிநுட்பமாக பின்பற்றுவதோடு, அதை, அதன் தீவிர வடிவத்திற்கு வளர்த்துச் சென்றிருக்கின்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் தனித்தலைமை நமது தேசிய இயக்கத்தின் வெற்றிக்கு பெரும் அச்சுறுத்தலாகவும், கடும் சவலாகவும் அமைந்து வந்திருக்கின்றது. நமது தேசம் தனக்கருகே வாழ்கின்ற முஸ்லீம் தேசத்துடன் மட்டுமன்றி சமரசமான முறையில் அரசியல் இணக்கத்திற்கு வரமுடியாத ஒரு பகைமைச் சூழலை விடுதலைப் புலிகள் அமைப்பு பேணி வருகின்றது. ஒரு வாழிட எல்லைக்குள் தமது தாயகப் பகுதிகளாக கொண்டிருக்கின்ற இவ்விரு தேசங்களுக்கும் இடையே ஏற்படக் கூடிய சமத்துவமான அரசியல் இணைவுதான் இறுதியில் நமது தேசத்தின் முழுமையான விடுதலையையும் சாத்தியமாக்கும்.

மேலும், நாம் உருவாக்கக் கூடிய தேச அரசுக்குள், நமது தேசத்தைச் சேர்ந்த மக்கள் மட்டுமன்றி, கணிசமான முஸ்லீம்களும், மலையக மக்களும், சிங்கள மக்களும் கூட உள்ளடங்கவுள்ள எதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்நிலையில் இவர்கள் அனைவருக்கும் இடையே சுயாதீனமானதும், சமத்துவமானதுமான உறவுகளும் இணைவுகளும் நிலவக் கூடிய முறைமை இங்கு உருவாக்கப்பட வேண்டும். நமது தேச அரசு என்பது, பன்முக சமூகங்களினதும் பன்முக கலாச்சாரங்களினதும் விளைநிலமாகவும் அவற்றின் சுயாதீன இயக்கம் மற்றும் ஊடாட்டம் சாத்தியமாக்கப்படுகின்ற உயர் ஜனநாயக முறைமையை அடித்தளமாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. ஈழத்தமிழரின் தேசிய இயக்கமும் புலம்பெயர்வுகளும்

நமது மக்கள் மத்தியில், நீண்டகாலமாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில், அனைத்துப் பிரிவினர் மத்தியிலும், குடிப்பெயர்வுகள் என்ற அடிப்படையில், புதிய பிரதேசங்களை நோக்கிய பெயர்வுகள் காலத்திற்கு காலம் இடம்பெற்று வந்திருக்கின்றன. சனச் செறிவு, பொருளாதார நோக்கங்கள், இயற்கை நிர்ப்பந்தம், அந்நியப்படை எடுப்பின் விளைவுகள், வேறுபட்ட சமூகப் பிரிவுகளுக்கிடையிலான முரண்பாடுகள் மற்றும் மோதல்கள் போன்ற பன்முக காரணிகளின் அடிப்படையில் இத்தகைய குடிப்பெயர்வுகள் இடம்பெற்று வந்திருக்கின்றன. இத்தகைய பெயர்வுகளின் மூலம், நமது மக்கள் புதிய வாழிடங்களை உருவாக்குவதும், அங்கு தம்மை தகவமைப்பதற்கேற்ற புதிய உற்பத்தி முறைகள், கலாச்சார மரபுகள்... போன்றவற்றை உருவாக்குவதும் சாத்தியமாகியுள்ளன.

ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் பின், நமது மக்களிடையே புதிய வடிவமாக புலம்பெயர்வுகள் நிகழ்ந்தன. முதலில், யாழ்ப்பாண ஆதிக்கப் பிரிவினர்தான் தெற்கு நோக்கிய பெயர்வுகள் இடம்பெற்றன. குறிப்பாக, கொழும்பிலும், காலி போன்ற துறைமுக நகரங்களிலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, அரச, நிர்வாகப் பணிகளில் பங்கேற்றவர்களும், வர்த்தகர்களும் குடியேறினார்கள். இவர்களைத் தொடர்ந்து சமூக அதிகாரப் படிநிலையமைப்பின் அடுத்தடுத்த நிலைகளில் வைக்கப்பட்டிருந்த பிரிவினர்கள் அரச ஊழியர்களாகவும், தொழிலாளர்கள், வீடுகள் . . . போன்றவற்றில் வேலைசெய்பவர்களாகவும் குடியேறினார்கள். பின்னர் ஆங்கிலேய ஆதிக்கத்தின் போது, மேலும் ஒரு சிறு பிரிவினர், ஆங்கிலேய அரசின் நிர்வாகப் பணியாளர்களாக பர்மா, சிங்கப்பூர், மலேசியா . . . போன்ற நாடுகளுக்கு புலம்பெயர்ந்தார்கள். இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றவர்களிலும், கூடுதல் எண்ணிக்கையில் யாழ் ஆதிக்கப் பிரிவினரே இருந்தார்கள்.

இலங்கையின் "சுதந்திரம்" என்பது, நமது மக்கள் மத்தியில் அரசியல் ரீதியிலான புலம்பெயர்வுகளை தொடக்கி வைத்த நிகழ்வாக அமைந்தது. சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இன அடக்குமுறைகளும் ஆக்கிரமிப்பும் நமது மக்களின் சுதந்திரத்தையும், சுயாதீனமான இயக்கத்தையும் தடுத்ததோடு, அதன் இன அழிப்பு நடவடிக்கைகள், நமது மக்கள் தமது வாழிடங்களிலிருந்து தொடர்ச்சியாக இடம்பெயர வேண்டிய நிலைமையை உருவாக்கின.

நமது மக்கள் மத்தியில் அரசியல் ரீதியிலான முதலாவது புலம்பெயர்வு 1958இல் நிகழ்ந்தது. தனிச்சிங்கள சட்டத்தின் கொந்தளிப்பான சூழலில், தெற்கில் வாழ்ந்த நமது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவன்முறைகள் அவர்களை நமது தாயகப் பகுதிகளுக்கு புலம்பெயரச் செய்தன. தமது சொந்த மண்ணில் இருந்து குடிபெயர்ந்தவர்களாக தெற்கில் வாழ்ந்த நமது மக்கள் இப்போது மீண்டும், நமது மண்ணுக்கு புலம்பெயர வேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டார்கள். "சுதந்திரத்தின்" பின்னர், சிறிலங்கா அரசின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட இனவன்முறைகளின் விளைவாக இடம்பெற்ற இந்த முதலாவது புலம்பெயர்வு, அதாவது நமது மண்ணை நோக்கிய நகர்வானது, நமது மக்களிடையே நமது தாயகம் பற்றிய உணர்வு, அரசியல் வடிவம் பெறுவதற்கான ஒரு தொடக்கமாக அமைந்தது. தமது இருப்பும் வாழ்வுரிமையும் தமது சொந்த மண்ணிலேயே உத்திரவாதம் பெறும் என்ற எண்ணம் நமது மக்கள் மத்தியில் ஊன்றிப் பதிவாவதை இந்த இடப்பெயர்வு தொடக்கி வைத்தது. 1958இல் இடம்பெற்ற இந்த புலம்பெயர்வு, ஒரு தற்காலிக நிகழ்வாக இருந்த போதிலும், இதன் பின்னர் நமது மக்கள் மத்தியில் மிக அடிக்கடி இடம்பெற்ற அரசியல் ரீதியான புலம்பெயர்வுக்குரிய தொடக்கமாக இது அமைந்தது.

1970களில் இருந்து, நமது மக்களிடையே நாடு கடந்ததாகவும் சொந்த மண்ணிலும் புலம்பெயர்வுகள் இடம்பெறத் தொடங்கின. ஒருதரம் "மூளைசாலிகளின் வெளியேற்றம்" என்ற அடிப்படையில் இடம்பெற்ற தொழில்சார் புலப்பெயர்வாக அமைந்தது. யாழ்ப்பாண ஆதிக்கப் பிரிவைச் சேர்ந்த கல்வி கற்ற பிரிவினர், நைஜீரியா, சம்பியா . . . போன்ற நாடுகளுக்கு தொழில்வாய்ப்பு பெற்றுச் சென்றார்கள். மறுபுறம் 1970களின் பிற்பகுதியில், நமது மக்களின் அரசியல் இயக்கமானது, தேசிய இயக்கமாக எழுச்சி பெற்ற நிலையில், அந்த இயக்கத்தில் தீவிரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்பவர்களில் ஒரு பிரிவினர், சிறிலங்காப் படைகளினால் தேடப்பட்ட நிலையில், ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கினார்கள். இவ்வாறு நமது மக்கள் நமது சொந்த மண்ணில் இருந்து வேர்பிடுங்கப்பட்டு, வேறு நாடுகளுக்கு அரசியல் தஞ்சம் கோருபவர்களாக புலம்பெயர்கின்ற காலகட்டம் ஆரம்பமாகியது.

1983 இன அழிப்புக்கள், அரசியல் புகலிடம் கோரி, பிற நாடுகளுக்கு புலம்பெயர்கின்ற நமது மக்களின் எண்ணிக்கையை சடுதியாக அதிகரித்தன. ஐரோப்பிய நாடுகளுக்கும், இந்தியாவிற்கும் பல ஆயிரக்கணக்கான மக்கள் புலம்பெயர ஆரம்பித்தார்கள். 1983இல் தொடங்கிய வேகமான புலம்பெயர்வானது, அதன் உச்ச நிலையில் நமது மக்களின் மூன்றில் ஒரு பிரிவினரை அரசியல் புகலிடம் கோருபவர்களாக மாற்றியது. இத்தகைய புலம்பெயர்வு நமது மக்களது வாழ்வின் ஒரு அம்சம் என்ற அளவுக்கு நிலைபெற்று விட்டது. இவ்வாறு நமது மக்களின் மிகக் கணிசமானோர், பிற நாடுகளுக்கு புலம்பெயர்ந்ததானது, அவர்களின் சமூக, அதிகார கட்டமைப்பிலும், கருத்தியல் மதிப்பீடுகள் தொடர்பாகவும் பெரும் தாக்கங்கள் நிகழக் காரணமாகியது.

ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் போது, நமது மக்கள் தென்னிலங்கை நோக்கி புலம்பெயர்ந்த போதிலும், அது அவர்களின் சமூகஈ அதிகார கட்டமைப்புகளில் பாரிய தாக்கங்களை நிகழ்த்தவில்லை. ஒரே வகையான அரச, நிர்வாக முறைமைகளுக்குள் குறிப்பிட்ட பிரிவினர்கள் மத்தியில், தெளிவான நோக்கங்களோடு நிகழ்ந்தவை என்ற வகையில், இத்தகைய இடப்பெயர்வுகள் ஏற்கனவே நிலவி வந்திருக்கின்ற சமூக, அதிகாரப் படிநிலை அமைப்பில் அடிப்படைத் தாக்கங்களை ஏற்படுத்தவில்லை. கொழும்பில் தம்மை நிலைப்படுத்திக் கொண்ட மேட்டுக்குடிப் பிரிவினர் மத்தியில், கலாச்சார மேட்டிமையாக்கம் நிகழ்ந்து வந்திருக்கின்ற போதிலும், சாதிய, பிரதேச மற்றும் பாலின பாகுபாடுகளும், அவை தொடர்பாக கருத்தியல் மரபும், அதிகார படிநிலை அமைப்பும் அவர்களிடையே மாறாது நிலைத்து வந்தன.

"மூளைசாலிகளின் வெளியேற்றம்" என்ற அடிப்படையில் பிற நாடுகளுக்கு தொழில்ரீதியாக புலம்பெயர்ந்து சென்றவர்களினதும் கூட, தமது சமூகக் கட்டமைப்புக்கள் தொடர்பான கண்ணோட்டத்திலும், நடைமுறையிலும் தீவிர மாற்றங்கள் நிகழவில்லை. குறைந்த எண்ணிக்கையிலும், பெரிதும் சமூக ரீதியில் ஒரேபடி நிலையில் உள்ளவர்களாயும் குறிப்பிட்ட கால ஒப்பந்தத்தில் சென்றவர்களாகவும் இருந்ததால், தமது சமூக உறவுகளின் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமும், சூழலும் இவர்களுக்கு ஏற்படவில்லை.

ஆனால் 1970களின் பிற்பகுதியிலும், குறிப்பாக 1983க்குப் பின்னரும் நமது மக்கள் ஆயிரக் கணக்கில் புலம்பெயர்ந்ததானது, அவர்களின் வாழ்வியல் அம்சங்களின் மீது அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தியது. சிறிலங்கா அரசினதும், அதன் ஆக்கிரமிப்புப் படைகளினதும் இன அழிப்பு நடவடிக்கைகளின் அகோரத்தினால் இடம்பெற்ற இத்தகைய புலப்பெயர்வுகளும் தப்பிப் பிழைத்தலுக்கான தற்காலிக மார்க்கமாக மட்டும் அமையவில்லை. **இன அழிப்பு என்பது, அதன் தீவிர வடிவமான ஆக்கிரமிப்பு யுத்தமாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், நமது மக்கள் மத்தியில் இத்தகைய புலப் பெயர்வுகள் ஒரு நிரந்தரத் தன்மையைப் பெற்றுவிட்டன.**

1983க்குப் பின்னர், மேற்கு நாடுகளை நோக்கி இடம்பெயர்ந்த நமது மக்களின் புலம்பெயர்வு, அதற்கு முன்னர் இடம்பெற்ற பிறநாடுகளுக்கான புலம்பெயர்வுகளிலிருந்து முக்கியமான வேறுபாடுகளைக் கொண்டிருந்தது. முதலாவதாக, முன்னைய புலம்பெயர்வுகள் ஒரு சிறிய எண்ணிக்கையிலானோர் மத்தியில் நிகழ்ந்திருக்க, 1983க்குப் பின்னர் பல ஆயிரக்கணக்கான மக்கள் புலம்பெயர்ந்திருக்கின்றார்கள். இரண்டாவதாக, முன்னர் பெரிதும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆதிக்கப் பிரிவினர் மத்தியிலேயே இத்தகைய புலப்பெயர்வுகள் நிகழ்ந்திருக்கின்ற நிலையில், இப்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏனைய பிரிவினர்கள் மத்தியில் மட்டுமன்றி, வன்னி, கிழக்கு மக்கள் மத்தியிலும் மேற்கு நாடுகள் நோக்கிய புலம்பெயர்வுகள் இடம்பெற்றுள்ளன. மூன்றாவதாக, முன்னைய புலம்பெயர்வுகள் தற்காலிகமானவைகளாக இருக்க, 1983க்குப் பின்னரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்வுகள் நிரந்தரத் தன்மையை பெற்றுள்ளன. இவ்வாறு 1983க்குப் பின்னரான புலம்பெயர்வுகளில் ஏற்பட்டுள்ள இத்தகைய வேறுபாடுகள், புலம்பெயர்ந்துள்ள நமது மக்கள் மத்தியின் பண்புரீதியான மாற்றங்கள் நிகழ்வ-தற்கான சமூகத் தளத்தை உருவாக்கியுள்ளன. மேற்கு நாடுகளின் முற்றிலும் புதிய வாழ்க்கை முறைகள், பொருளாதார, கலாச்சார, அரசியல் உறவுகள், வேறுபட்ட மதிப்பீடுகள் . . . போன்றவை அங்கு புலம்பெயர்ந்துள்ள நமது மக்கள் மத்தியில் வலுவான தாக்கங்களை நிகழ்த்தியிருக்கின்றன. பரந்து, செறிந்த எண்ணிக்கையில், நிரந்தரமான புகலிட வாழ்வைப் பெற்றிருக்கின்ற நமது மக்களுக்கிடையிலான அனைத்துவகை உறவுக-ளும் தீவிர மாற்றங்களுக்குட்பட்டுள்ளன.

சமூக படிநிலை அமைப்பில் வெவ்வேறு நிலை-களில் வைக்கப்பட்டிருப்பவர்களும் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும், பெண்களும், ஆண்களும் ஒரே வகையான சமூக முறைமை-களைக் கொண்ட நாட்டில்/நாடுகளில் திரளாக வாழ நேர்ந்திருப்பது அவர்களுக்கிடையிலான உறவுகளில், தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தியி-ருக்கின்றன. பொருளாதார ரீதியில், ஆதிக்கப் பிரிவினருக்கு சமனாக அல்லது அவர்களை விட, உயர்ந்த நிலைமை அடையக்கூடிய வாய்ப்பை ஏனைய பிரிவினர்கள் பெற்றிருக்கின்றார்கள். இதற்கு முன்னர் தமது சொந்த வாழிடங்களில் எத்தகைய கடினமான, ”இழிவுக்குரியதாக” கருதப்பட்ட வேலைகளையும் செய்து பழக்கப்பட்-டிருந்த இவர்கள் தாம் புலம்பெயர்ந்துள்ள நாட்டின் வேலை நிலைமைகளில் தம்மை எளிதில் தகவ-மைத்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்-றார்கள். படித்து, பட்டம் பெற்றவர்களாகவும் குறிப்பிட்ட தொழில்களுடன் மட்டும் பரிச்சியம் கொண்டவர்களாகவும், ”உயர் சமூக நிலையின் குறுகுறுப்பை” கொண்டவர்களாகவும் இருக்கின்ற ஆதிக்கப் பிரிவினருடன் ஒப்பிடுகையில், குறுகிய காலத்திற்குள் தம்மைப் பொருளாதார ரீதியில் நிலைப்படுத்தக் கூடியவர்களாக இந்த ஏனைய பிரிவினர்கள் இருக்கின்றார்கள்.

புதிய சூழலின் கலாச்சார வாழ்வுக்குள் தம்மை எளிதில் இணைத்துக் கொள்ளக் கூடியவர்களாக, அடக்கப்படுகின்ற பிரிவினர்களும், வன்னி மற்றும் கிழக்கைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றார்கள். இவர்கள் ஏற்கனவே தமது சொந்தப் பிரதேசங்களில் சமூக, கலாச்சார இறுக்கங்கள் தளர்ந்தவர்களாகவும், ஆதிக்கக் கருத்தியலின் பீடிப்பிலிருந்து கணிசமாக விடுபட்டவர்களாகவும் இருந்து வந்திருப்பதால், தாம் புலம்பெயர்ந்துள்ள நாடுகளின் கலாச்சார அம்சங்களையும், மதிப்பீடுகள் . . . போன்றவற்றையும் உள்வாங்குவதில் அதிக சிரமத்தை எதிர்கொள்ளாதவர்களாக இருக்கின்றார்கள்.

இவர்களது பொருளாதார உயர்வின் விளைவாக, தமது குடும்ப அங்கத்தினர்களையும் மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர செய்வது இவர்களுக்கு சாத்தியமாகியுள்ளது. இவ்வாறு, குடும்ப உறுப்-பினர்கள் புலம்பெயர்ந்து வருவதன் காரணமாக இவர்களின் பொருளாதார நிலை மேலும் உயர்வடைகின்றது. அதேவேளை இவர்களில் ஒரு பிரிவினர், கல்விரீதியாக உயர்நிலையை அடைய கூடிய சாத்தியங்களும் உருவாகியுள்ளன. தமது சொந்த பிரதேசங்களில், தமது சமூக, பொருளாதார நிலைமைகளினாலும் உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் மட்டுப்பட்டிருந்ததாலும் கல்வியில் உயர்நிலையை அடைவதற்கான உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக இவர்கள் இருந்து வந்துள்ளார்கள். இப்போது தாம் புலம்பெயர்ந்துள்ள நாடுகளில் கல்வி கற்பதற்கான தடையற்ற சூழல் நிலவுவதாலும் உயர்வடைந்துள்ள தமது பொருளாதார நிலைமை காரணமாகவும் இவர்கள் கல்வி ரீதியாக உயர்நிலையை அடைய கூடிய சாத்தியயத்தை பெற்றிருக்கின்றார்கள். புதிய சூழலில், புதிய முறைமையில் கல்வி கற்பதன் காரணமாக, அவர்கள் புதிய கருத்தியல் தளங்களில் பரிச்சயம்கொள்வது சாத்தியமாகியுள்ளது.

பொருளாதார பலமும் பரந்த கலாச்சார புலமும் ஜனநாயக ரீதியிலான கருத்தியல் மரபும் பெற்றவர்களாக மாறியுள்ள இப்பிரிவினர், தாம் புலம்பெயர்ந்துள்ள நாடுகளில், ஊடகத்துறைக்குள் நுழைய கூடியவர்களாக உள்ளனர். பத்திரிகைகள், சஞ்சிகைகள், கலை வடிவங்கள் என்பவற்றோடு, மின்னியல் ஊடகத்திலும் இவர்கள் தமக்கென தளங்களை உருவாக்கியுள்ளனர். இவற்றினூடாக, தமக்கிடையே நெருங்கியதும் சுயாதீனமானதும் தொடர்ச்சியானதுமான கருத்து பரிமாறல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடல்களையும் நிகழ்த்துவது அவர்களுக்கு சாத்தியமாகியுள்ளது. பெண்ணியம், சாதியம், அதிகாரத்துவம்... என்பவை தொடர்பான பன்முக பார்வைகளையும் புரிதல்களையும் பெறுகின்ற சுதந்திரமான வாய்ப்பு இவர்களுக்கு உருவாகியுள்ளது.

இவ்வாறு, புலம்பெயர்ந்து வாழ்கின்ற, சாதி மற்றும் வர்க்க ரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினர் மத்தியிலும் மத்திய மற்றும் தென் தமிழீழத்தை சேர்ந்த பிரிவினர்கள் மத்தியிலும் இடம்பெற்று வருகின்ற பொருளாதார, கலாச்சார, மற்றும் கருத்தியல் ரீதியான மாற்றங்கள், அவர்களின் சிந்தனைகளிலும் உறவுகளிலும் ஆழ்ந்த தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. தம்மீது இதுவரை காலமும் சுமத்தப்பட்டு வந்திருக்கின்ற சாதிய, வர்க்க, பாலியல், கலாச்சார மற்றும் பிரதேச அடக்குமுறைகளையும் ஆதிக்க கருத்தியலையும் உதறி எறிந்தவர்களாகவும் அவற்றுக்கு எதிரான உணர்வுகளை உறுதியாக பெற்றிருப்பவர்களாகவும் அத்தகைய ஆதிக்க சூழலுக்குள் மீண்டும் உட்பட முடியாதவர்களாகவும் இவர்கள் மாறியுள்ளார்கள்.

மறுபுறத்தே, சாதிய, வர்க்க, பாலியல் ஆதிக்க நிலையிலிருந்த பிரிவினர்களிடையேயும் படிப்படியான மாற்றங்கள் இடம்பெற்று வந்துள்ளன. இவர்கள் தமது சொந்த பிரதேசங்களில் தாம் பெற்றிருந்த ஆதிக்கநிலையை தொடர்ந்தும் பேண முடியாத சூழலில் இப்போது வாழ்கின்றார்கள். அதேநேரத்தில், தமது வாழ்வுக்கான இருப்பை பேண வேண்டிய அவசியத்திலும் இவர்கள் இருக்கின்றார்கள். இவ்வாறு புதிய சூழலுக்கு, அதன் வாழ்வியல் முறைமைக்கு தம்மை தகவமைக்க வேண்டிய நிர்ப்பந்திக்கமானது, அவர்கள் மத்தியில் மெதுவாகவேனும் மாற்றங்கள் நிகழ காரணமாகியுள்ளது. இவர்கள் எதிர்கொள்கின்ற பொருளாதார தேவையானது, எந்த தொழிலையும் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு இவர்களை ஆக்கியுள்ளது. இது, தமது சொந்த பிரதேசங்களில் தாம் ”இழிதொழில்” என அடையாளப்படுத்தி, ஒதுக்கி வைத்த தொழில்களை, இங்கு தாமும் செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. சிறிய வசிப்பிடத்தில், பெண்களும் ஆண்களும் ஒன்றாக வாழ வேண்டீள்ள நிர்ப்பந்தத்தின் காரணமாக, தீட்டு, விலக்கு.. போன்ற வழக்கங்கள் பின்பற்றப்பட முடியாத நிகழ்வுகளாக மறைந்து வருகின்றன. புதிய சூழலில், சாதிய கருத்தியல் மறுவுருவாக்கம் செய்யப்படுவதும் சாதிய முறைமைகள் பின்பற்றப்படுவதும் சாத்தியமற்றிருப்பதால், அவை செயல்வடிவத்தில் பெரும் தளர்வுகளை பெற்றுள்ளன. உருவாகி வருகின்ற இளந்தலைமுறையினரை பொறுத்தவரை, சாதிய, ஆணாதிக்க, பிரதேசவாத கருத்தியல்களும் அவை சார்ந்த நடைமுறைகளும் அந்நியமான, புரிந்து கொள்ளப்பட முடியாத வகையினங்களாக மாற்றம் பெற்றுள்ளன.

இவ்வாறு மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தள்ள பெரும்பாலான நமது மக்களிடையே ஏற்பட்டுள்ள பொருளாதார, கலாச்சார, கருத்தியல் மாற்றங்கள், அவர்களுக்கிடையிலான உறவுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. சாதிய, பிரதேச வேறுபாடுகள் தகர்ந்து வருகின்ற நிலையில், சாதி, பிரதேச, மத வேறுபாடுகள் கடந்த கலப்பு திருமணங்கள் இவர்களிடையே அதிகரித்து வருகின்றன. வெவ்வேறு பிரிவினர்களுக்கிடையிலான உறவுகளும் ஊடாட்டங்களும் மேலும் மேலும் வியாபித்து வருகின்றன. இவ்விதம் மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ள பிரிவினர்கள், புதிய கலாச்சார மற்றும் ஜனநாயக மரபுகளின் பிரதிநிதிகளாக மாறியிருக்கின்றார்கள்.

இந்தியாவிற்கு -குறிப்பாக, தமிழ்நாட்டிற்கு- புலம்பெயர்ந்துள்ள நமது மக்களின் நிலை வேறுபட்ட தன்மையை கொண்டிருக்கின்றது. இவர்களில் ஒரு பிரிவினர், வாடகை வீடுகளில், சுயாதீனமாக வாழ்கின்றனர். எனினும் பெரும்பாலானோர், இந்திய அரசின் இறுக்கமான கட்டுப்பாட்டின் கீழுள்ள முகாம்களில் கடின வாழ்க்கை மேற்கொள்பவர்களாக உள்ளனர். இந்திய அரசினால் போதிய அக்கறைக்குட்பட்டிராத நிலையில், இந்த முகாம்களில் வாழ்கின்றவர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்கொண்டிருக்கின்றார்கள். உணவு மற்றும் வாழ்க்கைக்கான ஆதாரங்கள் என்பவற்றில் பற்றாக்குறையை அனுபவித்து வருகின்ற இவர்கள், இவற்றை பெறுவதற்கான கடினமான உழைப்பில் ஈடுபட வேண்டியவர்களாக உள்ளனர். சாதி, மற்றும் வாக்க ரீதியில் அடக்கப்படுகின்ற பிரிவினராக உள்ள இவர்கள், தாம் புலம்பெயர்ந்து வாழ்கின்ற பகுதிகளில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ள அடக்கப்படுகின்ற பிரிவினரை ஒத்த சமூக, கலாச்சார வாழ்க்கை முறைகளை பின்பற்றி வருகின்றார்கள். தமது சொந்த பிரதேசங்களில் தம்மீது திணிக்கப்பட்டிருந்த வாழ்க்கை முறைகளை பெரிதும் ஒத்ததாகவே புலம்பெயர்ந்த இடத்திலும் இவர்களின் வாழ்க்கை முறைகள் அமைந்துள்ளன. கடினஉழைப்பு, குறைந்த ஊதியம், வறுமை, சமூக அடக்குமுறை, முறைசார் கல்விக்கான வாய்ப்பின்மை, சுகாதார பிரச்சினைகள், நோய்... என்பவற்றோடு, முகாம் பொறுப்பதிகாரிகள், பொலிசார்,...போன்றோரின் அடக்குமுறைகளையும் சுரண்டலையும் நாளாந்தம் அனுபவிப்பவர்களாக அவர்கள் உள்ளார்கள்.

முகாம்களுக்கு வெளியே, வாடகை வீடுகளில் வாழ்கின்ற நமது மக்களில் ஒரு சிறு பிரிவினர், சொந்தமாக தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்களாக இருந்த போதிலும், பெரும்பகுதியனர், மேற்கு நாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ள தமது குடும்ப உறுப்பினர்களின் உதவியில் வாழ்கின்றவர்களாக உள்ளனர். ஏறக்குறைய தமது சொந்த பிரதேசங்களின் சமூக, கலாச்சார, கருத்தியல் அம்சங்களை பெரிதும் ஒத்ததாத தமிழ்நாட்டு சூழல் இருப்பதால், முகாம்களுக்கு வெளியே வாழ்கின்றவர்களின் சமூக உறவுகளில் பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

நமது தாயகப் பகுதிகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நமது மக்கள் மத்தியிலும் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நீடித்து செல்கின்ற யுத்த அழுத்தங்களினால், தமது சொந்த வாழிடங்களிலிருந்து வெளியேறி, முகாம்களிலும் இடம்பெயர்ந்துள்ள இடங்களில் வாடகை வீடுகளில் வசிப்பவர்களாகவும் இவர்கள் இருக்கின்றார்கள். முகாம் மற்றும் அகதி வாழ்வின் குறிப்பான நிலைமைகள், இவர்களிடையே சமூக உறவுகளிலும் கருத்தியல் ரீதியாகவும் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இங்கு வாழ்கின்ற குடும்பங்களில் கணிசமானவை, பெண் போஷகர்களை கொண்டவையாகவும் வறுமையையும் பற்றாக்குறையையும் எதிர்கொள்பவைகளாகவும் உள்ளன. இத்தகைய நிலைமைகள், பெண்களின் சமூக அந்தஸ்த்தை முற்றாக மாற்றியுள்ளன. தமது குடும்பத்தை பேண வேண்டிய பாரிய பொறுப்பை கொண்டிருப்பதானது, பெண்களின் ஆளுமையை மேலும் மேலும் வலிமைப்படுத்தி வந்திருக்கின்றது. உழைப்பில் ஈடுபடுகின்றவர்களாகவும் சமூக விவகாரங்களில் பங்கு கொள்கின்றவர்களாகவும் இவர்கள் மாறியுள்ளார்கள். நீடித்து செல்கின்ற இத்தகைய புலப்பெயர்வு வாழ்வானது, இம்மக்களிடையே ஒழுக்க நெறிகள், பாலியல் உறவுகள், திருமணமுறை... என்பவை தொடர்பாக நிலவி வந்திருக்கின்ற கருத்தியல் மற்றும் நடைமுறைகள் மீது, பலத்த தாக்குதல்களை தொடுத்துள்ளன. இவர்கள் மத்தியில் சுயாதீனமானதும் தளர்வானதுமான பெண்-ஆண் உறவுகளும் சமூக உறவுகளும் படிப்படியே ஆதிக்கம் பெற்று வருகின்றன.

இவ்வாறு, மேற்கு நாடுகளிலும் இந்தியாவிலும் நமது தாயகப் பகுதிகளிலும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற நமது மக்களின் சமூக உறவுகளிலும் கலாச்சார, கருத்தியல் அம்சங்களிலும் ஏற்பட்டு கொண்டிருக்கின்ற மாற்றங்கள், ஒருதேசம் என்றவகையில், நமது மக்களிடையே புதிய, பன்முகதன்மையுடன் கூடிய சமூக பிரிவினரின் தோற்றத்திற்கு வழிவகுத்திருக்கின்றன. மேலும் இவர்களில் மிகப்பெரும்பாலானோர், நமது தேசிய இயக்கத்தின் உறுதியான ஆதரவாளர்களாகவும் அது தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குரிய வளங்களை அளித்து வருபவர்களாகவும் உள்ளனர்.

மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்றவர்கள், நமது தேசிய இயக்கத்திற்கான தமது பங்களிப்புகளை தொடர்ச்சியாக செய்து வருகின்றார்கள். இவர்களில், ஆரம்ப காலங்களில் சிறிலங்கா அரசினால் தேடப்பட்டு, அரசியல் புகலிடம் கோரிச் சென்றவர்கள், ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் உருவாக்கத்தில் கணிசமான பங்கு வகித்திருக்கின்றார்கள். தேசிய இயக்கத்தை கோட்பாட்டாக்கம் செய்ததிலும் கட்சிகட்டமைப்புக்களை உருவாக்கியதிலும் இவர்கள் முக்கிய பங்கு வகித்திருக்கின்றார்கள். 1983க்கு பின்னர் ஆயிரக்கணக்கில் புலம்பெயர்ந்திருப்பவர்கள், நமது தேசிய இயக்கம், ஆயுதபோராட்ட வடிவத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதற்கான பொருள்வகை வளங்களை வழங்குவதில் குறிப்பான பாத்திரம் வகித்து வருகின்றார்கள்.

இந்திய அரசியல் சூழலானது, நமது தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை போராட்டத்திற்கு எதிரான போக்கை கொண்டிருப்பதால், அங்கு புலம்பெயர்ந்து வாழ்கின்ற நமது மக்கள், நமது தேசிய இயக்கம் தொடர்பான தமது உணர்வுகளை பகிரங்கமாக வெளிப்படுத்த முடியதாவர்களாக உள்ளார்கள். எனினும் அவர்கள் மத்தியில், குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே, நமது விடுதலை போராட்டம் தொடர்பாகவும் அதன் வெற்றி தொடர்பாகவும் நம்பிக்கையும் ஆழ்நத எதிர்பார்ப்பும் நிலவுகின்றன.

நமது சொந்த மண்ணில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற நமது மக்கள் மத்தியில், சிறிலங்கா அரசினதும் அதன் ஆக்கிரமிப்பு படைகளினதும் அடக்கு-முறைகளுக்கு எதிரான தீவிர உணர்ச்சிகளும் நமத விடுதலை தொடர்பான உறுதியான நம்பிக்கையும் வேரூன்றியுள்ளன. இத்தகைய உணர்வுகள், ஆயுதப்போராட்டத்திலும் வெகுஜன போராட்-டங்களிலும் நேரடியாக பங்கேற்பவர்களாக இவர்களை மாற்றியுள்ளன.

இவ்வாறு புலப்பெயர்வானது, நமது மக்களில் மூன்றில் ஒரு பகுதியினரை இடப்பெயர்த்தியுள்ளது மட்டுமன்றி, இவர்கள் மத்தியில் சமூக, பொருளாதார, கலாச்சார ரீதியாகவும் விழுமியங்கள் மற்றும் மதிப்பீடுகள் தொடர்பாகவும் பன்முக ரீதியிலான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நமது தேசம் விடுதலை பெற்று, நமக்கான அரசியல், பொருளாதார, கலாச்சார முறைமைகள் உருவாக்-கப்படும்போதும், புத்தம்புதிய சமூக ஒழுங்குகள் நிறுவப்படும்போதும் புலம்பெயர்ந்துள்ள மக்களிடையே உருவாகியுள்ள பன்முக தன்மைகள் சமத்துவமாக உள்ளெடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். நமது தேசத்தின் கூறுகளாக உள்ள இம்மக்கள், நமது தேச விடுதலையின் பின்னர், வெறுமனே பிரஜைகளாக அல்லாமல், நமது தேசத்தை புதிதாய் கட்டமைக்கின்ற, நிர்மாணிக்கின்ற செயன்முறைகளில் உயிரோட்டமாக பங்கேற்கும் வகையில், நமது தேசத்தின் அக, புற நிலைமைகள் அமைய வேண்டும். புலம்பெயர்ந்துள்ள நமதுமக்கள் மத்தியில் உருவாகியுள்ள பன்முக தன்மைகள் நமது தேச கட்டமைப்புக்குள் சமத்துவமான முறையில் இணைக்கப்படும் வகையில், இக்கட்டமைப்புகளில் ஜனநாயக முறைமைகள் உறுதியாக பேணப்பட வேண்டும்.

## III. ஈழத்தமிழர் தேசிய இயக்கத்தில் ஆணாதிக்கமும் பெண்களும்

மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் என வேறுபட்ட பிரதேசங்களில் வாழ்ந்த நமது மக்களிடையே, ஆணாதிக்க முறைமையானது வேறுபட்ட பண்புகளை கொண்டிருந்தன என்று முன்னர் பார்த்தோம். பெண்கள் தொடர்பான மதிப்பீடுகளும் பெண்களின் சுயாதீனமும் இம்மூன்று பிரதேசங்களிலும் வேறுபட்டிருந்தன. எனினும் ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் பின்னர் நமது மக்களின் சமூக, பொருளாதார, கலாச்சார முறைமைகளில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள், ஆணாதிக்க முறைமைகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தின.

இந்நாட்டை தமது வர்த்தக மூலமாக மாற்றுவதில் போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் தீவிர அக்கறை கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட ஒன்றரை நூற்றாண்டு காலமாக நமது மக்களை ஆக்கிரமித்-திருந்த ஒல்லாந்தர், தமது நிர்வாக முறைமைகளை சீராக மேற்கொள்வதற்கு உதவக் கூடிய பிரிவினரை உள்நாட்டிலேயே உருவாக்க வேண்டிய அவசியத்தை விரைவிலேயே உணர்ந்தார்கள். இவ்வாறு உருவாக்கப்பட்ட பிரிவினர் ஆண்களா-கவே இருந்தார்கள். அதிகரித்து கொண்டிருந்த வர்த்தக நடவடிக்கைகளிலும் நிருவாக முறைமைக-ளிலும் முற்றிலும் ஆண்களே பங்கேற்றார்கள். இவ்விதம் ஆண்களின் வெளிநோக்கிய ஊடாட்டங்கள் அதிகரித்ததாலும் அதிகார நிறுவனங்களில் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றதாலும் நமது மக்கள் மத்தியில் ஆண்களின் அந்தஸ்த்து அதிகரித்ததோடு, ஆணாதிக்கமும் மேலும் வலுவாக நிலைபெற்றது. வர்த்தக மற்றும் நிர்வாக விடயங்களில் பங்கேற்கின்ற ஆண்கள், பிரதேச வேறுபாடுகள் கடந்து, நமது மக்களின் அனைத்து பிரிவினர் மத்தியிலும் உருவாகி வந்ததால், ஆணாதிக்க முறைமையும் இந்த அனைத்து பிரிவினர் மத்தியிலும் ஒரே தன்மையை கொண்டதாக மாற்றமடைந்து வந்தது. ஆங்கிலேய ஆக்கரமிப்-பின் பின், இந்த நிலைமைகள் மேலும் தீவிரம-டைந்ததால், ஆணாதிக்க முறைமை மேலும் வலிமை பெற்றது. இப்போது புதிதாக அறிமுகப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்ட அரசுத் துறையிலும் ஆண்களின் முற்றான ஆதிக்கம் நிலைபெற்றது. கல்வியும் அரச மற்றும் நிர்வாக உத்தியோகங்களும் சமூக அந்தஸ்திற்கும் அதிகாரத்திற்குமான குறியீடுகளாக மாறியதால். ஆண்களின் அந்தஸ்த்து தெளிவாகவே உயர்ந்த நிலையை அடைந்தது.

இவ்விதம் நமது மக்கள் மத்தியில் ஆண்களின் அந்தஸ்த்தும் ஆணாதிக்கமும் அதிகரித்து வந்த அதேநேரத்தில், மறுபுறத்தே, நமது பெண்களின் சுயாதீனமும் அவர்களின் சமூக அளவிலான ஊடாட்டங்களும் அதிகரிக்கின்ற போக்கும் உருவாகியது. குறிப்பாக, ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய கல்வி முறையில், பெண்களும் பங்கு கொள்ள கூடிய நிலையேற்பட்டதால், கல்வி கற்கின்ற பெண்களின் எண்ணிகை படிப்படியே அதிகரித்து வந்தது. கல்வி கற்பது என்பது, பெண்ககளின் நடமாட்டத்தையும் பன்முக விடயங்களுடன் அவர்கள் தொடர்பு கொள்வதையும் தமக்கிடையிலும் கூடவே, ஆண்களுடனும் ஊடாட்டம் கொள்வதையும் சாத்தியமாக்கின. இவை அனைத்தும் பெண்களின் சிந்தனையிலும் ஆளுமையிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கல்வி கற்ற பெண்கள் கணிசமான எண்ணிக்கையில் உருவாகியிருந்தார்கள்.

நமது மக்களிடையே, ஒருபுறம் ஆண்களின் அதிகாரமும் மறுபுறம் பெண்களின் சுயாதீனமும் விழிப்புணர்வும் அதிகரித்து வந்திருக்கின்ற முரண்பட்ட தன்மையானது, அரசியல் தளத்திலும் தெளிவாக பிரதிபலித்தது. 1830களில் நவீன அரசியல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, இன்றைய ஆயுத போராட்ட கட்டம் வரை, நமது அரசியல் இயக்கமானது, ஆண்களினால் கட்டுப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. எனினும், ஒவ்வொரு கட்டத்திலும் ஆண்தலைமைகளின் எதிர்ப்புகளையும் மீறி, நமது பெண்களின் அரசியல் பங்கேற்பு, படிப்படியாகவும் திடமாகவும் அதிகரித்து வந்திருக்கின்றது.

1931ல் பெண்களுக்கு வாக்குரிமைகள் வழங்கப்படுவதை இராமநாதன் போன்ற மாபெரும் தலைவர்கள் எதிர்த்தபோது, நமது பெண்கள் ஏற்கனவே யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸில் இணைந்து அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்பவர்களாக இருந்தார்கள். பெண்களின் விடுதலை, பெண்களுக்கு சமவுரிமை..போன்ற கோரிக்கைளை முன்வைத்து செயற்படுபவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரசுக்கு பின்னர், இடதுசாரி கட்சிகளில் நமது பெண்களின் அரசியல் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது. இந்த கட்சிகளில் செயற்பட்ட பெண்கள், பெரும்பாலும் அக்கட்சிகளின் தலைமை உறுப்பினர்களாக இருந்த ஆண்களின் துணைவியர்களாக இருந்த போதிலும், இவர்கள் பெண்கள் தொடர்பான விடயங்களில் அதிக அக்கறையுடன் செயற்படுகின்றவர்களாக இருந்தார்கள்.

நமது பெண்களின் அரசியல் பங்கேற்பானது, தமிழரசு கட்சியின் தோற்றத்தின் பின்னர் வேகமாக அதிகரித்தது. செயலூக்கமிக்க கட்சி உறுப்பினர்களாகவும் உணர்ச்சிமிக்க கட்சி பிரச்சாரகர்களாகவும் வெகுஜன போராட்டங்களில் உறுதியுடன் பங்கு கொள்கின்றவர்களாகவும் நமது பெண்கள் மாறினார்கள். நமது பெண்களின் இத்தகைய தீவிர அரசியல் பங்கேற்பு, தமிழர் விடுதலை கூட்டணி, அரசியல் தலைமையாக செயற்பட்ட அந்திம காலம்வரை தொடர்ச்சியாக அதிகரித்து வந்தது. எழுச்சியடைந்து வந்த நமது தேசிய இயக்கத்தின் விரிந்து, பரந்த போராட்ட அலையின் வீச்சுக்கேற்ப, நமது பெண்களின் அரசியல் பங்கேற்பும் ஆழ்ந்தகன்று வந்தது. சிறிலங்கா அரசின் இனஅடக்குமுறைகள் எந்தளவுக்கு தீவிரமடைந்து வந்ததோ, அந்தளவுக்கு நமது பெண்களின் அரசியல் பங்கேற்பும் வீச்சம் பெற்றது. நமது தேசிய அரசியலிலும் அதன் தலைமையிலும் ஆண்களின் ஆதிக்கமானது, இன்னமும் வலிவுடன் நிலைபெற்றிருந்த போதிலும், கௌரவத்துடன் நினைவு கூரப்படுகின்ற தந்தை செல்வநாயகம் அவர்கள் தமது அரசியல் வாழ்வில் ஒருமுறையேனும் பெண்களின் உரிமைகள் தொடர்பாக எத்தகைய கருத்தையும் வெளியிடாத போதிலும் பெருகித் திரண்ட நமது பெண்களின் அரசியல் பங்கேற்பை தடுத்திடும் ஆற்றலை, அவரோ அவர் தலைமை தாங்கிய கட்சிகளோ கொண்டிருக்கவில்லை. நமது மக்களின் அரசியல் இயக்கத்தை உற்றுநோக்கும் ஒருவர், அரசியல் தளத்தல் ஆண்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாக தலைமை வகித்து வந்திருக்கின்ற போதிலும், எழுச்சி பெற்று வந்த பெண்களின் அரசியல் உணர்ச்சியை ஆண்களினால் கட்டுப்படுத்தவோ, அவர்களின் அரசியல் பங்கேற்பை தடுக்கவோ முடியவில்லை என்பதை தெளிவாக அடையாளம் காண முடியும். **நமது மக்கள் மீது கவிழ்ந்து வந்த சிறிலங்கா அரசின் இனஅடக்குமுறைகளுக்கு எதிராக நமது பெண்கள் மத்தியில் ஏற்பட்ட விடுதலை உணர்வு, ஆண்களின் ஆதிக்க உணர்வுகளை விஞ்சும் சக்தியை பெற்றிருந்தன. நமது பெண்கள் மத்தியில் தொடர்ச்சியாக அதிகரித்து வந்த விடுதலை உணர்ச்சியின் உச்ச திரட்சியாக, அவர்களின் ஆயுதப் போராட்ட பங்கேற்பு அமைந்தது.**

ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் உருவான ஆரம்ப காலத்திலிருந்தே, அவற்றில் பெண்களின் பங்களிப்பு இடம்பெற்று வந்திருக்கின்றது. அந்த அமைப்புக்களுக்கு தேவையான தகவல்களை சேகரித்து வழங்குதல், அவற்றின் ஆவணங்கள், சாதனங்கள் என்பவற்றை பாதுகாத்தல், அந்த அமைப்புக்களை சேர்ந்த உறுப்பினர்களிடையே தொடர்புகளை பேணுதல்... என ஆரம்பித்து, அந்த அமைப்புக்களில் முழுநேரமாக செயற்படுகின்ற உறுப்பனர்கள் என்ற நிலைக்கு பெண்கள் படிப்படியே மாறினார்கள். 1983 இனஅழிப்பின் பின்னர், பெண்கள் நேரடியாகவே ஆயுத அமைப்புக்களில் இணைவதும் ஆயுத பயிற்சிகளில் பங்கு கொள்வதும் பெரும் வீச்சில் இடம்பெற்றன. தம்மீது மரபாக்கப்பட்டிருந்த சமூக தளைகள் அனைத்தையும் அறுத்தெறிந்தவர்களாக, தமது சொந்த முடிவின்படி இவர்கள் ஆயுத அமைப்புக்களில் இணைந்து கொண்டார்கள்.

ஆரம்பத்தில் ஆயுத போராட்ட அமைப்புக்களில் இணைந்து கொண்ட பெண்களின் அனுபவம் நம்ப முடியாத அளவுக்கு எதிர்மறை தன்மை கொண்டதாக அமைந்திருந்தது. தேசிய விடுதலை போராட்டத்தில் பெண்களை இணைப்பதற்குரிய தெளிவான செயற்திட்டங்கள் எதனையும் இந்த அமைப்புக்கள் கொண்டிராத நிலையில், இவற்றில் இணைந்து கொண்ட பெண்கள் படிப்படியே அரசியல்நீக்கம் செய்யப்பட்டு வந்தார்கள். அவர்களின் போராட்ட உணர்ச்சியுடனும் தேச விடுதலை போராட்டத்தின் அன்றைய அவசியத்துடனும் பொருந்தாத செயற்பாடுகளை (பிரச்சாரம், பாலர் பாடசாலைகள் நடத்துதல், குடிசை கைத்தொழில்கள்....என) மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இவர்கள் உள்ளாக்கப்பட்டார்கள். இதன் உச்ச வடிவமாக, நமது தேசத்தின் விடுதலைக்காக ஆயுதப்போராட்டத்தில் பங்கேற்கின்ற உயரிய இலட்சியத்துடன் தமது அமைப்புக்களில் இணைந்து கொண்ட பெண்களை வெறும் பாலியல் பண்டங்களாக பயன்படுத்திய இழிநிலைக்கு, அந்த அமைப்புக்களின் ஆண் உறுப்பினர்களில் ஒரு பிரிவினரும் தலைமைகளின் ஒரு பிரிவினரும் மாறினார்கள்.

எனினும் ஆண்களின் ஆதிக்க உணர்வுகளையும் இழிநிலைகளையும் மீறி, நமது பெண்கள் தம்மை உண்மையான போராளிகளாக மாற்றி வந்தார்கள். உறுதியானது விடாப்பிடியானதுமான கோரிக்கைகளினூடாக, ஆயுதப் பயிற்சிகளை பெற்றவர்களாகவும் சிறிலங்கா படைகளுக்கு எதிரான தாக்குதல்களில் நேரடியாக பங்கேற்கின்றவர்களாகவும் இவர்கள் மாறினார்கள். நமது பெண்களின் தளரா உறுதியும் அவர்களிடம் அணையாது கனன்று கொண்டிருக்கின்ற தேசிய உணர்ச்சியும் மாபெரும் வரலாற்று உதாரணமாக அவர்களை பரிணமிக்க செய்திருக்கின்றன. நமது பெண்கள் தமது சொந்த முயற்சியினூடாகவே தீரமிக்க போராளிகளாகவும் வெற்றியை உறுதிப்படுத்துகின்ற படையணிகளாகவும் உறுதியுடன் அர்ப்பணிக்கின்ற தற்கொலை போராளிகளாகவும் தம்மை உருவாக்கி வந்திருக்கின்றார்கள். ஆரம்பத்தில் பெண்களை உள்வாங்குவதை முற்றாக தவிர்த்து வந்த விடுதலை புலிகள் அமைப்பில் இன்று கிட்டத்தட்ட அரைப்பங்கினர் பெண்போராளிகளாக விளங்குவது தற்செயல் நிகழ்வல்ல. விடுதலை புலிகள் அமைப்பின் தலைவரும் அதன் உறுப்பினர்களும் பெண்கள் தொடர்பாக எத்தகைய ஆதிக்க கருத்துக்களை கொண்டிருந்த போதிலும், நமது பெண்கள் மத்தியில் பெருகி, திரள்கின்ற விடுதலை உணர்ச்சியும் போராட்ட வலிமையும் அந்த அமைப்பின் முக்கிய பிரிவினராக நமது பெண்கள் மாறுவதை தவிர்க்க முடியாத அவசியமாக்கியுள்ளன.

இவ்வாறு **நமது மக்களின் தேசிய இயக்கத்தில், பெண்களின் பங்கேற்பு, ஒரு திடமான வளர்ச்சியை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெற்று வந்திருக்கின்ற போதிலும், அரசியல் அமைப்புக்களிலும் நமது முழு அரசியல் இயக்கத்திலும் ஆண்களின் ஆதிக்கமும் ஆணா-திக்க கருத்தியலும் இன்னமும் தளர்வுறவில்லை, பெண்களின் அரசியல் பங்கேற்பானது, ஆண்களின் பங்கேற்புக்கு சமமானதாக இன்னமும் புரிந்தேற்-கப்படவில்லை. நமது தேசிய இயக்கம் நெடுகிலும் அதன் வெவ்வேறு போராட்ட வடிவங்களிலும் நமது பெண்கள் உணர்வுபூர்வமாக வகித்து வந்திருக்கின்ற உயரிய பங்குபற்றலின் முக்கியத்-துவம் இன்னமும் புரிந்து கொள்ளப்படவில்லை.** யுத்த களத்திலும் அதற்கு வெளியேயும் நமது தேசிய இயக்கத்தின் ஒளிச்சுடரை அணையாது காப்பதில் நமது பெண்கள் ஆற்றி வருகின்ற அளப்பரிய அர்ப்பணிப்புகள், அவற்றுக்குரிய சமூக மற்றும் அரசியல் அர்த்தத்தை இன்னமும் பெறவில்லை. நமது தேசத்தின் விடுதலையில் மட்டுமல்ல, நமது தேசத்தை புத்தம்புதிதாய் நிர்மாணத்திலும் நமது பெண்களுக்குள்ள முக்கிய இடம் இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை.

**ஏடறிந்த வரலாற்றில் இதுவரை நடந்துள்ள புரட்சிகள் அனைத்தும், ஒருவகை ஆணாதிக்க முறைமைக்கு பதிலாக, இன்னொருவகை ஆணாதிக்க முறையை நிறுவுவதற்கான முயற்சியே என்ற பெண்ணிய வாதத்தில் அடங்கியுள்ள உண்மை நமது தேசிய இயக்கத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.** நவீன போராட்டங்கள் அனைத்திலும் பெண்களின் பங்கேற்ப கணிசமான அளவுக்கு இருந்திருக்கின்ற போதிலும், ஒவ்வொரு புரட்சியின் முடிவிலும் ஒவ்வொரு வெற்றியின் முடிவிலும் பெண்கள் மீண்டும் ஆண்களின் அடிமைகளாக்கப்படுவதே எதார்த்தமாகியுள்ளது. இத்தகைய பொதுப்போக்கிற்கு நமது போராட்டம் விதிவிலக்காக அமையவில்லை என்பதை இன்றுவரையிலான நமது தேசியபோராட்ட அனுபவங்கள் உணர்த்துகின்றன. விடுதலை புலிகள் அமைப்பில் அரைப்பங்கினராக பெண்கள் இருக்கின்ற போதிலும், நமது தேசிய விடுதலை போராட்டத்தை மாபெரும் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து செல்கின்றவர்களாக நமது பெண்கள் விளங்குகின்ற போதிலும் இப்பெண்கள் கூட தம்மளவில் ஆணாதிக்க முறைமைகளை தவிர்க்க முடியாதவர்களாக உள்ளனர். இவ்வாறு நமது தேசிய இயக்கத்திலும் சமூகத்திலும் ஆணாதிக்க முறைமைகள் தொடர்ச்சியாகவும் புதிய வடிவங்க-ளிலும் மறுவார்ப்பு செய்யப்பட்டுவருகின்றன என்ற உண்மை, நமது விடுதலையும் கூட, இன்னொரு வடிவிலான ஆணாதிக்க முறைமை நிறுவப்படு-வதை நோக்கியே செல்கின்றது என்ற அச்சத்தை நமக்கு உணர்த்துகின்றன. இத்தகைய போக்கை தடுத்து, பால்நிலை சமத்துவத்துவமிக்க ஒரு புதிய சமூக அமைப்பை படைப்பதை இலக்காக கொள்-வதே நமது விடுதலையை அர்த்தமுள்ளதாக்கும். நமது தேசத்தையும் நமது தேசிய இயக்கத்தையும் தமது தோள்களில் சுமந்திருக்கின்ற நமது பெண்களின் பூரண விடுதலையை உத்தரவாதப்-படுத்துவது என்பது, நமது தேசிய இயக்கத்தின் அடிப்படை இலக்குகளில் ஒன்றாக நிலைநிறுத்-தப்பட வேண்டும். நமது தேசிய இயக்கத்தில் உள்-ளடங்கியுள்ள ஜனநாயக சாரத்தின் வெளிப்பா-டாகவும் அதன் பன்முகதன்மைகளின் நிரூபணமா-கவும்நமது பெண்களின் பூரண சமத்துவம் ஆழப் பொறிக்கப்பட வேண்டும். ஆணாதிக்கம் குறித்தும் அதன் அடக்குமுறை வடிவங்கள் குறித்தும் நமது தேசத்தின் அனைத்து பிரிவினர் மத்தியிலும் ஏற்பட கூடிய புரிதலும் கருத்தியல் மாற்றமும் இதை சாத்தியமாக்கும்.

நமது தேசத்தின் அனேகமாக அனைத்து பிரிவனரும் நமது தேசிய இயக்கத்தில் தமது நலன்களை கொண்டிருக்கின்றார்கள். நமது தேசிய இயக்கத்தின் இறுதி இலட்கியமான தனியான அரசு என்பது, நமது தேசத்தின் அனைத்து பிரிவனரதும் நலன்களையும் உரிமைகளையும் கௌரவத்தையும் உறுதிப்படுத்துகின்ற ஒரு மக்கள் குடியரசாக அமைய வேண்டும். இவ்வாறு நமது தேசத்திலுள்ள அனைத்து பிரிவினர்களினதும் நலன்களும் நமது குடியரசில் பேணப்படுவது என்பது, ஒவ்வொரு பிரிவினரும் தமது நலன்களை நமது தேசிய இயக்கத்தில் உறுதியாக முன்வைப்பதன் மூலமே சாத்தியமாகும். இத்தகைய பன்முக நலன்களுக்-கிடையிலான ஊடாட்டங்களும் அவற்றுக்கிடை-யிலான பொதுமைகளும் அடையாளம் காணப்-பட்டு, சட்டபூர்வமாகவும் நடைமுறைரீதியாகவும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமாயின், இவை நமது அரசியல் தளத்தில் பேசுபொருளாக்கப்பட வேண்டும். ஒரு சமூகப்பிரிவின் நலன்கள் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளத்தில் பேசுபொருளாக்கப்படுவதற்கு, அந்த சமூகப்பிரிவை உள்ளார்ந்த ரீதியாக பிரதிநிதித்து-வப்படுத்துகின்ற அரசியல் நிறுவனம்( அல்லது அரசியல் கட்சி ) அவசியமாகின்றது.

நமது தேசம் என்பது, ஒரேவகையான நலன்களை கொண்ட மக்கள் திரளின் தொகுப்பு அல்ல. மாறாக, தமக்குள் வேறுபட்டும் முரண்பட்டும் உள்ள பன்முக மக்கள் பிரிவுகளின் இணைப்பாகவே நமது தேசம் இருக்கின்றது. பிரதேசரீதியாக, சாதிரீதியாக, பால்ரீதியாக, வர்க்கரீதியாக வேறுபட்டும் முரண்பட்டும் புலம்பெயர்ந்தும் விளிம்புநிலை மக்கள், மாணவர்கள், இளைஞர்கள் எனவும் மிகப் பரந்த வீச்சை கொண்ட பன்முக பிரிவுகளின் தொகுப்பாக நமது தேசம் உள்ளது. இப்பிரிவினரை தனக்குள் கொண்டதாக, இப்பிரிவினரின் ஆதரவில் தங்கியிருக்கின்ற அமைப்பாக விடுதலை புலிகள் அமைப்பு விளங்குகின்ற போதிலும், இவ்வனைத்து பிரிவுகளினதும் நலன்களை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துகின்ற அரசியல் அமைப்பாக அது தன்னை உருவாக்கி கொள்ளவில்லை. நமது தேசிய இயக்கத்தின் தனித்தலைமையாக விடுதலை புலிகள் அமைப்பு செயற்பட்டு வந்திருக்கின்ற இந்த 15 வருடகால அனுபவமானது, நமது தேசத்தின் அனைத்து பிரிவினரையும் உள்ளார்ந்த ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்த கூடிய ஆற்றலை அந்த அமைப்பு கொண்டிருக்கவில்லை என்பதை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

விடுதலை புலிகள் அமைப்பு உலகின் முதல்தர கெரில்லா அமைப்பாக தன்னை உருவாக்கியுள்ளது. தனது அளப்பரிய அர்ப்பணிப்புகளினாலும் செழித்து விளையும் போர்க்குணாம்சத்தினாலும் தேசிய உணர்ச்சியினாலும் விடுதலை வேட்கை-யினாலும் நமது தேசிய இயக்கத்தை மங்கா வலி-வுடன் முன்னெடுத்து செல்கின்றது. இவ்வாறிருந்தும் விடுதலை புலிகள் அமைப்பு நமது தேசத்தின் அனைத்து பிரிவினர்களினதும் அரசியல் பிரதிநிதியாக தன்னை உள்ளார்ந்த ரீதியில் கட்டமைக்க முடியாதிருக்கின்றது என்ற எதார்த்தம் தீவிர அக்கறைக்குரியது. நமது தேசிய இயக்கத்தில் உள்ளடங்கியுள்ள மக்கள் சாரத்தை புரிந்து கொள்ளும்போது, விடுதலை புலிகள் அமைப்பில் வெளிப்படுகின்ற இத்தகைய முரண்தன்மையை விளங்கிக் கொள்ள முடியும்.

நமது தேசிய இயக்கமானது, தனியான அரசை அமைத்தல் என்ற இலட்சியத்தில் திடமாக எழுச்சியுற்ற 1970களின் இறுதிப்பகுதியும் இந்த மகத்தான இலட்சியத்தை இலக்காக்கிய தேசிய இயக்கத்தில் நமது மக்களின் வெகுஜன பங்கேற்பு திரண்டெழுந்த 1980களின் முற்பகுதியும் நமது தேசிய இயக்கத்தின் உட்பொருளை மிகத் தெளிவாகவும் துல்லியமாகவும் சுட்டிக்காட்டுகின்-றன: பன்முகதன்மை. இதற்கு முன்னர் நமதுமக்-களின் அரசியல் இயக்கத்தில் நிலவியிராத பன்முகதன்மை என்ற இந்த அரசியல் உட்பொருள் இந்த காலகட்டத்தில் துலாம்பரமாக வெளிப்பட்டது. பன்முக வேறுபாடுகளும் பன்முக நலன்களும் கொண்ட நமதுமக்கள் நமது தேசிய இயக்கத்தில் ஒன்று திரண்டார்கள், பன்முக தலைமைகளை உருவாக்கினார்கள், அத்தலைமைகளை ஆதரித்-தார்கள். நமதுமக்களினதும் நமது தேசிய இயக்-கத்தினதும் ஜனநாயக சாரத்தை வெளிப்படுத்து-வதாக அமைந்த இந்த பன்முகதன்மைதான் நமது தேசிய இயக்கத்தின் எழுச்சிக்கும் இதன் வீறார்ந்த, முன்னோக்கிய நகர்வுக்கும் காரணமாகியிருக்-கின்றது.

**நமது தேசிய இயக்கத்தில் உறுதியாக நிறுவப்பட வேண்டியிருந்த இந்த பன்முக தன்மையானது, விடுதலை புலிகள் அமைப்பினால் அழிக்கப்பட்-டுள்ளது. துப்பாக்கி முனையில், போராளிகளினதும் அரசியல் தலைவர்களினதும் மக்களினதும் சடலக்குவியல்களின் ஊடாக இந்த பன்முக தன்மை அகற்றப்பட்டுள்ளது. இதன் இடத்தில் தனித்த-லைமை என்ற இரத்தக்கறை படிந்த கொடி ஏற்றப்பட்டுள்ளது.**

இவ்வாறு நமது மக்கள் மத்தியில் நிலவுகின்ற பன்முக தன்மைக்கும் விடுதலை புலிகள் அமைப்பு வன்மமாக நிலைநிறுத்த முயற்சிக்கின்ற தனித்தலைமை என்பதற்கும் இடையிலான முரண்பாடு, நமது தேசிய இயக்கத்தின் பிரதான அகமுரண்பாடாக விளங்குகின்றது. இந்த அகமுரண்பாடானது ஒருபுறம் நமது தேசிய இயக்கத்தின் வளர்ச்சிக்கு காரணமாகியிருக்கின்ற அதேநேரத்தில் மறுபுறத்தே, நமது தேசிய இயக்கம் அதன் இறுதி இலக்கை அடைவதை தடுப்பதாகவும் அமைந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை புலிகள் அமைப்பு தனித்தலைமை என்ற ஆதிக்க நிலையில் இருந்த இந்த 15 வருடகாலத்தில் நமது தேசிய இயக்கம் அதற்குரிய உச்சவளர்ச்சியை அடைந்திருக்கின்றது. ஆயினும் இத்தகைய உச்ச வளர்ச்சியை அடைந்த பின்னும், நமது தேசிய இயக்கத்தின் இறுதி இலக்கான தேசஅரசு நிறுவப்படுவது என்பது, இன்னமும் தொலைவில் இருப்பது போல் உணரப்படுவதற்கு. தனித்தலைமை என்பதில் உள்ளடங்கியுள்ள எல்லைக்குட்பட்ட தன்மையும் அதன் மக்கள் விரோத பண்புகளும் பிரதான காரணிகளாக அமைந்திருக்கின்றன. விடுதலை புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக பிரச்சாரப்படுத்துவதிலும் நமது மக்களிலிருந்து விடுதலை புலிகள் அமைப்பை தனிமைப்படுத்தி காட்டுவதிலும் அந்த அமைப்பு பெறுகின்ற மகத்தான இராணுவ வெற்றிகளை நமது விடுதலையிலிருந்து வேறுபடுத்தி காட்டுவதிலும் ஆதிக்க சக்திகள் வெற்றி பெறுவதற்கு தனித்தலைமை என்பது பிரதான காரணியாக அமைந்திருக்கின்றது. இந்த நிலை, விடுதலை புலிகள் அமைப்பை மட்டும் அரசியல் ரீதியில் பலவீனப்படுத்தவில்லை, மிகமுக்கியமாக, இது நமது தேசிய இயக்கத்தையும் பலவீனப்படுத்தியிருக்கின்றது. நமது தேசம் விடுதலை அடைவதிலும் நமக்கான தேசஅரசு உருவாக்கப்படுவதிலும் இது ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

நாம் கூர்ந்து நோக்குவோயின், தனித்தலைமையை நிலைநிறுத்த முயற்சிக்கின்ற விடுதலை புலிகள் அமைப்பினால், நமது மக்கள் மத்தியில் தொடர்ந்தும் ஊற்றெடுத்து பரவுகின்ற பன்முகதன்மையை நிராகரிக்க முடியவில்லை என்பதை கண்டு கொள்ள முடியும். நமது அரசியல் தளத்திலிருந்து பன்முக தலைமைகள் என்பதை விடுதலை புலிகள் அமைப்பு அகற்றியிருக்கின்ற போதிலும், தனக்குள் பன்முகதன்மை உறுதியாக நிலைபெறுவதை அந்த அமைப்பினால் தடுக்க முடியவில்லை. பிரதேச ரீதியாகவும் சாதிரீதியாகவும் பால்ரீதியாகவும் பன்முகதன்மை கொண்ட உறுப்பினர்களை தனக்குள் உள்வாங்குவதை அந்த அமைப்பினால் தவிர்க்க முடியவில்லை. ஒரே வார்த்தையில் கூறினால், விடுதலை புலிகள் அமைப்பினுள் உள்ளடங்கியுள்ள பன்முகதன்மைதான் அந்த அமைப்பின் போர்க்குணாம்சத்திற்கும் வீழ்த்த முடியாத அதன் உயிராற்றலுக்கும் அடிப்படையாக அமைந்திரக்கின்றது. பெண்கள், சாதிரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினர்கள், விளிம்புநிலை பிரிவினர்கள், நமது தேசத்தின் அனைத்து பிரிவினரையும் அனைத்து பிரதேசங்களையும் சேர்ந்த இளைஞர்கள்...என்ற பன்முகதன்மைமிக்க உறுப்பினர் சேர்க்கைதான், விடுதலை புலிகள் அமைப்பினதும் நமது தேசிய இயக்கத்தினதும் வலிமையாக விளங்குகின்றது.

இத்தகைய எதார்த்த நிலைமைகள் அனைத்தும், நமது தேசிய இயக்கத்தில் பன்முகதன்மை என்பது மீண்டும் உறுதியாக நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை மிகத் தெளிவாக வலியுறுத்துகின்றது. தேசவிடுதலை என்ற பொது இலக்கை நோக்கி, நமது தேசத்தின் அனைத்து பிரிவினரும் தமது பன்முக நலன்களுக்கூடாக உணர்வுபூர்வமாக ஒன்று திரள்வதை இது அவசியமாக்குகின்றது. சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்தும் ஆதிக்கத்திலிருந்தும் விடுதலை பெறுவது என்ற பொது இலக்கும் நமது தேசத்தின் அனைத்து பிரிவினர்களினதும் நலன்கள் நமது தேச அரசில் உறுதிப்படுவதும் பிரிக்க முடியாதவாறு இணையும் போதுதான் நமது தேசவிடுதலை அதன் முழுமையான அர்த்தத்தில் சாத்தியமாகும்.

நமது மக்கள் இந்த திசையில் ஏற்கனவே இயங்க தொடங்கி விட்டார்கள். சிறிலங்கா அரசினதும் அதன் ஆக்கிரமிப்பு படைகளினதும் அடக்குமுறைகளுக்கு எதிராக, நமது விவசாயிகளும மீனவர்களும் சுயாதீனமான முறையில் போராட ஆரம்பித்து விட்டார்கள். கல்வி கற்றவர்களும் மாணவர்களும் அரசாங்க ஊழியர்களும் சிங்கள் அரசின் இனஒதுக்கல்களுக்கு எதிரான போராட்டங்களை சுயமாக முன்னெடுத்து வருகின்றார்கள். நமது தேசத்தின் மீதும் தம்மீதும் சிங்கள அரசும் அதன் ஆக்கரமிப்பு படைகளும் மேற்கொள்கின்ற அடக்குமுறைகளை எதிர்த்து நமது பெண்கள் சுயாதீனமாகவும் உறுதியாகவும் போராடி வருகின்றார்கள். கூடவே நமது பெண்கள், ஆணாதிக்கத்திலிருந்து விடுபடுவதையும் தமது போராட்ட இலக்காக கொண்டு வருகின்றார்கள். சாதிரீதியாக அடக்கப்படுகின்ற பிரிவினர். தம்மீது திணிக்கப்பட்டுள்ள சமூக இழிநிலைக்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமே போராடி வருகின்றார்கள். தமக்கென மரபாக்கப்பட்டு வந்திருக்கின்ற, சமூகரீதியில் இழிவாக கருதப்படுகின்ற தொழில்களை செய்வதில்லை என்று முடிவெடுத்து, அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியும் வருகின்றார்கள். இவ்வாறு நமது தேசத்தின் அனைத்து மக்கள் பிரிவனரும் தேசவிடுதலைக்காகவும் சமூக விடுதலைக்காகவும் புதிய ஜனநாயக மரபுகளை நிலைநாட்டுவதற்காகவும் தனனெழுச்சியாகவும் சுயாதீனமாகவும் போராடி வருகின்றார்கள். இவற்றின் மூலம் நமது தேசிய இயக்கத்தின் அரசியல் இலக்குகளையும் அரசியல் சாரத்தையும் அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இப்போராட்டங்களில் மிகப் பெரும்பாலானவை, விடுதலை புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில்தான் இடம்பெறுகின்றன. இந்த உண்மை, நமது தேசிய இயக்கத்தில் நிலவி வருகின்ற விடுதலை புலிகள் அமைப்பின் தனித்தலைமைக்கும் மக்களின் பன்முகதன்மைகளுக்கும் இடையிலான முரண்பாடு, மேலும் மேலும் கூர்மையடைந்து வருவதை குறிக்கின்றது. இந்த முரண்பாட்டில், பன்முகதன்மை என்ற வெகுஜன அம்சமானது, படிப்படியே வலிமையடைந்து வருவதையும் தனித்தலைமை என்பதற்கு மேலாக அது ஆதிக்க நிலையை அடைகின்ற திசையில் உள்ளது என்பதையும் இந்த வெகுஜன போராட்டங்கள் சுட்டி காட்டுகின்றன. இந்த உண்மையை தெளிவாக புரிந்து கொள்வோமாயின், **நமது விடுதலையை விரைவில் சாத்தியமாக்குவதற்கும் நமது மக்களின் அனைத்து பிரிவனர்களினதும் நலன்களை உறுதிப்படுத்துகின்ற மக்கள் ஜனநாயக குடியரசை நிறுவுவதற்கும் நமது தேசிய இயக்கத்தில் பன்முகதன்மை உறுதியாக நிலைநாட்டப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்ள முடியும். இந்த பன்முகதன்மை என்பது, பன்முகத் தலைமைகள், பன்முக போராட்ட வடிவங்கள், பன்முக நலன்களின் வெளிப்பாடு . . . என விரிந்து செல்ல கூடியவை.**

இறுதியாக பின்வரும் விடயங்களை முன்வைக்கிறோம்:

1. நமது மக்கள் ஒரு தனியான தேசம் என்ற உயர்ந்த பரிமாணத்தை அடைந்திருக்கின்றார்கள். எனவே ஒரு தேசத்திற்குரிய பிரிக்க முடியாத அனைத்து உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய பாத்தியதையை நாம் கொண்டிருக்கின்றோம். எனவே தனியான இறைமைமிக்க தேச அரசை அமைப்பது என்பது நமது தேவை சார்ந்தது மட்டுமல்ல, கூடவே நம்மிடமிருந்து பிரிக்கமுடியாத உரிமை சார்ந்ததும் கூட.

2. சுதந்திரத் தேச அரசை அமைப்பதிலிருந்து பின்வாங்குவது என்பது நமது தேசத்தின் உயர்ந்த அரசியல் உரிமையைக் கைவிடுவது மட்டுமல்ல கூடவே நமது மக்களின் நூற்றாண்டு கால சமூக இயக்கத்தையும் அதனூடாக அவர்கள் அடைந்துள்ள வளர்ச்சிகளையும் மறுப்பதுமாகும். இத்தகைய சமூக இயக்கமும் வளர்ச்சியும் கடுமையான போராட்டங்களின் ஊடாக, இழப்புக்களையும் அழிவுகளையும் துயரங்களையும் சுமந்த நிலையில், மாபெரும் உறுதியுடன் துணிவுடன் அவற்றை எதிர்த்துத் தாங்கிய நிலையில் மகத்தான சாதனைகளை நிகழ்த்தியதின் ஊடாக அடையப் பெற்றிருக்கின்றன. நமது மக்களின் நூற்றாண்டு கால அனுபவங்கள் நூற்றாண்டு கால வெற்றிகள், தோல்விகள் சந்தோஷம் துயரம் என்பவை நமது மக்களின் இன்றைய தேசிய இயக்கத்தில் ஆழப்பதிந்துள்ளன. இந்தத் தேசிய இயக்கம் என்பது நமது மக்களின் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத் தலைமுறைகளின் போராட்டத் திரட்சிகள். எனவே இந்தத் தேசிய இயக்கத்தை மறுப்பதற்கோ அதைக் கைவிடுவதற்கோ எந்தத் தலைமுறைக்கும் எந்தத் தலைமைக்கும் உரிமையில்லை.

3. நமது மக்கள் தமக்கென தனியான தேச அரசு அவசியம் என்பதை உறுதியாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள். ஒரு சமூகத்தின் வெகுஜன அரசியல் உணர்வானது பன்முக வடிவில் வெளிப்பட முடியும் என்பதைப் புரிந்து கொள்ளும் போது, சுதந்திரத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்ததாக 50 : 50, சமஷ்டி ஆட்சி, தனிநாடு என்ற அரசியல் கோரிக்கைகளை நமது மக்கள் பூரணமாக ஆதரித்ததும் அந்தக் கோரிக்கைகளை உணர்வுபூர்வமாக இணைத்துக் கொண்டதும் தனியான அரசியல் அதிகாரத்தின் மீதான அவர்களின் ஆர்வத்தையும் அவசியத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. இப்போது இத்தனை இழப்புக்களுக்கும் அழிவுகளுக்கும் துயரங்களுக்கும் மத்தியில் நமது மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தாங்கி நிற்பதும் அந்த அமைப்புக்குரிய மனித வளங்கள் உட்பட அனைத்து வளங்களையும் தொடர்ச்சியாக வழங்கி வருவதும் தமக்குரிய தனியான அரசு மீது சிறிலங்கா அரசின் ஆதிக்கத்திலிருந்து முற்றாக விடுபட வேண்டும் என்ற வேட்கை மீது அவர்கள் கொண்டிருக்கின்ற தணியாத ஆர்வத்தைக் குறித்துக் காட்டுகின்றன.

4. **நமது மக்களுக்கென ஒரு தனியான தேச அரசை அமைப்பது என்பது வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விளைவாகவும் பிரிக்கமுடியாத உரிமையாகவும் எல்லாவற்றிற்கு மேலாக நமது மக்களின் உணர்வுபூர்வமான வெளிப்பாடாகவும் அமைந்திருக்கின்றது.** இத்தகைய உயர்ந்த அரசியல் இலக்கை நமது மக்கள் அடைந்து கொள்வதில் விடுதலைப் புலிகளின் பங்கு எல்லைக்குட்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இராணுவ வெற்றிகள் மூலம் தனியான அரசை, தமிழீழத்தை அடைந்துவிட முடியும் என்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் எதிர்பார்ப்பும் முயற்சியும் இன்று வரை சாத்தியமாகவில்லை என்பது மட்டுமல்ல அவர்கள் நடைமுறைப்படுத்திய மாதிரி அரசு முறையானது நமது தேசத்தின் எதிர்பார்ப்புக்களுடன் எவ்விதத்திலும் பொருந்தியிருக்கவில்லை என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், நமது தேச இயக்கத்தை அதன் இறுதி இலக்கு வரை, உயர்ஜனநாயக மரபுகளின் அடிப்படையில் அமைந்த புதிய சமூக அமைப்பை கட்டியெழுப்புவது வரை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதில் தாம் கொண்டிருக்கின்ற பற்றாக்குறையை விடுதலைப் புலிகள் அமைப்பு வெளிப்படுத்தியிருக்கின்றது.

நமது தேசத்தின் அரசியல் உணர்வுடனும் அரசியல் எதிர்பார்ப்புகளுடனும் ஒப்பிடும்போது, விடுதலைப் புலிகள் அமைப்பு பின்தங்கியிருக்கின்றது என்பதோடு, அவற்றுடன் முரண்படுவதாகவும் இருக்கின்றது. நமது மக்கள் தமது நீண்ட கடுமையான போராட்டத்தின் ஊடாக நமது தேசிய இயக்கத்தின் உள்ளடக்கத்தையும் அதன் மரபையும் முற்றாக மாற்றியிருக்கின்றார்கள். அரசியல் இலக்குகள் என்பதை சமூக ஆதிக்கப் பிரிவுகளின் நலன்களைப் பாதுகாப்பது என்ற நிலையிலிருந்து மக்களின் - சாதி ரீதியாக வர்க்க ரீதியாக, பால் ரீதியாக, பிரதேச ரீதியாக அடக்கப்படுகின்றவர்களின் - நலன்களைப் பாதுகாப்பது என்ற நிலைக்கு மாற்றியிருக்கின்றார்கள். அரசியல் தலைமைகள் என்பதை சமூக ஆதிக்கப் பிரிவினரின் தனித்தலைமை என்ற நிலையிலிருந்து மக்களின் பன்முகத் தலைமை என்ற நிலைக்கு அவர்கள் மாற்றியிருக்கின்றார்கள். இத்தகைய பன்முக மக்கள் தலைமையைச் சூழ்ந்து தம்மை - விவசாயிகளாக மீனவர்களாக பெண்களாக சாதி ரீதியில் அடக்கப்படுகின்றவர்களாக விளிம்பு நிலையைச் சேர்ந்தவர்களாக மாணவர்களாக இளைஞர்களாக சிறுவர்களாக உள்ள தம்மை - இரத்தமும் சதையுமாக இணைத்து கொள்வதற்கு அவர்கள் முன்வந்தார்கள். போராட்டத்தில் மட்டுமல்ல, வெற்றியின் பின் உருவாக்கப்படுகின்ற தனிநாடும் கூட இத்தகைய ஜனநாயக மரபில் அடித்தளமிடப்பட்டதாகவும், தமது நலன்களையும் சுதந்திரத்தையும் உரிமைகளையும் உத்தரவாதப்படுத்துவதாகவும் தமது சுயாதீனமான செயற்பாடுகளுக்கு வாய்ப்பளிப்பதாகவும் அமையும் என்று நமது மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு நமது தேசிய இயக்கத்தில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்களைப் புரிந்து கொள்ளவில்லை. இந்த மாற்றங்கள் முற்றிலும் மக்களினாலேயே சாதிக்கப்பட்டவை என்பதையும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு உணர்ந்து கொள்ளவில்லை. இந்த மாற்றங்களினூடாக மக்கள் வெளிப்படுத்திய எதிர்பார்ப்புக்கள் குறித்து விடுதலை புலிகள் அக்கறை கொள்ளவும் இல்லை. இவற்றுக்கு முற்றிலும் மாறாக, விடுதலைப் புலிகள் அமைப்பு நமது மக்களினால் அகற்றப்பட்ட பழைய மரபுகளை மீண்டும் நிலைநாட்டி இருக்கின்றது - முன்னரை விட உறுதியாக வன்முறைக் கருவிகளின் உதவியுடன். நமது தேசிய இயக்கத்தின் அரசியல் இலக்குகளை, அவற்றின் நடைமுறை வடிவில், சமூக ஆதிக்கப் பிரிவினர்களின் நலன்களுடன் மீண்டும் இணைத்து விட்டது - இப்போது தன்னுடைய அமைப்பு நலன்களையும் சேர்த்து. தேசிய இயக்கத்தின் உள்ளடக்கத்தை அதன் மக்கள் சாரத்தை தன்னுடைய அதிகாரத்தையும் சமூக ஆதிக்க சக்திகளின் நலன்களையும் பேணுவதற்கான ஊடகமாக பயன்படுத்தி வருகின்றது. காலாதி காலமாக நமது மக்களை அடக்கி வந்திக்கின்ற கருத்தியல் ஆதிக்கத்தை மீண்டும் வலிவுடன் உயர்த்திப் பிடித்திருக்கின்றது - இப்போது பொருள்வகை ஆயுதத்தோடு இணைத்து. சமூகத்தை புரட்சிகரமாக மாற்றியமைப்பது குறித்து, அத்தகைய மாற்றங்கள் மீது நமது மக்கள் கொண்டுள்ள ஆர்வங்கள் குறித்து அக்கறையற்றதும் எதிர்ப்புடன் கூடியதுமான மனோபாவத்தை விடுதலைப் புலிகள் அமைப்பு வெளிப்படுத்தி வருகின்றது. ஒரே வார்த்தையில் கூறும்போது விடுதலைப் புலிகள் அமைப்பு நமது மக்களின் நலன்களுடன் முரண்படுகின்ற ஒரு அமைப்பாக தன்னை நிறுவியிருக்கின்றது.

5. எனினும், **விடுதலைப் புலிகள் அமைப்பு நமது மக்களினால் உருவாக்கப்பட்டது. நமது மக்களினால் பாதுகாக்கப்பட்டது. இன்றும் பாதுகாக்கப்படுகின்றது. அதற்கான வளங்கள் அனைத்தையும் நமது மக்களே வழங்குகின்றார்கள். நமது மக்களே அதன் உறுப்பினர்களையும் தொடர்ச்சியாக வழங்குகின்றார்கள். எனவே விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு மாபெரும் ஆயுதப் போராட்ட அமைப்பாக வரலாற்று முன்னுதாரணமில்லாதளவுக்கு அர்ப்பணிப்பும் ஆற்றலும் பெற்ற அமைப்பாக இருப்பது என்பது சாராம்சத்தில், நமது தேசத்தின் அர்ப்பணிப்பை நமது தேசத்தின் போராட்ட ஆற்றலையே குறிக்கின்றது.** ஒரு தேசம் தனது பாதுகாப்பு நிறுவனத்தை எந்தளவுக்கு உயர்ந்தபட்ச நிலையில் வடிவமைக்க முடியுமோ அந்தளவுக்கு நமது தேசம் தனது பாதுகாப்புக்குரிய நிறுவனத்தை - விடுதலைப் புலிகள் அமைப்பை - வடிவமைத்திருக்கின்றது. எந்தக் கணத்திலும் பத்தாயிரம் எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற அளவுக்கு நமது தேசம் அதற்கான மனித வளத்தையும் ஏனைய வளங்களையும் வழங்கி, விடுதலைப் புலிகள் அமைப்பைத் தாங்கி நிற்கின்றது. எனவே இதுவரைக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இறந்த போராளிகளின் கிட்டத்தட்ட 15, 000 என்றும் தற்போதைய உறுப்பினர்கள் 15, 000 என்றும் காயமடைந்தும் யுத்தத்தில் நேரடியாகப் பங்கேற்க முடியாதவர்களாகவும் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 5, 000 என்றும் கொள்வோமாயின், இது நமது மண்ணில் வாழ்கின்ற நமது மக்களில், யுத்ததத்தில் பங்கேற்கக் கூடியவர்களின் தொகையில் 4 வீதமாமாகவும், 20 வயதிற்குட்பட்ட இளைஞர் தொகையில் 8%மாகவும் இருப்பதை அறிய முடியும். இது, எந்தவொரு தேசமும் தன்னைப் பாதுகாப்பதற்கு என ஏற்படுத்துகின்ற நிறுவனத்திலுள்ளவர்களிலும் (பாதுகாப்புப் படைகள்) தொகையை விட மிக அதிகம். (உலகிலுள்ள எந்தவொரு நாட்டிலும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை, அந்த நாட்டின் மொத்த சனத்தொகையில் 2 - 3 % மட்டுமே.) இவ்வாறு நமது தேசம், தனக்குரிய பாதுகாப்பு நிறுவனத்தை போஷித்து, பேணுவதற்கு தனது வளங்களை எந்தளவுக்கு வழங்க முடியுமோ, அதைவிடவும் மிக அதிகளவில் வழங்கி, விடுதலைப் புலிகள் அமைப்பு என்ற அரசியல், பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. நமது தேசிய இயக்கம் தனது இறுதி இலக்கை நோக்கி முன்னேறுவதற்கு விடுதலைப் புலிகளின் இருப்பும் அதன் பங்களிப்பும் இன்றிய-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையாதது.

6. **விடுதலைப் புலிகளின் அமைப்பில் பொதிந்துள்ள இத்தகைய முரண்பட்ட தன்மைகளை, அதாவது அதன் மக்கள் விரோதப் பண்பையும் அதேநேரத்தில் அதன் மக்கள் சாரத்தையும்; மக்களின் சுதந்திரத்தை மறுப்பதையும் அதேநேரத்தில் மக்களின் விடுதலைக்காக அது தன்னை அர்ப்பணிப்பதையும் நமது தேசம் புரிந்து கொள்வது அவசியம்.** நமது தேசத்தின் விடுதலையிலும் புதிய சமூக உருவாக்கத்திலும் விடுதலைப் புலிகள் அமைப்பு கொண்டிருக்கின்ற வரையறுக்கப்பட்டதும் அவசியமானதுமான பாத்திரத்தை புரிந்தேற்றுக் கொள்வதும் அதேநேரத்தில், நமது விடுதலையிலும் புதிய சமூக நிர்மாணத்திலும் உதவக்கூடிய பிற தேர்வுகள் குறித்துச் சிந்திப்பதும் அவசியம். இது மீண்டும் நமது தேசிய அரசியலில் மக்களின் பன்முகத் தலைமைகள் என்ற புதிய ஜனநாயக மரபு நிலைநாட்டப்படுவதையும் ஆதிக்கக் கருத்தியலில் இருந்து விடுபடுவதையும் மக்களின் சுயாதீனமான போராட்ட வடிவங்களுக்குரிய சூழல் உருவாக்கப்படுவதையும் கோருகின்றது. இத்தகைய நிலைமைகளை சாத்தியமாக்கக் கூடியவர்கள் மக்களே, மக்கள் மட்டுமே.

## முடிவுரை

1. நமது தேசிய இயக்கத்தின் திசைவழியைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் நமது மக்களின் சமூக இயக்கம் குறித்த பன்முகம் சார்ந்த பரிசீலனைக்கான தொடக்கமாக இதில் உள்ள விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2. ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு முற்பட்ட காலத்தில் நமது மக்களின் சமூக இயக்கம் கொண்டிருந்த மூன்று தனித்துவமான தன்மைகள் குறித்த ஒரு ஆரம்ப விவரணம் இதில் முன்வைக்கப்பட்டுள்ளது.

3. ஐரோப்பிய ஆதிக்கக் காலத்தில் நமது மக்களிடையே இடம்பெற்ற சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார மாற்றங்கள் குறித்தும் அவற்றுக்கான எதிர்வினைகள் குறித்தும் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில் நவீன அரசியல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதோடு ஆரம்பித்த நமது மக்களின் அரசியல் இயக்கமானது, சமூக ஆதிக்கப் பிரிவினரின் தலைமையில் அப்பிரிவினரின் நலன்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது என்ற விடயம் விளக்கப்பட்டுள்ளது.

4. நமது மக்களின் அரசியல் இயக்கமானது பின்னர் படிப்படியே தனியான தேசிய இயக்கமாக மாற்றமடைந்து வந்தது குறித்தும் இம்மாற்றத்தை சாத்தியமாக்கிய அக புறக் காரணிகள் குறித்தும் பரிசீலிக்கப்பட்டுள்ளது. இத்தகைய மாற்றப் போக்கில் நமது தேசத்தின் அடக்கப்படுகின்ற விளிம்புநிலை மக்களின் போராட்டங்களும் அரசியல் பங்குபற்றுதலும் முக்கிய பங்கு வகித்திருப்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

5. நமது தேசிய இயக்கமானது தெளிவான முறையில் மக்கள் இயக்கமாக மாறியது குறித்தும் அதன் மூலமாக தேசிய இயக்கத்தின் உள்ளடக்கமும் அரசியல் தலைமையும் போராட்ட இலக்குகளும் போராட்ட வடிவங்களும் மாற்றமடைந்து வந்தது குறித்தும் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

6. விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு தனித் தலைமையாக தன்னை நிலைப்படுத்தியது குறித்தும் நமது தேசிய இயக்கத்தில் அது வகித்து வருகின்ற பாத்திரம் குறித்தும் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

7. இறுதியாக, நமது தேசிய இயக்கமானது மக்களின் நலன்களையும் உரிமைகளையும் சுயாதீனத்தையும் உத்தரவாதப்படுத்துவதாகவும் மக்களின் பன்முகத் தலைமைகளை நிலைநாட்டுவதாகவும் ஆதிக்கக் கருத்தியலிலிருந்து விடுபடுவதாகவும் அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. இத்தகைய புதிய ஜனநாயக மரபுகளை நோக்கியே மக்களின் ஆர்வம் திரண்டிருப்பதும் மக்களின் செயற்பாடுகள் மையப்பட்டிருப்பதும் மக்களின் மூலமாகவே இந்தப் புதிய மரபுகள் நிலைநிறுத்தப்பட முடியும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவிய நூல்களின் பட்டியல்

1. Chronolgy of Tamil Struggle for Independence in Sri Lanka - 1997 Tamil Net
2. The Laws and Customs of Tamils of Trincomalee - Prof. S. Pathamanathan - 1994
3. Militarism and Caste in Jaffna - D.P. Sivaram, July 1st 92, Lanka Guardian
4. Muttu Commaraswamy - From Law to Anthropolgy - Radhika Coomaraswamy, Aug. 1st 92, Lanka Guardian
5. சமூகவியல் நோக்கில் நாவலர் - கார்த்திகேசு சிவத்தம்பி - நாவலர் நூற்திரட்டு தொகுப்புமலர் - 1979
6. நாவலரும் இராமநாதனும் - க. சொக்கலிங்கம் -
7. ஆறுமுக நாவலர் சரித்திரம் - யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசபிள்ளை - 1985
8. இலங்கையின் அரசியல் யாப்பு - சி.அ. யோதிலிங்கம் - 1999
9. A Special Caste

உருவாக்கம்: சீனு
கணனியிலிடப்பட்டு முடிக்கப்பட்டது: 21-06-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் நாம். . . . .

" இதுவரைக்கும் தத்துவவியலாளர்கள் எல்லாம் வரலாற்றை வியாக்கியானம் மட்டுமே செய்துள்ளனர். நமது தத்துவம் வரலாற்றை படைப்பதாகும்"

உயிர்ப்பு இதழ் 7 ஐந்து வருடங்களின் பின்பு வெளிவருகின்றது. இதற்கான உள்ளார்ந்த காரண காரியங்கள் பல. எனினும், உயிர்ப்புடன் நெருக்கமான எவரும் புரிந்து கொள்ளக் கூடியவை. எந்த நோக்கத்தின் அடிப்படையில் கோட்பாட்டு இதழாக "உயிர்ப்பு" தொடங்கப்பட்டதோ அதனுடைய இலக்கில் படிப்படியே அது முன்னேறி வருகின்றது. நமது சமூகமும் சூழலும் மாறிக்கொண்டே இருப்பதால் அரசியல் அர்த்தத்தில் உயிர்ப்பின் நோக்கமும் அதன் பாத்திரமும் முடிவற்றுத் தொடர்ந்த வண்ணம் இருக்கும் எனத் திடமாக நாம் நம்பலாம். இருப்பினும், இந்த பாரிய இடைவெளி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்ற தங்கள் கவலையையும் புரிந்து கொள்கின்றோம். இதற்கான உறுதிமொழிகளிலும் பார்க்க செயலில் அதனை நிருபிக்க முயல்வோம்.

இதுவரை, ஈழத்தமிழரின் தேசிய இயக்கம் பற்றி வெவ்வேறு பரிமாணங்களில் ஆய்வுகள் பல வெளிவந்து விட்டன. தமிழ் தேசிய இயக்கத்தின் ஊற்று மூலம், தமிழ் தேசிய இயக்கத்தின் கடந்த கால தலைமைகள். தமிழ்தேசிய இயக்க வளர்ச்சிப்போக்கில் பொருளாதாரக் கட்டமைப்புகளின் பாத்திரம் தமிழ் இடதுசாரிகளது, பெண்களின் பங்கு மற்றும் சாதீயம் இப்படியான பல ஆய்வுகள், நூல்கள் பல வெளிவந்து விட்டன. இவற்றில் ஆங்கிலத்தில் அதிகமாகவும் தமிழில் மிகவும் குறைவாகவும் வந்துள்ளன. மேலும் அப்படியான ஆய்வுகள் நமது மக்களுக்கென எழுதப்படுவதிலும் பார்க்க, நிறுவனங்களுக்காக இவ்வாய்வுகள் எழுப்படுவதின் உபவிளைவுகள் இது எனலாம். உங்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் இக்கட்டுரையானது, ஈழத்தமிழ் தேசிய இயக்கத்தின் வரலாறு, அதன் தற்போதைய வளர்ச்சிக் கட்டம் போன்றவற்றைக் கொண்டுள்ளது. மேலும், ஈழத்தமிழரது தேசிய இயக்கத்தின் எதிர்காலம் அரசியல் அர்த்தத்தில் என்னவாக அமையும் சாத்தியங்களைக் கொண்டுள்ளது மற்றும் என்னவாக அதனை வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற திசையில் ஒரு தொடக்க ஆய்வுப் புள்ளிகையும் கொண்டுள்ளதாக அமைகின்றது.

ஈழத்தமிழ்தேசிய இயக்கத்தில் பிரக்ஞைபூர்வமாக மேற்கொள்ளும் இத்தலையீடானது, இத்தேசிய இயக்கத்திற்கு அர்த்தமுள்ள எதிர்காலத்தையும் மேலும் மேலும் ஈழத்தமிழ் தேசம் சாதிக்க வேண்டிய வரலாற்றுக் கடமைகளையும் கட்டியம் கூறும் ஒரு முயற்சியுமாகும். இன்றைய வரலாற்று முக்கியத்துவம் கருதி பரந்து பட்ட வாசிப்புக்கு இக்கட்டுரை உட்பட வேண்டும் எனும் நோக்கில் கோட்பாட்டு கனதி, மற்றும் இறுக்கம் அதிகம் இல்லாததாக இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலத்தில், நமது தேசிய இயக்கத்தையும் அதன் அபிலாசைகளையும் அரசியல் அரங்கில் முன்னிறுத்தி வந்த அரசியல் தலைமைகள் காலத்திற்கு காலம் நிலைமறுக்கப்பட்டு பிரதியீடு செய்யப்பட்டதன் இயங்கியல் பின்புலத்தில் இந்த வரலாறு முன்வைக்கப்படுகின்றது. அந்தந்த காலகட்டங்களில் தனது தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யாத அரசியல்தலைமைகளை நமது தேசிய இயக்கமானது நிலைமறுத்து புதியவொன்றினால் பிரதியீடு செய்து வந்துள்ளது என்பதும் எதிர்காலத்திலும் கூட, அவ்வாறு தேசிய அபிலாசைகளை பூர்த்தி செய்யாத எந்தவொரு தலைமையும் தவிர்க்க முடியாது நிலைமறுக்கப்படும் என்பதும் இந்த கட்டுரையின் அரசியல் சாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இக்கட்டுரைக்கான ஆரம்ப முயற்சியானது 1995 அளவில் மற்றுமொரு கோணத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு முன்வந்த உயிர்ப்புகளில் தேசியவாதம், தேசிய சக்திகள் பற்றிய கோட்பாட்டு விவாதங்களை நடாத்தி வந்த நாம் பின்னர் குறிப்பான நிலையில் நமது சமூக பகுப்பாய்வை இலக்காக கொண்டு ஈழத்தமிழர் சமூக உருவாக்கம் பற்றிய ஒரு ஆய்வை செய்திருந்தோம். தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் ஈடுபடும் புரட்சிகர சக்திகளுக்கு பயன்படும் ஒரு மூலோபாயத்தை வகுப்பதை நோக்கி முன்னேறுவது அப்போது எமது பிரதான நோக்கமாக இருந்தது. அக் கட்டுரையை வெளியிட முன்னர் இதனை நகலாக அறிவுத்துறையினர் உட்பட பல்வேறு பட்ட தரப்பினருடனும் விவாதித்தோம். இதன் மூலம் பரஸ்பரம் கற்றலுக்கும் உட்படுத்திக்கொண்டோம். ஈழத்தமிழரின் சமூக உருவாக்கம் என்ற தலைப்பினை பூர்த்தி செய்யும் விதத்தில் பல்வேறு பற்றாக்குறைகள் பற்றியும் பொதுவாக ஒரு சமூக உருவாக்கம் என்பது ஆழமானதும் நுண்ணியதுமான பலவிடயங்களை உள்ளடக்கியதுமாகும் என எமக்குச் சுட்டிக் காட்டப்பட்டது. சமகாலத்தில் நாம் பல்வேறு குறிப்பான வேறு பணிகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டமானது பல்வேறு வளர்ச்சிப் படிகளினூடாக வேகமாக நடைபோட்டு வளர்ந்து வருகின்றது. அதாவது வரலாறானது எமக்காக காத்திருக்கவில்லை எனலாம். மேற்படி விடயங்களை கவனத்தில் எடுத்துக்கொண்ட நாம், முன்னைய கட்டுரையிலுள்ள அவசியமான கருத்தாக்கங்களையும் சான்றுகளையும் சுவீகரித்துக் கொண்டு, புதிய நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப அக்கட்டுரையானது, மீள எழுதப்பட்டு தங்கள் முன் ஈழத்தமிழர் தேசிய இயக்கம் எனும் தலைப்பில் சமர்ப்பிகசுப்படுகின்றது.

இந்த கட்டுரையை உருவாக்குவதில் பல்வேறு நூல்கள் எமக்குப் பயன்பட்டுள்ளன. ஆர்வமுள்ள நபர்கள் பலர் தமது கருத்துக்களையும் ஆலோசனைகளை தந்துள்ளனர். உயிப்புக் குழுவினுள்ளும் வெளியிலும் இருந்து பெறப்பட்ட இந்த பங்களிப்புகளுக்கு நாமும் நமது தேசமும் மிகவும் கடப்பாடுடையதாக இருக்கும். இந்தவிதத்தில், இந்த ஆவணம் ஒரு சமூக கூட்டு உழைப்பின் விளைவாகும்.

கடந்த காலத்தில் உயிர்ப்பின் மூலம் வெளியிட்ட பல கோட்பாட்டு விடயங்கள் ஈழத்தமிழ் சூழலில் மட்டுமல்ல, தென்னாசிய பிராந்தியத்திலும் பல குழுக்கள் மத்தியிலும் தனிநபர்கள் மத்தியிலும் கணிசமான தாக்கத்தை நிகழ்த்தியது போல, இந்த இதழிலுள்ள கட்டுரையும் தன் பங்களிப்பினை ஆற்றும் என உறுதியாக நம்புகின்றோம்.

எவ்வாறாயினும், இந்த ஆய்வானது எமது தேசத்தில் பரந்தளவில் விவாதங்களை தூண்டுவிக்க வேண்டும். அதன் பெறுபேறுகள் நமது தேசிய இயக்கத்தின் அளப்பெரிய வெற்றிக்கும் அரசியல் வரலாற்றில் அது தன் புதிய முத்திரையை பதிப்பதற்கும் பங்களிக்கும் எனின், இந்த ஆய்விற்கு செலுத்தப்பட்ட அனைவரதும் உழைப்பானது அர்த்தமுள்ளதாக அமையும். அனைவரது அக்கறைக்கும் பரந்த விவாதத்திற்கும் உட்படுத்தும் நோக்குடன் இம்முறை உயிர்ப்பு இதழ்7 எண்ணிக்கையானது சற்று அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்

**ஆசிரியர்குழு**

**உயிர்ப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘UYIRPPU’
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org